# சதக இலக்கியங்களின் அமைப்பும் உள்ளடக்கமும்

*பாரதிதாசன் பல்கலைக்கழகத் தமிழ்*
*முனைவர் (Ph.D.) பட்டத்திற்காக*
*அளிக்கப்பெறும் ஆய்வேடு*


*பகுதிநேர ஆய்வாளர் :*
**பா.லெட்சணாதேவி**
(*பதிவு எண்:*18713/Ph.D.K8/Tamil/Part Time/Re-Regn&Extn.1/July 2017/Dt: 27.01.2020)

*ஆய்வு நெறியாளர் :*
**முனைவர் கு.ர.சரளா,** எம்.ஏ., எம்.ஏ., எம்.ஏ., பிஎச்.டி.,

தமிழ்த்துறை
அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
ஒரத்தநாடு 614 625
தஞ்சாவூர் மாவட்டம்


சனவரி 2022

**முனைவர் கு.ர.சரளா,**
**எம்.ஏ., எம்.ஏ., எம்.ஏ., பிஎச்.டி.,**
தமிழ்த்துறைத் தலைவர் – ஆய்வு நெறியாளர்,
தமிழ்த்துறை,
அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
ஒரத்தநாடு–614 625,
தஞ்சாவூர் மாவட்டம்.

# நெறியாளர் சான்றிதழ்

**சதக இலக்கியங்களின் அமைப்பும் உள்ளடக்கமும்** என்னும் தலைப்பில் அமைந்த இவ்வாய்வு, பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் முனைவர் (பிஎச்.டி.) பட்டத்திற்காக **பா.லெட்சணாதேவி (பதிவு எண்:18713/Ph.D.K8/Tamil/ Part Time/Re-Regn&Extn.1/July 2017/Dt:27.01.2020)** அவர்களால் என் மேற்பார்வையில் தன்னியலாகச் செய்யப்பட்டதாகும். அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரித் தமிழ்த் துறையில் அவர் செய்த இவ்வாய்வின் மீது இதற்குமுன் வேறெந்தப் பட்டமும் அளிக்கப்பெறவில்லை எனச் சான்றளிக்கிறேன்.

இடம் : ஒரத்தநாடு
நாள் :

(கு.ர.சரளா)
நெறியாளர்

*துறைத்தலைவர் கையொப்பம்*

*முதல்வர் கையொப்பம்*

**முனைவர் கு.ர.சரளா,**
**எம்.ஏ., எம்.ஏ., எம்.ஏ., பிஎச்.டி.,**
தமிழ்த்துறைத் தலைவர் – ஆய்வு நெறியாளர்,
தமிழ்த்துறை,
அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
ஒரத்தநாடு–614 625,
தஞ்சாவூர் மாவட்டம்.

*நாள்:*

# கருத்துக் களவின்மைச் சான்றிதழ்
# (Plagiarism-Free Certificate)

என் மேற்பார்வையில் முனைவர் பட்ட ஆய்வு மேற்கொண்ட **பா.லெட்சணாதேவி (பதிவு எண்:18713/Ph.D.K8/Tamil/Part Time/Re-Regn & Extn.1/July 2017/Dt: 27.01.2020)** அவர்கள் தம் ஆய்வேட்டில் சான்றுகளுக்கு மட்டுமே அறிஞர்கள், வல்லுநர்கள் போன்றோர் கருத்துக்களைப் பயன்படுத்தியுள்ளார். அச்சான்றுகள் மிக இன்றியமையா இடங்களில் மட்டும் மேற்கோள்களாகக் காட்டப்பட்டுள்ளன. பல்கலைக்கழக விதிமுறை 10.3இன்படி Urkund (Analysis Result) மென்பொருள் சோதனைக்குட்படுத்தப்பட்டு பெறப்பட்ட அறிக்கை D640253204 இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது என்று சான்றளிக்கிறேன்.

நெறியாளர் கையொப்பம்

**பா.லெட்சணாதேவி,**
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
ஒரத்தநாடு–614 625,
தஞ்சாவூர் மாவட்டம்.

# ஆய்வாளர் உறுதிமொழி

**சதக இலக்கியங்களின் அமைப்பும் உள்ளடக்கமும்** என்னும் தலைப்பில் **முனைவர் கு.ர.சரளா, எம்.ஏ., எம்.ஏ., எம்.ஏ., பிஎச்.டி.,** அவர்கள் மேற்பார்வையில் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் முனைவர் (பிஎச்.டி.) பட்டத்திற்காக நிகழ்த்தப்பட்ட இவ்ஆய்வேடு நான் மேற்கொண்ட ஆராய்ச்சியின் பயனாகும். இவ்ஆய்வேடோ, இதன் பகுதிகளோ இதற்குமுன் வேறு எந்தப் பட்டத்திற்கோ ஆய்வரங்கிற்கோ அளிக்கப்படவில்லை என்றும், இஃது என் சொந்த முயற்சியால் உருவாக்கப்பட்டது என்றும் உறுதி அளிக்கிறேன்.

இடம் : ஒரத்தநாடு **(பா.லெட்சணாதேவி)**
நாள் : ஆய்வாளர்

# நன்றியுரை

**சதக இலக்கியங்களின் அமைப்பும் உள்ளடக்கமும்** என்ற தலைப்பில் ஆய்வு செய்திட அனுமதியளித்த பாரதிதாசன் பல்கலைக்கழகத்திற்கு என் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முனைவர் பட்ட ஆய்வு செய்வதற்கு இசைவளித்து ஊக்கப்படுத்திய பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்பு பெண்கள் கல்லூரியின் முதல்வர் **முனைவர் சி.பானுமதி** அவர்களுக்கு என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என் ஆய்விற்கு வழிகாட்டியாக இருந்து ஆய்வினைப் பற்றிய ஐயப்பாடுகளை அகற்றி, திருத்தம் செய்து ஆய்வேடு செம்மையுற அமையும் வகையில் நன்கு நெறிப்படுத்தித் துணைநின்ற தமிழ்த்துறைத் தலைவரும் நெறியாளருமாகிய **முனைவர் கு.ர.சரளா, எம்.ஏ., எம்.ஏ., எம்.ஏ., பிஎச்.டி.,** அவர்களுக்கு என்றென்றும் நன்றி.

என் ஆய்விற்கு உறுதுணையாக இருந்து ஊக்கப்படுத்திய என் கணவர் **திரு.அ.சந்திரசேகர்,** அவர்களுக்கு என் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆய்வினை விரைந்து முடிக்க தூண்டுதலாய் இருந்த என் தோழியர் மற்றும் எம் துறைப் பேராசிரியப் பெருமக்களுக்கும் என் நன்றி உரியது.

ஆய்விற்குத் தேவையான நூல்களைத் தந்துதவிய தென்னமநாடு, ஒரத்தநாடு மற்றும் எம் கல்லூரி நூலகத்தார்க்கும், தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகம் மற்றும் சரசுவதி மகால் நூலகத்தார்க்கும் நான் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

என் ஆய்வேட்டினைத் திருத்தமுற கணினியில் வடிவமைத்து உதவி செய்த தஞ்சை, **நாகு கணினியகத்தார்க்கும்** என் உள்ளார்ந்த நன்றியை உரித்தாக்குகின்றேன்.

**பா.லெட்சணாதேவி**

## சுருக்கக் குறியீட்டு விளக்கம்

| | | |
|---|---|---|
| உ.ஆ. | - | உரையாசிரியர் |
| கா.ம.ச. | - | கார்மண்டல சதகம் |
| கொ.ம.ச. | - | கொங்கு மண்டல சதகம் |
| சோ.ம.ச. | - | சோழ மண்டல சதகம் |
| தொ.ம.ச. | - | தொண்டை மண்டல சதகம் |
| தொ.ஆ. | - | தொகுப்பாசிரியர் |
| தொல். | - | தொல்காப்பியம் |
| ப.ஆ. | - | பதிப்பாசிரியர் |
| பொருள். | - | பொருளதிகாரம் |
| நூ. | - | நூற்பா |
| ப. | - | பக்கம் |
| பக். | - | பக்கங்கள் |
| ப.ஆ. | - | பதிப்பாசிரியர் |
| பா. | - | பாடல் |
| மு.கு.நூ. | - | முன் குறிப்பிட்ட நூல் |
| மு.ப. | - | முதற்பதிப்பு |
| மொ.ஆ. | - | மொழிபெயர்ப்பு ஆசிரியர் |
| மேலது. | - | மேலே குறிப்பிட்ட நூல் |

# பொருளடக்கம்


| இயல் | | பக்கம் |
|---|---|---|
| | முன்னுரை | 1 |
| ஒன்று | சிற்றிலக்கியங்களின் தோற்றமும் வளர்ச்சியும் | 8 |
| இரண்டு | சதக இலக்கியங்களின் வரலாறு | 45 |
| மூன்று | சதக இலக்கியங்களின் அமைப்பு | 99 |
| நான்கு | சதக இலக்கியங்களின் உள்ளடக்கம் | 151 |
| ஐந்து | ஒப்பீட்டு நோக்கில் சதக இலக்கியங்கள் | 265 |
| | முடிவுரை | 288 |
| | துணைநூற் பட்டியல் | |

# முன்னுரை

ஒரு மொழியை வளப்படுத்துவன அம்மொழியிலுள்ள இலக்கியங்களே ஆகும். அவ்விலக்கியங்கள் அக்காலச் சமூகச் சூழ்நிலையை அறிந்து கொள்ள பேருதவி புரிகின்றன. தமிழ் இலக்கியங்கள் காலந்தோறும் புதிய புதிய இலக்கிய வகைகள் மூலம் தன்னைப் புதுப்பித்துக் கொண்டே வந்துள்ளன. தொல்காப்பியத்திற் கருக்கொண்டு மெல்ல மெல்ல வளர்ந்து அந்தாதி, உலா, கலம்பகம், தூது, பரணி, பிள்ளைத்தமிழ், சதகம் என தனித்த இலக்கிய வகையாக வளர்ச்சியடைந்து, தமிழ் இலக்கிய வரலாற்றில் தனக்கென தனியிடத்தைப் பெற்றுத் திகழ்வன சிற்றிலக்கியங்கள் ஆகும்.

மன்னனைப் பாடுதல் அல்லது இறைவனைப் பாடுதல் என்னும் நிலையிலிருந்து மாறி தனிமனித போற்றலாக செய்யுட்கள் இயற்றுவதற்கு புலவர்களுக்கு ஏற்ற களமாக சிற்றிலக்கியம் விளங்கிற்று. இக்காலகட்டத்தில் மிகுதியான சிற்றிலக்கிய நூல்கள் தோன்றின. சிற்றிலக்கியங்களுள் குறிப்பிடத்தக்க இலக்கிய வகையாக சதக இலக்கியம் விளங்கிற்று. கி.பி.17, 18, 19 ஆம் நூற்றாண்டு என மூன்று நூற்றாண்டு காலத்தில் சதக இலக்கியம் பெருவளர்ச்சியடைந்த நிலையைக் காணமுடிகின்றது.

தமிழ்மொழி மட்டுமன்றி வடமொழி, தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளிலும் சதக இலக்கியம் செல்வாக்குப் பெற்றிருந்தமையை அறியமுடிகின்றது. மற்ற இலக்கியங்களில் இல்லாத சிறப்பம்சமாக சதக இலக்கியங்களில் மகுடம் இடம்பெறுகின்றது. ஒரு பாடலின் இறுதியில் இடம்பெறும் சொற்றொடர் நூறு பாடல்களிலும் மகுடமாக இடம்பெறுகின்றது. இத்தகைய சிறப்புப் பண்புகளை உடைய சதக இலக்கியங்கள் வரலாற்றுச் சதகங்கள், துதி சதகங்கள், நீதி சதகங்கள், வடமொழி சதகங்கள் என்னும் வகைப்பாட்டின் அடிப்படையில் வைத்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## ஆய்வுத் தலைப்பு

***"சதக இலக்கியங்களின் அமைப்பும் உள்ளடக்கமும்"*** என்பது இவ்வாய்வுத் தலைப்பாக அமைகின்றது.

**ஆய்வு நோக்கம்**

*இலக்கியங்களின் கருத்து வெளிப்பாட்டுத் திறன் மற்றும் சதக இலக்கியங்களின் அமைப்பு முறையை அறிதலை நோக்கமாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பெறுகின்றது.*

**ஆய்வின் கருதுகோள்**

*சிற்றிலக்கியங்கள் நீண்ட ஆய்வுப் பரப்பைக் கொண்டன. ஆயினும் சிற்றிலக்கியங்களில் பெரும்பான்மையான ஆய்வுகள் மேற்கொள்ளப் படவில்லை. குறிப்பாக, சதக இலக்கியங்களைப் பற்றிய ஆய்வுகள் எண்ணிக்கையில் குறைவே. இந்நிலையில் சதக இலக்கியங்களின் அமைப்பையும் உள்ளடக்கப் பொருண்மைகளையும் ஆராய்ந்து கண்டறிதல் என்னும் கருதுகோளின் அடிப்படையில் இவ்வாய்வு அமைகின்றது.*

**ஆய்வு எல்லை**

*தொண்ணூற்றாறு வகையாகக் கொள்ளப்பெறும் சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றாக சதகம் விளங்குகிறது. கி.பி.11 ஆம் நூற்றாண்டில் தோன்றிய கார்மண்டல சதகம் என்னும் நூலைத் தொடர்ந்து இதுவரை நூற்றுக்கும் மேற்பட்ட சதக நூல்கள் தோன்றியுள்ளன. அவற்றுள் இருபத்தியொரு சதக நூல்களை மட்டும் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப் பெறுகின்றது. பொருண்மை அடிப்படையில் வரலாற்றுச் சதகங்கள், நீதி சதகங்கள், துதி சதகங்கள், வடமொழி சதகங்கள் என்னும் வகைப்பாட்டின் அடிப்படையில் சில நூல்களை வரையறை செய்து இவ்வாய்வு மேற்கொள்ளப் பெறுகின்றது.*

*ஆய்விற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட இருபத்தியொரு நூல்களாவன: திருச்சதகம், கார்மண்டல சதகம், சோழ மண்டல சதகம், தொண்டை மண்டல சதகம், பாண்டி மண்டல சதகம், கொங்கு மண்டல சதகம், திருத்தொண்டர் சதகம், அறப்பளீசுர சதகம், குமரேச சதகம், கயிலாசநாதர் சதகம், வடிவேல் சதகம், அண்ணாமலைச் சதகம், அருணாசல சதகம், தண்டலையார் சதகம், செயங்கொண்டார் சதகம், எம்பிரான் சதகம், அவையாம்பிகை சதகம், காசி விசுவநாத சதகம் மற்றும் வடமொழிச் சதகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பான நீதி*

சதகம், வைராக்ய சதகம் மற்றும் ஸ்ரீதயா சதகம் ஆகிய நூல்களை எல்லையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப் பெறுகின்றது.

## ஆய்வு அணுகுமுறை

வரலாற்றுச் சதகங்கள் வழி அறியப்படும் மண்டலங்களின் வரலாற்றை ஆராயுமிடத்து வரலாற்று முறை ஆய்வாகவும், சதக இலக்கியங்களின் அமைப்பு மற்றும் உள்ளடக்கம் பற்றி விளக்கமாக எடுத்துரைப்பதால் விளக்கமுறை ஆய்வாகவும், தமிழ்ச் சதகங்கள் மற்றும் வடமொழிச் சதகங்களுக்கிடையேயான ஒற்றுமை வேற்றுமைகளை ஆராயுமிடத்து ஒப்பீட்டு முறை ஆய்வாகவும் இவ்வாய்வு அமைகின்றது.

## முன்னாய்வுகள்

‘சதக இலக்கியங்களின் அமைப்பும் உள்ளடக்கமும்’ என்னும் தலைப்பில் அமைந்த இவ்வாய்விற்கு ப.பழனியம்மாளின் ‘தமிழில் சதக இலக்கியங்கள்’ என்ற நூலும், ந.வீ.செயராமனின், ‘சதக இலக்கியங்கள்’ என்ற நூலும், அ.மார்க்ஸின் ‘தண்டலையார் சதகத்தில் வாழ்வியல் விழுமியங்கள்’ என்ற நூலும் தா.ஈசுவரப் பிள்ளையின் ‘தமிழில் சிற்றிலக்கிய வரலாறு’ ஆகிய ஆய்வு நூல்கள் முன்னாய்வுகளாகத் திகழ்கின்றன.

## ஆய்வு ஆதாரங்கள்

### முதன்மை ஆதாரங்கள்

இவ்வாய்விற்கு முதன்மைச் சான்றுகளாக திருச்சதகம், கார்மண்டல சதகம் முதல் இருபத்தியொரு சதக நூல்கள் முதன்மை ஆதாரங்களாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### துணைமை ஆதாரங்கள்

ந.வீ.செயராமனின் சதக இலக்கியங்கள், ச.சிவகாமியின் தமிழ்ச் சதக இலக்கியம், ப.பழனியம்மாளின் தமிழில் சதக இலக்கியங்கள், த.இராசேசுவரியின் (ப.ஆ.) சதகத்திரட்டு ஆகிய சதக இலக்கியங்கள் தொடர்பான நூல்களும், சிற்றிலக்கியங்கள் மற்றும் பிற இலக்கியங்கள் தொடர்பான ஆய்வு

நூல்களும், கருத்தரங்கக் கட்டுரைகள், திறனாய்வு நூல்கள், ஆய்வுக் கோவைகள், ஆய்வு மலர்கள், ஆய்வு நூல்கள் மற்றும் இணையதளச் செய்திகள் ஆகியவை துணைமை ஆதாரங்களாகப் பயன்படுத்தப் பட்டுள்ளன.

**ஆய்வேட்டின் அமைப்பு**

இவ்வாய்வேடு முன்னுரை, முடிவுரை நீங்கலாக ஐந்து இயல்களைக் கொண்டுள்ளது.

இயல் 1. சிற்றிலக்கியங்களின் தோற்றமும் வளர்ச்சியும்

இயல் 2. சதக இலக்கியங்களின் வரலாறு

இயல் 3. சதக இலக்கியங்களின் அமைப்பு

இயல் 4. சதக இலக்கியங்களின் உள்ளடக்கம்

இயல் 5. ஒப்பீட்டு நோக்கில் சதக இலக்கியங்கள்

**முன்னுரை**

‘முன்னுரை’ என்னும் பகுதியில் ஆய்வு நோக்கம், கருதுகோள், ஆய்வுத் தலைப்பு, ஆய்வு அணுகுமுறை, முன்னாய்வுகள், ஆய்வுத் தரவுகள், முதன்மைத் தரவுகள், துணைமைத் தரவுகள், ஆய்வேட்டின் அமைப்பு, ஆய்வு இயல் பற்றிய செய்திகள், ஆய்வின் பயன் போன்ற செய்திகள் இடம்பெற்றுள்ளன.

**இயல் ஒன்று**

**‘சிற்றிலக்கியங்களின் தோற்றமும் வளர்ச்சியும்’** என்னும் முதல் இயலில் சிற்றிலக்கியம் பற்றிய அறிமுகம், சிற்றிலக்கியச் சொல் விளக்கம், சிற்றிலக்கியங்கள் பற்றி அறிஞர்கள் கூறும் கருத்துக்கள், சிற்றிலக்கியங்கள் தோன்றிய காலம், அதன் எண்ணிக்கை மற்றும் வகைப்பாடு பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன. தொண்ணூற்றாறு வகையான சிற்றிலக்கியங்களுள் குறிப்பிடத்தக்க சில வகைகளான ஆற்றுப்படை, அந்தாதி, அங்கமாலை, உலா, பரணி, கலம்பகம், பிள்ளைத்தமிழ், தூது, சதகம், மடல், பள்ளு, குறவஞ்சி என்னும் பன்னிரண்டு வகைகள் மட்டும் விளக்கப்பட்டுள்ளன.

**இயல் இரண்டு**

***‘சதக இலக்கியங்களின் வரலாறு’*** *என்னும் இரண்டாம் இயலில் சதக இலக்கியத்தின் வரையறை, பாட்டியல் நூல்கள் குறிப்பிடும் சதகத்தின் இலக்கணம், வரலாற்றுச் சதகங்கள், நீதி சதகங்கள், துதி சதகங்கள், காப்பிய சதகங்கள், பதிக சதகங்கள், இஸ்லாமிய சதகங்கள், கிறிஸ்தவ சதகங்கள், மொழிபெயர்ப்புச் சதகங்கள் என்றவாறு சதக இலக்கியங்கள் வகைப்படுத்தப் பட்டுள்ள திறம் பற்றியும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள இருபத்தியொரு சதக நூல்களின் நூல் வரலாறு மற்றும் ஆசிரியர் வரலாறு ஆகியவை விளக்கப்பட்டுள்ளன.*

**இயல் மூன்று**

***‘சதக இலக்கியங்களின் அமைப்பு’*** *என்னும் மூன்றாம் இயலில் சதக இலக்கியங்களின் பொது அமைப்பு விளக்கப்படுகின்றது. பா அமைப்பு மற்றும் பாடுபொருள் அமைப்பு ஆகிய இரு வகைகளில் சதக இலக்கியங்களின் அமைப்பு ஆராயப்பெறுகின்றது. பா அமைப்பில் காப்புச் செய்யுள், கடவுள் வாழ்த்து, அவையடக்கம், வாழ்த்துப் பாடல் ஆகியவை இடம்பெற்றிருக்கும் தன்மை, நூறு பாடல்களில் பாடப்படுதல் என்னும் எண்ணிக்கை வரையறை பற்றியும், நூல் முழுவதும் ஒரே வகை யாப்பில் பாடப்பட்டுள்ள தன்மைக் குறித்தும், மகுடம் இடம்பெறுதல் என்னும் சிறப்புக்கூறு பற்றியும் சதக இலக்கியங்களில் கையாளப்பட்டுள்ள மொழிநடை பற்றியும் விளக்கப்படுகின்றன.*

*பாடுபொருள் அமைப்பில் வரலாற்றுச் சதகங்களை மண்டல வரலாறு கூறுதல், தொண்டர் வரலாறு கூறுதல் என்னும் இரு வகைகளாகவும், நீதி சதகங்கள் அறிவுறுத்தல் மற்றும் அறிவித்தல் என்னும் இருவகைகளாக நீதி கூறும் திறம் பற்றியும், துதி சதகங்கள், வடமொழி சதகங்கள் அமைந்துள்ள விதம் பற்றியும் இம்மூன்றாவது இயலில் ஆராயப்பட்டுள்ளன.*

**இயல் நான்கு**

***‘சதக இலக்கியங்களின் உள்ளடக்கம்’*** *என்னும் நான்காம் இயல் சதக நூல்களின் பாடுபொருண்மைப் பற்றி ஆராய்கின்றது. வரலாற்றுச் சதகங்கள்*

என்னும் பகுதியில் கார்மண்டலம், தொண்டை மண்டலம், சோழ மண்டலம், கொங்கு மண்டலம், பாண்டி மண்டலம் ஆகிய மண்டலங்களின் எல்லைகள், திருத்தலங்கள், இறைவன் நிகழ்த்திய அற்புதங்கள், நாயன்மார்கள், ஆழ்வார்கள், வள்ளல்கள், அரசர்கள், புலவர்கள், நூல்கள், மருத்துவம், சித்தர்கள் பற்றிய செய்திகளும் வேளாளர்களின் உழவுத்தொழில் பற்றியும் கொடைத்திறம் பற்றியும் விளக்கமாக ஆராயப்பெறுகின்றது. மேலும் தொண்டர் வரலாறு கூறும் பகுதியில் அறுபத்து மூன்று அடியார்களின் வரலாறு எடுத்துரைக்கப்படுகின்றது.

நீதி சதகங்கள் என்னும் பகுதியில் அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் என்னும் நால்வகை வருணத்தாரின் இயல்புகள், நல்லோர் குணங்கள், தீயோர் செயல்கள், இல்லறம், பெண்கள், வறுமை, ஈகை, விருந்தோம்பல், கல்வி, செல்வம், புகழ், நிலையாமை, உணவு, மருத்துவம், வாஸ்து, நம்பிக்கைகள், பக்தி வழிபாட்டு முறைகள் பற்றி ஆராயப்பெறுகின்றது.

துதி சதகங்களில் இறைவனைப் போற்றித் துதிக்கும் தன்மைப் பற்றியும், வடமொழி சதகங்களின் பாடுபொருண்மைப் பற்றியும் இந்நான்காவது இயல் விளக்கமாக எடுத்துரைக்கின்றது.

**இயல் ஐந்து**

**'ஒப்பீட்டு நோக்கில் சதக இலக்கியங்கள்'** என்னும் ஐந்தாம் இயலில் அமைப்பு மற்றும் பாடுபொருண்மை அடிப்படையில் தமிழ்ச் சதகங்களுக்கிடையேயான ஒப்புமை மற்றும் வேற்றுமைகள் ஆராயப்பட்டுள்ளது. மேலும் தமிழ்ச் சதக இலக்கியங்களுடன் வடமொழிச் சதகங்களை ஒப்பிட்டு இவ்வியல் ஆராய்கின்றது.

**முடிவுரை**

**'சதக இலக்கியங்களின் அமைப்பும் உள்ளடக்கமும்'** என்னும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வின் மூலம் ஆராய்ந்து கண்டறியப்பட்ட மெய்ம்மைகள் முடிவுரையில் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன.

## ஆய்வேட்டின் பயன்

*தமிழகம் மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்த காலத்தில் அம்மண்டலங்களின் எல்லை பற்றிய வரலாற்றுச் செய்திகளை அறிந்து கொள்ள இவ்வாய்வு பெருந்துணை புரிகின்றது. சதக இலக்கியங்கள் கலைக் களஞ்சியம் போன்ற செய்திகளை எடுத்துரைப்பதன் மூலமும், அறிவுறுத்தும் நீதிகள் மூலமும் கற்போருக்கு இவ்வாய்வேடு பெரும்பயனை அளிக்கவல்லது.*

# இயல் 1

# சிற்றிலக்கியங்களின் தோற்றமும் வளர்ச்சியும்

## 1.0. முன்னுரை

*மனிதன் ஒலியின் மூலமே கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டான். பின்னர் நாகரிக வளர்ச்சி அடைந்த நிலையில் எழுதவும் பேசவும் கற்றுக் கொண்டான். அவன் தன் எண்ணங்களை வெளிப்படுத்த மொழி ஒரு கருவியாக அமைந்தது.*

> மொழி கருத்தை உணர்த்துவதால் ஒருவரை ஒருவர் தெரிந்து கொண்டு மக்கள் கூட்டங்கூட்டமாக ஒன்றுபட்டு வாழ அஃது உதவுகிறது. அவர்களின் நாகரிகம், பண்பாடு, கலை, வாழ்வு இவற்றிற்கெல்லாம் அடிப்படையாக விளங்கித் தனிப்பட்டவர் வாழ்வைச் சமுதாயத்தோடு பிணைக்கிறது[1]

*என்று ரா.சீனிவாசன் குறிப்பிடுகிறார். இக்கூற்றிலிருந்து மொழி மனிதன் சமூகமாக சேர்ந்து வாழ்வதற்கு பெருந்துணை புரிகின்றது என்பதை அறியமுடிகின்றது.*

## 1.1. இலக்கியம்

*'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' என்பது ஔவையார் கூற்று. இலக்கணமும் இலக்கியமும் ஒரு மொழியின் இரு கண்களாகப் போற்றப் பெறுகின்றன. இலக்கியங்கள் மக்கள் வாழ்க்கையைப் பிரதிபலித்துக் காட்டும் கண்ணாடி ஆகும். பண்டைத் தமிழரின் வரலாற்றினை அறிய உதவும் சான்றுகளாகவும் இலக்கியங்கள் விளங்குகின்றன.*

> *இலக்கியம் என்பது 'இலக்கு' என்னும் அடிச்சொல்லில் இருந்து பிறந்தது.* இலக்கு என்னும் சொல்லுக்கு எண்ணம், எதிர், ஓட்டம், ஒப்பு, குறிப்பு, சமயம், நேர், குறிப்பொருள், அம்பு எறியும் அடையாளம், இடம், நாடிய பொருள், எதிரி, அளவு, இலங்குதல், விளக்கம், இலக்கம் எனும் இருபது பொருள்களை மதுரைத் தமிழ்ப் பேரகராதி தருகிறது. இவை யாவும் யாதோ ஒரு குறிக்கோளோடு படைக்கப்படுவதே 'இலக்கியம்' எனும் பொருளைத் தெரிவிக்கின்றன[2]

என்று மதுரைத் தமிழ்ப் பேரகராதியை எடுத்துக்காட்டி அ.ச.ஞானசம்பந்தன் விளக்குகிறார்.

தொல்காப்பியர் காலத்திலிருந்தே 'இலக்கியம்' என்ற சொல்லாட்சியைக் காணமுடியவில்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டில்தான் இச்சொல் குறிக்கோளுடைய நூல்கள் என்னும் பொருளில் கையாளப்பட்டு வந்துள்ளதை அ.ச.ஞானசம்பந்தன் குறிப்பிடுகின்றார்.

## 1.2. இலக்கிய வகைமை

தமிழ் இலக்கியங்களில் அவற்றின் பொருண்மை மற்றும் வடிவ அடிப்படையில் பேரிலக்கியம், சிற்றிலக்கியம் என்ற வகைப்பாட்டினைக் காணமுடிகின்றது. சிற்றிலக்கியங்களில் சில வாய்மொழி இலக்கியங்களாகவும் விளங்குகின்றன.

> சொல்ல வந்த ஒரு கருத்தை ஒரு செய்யுளில் முடிப்பது சிற்றிலக்கியம் என்றும், ஒருவர் வாழ்க்கையை அல்லது அவர் செயல்களை அல்லது ஒரு நெடுங்கதையைப் பல செய்யுள்களில் தொடர்ந்து முடிப்பது பேரிலக்கியம் என்றும் கொள்ளலாம்[3]

என்று ஆ.சிவலிங்கனார் 'இலக்கியத்தின் நோக்கமும் பயனும்' என்னும் நூலில் குறிப்பிடுகின்றார்.

தமிழ் இலக்கியங்களிற் காணப்பெறும் சிற்றிலக்கியம், பேரிலக்கியம் என்னும் வகைப்பாடு இருபதாம் நூற்றாண்டளவில் வழக்கிற்கு வந்தது. பேரகத்தியம், சிற்றகத்தியம், சிற்றட்டகம், பெருங்கதை எனப் பெருமை சிறுமைகளை அடைமொழிகளாகக் கொண்டுள்ள நூல்களின் பெயர்களைப் பார்த்து இப்படிப் பேரிலக்கியம், சிற்றிலக்கியம் என வகைப்படுத்தியிருக்கலாம் என்று கருதமுடிகின்றது.

ஐம்பெருங்காப்பியங்கள், கம்பராமாயணம், மகாபாரதம் போன்ற இலக்கியங்கள் பேரிலக்கியம் என்றும், உலா, தூது, கலம்பகம் உள்ளிட்ட இலக்கிய வகைகள் சிற்றிலக்கியங்கள் என்றும் வழங்கப்படுகின்றன.

## 1.3. சிற்றிலக்கியம்

*தமிழ் இலக்கியம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பழமை வாய்ந்தது. தொல்காப்பியமும் சங்க இலக்கியங்களும் பழமை வாய்ந்த இலக்கண இலக்கிய நூலாக விளங்குகின்றன. இவைகளை மூலமாகக் கொண்டு பல்வேறு இலக்கிய வகைகள் தோற்றம் பெற்றன. தொல்காப்பியர் காலத்திலேயே பல்வேறு இலக்கிய வகைமைப் பற்றிய பகுப்பு தோன்றி விட்டதை அறியலாம். இதனை,*

> பாட்டு, உரை, நூல், வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல்[4]

*என்னும் செய்யுளியல் நூற்பா உணர்த்துகின்றது. மேலும் தொல்காப்பியம் குறிப்பிடும் எண்வகை வனப்பும் இலக்கிய வகைகளைக் குறிப்பிடுகின்றது.*

> பெரும்பாலும் தொடர்நிலைச் செய்யுட்கு உரியனவாகத் தொல்காப்பியத்திற் கூறப்பட்ட வனப்பு எட்டனுள், ‘விருந்து’ என்பதும் ஒன்று. அஃதாவது புலவர்களால் தாம்தாம் வேண்டியவாறு தனித்தும், பல செய்யுட்கள் தொடர்ந்தும் வரப் புதிதாகப் பாடப்படுவது. இப்பொதுவிதி சொற்றொடர் நிலையாய் வரும் அந்தாதி, கலம்பகம் முதலான சிற்றிலக்கியங்களுக்கும், அந்தாதியாய் வராத உலா, தூது, பிள்ளைத்தமிழ் முதலான பல இலக்கியங்களுக்கும் இலக்கணமாயிற்று. இவ்விதியை ஆதாரமாகக் கொண்டு எண்ணிறந்த சிற்றிலக்கியங்கள் இயற்றப்பெற்றன[5]

*என்பதைச் ‘சிற்றிலக்கியச் சொற்பொழிவுகள்’ என்னும் நூல் வழி அறியமுடிகின்றது.*

*தமிழ்மொழியின் இலக்கிய வகைகளில் குறிப்பிடத்தக்கதாகவும், மொழிக்கு வளம் சேர்ப்பதுமான இலக்கிய வகையாக சிற்றிலக்கியம் விளங்குகின்றது. நாயக்கர் காலத்தில் தோன்றிய இலக்கியங்களை சிற்றிலக்கியங்கள் என்றழைத்தனர்.*

*சிற்றிலக்கியங்கள் பிரபந்தங்கள் எனப்பட்டது. ‘பிரபந்தம்’ என்பது வடமொழிச் சொல்லாகும். பிரபந்தம் என்ற சொல்லிற்கு ‘நன்கு கட்டப்பட்டது’ என்பது பொருளாகும்.*

> எல்லா இலக்கியங்களும் நன்கு கட்டப்பட்டனவே. எனவே, பிரபந்தம் என்ற சொல் சிற்றிலக்கியம் என்பதை மட்டும் குறிப்பிடாமையை உணர்ந்து

சிற்றிலக்கியத்தைச் சுட்டச் சிறு பிரபந்தம் அல்லது சில்லறைப் பிரபந்தம் என்ற சொல்லாட்சியைப் பயன்படுத்தத் தொடங்கினர்[6]

*என்னும் கருத்துப்படி நாளடைவில் சிறுபிரபந்தம் என்பதை விடுத்து சிற்றிலக்கியம் என்ற சொல் நிலை பெற்றதாகக் கருதப்படுகிறது.*

பிரபந்தம் என்ற சொல்லாட்சி முதன் முதலில் சிலப்பதிகார அரும்பதவுரையிலும் அடியார்க்கு நல்லார் உரையிலும் காணப்படுகிறது.[7]

*ஆழ்வார்கள் அருளிச்செய்த பக்தி பாமாலைகளைத் தொகுத்த நாதமுனிகள் அவற்றிற்கு 'நாலாயிர திவ்ய பிரபந்தம்' எனப் பெயரிட்டனர். அதுபோன்று பதினொரு சைவ அடியார்கள் பாடிய பாடல்களுக்கு நம்பியாண்டார் நம்பி 'பிரபந்தமாலை' எனப் பெயரிட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.*

*தனித்தமிழ் ஆட்சி செல்வாக்குப் பெற்ற நிலையில் வடமொழிச் சொல்லான 'பிரபந்தம்' என்பதை விடுத்து 'சிற்றிலக்கியம் என்னும் சொல் வழங்கப்பட்டது. இச்சொல்லாட்சியே காலப்போக்கில் நிலைபெற்று, அக்காலத்தைச் சிற்றிலக்கிய காலம்' என்று அழைப்பதற்கு காரணமாயும் அமைந்தது.*

சிற்றிலக்கியங்களாவன, தமிழ்மொழியில் வழங்கி வரும் பிரபந்தங்களாம். பிரபந்தம் என்பது நன்கு கட்டப்பட்டது என்னும் பொருள் தரும் வடசொல். யாப்பு, செய்யுள் என்பன அப்பொருள் தரும் தமிழ் சொற்களாம். எழுத்து முதலிய பலவகை உறுப்புகளால், அகமும் புறமுமாகிய பொருளுக்கு இடமாக இயற்றப்படுதலின் இவை இப்பெயர் பெற்றன[8]

*என்று சிற்றிலக்கியச் சொற்பொழிவுகள் என்னும் நூலில் கூறப்பட்டுள்ளது.*

*இடைக்காலத்தில் பெருவழக்கில் இருந்த 'பிரபந்தம்' என்னும் சொல் பிற்காலத்தில் சிற்றிலக்கியம், சிறுகாப்பியம் என வழங்கப்பட்டது. தண்டியலங்காரம் காப்பியம் என்றும் பெருங்காப்பியம் என்றும் பாகுப்படுத்துகிறது. சிறுகாப்பியம் என்னும் சொல் வடமொழி மரபைப் பின்பற்றி சிற்றிலக்கியங்கள் என அழைக்கப்படுவதற்கு மாறாக அந்தாதி இலக்கியங்கள், பரணி இலக்கியங்ள் என்று அழைப்பது பொருத்தமுடைத்து என்னும் கருத்து இங்கு குறிப்பிடத்தக்கது.*

*தற்காலத்தில் சிற்றிலக்கியம் தொடர்பான ஆய்வுகள் இலக்கிய வகைகள் என்னும் சொல்லினைக் கையாள்கின்றன.*

*தமிழ் இலக்கியத்தில் வெண்பா, குறள் உள்ளிட்ட செய்யுள் வடிவங்களும், சிறுகதை, புதினம் போன்ற உரைநடை வடிவங்களும் மற்றும் தொண்ணூற்றாறு வகையான சிற்றிலக்கியங்கள் எனக் காலப்போக்கில் பொருண்மை மற்றும் வடிவம் அடிப்படையில் இலக்கிய வகைகள் தோன்றின. அவ்விலக்கிய வகைகள் குறிப்பிடத்தக்க ஒன்றாக சிற்றிலக்கியங்கள் விளங்குகின்றன.*

*சிற்றிலக்கிய வகைகள் தோன்றுவதற்குரிய மூலங்கள் அச்சிற்றிலக்கிய வகைகள் தோன்றுவதற்கு முன்னர் நிலவிய இலக்கியங்களிற் காணப்படுகின்றன. தொல்காப்பியம் மற்றும் சங்க இலக்கியங்களில் தோற்றம் பெற்றதான இலக்கிய வகைகள் பிற்காலத்தில் தனித்த இலக்கிய வகையாக வளர்ச்சிப் பெற்றமையை உணரமுடிகின்றது.*

## 1.4. சிற்றிலக்கியம் - அறிஞர்கள் கருத்து

*சிற்றிலக்கியம் என்பது யாது? என்பதற்கான விளக்கமாக அறிஞர்கள் கூறும் கருத்துக்கள் இங்கு குறிப்பிடப் பெறுகின்றன.*

> பிரபந்தம் என்பது தொண்ணூற்றாறு வகைப்பட்ட நூல்[9]

*என்றும்,*

> காவியத்தின் ஒரு கூறாகிய ஒரு துறை மட்டும் பாடப்படுவது பிரபந்தம்[10]

*என்றும்,*

> குறைந்த எண்ணிக்கையுடைய பாடல்களைக் கொண்டும், எண்வகை யாப்பினாலும், குறிப்பிட்ட அமைப்பு நிலையினாலும் படைக்கப் பெறும் இலக்கிய வகையே சிற்றிலக்கியம்[11]

*என்றும்,*

> சிற்றிலக்கிய வகைகள் நெடும்பாட்டு போல்வன, முற்ற முடிந்த ஒரு குறிப்பிட்ட பொருளின் மேல்வன.... சங்க காலத்துப் பாட்டுக்கள் போலக் குறிப்பிட்ட இறைவனை, மன்னனை, வள்ளலைப் பற்றிப் புகழ்வதற்காக, சிறப்பாக எடுத்துரைப்பதற்காக எழுதப்பட்டன[12]

*என்றும்,*

> சொல்லவந்த ஒரு கருத்தை ஒரு செய்யுளில் முடிப்பது சிற்றிலக்கியம்[13]

*என்றும்,*

குறைந்த எண்ணிக்கையுடைய பாடல்களால் அறம், பொருள், இன்பம் எனவரும் முப்பொருள்களில் யாதாயினும் ஒன்றைச் சார்ந்து குறிப்பிட்ட அமைப்பு நிலையில் அமையும் இலக்கிய வகைகள் சிற்றிலக்கியம் என்னும் பகுப்பிற்குரியவை[14]

*என்றும்,*

பிரபந்தம் என்பது வடமொழி மூலச்சொல்லாகி, நன்றாகக் கட்டப்பட்டது என்ற அடிப்படையில் இலக்கிய ஆக்கத்தைக் குறித்ததாகவும் தெரிகிறது.[15]

தமிழ் இலக்கிய வரலாற்றில் முக்கிய இடம்பெறும் சில இலக்கியங்கள் சிற்றிலக்கியங்கள் என்று அழைக்கப்படுகின்றன. காப்பியங்கள் போன்று ஒரு பொருள் நுதலிய நூல்களாகவும், பல்வேறு வடிவ வேறுபாடுகளைக் கொண்டுள்ள நூல்களாகவும், புதிய பாடுபொருட்களை அறிமுகம் செய்யும் நூல்களாகவும் புதுமைப்போக்கில் இவை அமைந்துள்ளன. எனவே இவற்றைப் ‘புதுமை இலக்கியம்’ எனவும் அழைக்கலாம். இலக்கணத்தார் இதனை ‘விருந்திலக்கியம்’ என்று சொல்கின்றனர்.[16]

*இவை போன்று சிற்றிலக்கியங்கள் தொடர்பான பல்வேறு விளக்கங்களைக் காணமுடிகின்றது.*

## 1.5. சிற்றிலக்கிய வளர்ச்சி

*தமிழ்மொழியில் காலந்தோறும் சிற்றிலக்கியங்கள் தோற்றம் பெற்று வந்துள்ளன. தனித்த இலக்கிய வகையாகப் பெருவளர்ச்சியுற்ற சிற்றிலக்கிய வகைகளுக்கான கரு தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ளது.*

கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்
சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்[17]

*என்பது ஆற்றுப்படை இலக்கியத்தையும்,*

ஊரொரு தோற்றமும் உரித்தென மொழிப
வழக்கொடு சிவணிய வகைமையான[18]

*என்பது உலா இலக்கியத்தையும்,*

குழவி மருங்கினும் கிழவதாகும்[19]

*என்பது பிள்ளைத்தமிழையும் குறிப்பிட்டுக் காட்டுகின்றது. மேலும்,*

விருந்தே தானும்

புதுவது புனைந்த யாப்பின் மேற்றே[20]

என்னும் தொல்காப்பிய நூற்பா, பிற்காலத்தில் புதிதாகத் தோற்றம் பெறக்கூடிய அனைத்து இலக்கிய வகைகளையும் சுட்டி நிற்கின்றது.

இவ்வாறாக தொல்காப்பியர் காலத்தில் வித்திடப் பெற்ற சிற்றிலக்கிய வகைகள் சங்ககாலத்திலிருந்தே வளர்ச்சிப் பெறத் தொடங்கின.

சங்ககாலத்தில் இருந்தே சிற்றிலக்கியங்களின் வளர்ச்சி நிலையைக் காணமுடிகின்றது. சங்க இலக்கியங்கள் பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் ஆகும். பத்துப்பாட்டுள் இடம்பெறும் பத்து நூல்களுள் சரிபாதி ஆற்றுப்படை இலக்கியங்கள். திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை என்னும் இவ்வாற்றுப்படை இலக்கியங்கள் பிற்காலத்தில் தனித்த இலக்கிய வகையாகப் பெருவளர்ச்சியுற்றன.

சங்கம் மருவிய காலத்தில் தோற்றம் பெற்றதான பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் இன்னா நாற்பது, இனியவை நாற்பது, களவழி நாற்பது, கார்நாற்பது போன்றவை சிற்றிலக்கியங்களாக விளங்குகின்றன.

பக்தி இலக்கிய காலத்தில் சைவ சமய அடியார்கள் பாடிய பாடல்கள் பன்னிரு திருமுறைகள் எனப்பட்டன. அவற்றுள் பதினோராம் திருமுறையில் இடம்பெறும் நூல்கள் அனைத்தும் சிற்றிலக்கிய வகைகளாக அமைந்தமையால் அவை ‘பிரபந்தமாலை’ என்றழைக்கப்பட்டது. வைணவ அடியார்கள் பாடிய பாசுரங்கள் ‘நாலாயிர திவ்ய பிரபந்தங்கள்’ ஆகும். இவற்றுள் பெரும்பான்மை சிற்றிலக்கியங்களாக விளங்கியமை குறிப்பிடத்தக்கது. பக்தி இலக்கிய காலத்தில் தோன்றிய சிற்றிலக்கியங்களுக்கு எடுத்துக்காட்டாக, காரைக்காலம்மையாரின் திருப்பதிகங்கள், திருநாவுக்கரசரின் திருத்தாண்டகம், மாணிக்கவாசகர் இயற்றிய திருத்தசாங்கம், திருக்கோவையார், திருமங்கையாழ்வார் பாடிய திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

*பின்னர் பல்வேறு காலக்கட்டங்களில் பலவகையான சிற்றிலக்கியங்கள் தோற்றம் பெற்று வந்துள்ளன. இதனை, ந.வீ.செயராமன் குறிப்பிடுமிடத்து,*

> தொல்காப்பியர் காலத்தில் இடம்பெற்ற சிற்றிலக்கிய வித்து சங்ககாலத்தில் ஆற்றுப்படையாக முளைவிட்டு, ஐந்தாம் நூற்றாண்டில் அந்தாதியாகத் துளிர்த்து, ஏழாம் நூற்றாண்டில் உலாவாக மரமாகி, ஒன்பதாம் நூற்றாண்டில் கலம்பகமாகக் கிளைத்து, பதினோராம் நூற்றாண்டில் சதகமாகவும் பரணியாகவும் அரும்பி, பன்னிரண்டாம் நூற்றாண்டில் பிள்ளைத்தமிழாக மொட்டாகி, பதினான்காம் நூற்றாண்டில் தூதாகப் பூத்து, பதினாறாம் நூற்றாண்டில் பள்ளாகக் காய்த்து, பதினெட்டாம் நூற்றாண்டில் குறவஞ்சியாகக் கனிந்தது[21]

*என்று கூறுவதன் மூலம் சிற்றிலக்கியத்தின் வளர்ச்சிப் படிநிலையை அறிந்து கொள்ளலாம்.*

*சிற்றிலக்கியத்தின் காலம் பற்றிய வரையறையில் பல்வேறு மாறுபட்ட கருத்துக்களைக் காணமுடிகின்றது. சிற்றிலக்கியத் தோற்றக்காலம் தொல்காப்பியத்திற்கு முற்பட்டது எனினும், மாணிக்கவாசகர் காலத்திலிருந்து சிற்றிலக்கியங்கள் வளர்ச்சிபெறத் தொடங்கின என்பதை அறியமுடிகின்றது.*

> நமது இலக்கிய வரலாற்றை ஆராய்ந்து பார்த்தோமானால், 13லிருந்து 18 ஆம் நூற்றாண்டுக்கு இடைப்பட்ட காலத்தையே நாம் சிற்றிலக்கியக் காலம் எனக் கொள்ளலாம் என்பது தெளிவாகின்றது[22]

*என்னும் கருத்து இவண் குறிப்பிடத்தக்கது.*

> காலந்தோறும் புதிய இலக்கியங்கள் செய்யப்பட்டாலும், அவை அதிகமாக இயற்றப்பட்ட காலம் ஒன்று தமிழ் இலக்கிய வரலாற்றில் உண்டு. அதை நாம் ‘சிற்றிலக்கியக் காலம்’ என்று அழைக்கிறோம். சிற்றிலக்கியங்கள் வளர்ச்சிப் பெற்ற இந்தக் காலப்பகுதி 11 ஆம் நூற்றாண்டளவில் (கலிங்கத்துப்பரணி, மூவருலா இயற்றப்பட்ட காலம்) தொடங்கி, நாயக்கராட்சி காலம் வரை (சுமார் 1750 வரை) தொடர்கிறது[23]

*என்று கி.இராசா தமிழர் இலக்கிய வரலாறு என்னும் நூலில் குறிப்பிடுகிறார்.*

## 1.6. சிற்றிலக்கியப் பகுப்பு முறை

*சிற்றிலக்கியங்கள் பின்வருமாறு பகுத்துக் காட்டப்பெறுகின்றது. இலக்கிய வகைப்பாட்டில் பொருள் அடிப்படையிலான வகைப்பாடே மிகவும் பழமையானது என்று கருதப்படுகிறது. இதனோடு புறவடிவம், அமைப்புமுறை போன்றவற்றின் அடிப்படையில் ச.வே.சுப்பிரமணியம் இலக்கியங்களை வகைப்படுத்துவதை மேற்கோள் காட்டி கி.இராசா விளக்குகின்றார்.*

1. *பொருள் - ஆற்றுப்படை, பிள்ளைத்தமிழ் போன்றன.*
2. *வடிவம் - அகவல், ஆசிரியம், வண்ணம் போன்றன.*
3. *அமைப்பு - இரட்டைமணிமாலை, மும்மணிக்கோவை.*
4. *எண் அடிப்படை - சட்டகம், சதகம் போன்றவை.*
5. *நாட்டுப்புற வகைகள் - அம்மானை, சாதல், ஊசல் போன்றன.*
6. *எழுத்தடிப்படை வகைகள் - உயிர் வருக்கமாலை, வருக்கக்கோவை போன்றன.*
7. *முதல் தொடரால் பெயர் பெறுவன.*
8. *தன்மையில் பெயர் பெறுவன - தேவாரம், அனுபூதி.*
9. *ஒன்றிற்கு மேற்பட்ட அமைப்பால் பெயர் பெறுவன.*
10. *பொருண்மையும் வடிவமும் இணைந்தவை சிந்து போன்றன.*[24]

*தமிழில் சிற்றிலக்கிய வரலாறு என்னும் நூலில் தா.ஈசுவரப்பிள்ளை குறிப்பிடுவதை நோக்குமிடத்து சில மாறுதல்களைக் காணமுடிகின்றது. அவை பின்வருமாறு,*

1. பொருள் அடிப்படையில் - அகப்பொருள், புறப்பொருள், துதிப்பொருள் முதலியன.
2. எண்ணிக்கை அடிப்படையில் - பத்து, பதிகம், சதகம், பஞ்சகம் முதலியன.
3. யாப்பு அடிப்படையில் - அந்தாதி, ஊர் வெண்பா, ஊரின்னிசை, ஊர் நேரிசை முதலியன.
4. பொருண்மை அடிப்படையில் - தூது உலா, பிள்ளைத்தமிழ் முதலியன.
5. சொல்முடிபு அடிப்படையில் - மாலை, வாழ்த்து செய்யுள் நிலை முதலியன.
6. விளையாட்டு அடிப்படையில் - ஊசல், அம்மானை முதலியன.

7. நாட்டுப்புற இலக்கிய வகை அடிப்படையில் பள்ளு, குறவஞ்சி, குறம் முதலியன.
8. கதைப்பாடல் அடிப்படையில் - அல்லி அரசாணி மாலை, பெரிய எழுத்து, புலந்திரன் தூது முதலியன.
9. பெண்கள் தொடர்பானவை - புகழ்ச்சி மாலை, தாரகை மாலை.
10. இசை அடிப்படையில் - தெம்மாங்கு, கும்மி, சிந்து, கீர்த்தனை.
11. இசை நாடக அடிப்படையில் - பள்ளு, குறவஞ்சி முதலியன.
12. நீதி அடிப்படையில் அமைவன - தண்டலையார் சதகம் முதலியன.
13. பக்தி அடிப்படையில் - மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் முதலியன.
14. தத்துவ அடிப்படையில் அமைவன - நெஞ்சுவிடு தூது முதலியன.
15. சமுதாய அடிப்படையில் அமைவன - பழையதுவிடு தூது, செருப்புவிடு தூது முதலியன.
16. தொழில் அடிப்படையில் அமைவன - ஓடப்பாட்டு, வண்டிக்காரன் பாட்டு.[25]

*இவ்வாறாக இலக்கிய வகைகள் பற்றிய கருத்துக்களைக் காணமுடிகின்றது.*

*மேற்சுட்டிய இலக்கிய வகைப்பாடுகளை பின்வரும் தலைப்புகளில் பொதுமைப்படுத்திக் காணலாம்.*

### 1.6.1. பொருள் அடிப்படை

*சிற்றிலக்கியங்களில் கூறப்படும் கருத்துக்கள் அதாவது உள்ளடக்கத்தை அடிப்படையாக வைத்துக் குறிப்பிடப்படும் வகைப்பாடே பொருள் அடிப்படையிலான வகைப்பாடு எனலாம். இவை இரண்டு நிலைகளில் சுட்டப்பெறும். அகப்பொருள், புறப்பொருள் என்பவை அவை. பொருள் அடிப்படையிலான வகைப்பாடு மிகவும் பழமையானதாகக் கருதப்படுகிறது.*

*அகப்பொருள், புறப்பொருள், துதிப்பொருள் சார்ந்த சிற்றிலக்கியங்கள் பொருள் அடிப்படையில் அமைகின்றது. தூது, கோவை போன்றவை அகப்பொருள் இலக்கியங்கள், ஆற்றுப்படை, பிள்ளைத்தமிழ், பரணி போன்றவை புறப்பொருள் இலக்கியங்களாக வகைப்படுத்தப்படுகின்றன. இவை பொருண்மை அடிப்படையிலான வகைப்பாடு எனக் குறிப்பிடப் பெறுகின்றது.*

### 1.6.2. நிகழ்வுகள் மற்றும் செயல்கள் அடிப்படை

*இது அகம், புறம் சார்ந்த செயல்கள் அல்லது தனித்தனி நிகழ்வுகள் அடிப்படையிலான வகைப்பாடு. தலைவன் மீது காதல் கொண்ட தலைவி ஒருத்தி தலைவனிடம் தூது விடுவதாக அமையும் இலக்கிய வகை, தலைவன் உலா வருவதைக் கண்ட தலைவியின் செயல்கள் பற்றிக் குறிப்பிடும் இலக்கிய வகையாக இவ்வகைப்பாடு அமைகின்றது.*

*இறைவன் அல்லது பாட்டுடைத் தலைவனை துயில் எழுப்புவதாக அமையும் இலக்கிய வகையாக பள்ளியெழுச்சி குறிப்பிடப்படுகின்றது. பெண்கள் ஆடும் விளையாட்டின் அடிப்படையில் அமைந்த ஊசல் இலக்கியம் போன்றவை இவ்வகைப்பாட்டில் அடங்கும்.*

*பக்தி, தத்துவம், நீதி, சமுதாயம், தொழில் போன்ற கருத்துக்களைக் கூறும் சிற்றிலக்கியங்களும் இவ்வகைப்பாட்டுள் அடக்கிக் கூறப்பெறுகின்றது.*

### 1.6.3. எண்ணிக்கை அடிப்படை

*சங்ககாலத்திலேயே அகநானூறு, புறநானூறு பதிற்றுப்பத்து என எண்ணிக்கை அடிப்படையில் பெயரிடும் மரபைக் காணமுடிகிறது.*

> பத்தாகப் புனையும் மரபிலிருந்து இருபது வகைகளாக தமிழில் கிளைத்திருக்கும். பத்து, பதிகம், ஒருபா ஒருபஃது, இருபா இருபஃது, தசாங்கம், பயோதரப்பத்து, இரட்டைமணிமாலை, மும்மணிமாலை, நான்மணிமாலை என்றிவ்வாறு[26]

*காணப்படும் இலக்கிய வகைகள் எண்ணிக்கை அடிப்படையிலானவை.*

*அதாவது ஐந்து பாடல்களை உடைய இலக்கியவகை பஞ்சகம் எனவும், பத்து பாடல்களை உடையது பதிகம் எனவும், நூறு பாடல்களை உடையது சதகம் எனவும் வழங்கப்பெறும் எனக் குறிப்பிட்டுள்ளார்.*

### 1.6.4. புகழ்தல் அடிப்படை

*உடல் உறுப்புக்களைப் புகழ்ந்து பாடுதல், மக்களைப் புகழ்ந்து பாடுதல் என்னும் அடிப்படையிலான வகைப்பாடாக இது அமைகின்றது.*

### 1.6.4.1. உடல் உறுப்புக்களைப் புகழ்தல்

*ஆண், பெண் இருபாலருடைய உடல் உறுப்புக்களை அந்தாதித் தொடையில் பாடும் இலக்கிய வகையாக அங்கமாலை விளங்குகின்றது. கேசாதிப்பாதம், பாதாதிகேசம், நயனப்பத்து போன்றவையும் உடல் உறுப்புக்களைப் பாடும் இலக்கிய வகையாகும்.*

> பாதாதிகேசம், கேசாதிபாதம், நயனப்பத்து, பயோதரப்பத்து ஆகிய இலக்கிய வகைகள் உடல் உறுப்புக்களைப் பாடுவன. ஆயினும் அங்கமாலை, வெண்பா விருத்தத்தில் பாடுவது என்பதாலும் இன்ன உறுப்பை மட்டும் பாடுவது என்ற வரையறை இல்லாததாலும், உடல் உறுப்புக்களை வரிசை முறைப்படிப் பாடுவது என்ற அமைப்பு இல்லாததாலும் இது அவற்றினின்றும் வேறுபட்டது[27]

*என்னும் கருத்து இவண் கவனிக்கத்தக்கது. எடுத்துக்காட்டாகத் திருநாவுக்கரசர் பாடிய திருஅங்கமாலை விளங்குகிறது.*

*கேசாதிபாதம் என்பது பாட்டுடைத் தலைவனை தலையிலிருந்து பாதம் வரை வருணித்துப் பாடும் இலக்கிய வகை. பாதாதி கேசம் என்பது பாதத்திலிருந்து தலைவரை வர்ணித்தல் ஆகும். பெண்களின் கண்களை மட்டும் புகழ்ந்து பாடக்கூடிய இலக்கிய வகைக்கு நயனப்பத்து என்று பெயர். தசாங்கம் என்பது அரசனின் குடை, கொடி, முரசு, தேர், யானை, படை, குதிரை, செங்கோல், நாடு, நகரம் போன்ற உறுப்புக்களைப் புகழ்ந்து பாடுதல் எனலாம். தசாங்கப்பத்து, தசாங்கத்தயல், சின்னப்பூ போன்ற இலக்கியங்கள் இவ்வகையில் அடங்கும்.*

### 1.6.4.2. மக்களைப் புகழ்தல்

*ஆடவர், பெண்களைப் புகழ்ந்து பாடும் இலக்கிய வகை. நாமமாலை, புகழ்ச்சி மாலை, தாரகைமாலை போன்றவை.*

### 1.6.5. யாப்பு அடிப்படை

*நூலை இயற்றுவதற்கு பயன்பட்ட யாப்பின் அடிப்படையில் சிற்றிலக்கியங்களை வகைப்படுத்துவர். அந்தாதி, வெண்பா, இன்னிசை, நேரிசை, அகவல் முதலான இலக்கிய வகைகள் யாப்பு அடிப்படையில் அமைந்தவை.*

*யாப்பு அடிப்படையில் அமைந்த அந்தாதி இலக்கிய வகையில் நூற்றந்தாதி, வெண்பா அந்தாதி, கலித்துறை அந்தாதி, பதிற்றுப்பத்தந்தாதி, ஒலியந்தாதி, கலியந்தாதி எனப் பல நூல்கள் தோன்றியுள்ளன.*

### 1.6.6. சொல் முடிபு அடிப்படை

*சொல் முடிபு அடிப்படையில் அமைந்த சிற்றிலக்கியங்களை நூற்பெயரின் இறுதிச் சொல்லை அடிப்படையாகக் கொண்டு வகைப்படுத்தப் படுகிறது. இவ்வகையில் வேனில்மாலை, மாலை. வாழ்த்து, செய்யுள்நிலை முதலியன காணப்படுகின்றன.*

### 1.6.7. நாட்டுப்புறஇயல் அடிப்படை

*நாட்டுப்புற இலக்கியங்களையும், நாட்டுப்புற விளையாட்டுக்களையும் அடிப்படையாகக் கொண்டு இவ்விலக்கியங்கள் வகைப்படுத்தப்படுகின்றன. பள்ளு, குறவஞ்சி, குறம் போன்றவைகளை இவ்வகையில் அடக்குவர். இவை நாடகமாக நடித்துக்காட்டும் இயல்புகருதி நாடக இலக்கியம் எனவும் வழங்கப் பெற்றது. முக்கூடற்பள்ளு, குற்றாலக்குறவஞ்சி, மீனாட்சியம்மை குறம் போன்ற இலக்கியங்கள் இவ்வகையில் குறிப்பிடத்தக்கவை.*

*நாட்டுப்புற விளையாட்டு அடிப்படையில் ஊசல், அம்மானை போன்ற இலக்கியங்களைக் குறிப்பிடலாம். இவை பெண்கள் விளையாடும் விளையாட்டின் அடிப்படையில் தோன்றியவை ஆகும்.*

### 1.6.8. இசை அடிப்படை

*இசை மற்றும் இசை நாடகம் என்ற அடிப்படையில் இவ்விலக்கியங்கள் வகைப்படுத்தப்படுகின்றன. இசை அடிப்படை என்பது இசையுடன் பாடக்கூடிய இலக்கிய வகையைக் குறிக்கும். எடுத்துக்காட்டாக தெம்மாங்கு, கும்மி, சிந்து, கீர்த்தனைப் பாடல்கள் முதலியவை விளங்குகின்றன.*

*தெம்மாங்கு இசையுடன் பாடக்கூடிய நாட்டுப்புற இலக்கியவகை. கும்மி பெண்கள் விளையாட்டுக்களுள் ஒன்று. ஞானக்கும்மி, பாரதியாரின் பெண்கள்*

விடுதலைக்கும்மி போன்றவை குறிப்பிடத்தக்கவை. சிந்து யாப்பு அடிப்படையில் பாடும் ஒருவகை. அண்ணாமலை ரெட்டியாரின் ‘காவடிச்சிந்து’ புகழ்வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. கீர்த்தனை என்பது “நாடக வழக்கில் உரையாடலுடன் கூடிய பிற்கால இசை இலக்கிய வகை”[28] என்று கி.இராசா குறிப்பிடுகின்றார். சீர்காழி அருணாச்சலக் கவிராயரின் இராமநாடகக் கீர்த்தனை, கோபால கிருஷ்ண பாரதியாரின் நந்தனார் சரித்திரக் கீர்த்தனை போன்றவை சான்றாகின்றன.

இசையுடன் நடித்துக் காட்டுவதற்கு ஏற்ற வகையில் அமையும் இலக்கிய வகையாகப் பள்ளு இலக்கியமும் குறவஞ்சி இலக்கியமும் குறிப்பிடப்பெறுகின்றன.

### 1.6.9. கதைப்பாடல் அடிப்படை

கதைப்பாடல் அடிப்படையில் அமையும் இவ்விலக்கிய வகை நாட்டுப்புற பாடல் அமைப்பில் புராணக் கதைகளை மையமாக வைத்து பாடப்பெறும் இலக்கிய வகையாகும். இதற்குச் சான்றாக அல்லி அரசாணிமாலை, பெரிய எழுத்து, புலந்திரன் தூது போன்றவற்றைக் குறிப்பிடுவர்.

## 1.7. இலக்கியவகை - எண்ணிக்கை

சோழர் காலத்திற்குப் பின்னர் பெரிய அளவிலான இலக்கியங்கள் தோன்றாமல் சிற்றிலக்கியங்கள் உருவாக்கம் பெற்றன. இவை வட்டார இலக்கியங்களாக இருந்தமையால் வகை, எண்ணிக்கை ஆகியவற்றில் மாறுபாடு காணப்படுகின்றது.

> கி.பி.12 ஆம் நூற்றாண்டு வரையிலும் சிற்றிலக்கிய எண்ணிக்கை 96 என வரையறுத்துக் கூறும் வழக்கு ஏற்படவில்லை. கி.பி.16 ஆம் நூற்றாண்டில் தோன்றிய ‘பிரபந்த மரபியல்’ என்ற பாட்டியல் நூலே முதன் முதலாக 96 என்று எண்ணிக்கையை வரையறுத்துக் கூறுகின்றது[29]

என்று ந.வீ.செயராமன் குறிப்பிடுகின்றார்.

சிவந்தெழுந்த பல்லவன் உலா என்னும் நூலில் ‘தொண்ணூற்றாறு கோலப் பிரபந்தங்கள் கொண்ட பிரான்’ என்னும் தொடரில்தான் முதன் முதலில்

பிரபந்தங்கள் தொண்ணூற்றாறு என்ற வரையறை குறிப்பிடப்படுவதாகவும் கருதப்படுகிறது.

பிள்ளைக்கவி முதல் புராணம் ஈறாகத்

தொண்ணூற்றாறு என்னும் தொகையதாம்[30]

என்று பிரபந்த மரபியல் கூறும் வரையறை குறிப்பிடத்தக்கது. சிற்றிலக்கிய நூல்களுக்கு இலக்கண வரையறை தந்த பாட்டியல் நூல்கள் சில வகைகளை ஏற்றும், சிலவற்றை விடுத்தும் விளக்கம் தந்துள்ளன. சிற்றிலக்கிய வகைகளின் எண்ணிக்கையைக் குறிப்பிடுவதில் பாட்டியல் நூல்கள் வேறுபடுகின்றன.

சிற்றிலக்கிய வகைகளின் இலக்கணத்தைப் பன்னிருபாட்டியல், வெண்பாப் பாட்டியல், நவநீதப்பாட்டியல், பிரபந்த மரபியல், சிதம்பரப்பாட்டியல், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், பிரபந்த தீபிகை, சுவாமிநாதம், சதுரகராதி, அபிதான சிந்தாமணி முதலியன இயம்புகின்றன.

1. பன்னிருபாட்டியல் - பன்னிரு புலவர்கள் - 68 - 13 ஆம் நூற்றாண்டு.
2. வெண்பா பாட்டியல் - குணவீர பண்டிதர் - 58 - 13 ஆம் நூற்றாண்டு.
3. நவநீதப் பாட்டியல் - நவநீத நாடனார் - 52 - 14 ஆம் நூற்றாண்டு.
4. சிதம்பரப்பாட்டியல் - பரஞ்சோதி முனிவர் - 69 - 16 ஆம் நூற்றாண்டு.
5. இலக்கண விளக்கப்பாட்டியல் - வைத்தியநாத தேசிகர் - 66, 17 ஆம் நூற்றாண்டு.
6. பிரபந்த மரபியல் - வைத்தியநாத தேசிகர் - 96 - 16, 17 ஆம் நூற்றாண்டு.
7. தொன்னூல் விளக்கம் - வீரமாமுனிவர் - 93 - 17 ஆம் நூற்றாண்டு.
8. பிரபந்த தீபிகை - முத்து வேங்கட சுப்பையர் - 98 - 19 ஆம் நூற்றாண்டு.
9. முத்துவீரியம் - முத்துவீர உபாத்தியாயர் - 96 - 19 ஆம் நூற்றாண்டு.
10. சுவாமிநாதம் - சுவாமி கவிராயர் - - 45 - 19 ஆம் நூற்றாண்டு.
11. பிரபந்த தீபம் - சுவாமி கவிராயர் - 95 - 19 ஆம் நூற்றாண்டு.
12. பிரபந்தத்திரட்டு - சுவாமி கவிராயர் - 119 - 19 ஆம் நூற்றாண்டு.

தமிழ் இலக்கிய மரபில் சிற்றிலக்கியங்கள் தொண்ணூற்றாறு என்னும் கருத்து நிலைப்பெற்றிருப்பினும் சிற்றிலக்கிய வகைகளின் எண்ணிக்கை

நிலையானது அல்லது காலப்போக்கில் மாற்றம் அடையக்கூடியது என்பதற்கு இப்பாட்டியல் நூல்களே சான்றாக விளங்குகின்றன.

> சிற்றிலக்கியங்களின் எண்ணிக்கை 96 என்று இலக்கணங்கள் வரையறை செய்திருந்தாலும் இவற்றின் எண்ணிக்கை 150 என்றும், 300க்கு மேற்பட்டும் மிக விரிந்து செல்கின்றது என்று அறிஞர்கள் கணக்கிட்டுள்ளனர்.[31]

மேலும் 331 இலக்கிய வகைகளாக விரியும் என்று கூறுவர்.

> தற்காலத்துக் கணக்கீட்டின்படி சிற்றிலக்கியத்தின் வகை 417 என உறுதி செய்யப் பெற்றுள்ளது.[32]

என்று இளங்குமரன் இலக்கிய வகை அகராதி என்னும் நூலில் குறிப்பிடுகின்றார். ந.வீ.செயராமன் சிற்றிலக்கிய அகராதி என்னும் நூலில் 270 வகையான சிற்றிலக்கியங்களைக் குறிப்பிட்டு, அவற்றிற்கு அகராதி விளக்கம் தந்துள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

காலத்தேவைக்கேற்பவும், மக்களின் மனப்பாங்கிற்கு ஏற்பவும், புலவர்களின் புலமைத் திறனுக்கேற்பவும் பல்வேறு இலக்கிய வகைகள் தோன்றக்கூடும் என்பதால் சிற்றிலக்கிய வகைகளின் எண்ணிக்கை 96 என வரையறுத்துக் கூறுதல் ஏற்புடைத்தன்று என்பது புலப்படுகின்றது.

'யாப்பு என்னும் இலக்கணத்தாய் பெற்றெடுத்த சேய் என்று அழைக்கப்படும் பாட்டியல் நூல்கள், சிற்றிலக்கியப் பாடல்களின் எண்ணிக்கை, யாப்பு, வடிவம், பொருண்மை மற்றும் பாட்டுடைத் தலைவன் பாடுபொருள் பொருத்தம் ஆகியனவற்றை வரையறுத்துக் கூறும் சிறப்புடையன. சிற்றிலக்கியப் பாகுபாட்டினை வகைப்படுத்தி அறிவதற்கு பாட்டியல் நூல்கள் துணை நிற்கின்றன. பாட்டியல் நூல்களின் வளர்ச்சி, வரலாறு பற்றி அறிந்து அவற்றை ஒப்பிட்டு நோக்குங்கால், 96 என்னும் பட்டியலில் அடங்கும். இலக்கிய வகைகளையும், அப்பட்டியலை கடந்து நிற்கும் இலக்கிய வகைகளையும் அறிந்துகொள்ள முடிகின்றது.

கலம்பகம், கோவை, அந்தாதி போன்ற இலக்கிய வகைகள் 9 ஆம் நூற்றாண்டிலே தோன்றிவிட்டன என்றாலும் அவற்றிற்கான இலக்கணம் பின்னர்தான் உருவாயிற்று. குறவஞ்சி, பள்ளு, சதகம், தலபுராணம் போன்ற

*இலக்கிய வகைகள் 15 ஆம் நூற்றாண்டின் பின்னரே உருவாயின என்பது குறிப்பிடத்தக்கது.*

## 1.8. சிற்றிலக்கிய வகைகள்

*சிற்றிலக்கியங்கள் 96 வகையாகக் கூறப்பட்டாலும் அவற்றுள் தலைமைப் பண்பு வாய்ந்தவையாகக் காணப்படுவன பதினான்கு வகைகளே ஆகும். அவை, ஆற்றுப்படை, அந்தாதி, அங்கமாலை, பத்து (பதிகம்), கோவை, உலா, பரணி, கலம்பகம், பிள்ளைத்தமிழ், தூது, சதகம், மடல், பள்ளு, குறவஞ்சி என்பன.*

*இப்பதினான்கு சிற்றிலக்கிய வகைகளைப் பற்றியச் செய்திகள் இங்கு குறிப்பிடப் பெறுகின்றன.*

### 1.8.1. ஆற்றுப்படை

*ஆற்றுப்படை என்பதற்கு வழிப்படுத்துதல் என்று பொருள்.*

> ஒருவன் ஒன்றை அடைந்தவழி அதனை அடையப்பெறாத மற்றொருவனுக்கு,
> அதன் பெருமையையும் அதனை அடையும் முறையையும் கூறி வழிப்படுத்தும்
> நோக்கில் பாடப்படும் இலக்கிய வகை[33]

*என்று இலக்கிய வகை விளக்க அகராதி என்னும் நூல் விளக்கம் தருகின்றது.*

*சங்ககாலத்திலேயே வளர்ச்சிப் பெற்று விளங்கிய இவ்விலக்கிய வகையின் இலக்கணத்தை தொல்காப்பியம் விரிவாகக் குறிப்பிடுகின்றது.*

> கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
> ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றி
> பெற்ற பெருவளம் பெறாஅர்க் அறிவுறீஇச்
> சென்று பயன் எதிரச் சொன்ன பக்கமும்[34]

*சங்க இலக்கியம் பத்துப்பாட்டுள் திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை என்னும் ஐந்து நூல்களும் ஆற்றுப்படை நூல்களாகும். இவற்றுள் திருமுருகாற்றுப்படை, புலவராற்றுப்படை எனவும் வழங்கப்படுகிறது. தொல்காப்பியர் குறிப்பிடும் ஆற்றுப்படை இலக்கணத்தில் கூத்தர், பாணர், பொருநர், விறலி மட்டுமே இடம்பெறுகின்றனர். புலவர் குறிப்பிடப்படவில்லை.*

அதன் காரணம் கொண்டு புலவராற்றுப்படை பிற்காலத்தில் தோன்றியது என்ற கருத்தும் நிலவுகிறது.

ஆற்றுப்படை இலக்கியம் மனிதாபிமானம் மற்றும் இரக்கவுணர்வின் அடிப்படையில் தோன்றியது. அதாவது வறுமையால் வாடும் ஒருவன் தன் வறுமையைப் போக்கிய வள்ளல்கள், அரசர்களிடம் வறுமையால் வாடும் மற்றொருவனை ஆற்றுப்படுத்தியது என்னும் காரணத்தால் இரக்கவுணர்வு வெளிப்படுகின்றது.

தற்கால ஆற்றுப்படை நூல்களுள் பின்னத்தூர் நாராயணன் இயற்றிய மாணாக்கர் ஆற்றுப்படை, வேங்கடாசலம் பிள்ளை இயற்றிய ஆசான் ஆற்றுப்படை த.அமிர்தலிங்கம் இயற்றிய தலைவர் ம.பொ.சி. ஆற்றுப்படை, இரா.இளங்குமரனின் தொண்டர் ஆற்றுப்படை முதலியன குறிப்பிடத்தக்க நூல்களாக விளங்குகின்றன.

### 1.8.2. அந்தாதி

பாடலின் இறுதியில் உள்ள எழுத்தோ, அசையோ, சீரோ, அடியோ அடுத்தப் பாடலின் முதலில் அமைத்து பாடப்படும் இலக்கிய வகை அந்தாதி எனப்படும். இது மண்டலித்து முடிதல் என்று அழைக்கப்படுகின்றது. இன்ன பொருளில்தான் பாடவேண்டும் என்னும் வரையறை இல்லாது, விருத்த யாப்பில் பாடக்கூடிய இலக்கிய வகையில் அந்தாதி இலக்கியங்கள் மிகுதியான அளவில்தோற்றம் பெற்றன.

> பதிற்றுப்பத்தில் நான்காம் பத்தும் ஐங்குறுநூற்றில் பதினெட்டாம் பத்தும் அந்தாதித் தொடையின. காரைக்காலம்மையாரின் அற்புதத் திருவந்தாதியே முதல் அந்தாதி இலக்கியம் எனப்படுகிறது. கி.பி.ஐந்தாம், ஆறாம் நூற்றாண்டுகளில் இவ்வாறு இவ்விலக்கிய வகை முகிழ்த்து, வளர்ந்து மணம் பரப்பியது[35]

என்று தமிழ் இலக்கிய வரலாற்றில் தமிழண்ணல் குறிப்பிடுகிறார்.

இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம் முத்துவீரியம் போன்ற பாட்டியல் நூல்கள் அந்தாதி இலக்கிய வகைக்கான இலக்கணத்தைக் கூறுகின்றன.

அடியும் சீரும் அசையும் எழுத்தும்

முடிவு முதலாச் செய்யுள் மொழியின்

அந்தாதித் தொடை என்று அறிதல் வேண்டும்[36]

என்னும் இலக்கண விளக்க நூற்பா அந்தாதி இலக்கணத்தைக் குறிப்பிடுவதை கி.இராசா, இலக்கிய வகை விளக்க அகராதி என்னும் நூலில் எடுத்துக் காட்டுகின்றார். ஒரு பாடலின் இறுதியில் உள்ள அடியோ, சீரோ, அசையோ, எழுத்தோ அடுத்தப் பாடலின் முதலாக அமையப்பாடுவது அந்தாதி எனப்படுகிறது.

## அந்தாதி நூல்கள்

கி.பி.5 ஆம் நூற்றாண்டில் தோற்றம் பெற்ற அற்புதத் திருவந்தாதி என்னும் நூலே முதல் நூலாகும். பக்தி இலக்கிய தோற்றத்திற்கு வித்திட்டவராகிய காரைக்காலம்மையார் தொடங்கி முதலாழ்வார்கள் பாடிய நூற்றந்தாதிகள், சேரமான் பெருமாள் நாயனார் பாடிய பொன்வண்ணத்தந்தாதி என அதன் வளர்ச்சி நிலையைக் காணமுடிகின்றது.

அந்தாதி இலக்கியங்கள் பல வேறுபட்ட பொருண்மைகளில் பாடப்பட்டுள்ளன. வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் அந்தாதி நூல் இயற்றுவதில் சிறப்புடையவராக விளங்குகிறார்.

இவர் இயற்றிய ஆங்கிலியர் அந்தாதி, இதழகலந்தாதி, ஏகபாத அந்தாதி, ஒலியந்தாதி, சந்தக் கலித்துறையந்தாதி, கலிவிருத்த அந்தாதி, சதகத்தந்தாதி, பல சந்தவந்தாதி, சிலேடை அந்தாதி, திரிபந்தாதி[37]

போன்றவை குறிப்பிடத்தக்கவை ஆகும். கி.பி.16 ஆம் நூற்றாண்டில் பாடப்பெற்ற திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி, அபிராமிபட்டர் இயற்றிய அபிராமி அந்தாதி, கம்பரின் சரசுவதி அந்தாதி ஆகியன குறிப்பிடத்தக்க அந்தாதி நூல்களாகும்.

250க்கும் மேற்பட்ட அந்தாதி இலக்கியங்கள் தோன்றி தமிழ்மொழிக்கு பெருமை சேர்த்துள்ளன. பல்கிப்பெருகி வளர்ந்துள்ள அந்தாதி இலக்கியங்களில் பெரும்பான்மையானவை பக்தி இலக்கியங்கள் என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

### 1.8.3. அங்கமாலை

*ஆண், பெண் ஆகிய இருவருடைய உடல் உறுப்புக்களைப் பாடும் இலக்கிய வகை அங்கமாலை எனப்படுகிறது. அங்கமாலை என்னும் இலக்கிய வகைக்கான இலக்கணத்தை பாட்டியல் நூல்கள் எடுத்துரைக்கின்றன.*

மிக்க உறுப்பை வெண்பா விருத்தம்
தொக்க ஒருமுறையால் தொடர்புறப் பாடுதல்
அங்கமாலை யாம்எனப் பகர்வர்[38]

*என்பது இலக்கண விளக்க நூற்பா தரும் விளக்கத்தை மேற்கோள் காட்டி கி.இராசா குறிப்பிடுகிறார். மேலும், வெண்பாப் பாட்டியல், நவநீதப்பாட்டியல், பிரபந்த மரபியல், சிதம்பரப்பாட்டியல் போன்றவையும் இதன் இலக்கணத்தை குறிப்பிடுகின்றன.*

*அங்கமாலை உடல் உறுப்புக்களில் இன்ன உறுப்பை மட்டும்தான் பாடவேண்டும் என்ற வரையறை இல்லாது எவ்வுறுப்பையும் எந்த அமைப்பில் வேண்டுமானாலும் பாடுவதாய் அமைகின்றது.*

அகங்கால், உகிர், விரல், மீகால், பரடு, கணை, முழந்தாள், நிதம்பம், உந்தி, உரம், அரை, முலை, நகம், விரல், அங்கை, முன்கை, தோள், கண்டம், முகம், வாய், காது, மூக்கு, கண், புருவம், நெற்றி, குழல் என இருபத்தேழு உறுப்புக்களை அடி முதல் முடி வரையிலோ, முடி முதல் அடி வரையிலோ பாடுவதும், வெளி விருத்தத்துடன் கலிவெண்பா அல்லது வெண்பா யாப்பில் பாடுவதும் ஆகிய இலக்கிய வகையே அங்கமாலை என்பது பெறப்படுகிறது[39]

*என்று தா.ஈசுவரப்பிள்ளை விளக்கம் தருகின்றார். இவ்வகையில் திருநாவுக்கரசர் பாடிய திருஅங்கமாலை என்னும் நூல் சான்றாக விளங்குகின்றது.*

### 1.8.4. உலா

*தொல்காப்பியம் மற்றும் சங்க இலக்கியங்களில் உலா பற்றியக் குறிப்புகள் இடம்பெறினும், தனித்த இலக்கிய வகையாக உலா இலக்கியம் கி.பி.8 ஆம் நூற்றாண்டு முதல் தோன்றி வளரத் தொடங்கியது.*

உலா என்னும் சொல் உலா வருதல் என்னும் குறிப்புடையது. உலாத்துதல், உலாவுதல் என்னும் பொருளுடையது. தலைவன் ஒருவன் உலா வருதலும் அதனைக் கண்டு ஏழு பருவ மகளிரும் மயக்கம் கொண்டு மனம் மகிழ்தலும்

இதன் பொருண்மை ஆகின்றது. உலா வருதலைப் பட்டணப் பிரவேசம், ஊர்வலம் வருதல் எனவும் கூறுவர். தற்காலத்தில் பேரணி, ஊர்வலம் என்ற தன்மையிலும் ஆளப்படுகிறது[40]

*என்பது உலா பற்றிய விளக்கமாக தா.நீலகண்டப்பிள்ளை இலக்கியத்தின் நோக்கமும் பயனும் என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.*

*வீதியில் உலாவரும் பாட்டுடைத் தலைவனைக் கண்டு ஏழு பருவ மகளிரும் காதல் கொள்வதாகப் பாடப்படும் இலக்கிய வகையே உலா எனப்படும். உலா வருவது தெய்வம் அல்லது அரசனாயின் காதல் கொள்ளும் மகளிரின் தன்மையில் சிறிது மாற்றம் ஏற்படுகிறது. இதனை,*

திருவீதி உலாவரும் தெய்வத்தைக் கண்டு தேவரடியார்கள் மயங்குவதாகப் பாடுவது ஒரு நாட்டுப் பாடல் மரபு. அதுபோல அரசர்கள் உலாவரும் போது ஏழு பருவ மங்கையரும் கண்டு காதல் கொண்டு மயங்குவதாகப் புனையலாயினர்[41]

*என்னும் தமிழண்ணல் கருத்து வழி அறியமுடிகின்றது.*

ஊரொரு தோற்றமும் உரித்தென மொழிப[42]

*என்னும் தொல்காப்பிய நூற்பா உலா இலக்கியத்தைக் குறிக்கும் என்பது உரையாசிரியர்கள் கருத்து.*

*உலா இலக்கியத்திற்கான விரிவான விளக்கம் பாட்டியல் நூல்களில் கூறப்படுகின்றது.*

இளமைப் பருவத் தலைமகன் குலனும்
குடியும் பிறப்பு மங்கலம் பரம்பரை
இவற்றான் இன்னான் என்பது தோன்ற
மாதர் நெருங்கிய வீதியிடத்து அவன்
பவனிவரப் பேதை முதலிய ஏழு
பருவப் பெண்களும் பார்த்து வணங்க
உலா வந்ததாக உன்னி நேரசைக்
கலி வெண்பாவால் கழறுவது உலாவே[43]

*என்று முத்துவீரியம் விளக்கம் தருகின்றது. இதனை கி.இராசா, இலக்கிய வகை விளக்க அகராதி என்னும் நூலில் எடுத்துக்காட்டுகின்றார்.*

*கி.பி.9 ஆம் நூற்றாண்டில் சேரமான் பெருமாள் நாயனார் பாடிய திருக்கயிலாய ஞான உலாவே முதல் உலா ஆகும். இது ஆதியுலா என்றும் அழைக்கப்பெறும்.*

> சேரமான் பெருமாள் நாயனார் அருளிச் செய்த உலா இலக்கியம் திருக்கயிலாயத்தில் இறைவன் திருமுன்பு அரங்கேற்றம் பெற்றது என்பது வரலாறு. அப்பொழுது அங்கிருந்து கேட்டவர்களுள் ஒருவராகிய மாசாத்தனார் தம் மனத்தில் தரித்து வந்து சோழ நாட்டுப் பிடவூரில் உலகோர் அறிய வெளிப்படுத்தினர் என்று தெய்வச் சேக்கிழார் கூறுகின்றார்[44]

*என்னும் மு.சண்முகம் பிள்ளையின் கூற்றிலிருந்து திருக்கயிலாய ஞான உலா அரங்கேற்றம் பெற்ற வரலாற்றை அறிந்து கொள்ள முடிகின்றது.*

*கி.பி. பதினோராம் நூற்றாண்டில் நம்பியாண்டார் நம்பி பாடிய ஆளுடைய பிள்ளையார் திருவுலாமாலையும், கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் ஒட்டக்கூத்தர் பாடிய மூவருலா போன்றவை உலா நூல்களில் குறிப்பிடத்தக்கதாய் விளங்குகின்றன.*

*உலா நூல்களில் உலாவரக்கூடிய இறைவன் அல்லது அரசனின் தோற்ற வர்ணனை மற்றும் பெருமைகள் சிறப்பித்துப் பேசப்படுகின்றன. இறைவன், அரசன் தவிர தம் ஆசிரியர், வள்ளல்கள் மீது உலா நூல்கள் பாடப்பட்டுள்ளன. அறுபத்தொன்பது உலா நூல்கள் கிடைத்திருப்பதாக ந.வீ.செயராமன் குறிப்பிடுகிறார். தற்காலம் வரையிலும் உலா நூல்கள் தோன்றி தமிழுக்கு பெருமை சேர்த்துக் கொண்டிருக்கின்றன.*

### 1.8.5. பரணி

> ஆனை ஆயிரம் அமரிடை வென்ற
> மானவனுக்கு வகுப்பது பரணி[45]

*என்பது இலக்கண விளக்கப்பாட்டியல் தரும் விளக்கம். தமிழண்ணலின் புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு என்னும் நூலிலிருந்து எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. போர்க்களத்தில் ஆயிரம் யானைகளை வென்றவனுக்குப் பாடப்படுவது பரணி இலக்கியம் ஆகும். தொல்காப்பியப் புறத்திணையியலில்*

கூறப்பட்டுள்ள மறக்கள வழித்துறையும், மறக்கள வேள்வித்துறையும் பரணி இலக்கியத்தின் மூலக்கூறாக விளங்குகிறது.

போரில் தோற்ற நாடு அல்லது மன்னன் பெயரில் நூல் அமைந்து, வெற்றி பெற்றவனைச் சிறப்பித்துப்பாடும் இலக்கியவகை பரணி என குறிப்பிடப் பெறும். முதல் பரணி இலக்கியமாக செயங்கொண்டார் பாடிய கலிங்கத்துப்பரணி விளங்குகிறது.

முதலாம் குலோத்துங்கச் சோழனின் படைத்தளபதியாகிய கருணாகரத் தொண்டைமான் கலிங்க மன்னனாகிய அனந்தவர்ம சோடகங்கனை போரில் வீழ்த்திய நிகழ்வைப் பாடுகிறது கலிங்கத்துப்பரணி. அதனைத் தொடர்ந்து ஒட்டக்கூத்தரின் தக்கயாகப்பரணி மற்றும் இரணியவதைப் பரணி போன்ற நூல்கள் எழுந்தன.

மேலும் தத்துவராயர் பாடிய மோகவதைப்பரணியும், வைத்தியநாத தேசிகருடைய பாசவதைப்பரணியும் இவ்வகையில் குறிப்பிடத்தக்கன.

> புறத்திணையில் இடம்பெறும் களவேள்வி, களவாழ்த்து, முன்தேர்க்குரவை பின் தேர்க்குரவை போல்வன பரணியிலக்கியம் தோன்ற அடிப்படைகளாகும். பழங்காலத்தில் ஏர்க்களம் பாடும் பொருநரேயன்றிப் போர்க்களம் பாடும் பொருநர்களும் இருந்தார்கள். அவர்களின் வாய்மொழிப் பாடலின்வழி வந்ததே பரணியிலக்கியம்[46]

எனத் தமிழண்ணல் குறிப்பிடுகின்றார்.

போர் நடைபெறாமையால் வாடிய பேய்கள் காளியிடம் முறையிட, காளி விரைவில் போர் வர இருக்கிறது வயிறார உண்ணலாம் என்று கூறுவதாக அமைத்து போர்க்கள நிகழ்ச்சிகளை சந்த ஓசையுடன் தாழிசையில் இனிமையாகப் பாடியுள்ளது கலிங்கத்துப்பரணி.

எடும் எடும் எடும் என எடுத்ததோர்
　　இகல்ஒலி கடல்ஒலி இகக்கவே
விடுவிடுவிடு பரி கரிக்குழாம்
　　விடும்விடும் எனும் ஒலி மிகைக்கவே[47]

எனும் பாடல் போர்க்களத்தை வர்ணிக்கிறது.

## 1.8.6. கலம்பகம்

*கலம் - பன்னிரண்டு, பகம் - அதன் சரிபாதி ஆறு என மொத்தம் பதினெட்டு. பதினெட்டு உறுப்புக்களால் பாடப்படும் இலக்கிய வகை கலம்பகம் எனப்பட்டது.*

> பலவகைப் பொருள் பற்றி வெவ்வேறு செய்யுள் வகைகளால் நூறு பாட்டுகள் அமைந்த நூல் கலம்பகம் எனப்படும். ஒரு செய்யுளின் இறுதித் தொடர் அல்லது சொல் அல்லது சீர் அல்லது அசை அடுத்த செய்யுளின் தொடக்கமாக அமையும் அந்தாதி முறையிலே நூறு செய்யுளும் அமையும்[48]

*என்று மு.வ. விளக்கம் தருகின்றார்.*

*கலம்பக உறுப்புகள் பதினெட்டு ஆகும். ஆயினும் இவ்வெண்ணிக்கையில் புலவர்கள் மாறுபடுகின்றனர். புயம், சிந்து, காலம், மதங்கி, வண்டு, ஊசல், பொன்னூசல், களி, மறம், கொண்டல், மருள், சம்பிரதம், தவம், பாண், கைக்கிளை, ஊர், தழை, இரங்கல், தூது, குறம், காற்று, பிச்சியார், கொற்றியார் முதலியன கலம்பக உறுப்புகளாக குறிப்பிடப்படுகின்றன.*

*கலம்பகம் நூறு பாடல்களில் பாடப்படும் எனினும் பாட்டியல் நூல்கள் சில வரையறையைத் தருகின்றன. அவை சாதி மற்றும் தகுதி அடிப்படையில் எண்ணிக்கையில் மாறுபடுகின்றன. தெய்வம் அல்லது தேவர்களைப் பற்றிப் பாடும் கலம்பகம் நூறு பாடல்களில் பாடப்பெறும் என்றும் முனிவர்க்கு 95 பாடல்கள், அரசர்க்கு 90 பாடல்கள் அமைச்சர்க்கு 70 பாடல்கள், வணிகர்க்கு 50 பாடல்கள், வேளாளர்க்கு 30 பாடல்கள் என்று பாட்டியல் நூல்கள் சாதி அடிப்படையில் வரையறை செய்யினும் பிற்காலத்தில் இவ்வரையறை பொருந்தாது போயின.*

*இவ்விலக்கிய வகையின் முதற்சான்றாக கி.பி.9 ஆம் நூற்றாண்டில் பாடப்பட்டதாக நந்திக்கலம்பகம் விளங்குகிறது. தெள்ளாறு எறிந்த மூன்றாம் நந்திவர்மப்பல்லவனது வாழ்க்கையைச் சித்தரிக்கும் இலக்கியம் நந்திக்கலம்பகம். தமிழுக்காக தன் இன்னுயிரை இழக்கத் துணிந்த நந்திவர்மனின் வீரத்தையும் தமிழ்ப் பற்றையும் விளக்கும் இந்நூலைப் பாடியவர் யார் என தெரியவில்லை. நந்தி கலம்பகத்தால் மாண்ட கதை நாடறியும் என்னும் பழமொழி இக்கருத்தை மெய்ப்பிக்கும்.*

*கலம்பக இலக்கியத்துள் மிகவும் புகழ்பெற்ற இலக்கியமாக நந்திக்கலம்பகமே விளங்குகிறது.*

**பிற இலக்கியங்கள்**

*நம்பியாண்டார் நம்பி பாடிய 'ஆளுடை பிள்ளையார் திருக்கலம்பகம்', பிள்ளைபெருமாள் ஐயங்காரின் 'திருவரங்கக் கலம்பகம்', இரட்டையர்கள் பாடிய திருவாமாத்தூர் கலம்பகம், தில்லைக் கலம்பகம், பூண்டி அரங்கநாத முதலியார் இயற்றிய 'கச்சிக்கலம்பகம்' குமரகுருபரரின் மதுரைக்கலம்பகம் போன்றவை கலம்பக இலக்கியங்களுள் குறிப்பிடத்தக்கதாய் விளங்குகின்றன.*

*அறுபதுக்கும் மேற்பட்ட இலக்கியங்கள் தோன்றியிருப்பினும் நந்திக்கலம்பகமே அதன் சுவை கருதி இன்றளவும் படிக்கப்பட்டு வருகின்றது.*

வானுறு மதியை அடைந்ததுன் வதனம்
மறிகடல் புகுந்ததுன் கீர்த்தி
கானுறு புலியை அடைந்ததுன் வீரம்
கற்பகம் அடைந்ததுன் கரங்கள்
தேனுறு மலராள் அரியினை அடைந்தாள்
செந்தழல் அடைந்ததுன் தேகம்
யானும்என் கவியும் எங்ஙனே புகுவோம்
எந்தையே நந்தி நாயகனே[49]

*என்னும் பாடல் நந்திக்கலம்பகத்தின் கவிதை நயத்திற்கு சான்றாக அமைகின்றது.*

### 1.8.7. பிள்ளைத்தமிழ்

*பாட்டுடைத் தலைவனைக் குழந்தையாகப் பாவித்து பத்துப் பருவங்களாக அமைத்துப் பாடும் இலக்கிய வகையைப் பிள்ளைத்தமிழ் என்கிறோம். பாடல் தலைவரைக் குழந்தையாகக் கருதி பிள்ளைப் பருவநிலைகளில் அவரது பெருமை கூறுவதாக அமையும் இலக்கிய வகை என்றும்,*

வழிபடு கடவுளர், வள்ளல், ஞானக்குரவர், சமுதாய நலச்சான்றோர்
ஆகியோரைப் பாட்டுடைத் தலைமக்களாகக் கொண்டு பாடப்படுவதும்[50]

*ஆகிய இலக்கிய வகையே பிள்ளைத்தமிழ் என்றும், பல விளக்கங்களைக் காணமுடிகின்றது. இதனை பிள்ளைக்கவி என்றும் பிள்ளைப்பாட்டு என்றும்*

பாட்டியல் நூல்கள் குறிப்பிடுகின்றன. இதனை தா.ஈசுவரப்பிள்ளை தமிழில் சிற்றிலக்கிய வரலாறு என்னும் நூலில் குறிப்பிடுகின்றார்.

பிள்ளைத்தமிழ் இலக்கியம் ஆண்பாற் பிள்ளைத்தமிழ் பெண்பாற் பிள்ளைத்தமிழ் என்னும் இருவகைகளில் காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர் என்னும் பத்துப் பருவங்களில் பாடப்படுகின்றன. இப்பத்தும் ஆண்பாற் பிள்ளைத்தமிழுக்குரியவை. இவற்றுள் இறுதி மூன்று பருவங்கள் மாறி கழங்கு, அம்மானை, ஊசல் என்ற நிலையில் பெண்பாற் பிள்ளைத்தமிழ் பாடப்பெற்றுள்ளது.

சிற்றிலக்கிய வகைகளுள் குறிப்பிடத்தக்கதும், பின்னர் பெருவளர்ச்சியுற்று விளங்கியதுமான இப்பிள்ளைத்தமிழ் இலக்கியத்திற்கான கருவினை,

குழவி மருங்கினும் கிழவதாகும்[51]

எனும் தொல்காப்பிய நூற்பாவழி அறியமுடிகின்றன.

சங்ககாலத்தில் பிள்ளைத்தமிழ் இலக்கியங்கள் இல்லை எனினும் குழந்தைகள் பற்றிய வருணனைகள் மற்றும் பிள்ளைத்தமிழுக்குரிய பத்து பருவங்களுக்கான கூறுகளைக் காணமுடிகிறது.

பக்தி இயக்க காலத்தில் ஆழ்வார்கள் பாடிய பாடல்கள் முதல் பிள்ளைத்தமிழ் தோற்றம் பெற்று வளரத் தொடங்கியது. பெரியாழ்வார் கண்ணனைக் குழந்தையாகப் பாவித்தலும், குலசேகராழ்வார் இராமனைத் தாலாட்டும் பாடலும் பிள்ளைத்தமிழ் இலக்கியத்திற்கு வித்திட்டன எனலாம்.

**இலக்கணம்**

பிள்ளைத்தமிழ் ஒரு பருவத்திற்கு பத்து விருத்தங்களாக நூறு பாடல்கள் பாடப்படும். ஆசிரிய விருத்தம், கட்டளை அடியோடு கூடிய கலிப்பா, கலி விருத்தம் போன்ற யாப்பில் பாடப்பெறும். பெரும்பாலும் கழிநெடில் ஆசிரிய விருத்தங்களிலேயே பாடப்பெற்றுள்ளன.

குழந்தை பிறந்த மூன்றாம் மாதம் தொடங்கி இருபத்தோராம் மாதம் வரை இரண்டு மாதத்திற்கு ஒரு பருவமாய் அமைத்து பத்துப்பருவங்களில் பாடுதல் மரபு. பிள்ளைத்தமிழுக்குரிய விரிவான இலக்கணத்தைப் பாட்டியல் நூல்கள் குறிப்பிடுகின்றன.

**நூல்கள்**

பிள்ளைத்தமிழ் இலக்கியத்திற்கான முதல் சான்றாக ஒட்டக்கூத்தர் பாடிய குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ் அமைகின்றது. அதன் பின்னர் குமரகுருபரர் பாடிய மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழும், முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழும், பகழிக்கூத்தரின் திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழும், மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் சேக்கிழார் பிள்ளைத்தமிழும் குறிப்பிடத்தக்கவையாக விளங்குகின்றன. தற்காலம் வரை நூற்றுக்கும் மேற்பட்ட பிள்ளைத்தமிழ் இலக்கியங்கள் தோன்றி தமிழுக்குப் பெருமை சேர்ந்துள்ளன.

## 1.8.8. தூது

ஒருவர் சொல்ல விரும்பும் கருத்தை மற்றவருக்குத் தெரிவிக்க அனுப்புவதே தூது எனப்படும்.

> தூது எனும் சொல், கூழாங்கல், இராசதூதர் தன்மை, தூதுமொழி, தூது செல்வோன், காமக்கூட்டத்துக் காதலரை இணைக்கும் செயல், செய்தி, பாணன் முதலிய உயர்திணைப் பொருளையேனும் கிள்ளை முதலிய அஃறிணைப் பொருளையேனும் ஊடனீக்கும் வாயிலாக் காதலர் பால் விடுத்தலைக் கலிவெண்பாவாற் கூறும் பிரபந்தம், தூதுவளை[52]

எனப் பல பொருண்மைகளில் கூறப்படுகின்றது என்கிறார் ச.வே.சுப்பிரமணியன்.

தூது அகத்தூது, புறத்தூது என இரண்டு வகைப்படும். அரசர்கள் பகைவரிடத்து தூது அனுப்புவதும், புலவர்கள் வள்ளல்களிடத்து தூது அனுப்புவதும் புறத்தூது எனப்படும். தலைவன் தலைவியிடையே அனுப்பப்படும் தூது அகத்தூது எனப்படும்.

தொல்காப்பியத்தில் தூது பற்றியச் செய்தி இடம்பெறுகின்றது.

> ஓதல் பகையே தூதிவைப் பிரிவே[53]

என்கிறது.

*தூது பற்றி இலக்கண வரையறைத் தந்த இலக்கண விளக்கப்பாட்டியல்,*

பயில் தரும் கலிவெண் பாவினாலே
உயர்திணைப் பொருளையும் அஃறிணைப் பொருளையும்
சந்தியின் விடுத்தல் முந்துறு தூது எனப்
பாட்டியற் புலவர் நாட்டினர் தெளிந்தே[54]

*என்று விளக்கம் அளிக்கின்றது.*

*அரசர்கள் பொருட்டு அந்தணர்கள் தூது சென்றமைக் குறிப்பிடப்படுகின்றது. காதலர் பொருட்டு தூது செல்வதைத் தொல்காப்பியர் 'வாயில்' என்ற சொல்லால் குறிப்பிடுகின்றார்.*

புறவாழ்க்கையில் ஆண்பாலரும், அகவாழ்க்கையில் மகளிரும் தூதாகச் சிறப்பிடம் பெறுகின்றது.[55]

*அன்னம், மயிர், கிளி, மேகம், பூவை, தோழி, குயில், நெஞ்சு, தென்றல், வண்டு என்னும் பத்து தூது விடுத்தற்கு உரியவை என்றாலும் காலப்போக்கில் மாற்றம் ஏற்பட்டு, பணம், தமிழ், புகையிலை, காக்கை மற்றும் செருப்பும் தூதுவிடும் பொருளாயின என்பது குறிப்பிடத்தக்கது.*

*கி.பி.14 ஆம் நூற்றாண்டில் உமாபதிச் சிவாச்சாரியார் பாடிய 'நெஞ்சுவிடு தூது' என்னும் நூலே முதல் நூலாக விளங்குகிறது. மேலும் அழகர் கிள்ளைவிடு தூது, விறலிவிடு தூது, தமிழ்விடு தூது போன்ற நூல்கள் சிறப்புடையனவாய் விளங்குகின்றன. இதுவரை 150க்கும் மேற்பட்ட தூது நூல்கள் தோன்றியுள்ளன என்பது அதன் செல்வாக்கைக் காட்டுகின்றது.*

### 1.8.9. சதகம்

விளையும் ஒரு பொருள் மேல் ஒரு நூறு
தழைய உரைத்தல் சதகம் என்ப[56]

*என்னும் இலக்கண விளக்க நூற்பா சதகம் பற்றிக் குறிப்பிடுகின்றது. எவையேனும் ஒரு பொருள் பற்றிய நூறு பாடல்களில் பாடப்படும் இலக்கிய வகை சதகம் என்றழைக்கப்பட்டது. சதம் என்ற சொல்லிற்கு நூறு என்று பொருள். அதனுடன் 'க' என்ற எழுத்து சேர்ந்து சதகம் என்றாயிற்று. இவ்விலக்கிய வகை வடமொழி மரபைப் பின்பற்றி தமிழில் தோன்றியது. கி.பி.ஐந்தாம் நூற்றாண்டில் மாணிக்கவாசகர் இயற்றிய 'திருச்சதகம்' தமிழில் தோன்றிய முதல் சதகம் ஆகும்.*

*திருச்சதகம் சதக இலக்கியத்திற்குரிய விதிப்படி இயற்றப்பட்டது அல்ல. ஆயினும் எண்ணிக்கை பொருத்தத்தை மட்டுமே இந்நூலில் காணமுடிகின்றது.*

*கி.பி.11 ஆம் நூற்றாண்டில் அவிநாசி ஆறைகிழார் பாடிய 'கார் மண்டல சதகமே' முதல் சதக இலக்கிய நூலாகும். அதைத் தொடர்ந்து பல மண்டல சதகங்கள் இயற்றப்பட்டன. அதன் பின்னர் நீதி சதகங்கள், பக்தி சதகங்கள், பழமொழி சதகங்கள், 'காப்பிய சதகங்கள்' என சதக இலக்கியங்கள் பெருவளர்ச்சியடைந்தன.*

*நூறு பாடல்களில் பாடப்படுவது சதகம் எனினும் சில நூல்கள் அவ்வரையறையைக் கடந்த நிலையைக் காணமுடிகின்றது. தண்டலையார் சதகம், சோழ மண்டல சதகம், காசி விசுவநாத சதகம் போன்ற நூல்கள் நூற்றுக்கும் மேற்பட்ட பாடல்களைக் கொண்டு விளங்குகின்றன. சதக இலக்கியங்கள் அனைத்திலும் 'மகுடம்' இடம்பெறுதல் என்னும் பொது அமைப்பினைக் காணமுடிகின்றது.*

*கார் மண்டல சதகம், தொண்டை மண்டல சதகம், சோழ மண்டல சதகம், கொங்கு மண்டல சதகம், பாண்டி மண்டல சதகம், குமரேச சதகம், அறப்பளீசுர சதகம், கயிலாசநாதர் சதகம், தண்டலையார் சதகம் போன்றன குறிப்பிடத்தக்க சதக இலக்கியங்களாக விளங்குகின்றன.*

*சதக இலக்கியம் பற்றிய விரிவான செய்திகள் இயல் இரண்டில் விளக்கப்படுகின்றன.*

### 1.8.10. மடல்

*அகப்பொருள் சார்ந்த இலக்கிய வகையாக மடல் இலக்கியம் விளங்குகின்றது. மடல் என்பது பனை மடலைக் குறிக்கும்.*

> பனைமடலால் ஆன குதிரை மீது ஏறி, தன் உள்ளத்தைப் பறிகொடுத்த பெண்ணின் ஓவியத்தை ஏந்தி, பனங்கருக்கு மாலையை அணிந்து தன்னை வருத்திக் கொள்வேன் என்று தலைவியை அடைய எண்ணிப் பாடும் இலக்கிய வகை[57]

*மடல் எனப்படுகிறது. சங்க இலக்கிய அகத்திணைப் பாடல்களில் தலைவியை மணக்க விரும்பிய தலைவன், தலைவி உடன்படாத நிலையில் அவளை அச்சுறுத்தும் வகையில் மடலேறப் போவதாகக் கூறுதலைக் காணமுடிகின்றது.*

*மடல் இலக்கியத்திற்குரிய இலக்கணத்தைப் பாட்டியல் நூல்கள் கூறுகின்றன. இதனை,*

மடன் மாப் பெண்டிர் ஏறார்; ஏறுவர்
கடவுளர் தலைவராய் வருங்காலே[58]

*என்று பன்னிரு பாட்டியலும்,*

அறம் பொருள் வீடு எனும் அம்முக்கூற்றின்
திறம் கடிந்து அரிவையர் திறத்து உறும் இன்பம்
பயன் எனக் கலிவெண்பாவால் தலைவன்
பெயர் எதுகையினில் பேசுதல் வளமடல்[59]

*என்று இலக்கண விளக்கமும் மடல் இலக்கியத்திற்கான விளக்கத்தை தருகின்றன என்பதை தா.ஈசுவரப்பிள்ளை குறிப்பிடுகின்றார்.*

*மடல் பற்றி தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது. பெருந்திணையை விளக்குமிடத்தில் 'ஏறிய மடல் திறம்' என்கிறது. மேலும் களவிற் கூட்டத்தில் காதல் மிகுதியால் ஆற்றாமைக் காரணமாகத் தலைவனின் இயல்பினைக் கூறும்போது,*

மடல் மா கூறும் இடனு மாருண்டே[60]

*என்று தலைவன் மடலேறும் செயலைக் குறிப்பிடுகின்றார்.*

எத்திணை மருங்கினும் மகடூஉ மடன்மேல்
பொற்புடை நெறிமை இன்மை யான[61]

*என்னுமிடத்து எல்லா குலத்தினிடத்தும் பெண்கள் மடலேறும் வழக்கம் இல்லை என்று தொல்காப்பியம் சுட்டிக் காட்டுகின்றது.*

*சங்ககாலத்திற்கு அடுத்து பக்தி இயக்க காலத்தில்தான் இவ்விலக்கிய வகையைக் காணமுடிகின்றது. திருமங்கையாழ்வார் பாடிய 'சிறிய திருமடல், பெரிய திருமடல்' ஆகியவை இவ்விலக்கிய வகைக்குச் சான்றாக விளங்குகின்றன. பெண்கள் மடலேறும் வழக்கம் இல்லாத நிலையில் திருமங்கையாழ்வார் தன்னைப் பெண்ணாக பாவித்து இறைவனைத் தலைவனாகக் கருதி, இறைவனை*

அடைய வேண்டி தான் மடலேறப் போவதாகப் பாடும் நிலையைக் காணமுடிகின்றது.

மடல் இலக்கியம் உலாமடல் என்றும், வளமடல் என்றும் சித்திரமடல் என்றும் அழைக்கப்படுகின்றது. வருணகுலாதித்தன் மடல், கலிமடல், இன்பமடல் போன்ற வகைகளையும் காணமுடிகின்றது.

### 1.8.11. பள்ளு

உழவுத் தொழிலை அடிப்படையாகக் கொண்ட பள்ளர்களின் வாழ்க்கையைச் சித்தரிப்பதே பள்ளு இலக்கியமாகும். தொல்காப்பியம் குறிப்பிடும் எட்டுவகை வனப்புகளுள் ஒன்றான ‘புலன்’ என்பது ‘பள்ளு’ என்னும் இலக்கிய வகையை,

> சேரி மொழியாற் செவ்விதிற் கிளந்து
> தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றிற்
> புலனென மொழிப் புலனுணர்ந்தோரே[62]

என்று தொல்காப்பியம் பள்ளு இலக்கியத்திற்கு இலக்கணம் வகுத்துள்ளதை அறியமுடிகின்றது.

உழத்திப்பாட்டு என்னும் இலக்கிய வகையை அடிப்படையாகக் கொண்டு ‘பள்ளு’ இலக்கியம் தோன்றியது என்பது விளங்குகிறது.

> பள் என்பது தாழ்ந்த (பள்ளமான) நன்செய் நிலங்களையும் அங்குச் செய்யப்படும் உழவுத்தொழிலையும் குறிப்பது. ஆகவே பள்ளு என்பது உழவரின் பாட்டுக்குப் பெயராக அமைந்தது[63]

என்று மு.வ. குறிப்பிடுகிறார். பள்ளு இலக்கியத்தின் வாயிலாக விவசாயத் தொழிலாளர்களின் செயல்பாடுகள், வாழ்க்கை நிலை, அவர்கள் பற்றிய குறிப்புகள் போன்றவற்றை அறியமுடிகின்றது.

பாட்டியல் நூல்களில் பள்ளு இலக்கியத்திற்கான இலக்கணம் இடம்பெறவில்லை. ‘உழத்திப்பாட்டு’ எனும் இலக்கிய வகைக்குத் தரும் இலக்கணம் இதற்கும் (பள்ளு) பொருந்தும்.

*பள்ளு இலக்கியத்தின் முன்னோடி நூலாக முக்கூடற்பள்ளு விளங்குகிறது. ஆயினும், பள்ளு இலக்கிய வகையின் முதல் நூலாகக் கி.பி.16 ஆம் நூற்றாண்டில் தோன்றிய கமலை ஞானப்பிரகாசரின் திருவாரூர் பள்ளு' கருதப்படுகிறது. பள்ளு இலக்கியங்களுள் புகழ்பெற்ற நூலாக முக்கூடற்பள்ளும், வையாபுரிப்பள்ளும் விளங்குகின்றன.*

*மழை வருவதன் அறிகுறி, வெள்ளத்தின் வரவு, பள்ளியர் ஏசல், வித்துவகை, மீன்வகை, மாடுவகை இவற்றைப் பற்றிய செய்திகளை முக்கூடற்பள்ளு நயம்பட எடுத்துரைக்கின்றது.*

*பண்ணையாரின் வயல்களில் உழுது பயிரிடும் தொழிலாளி பள்ளன். அவனுக்கு இரு மனைவியர் மூத்தப்பள்ளி, இளையப்பள்ளி. இருவரிடையே கணவன் பொருட்டு சண்டை மூளும். இருவரில் ஒருத்தி சைவம், மற்றவள் வைணவ சமயத்தைச் சார்ந்தவள். இருவரிடையே சமயப்பூசல் ஏற்படுவதை சுவைபட விளக்குகின்றது இந்நூல்.*

*கி.பி.17, 18 ஆம் நூற்றாண்டுகளில் சைவ வைணவ சமயங்களுக்கிடையே ஏற்பட்ட பூசல்களை இவ்விலக்கிய வகை பிரதிபலிக்கின்றது. இப்பள்ளு இலக்கியம் நாடக பாங்குடையது என்பதும் அறியத்தக்கது.*

### 1.8.12. குறவஞ்சி

*குறவஞ்சி என்பது ஒருவகையான நாடகம். குறவஞ்சி என்ற சொல்லுக்கு குறவர் குலத்துப்பெண் என்று பொருள்படும் என்பர்.*

> குறி சொல்லும் குறத்தியை மையமாகக் கொண்டு அமையும் இலக்கிய வகை. தலைவன் உலாவரக் கண்ட தலைவி அவனிடம் மனம் பறிகொடுத்து வருந்துவதும், குறத்தி அவள் மனநிலை அறிந்து குறி சொல்வதும், தன் நாட்டு வளம், நகர் வளம், குலப்பெருமை, சொல்வளம், தன்னைத்தேடி வரும் குறவனாகிய தன் தலைவனை அவள் சேர்தலும் ஆகிய கதைப்பின்னலைக் கொண்டு சித்திரிக்கப்படும் நாடக இலக்கிய வகை[64]

*குறவஞ்சி எனப்படுகிறது.*

இவ்வகையை குறத்திப்பாட்டு என்றும் கூறுவர். முக்காலத்தையும் கணித்துக் கூறும் திறன்படைத்த குறத்தி குறி சொல்வதாக அமைத்துப் பாடப்பெறுவது. உழத்திப்பாட்டு போன்றே இதுவும் பத்துப்பாடல்களால் அமையும். குறத்திப் பாட்டோ பிற்காலக் குறவஞ்சி இலக்கிய வகைக்கு அடிப்படை. பன்னிருபாட்டியல் இவ்வகைக்கு இலக்கணம் கூறுகையில், 'குறத்திப்பாட்டு' என்றே குறிப்பிடுகின்றது.

இறப்பு நிகழ்வு எதிர்வு என்னும் முக்காலமும்
திறப்பட உரைப்பது குறத்திப் பாட்டே[65]

தொல்காப்பியர் குறிப்பிடும் எண்வகை வனப்புகளில் 'விருந்து' என்பதில் இவ்வகை அடங்கும் என்பதை இதன்வழி அறியமுடிகின்றது.

இவ்விலக்கிய வகையின் முதற்சான்றாக, திரிகூடராசப்பக் கவிராயர் இயற்றிய திருக்குற்றாலக் குறவஞ்சி விளங்குகிறது. குறவஞ்சி நூல்களுள் இன்றும் பாராட்டுக்குரியதாக இந்நூல் விளங்குகின்றது. சிவக்கொழுந்து தேசிகர் இயற்றிய சரபேந்திர பூபாலக் குறவஞ்சி, கும்பேசர் குறவஞ்சி நாடகம், அர்த்தநாரீசுவரக் குறவஞ்சி, திருவாரூர்க் குறவஞ்சி முதலியவை குறிப்பிடத்தக்க நூல்கள் ஆகும். இவை அனைத்தும் நாடக நூல்களாகும்.

### 1.9. தொகுப்புரை

- ஒரு நாட்டின் பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றை விளக்கும் சான்றாக இலக்கியங்கள் விளங்குகின்றன.
- கால மாற்றத்திற்கேற்ப பொருண்மையில் மாற்றம் ஏற்பட்டு சங்க இலக்கியங்கள், நீதி இலக்கியங்கள், பக்தி இலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள் என முகிழ்த்தன.
- தொடர்நிலைச் செய்யுளாக நீண்ட கதைகளை விளக்குவதை விடுத்து, புலவர்கள் சிற்றிலக்கியங்கள் படைக்க முற்பட்டனர்.
- சிற்றிலக்கியங்கள் பிரபந்தங்கள் என வழங்கப்பட்டன.
- உலா, தூது, பரணி உள்ளிட்ட சிற்றிலக்கியங்களுக்கான வித்து தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ளது.

- *சிற்றிலக்கியங்கள் 96 வகையாகக் குறிப்பிடப்பட்டிருப்பினும், காலப்போக்கில் எண்ணிக்கையில் மாற்றம் பெறத் தொடங்கின.*
- *சிற்றிலக்கியங்களுக்குரிய இலக்கணங்களைப் பாட்டியல் நூல்கள் எடுத்துரைக்கின்றன.*
- *தொல்காப்பியத்தில் வித்திடப்பெற்ற சிற்றிலக்கிய வகைகள் சங்ககாலத்தில் இருந்தே வளர்ச்சி பெறத் தொடங்கின.*
- *சிற்றிலக்கியங்கள் பொருள் அடிப்படை, எண்ணிக்கை அடிப்படை, நிகழ்வுகள் அடிப்படை, புகழ்தல் அடிப்படை, யாப்பு அடிப்படை என பல வகைகளில் பாகுப்படுத்தப்பட்டுள்ளன.*
- *காலப்போக்கில் புதுவகையான இலக்கியங்கள் தோற்றம் பெறின் அவற்றை ஏற்றுக்கொள்ளல் வேண்டும் என்று தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது.*
- *சங்ககாலத்தில் ஆற்றுப்படை இலக்கியங்கள் தனித்த வகையாக வளர்ச்சி பெற்றுள்ளன.*
- *அந்தாதி இலக்கியத்திற்கு வித்திட்டவர் காரைக்காலம்மையார் ஆவார்.*
- *பக்தி இலக்கிய காலத்தில் பெரும்பான்மையான சிற்றிலக்கியங்கள் தோற்றம் பெற்று வளர்ந்துள்ளன.*
- *பதினோராம் திருமுறை 'பிரபந்தமாலை' என வழங்கப்படுவதைக் காணலாம்.*
- *பெருமளவில் வளர்ச்சி பெற்ற சிற்றிலக்கிய வகைகளாக பன்னிரண்டு வகைகள் மட்டும் இவ்வியலில் விளக்கப்பட்டுள்ளன.*
- *ஆற்றுப்படை, அந்தாதி, அங்கமாலை, உலா, பரணி, கலம்பகம், பிள்ளைத்தமிழ், தூது, சதகம், மடல், பள்ளு, குறவஞ்சி ஆகிய இலக்கியங்களின் தோற்றம், இலக்கணம், வளர்ச்சி, அவ்வகையில் தோன்றிய நூல்கள் எனும் முறைமையில் சிற்றிலக்கியங்கள் இவ்வியலில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.*

## சான்றெண் குறிப்புகள்

1. *ரா.சீனிவாசன்,* ***மொழியியல்,*** *ப.2.*
2. *அ.ச.ஞானசம்பந்தன்,* ***இலக்கியக் கலை,*** *ப.6.*
3. *ஆ.சிவலிங்கனார்,* ***இலக்கியத்தின் நோக்கமும் பயனும் (தொகுதி - 1),*** *ப.346.*
4. ***தொல். பொருள். செய்யுளியல்,*** *நூ.75.*
5. *கழக வெளியீடு,* ***சிற்றிலக்கியச் சொற்பொழிவுகள் (முதலாவது மாநாடு),*** *ப.௩௪.*
6. *தா.ஈசுவரபிள்ளை,* ***தமிழில் சிற்றிலக்கிய வரலாறு,*** *ப.18.*
7. *கி.இராசா,* ***இலக்கிய வகை விளக்க அகராதி,*** *ப.6.*
8. *கழக வெளியீடு,* ***சிற்றிலக்கியச் சொற்பொழிவுகள் (முதலாவது மாநாடு),*** *ப.2.*
9. *தமிழ் அடோன் அகராதி, பக்.376-377.*
10. *ரா.சீனிவாசன்,* ***தமிழ் இலக்கிய வரலாற்றுக் கட்டுரைகள்,*** *ப.102.*
11. *தா.ஈசுவரபிள்ளை,* ***தமிழில் சிற்றிலக்கிய வரலாறு,*** *முதற்பகுதி, ப.21.*
12. *தமிழண்ணல்,* ***புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு,*** *ப.275.*
13. *ஆ.சிவலிங்கனார்,* ***இலக்கியத்தின் நோக்கமும் பயனும் (தொகுதி - 1),*** *ப.346.*
14. *ந.வீ.செயராமன்,* ***சிற்றிலக்கியத் திறனாய்வு,*** *ப.135.*
15. *ச.வே.சுப்பிரமணியன்,* ***திராவிடமொழி இலக்கியங்கள்,*** *ப.185.*
16. *கி.இராசா,* ***தமிழர் இலக்கிய வரலாறு,*** *ப.135.*
17. ***தொல். பொருள்.,*** *இளம். உரை., நூ.88.*
18. *மேலது., நூ.83.*
19. *மேலது., நூ.82.*
20. ***தொல். பொருள்.,*** *நூ.540.*
21. *ந.வீ.செயராமன்,* ***சிற்றிலக்கியச் செல்வம்,*** *ப.27.*
22. *அ.மார்க்ஸ்,* ***சிற்றிலக்கியங்கள் சில குறிப்புகள்,*** *ப.24.*
23. *கி.இராசா,* ***தமிழர் இலக்கிய வரலாறு,*** *ப.136.*
24. *கி.இராசா,* ***இலக்கிய வகை விளக்க அகராதி,*** *ப.10.*
25. *தா.ஈசுவரப்பிள்ளை,* ***தமிழில் சிற்றிலக்கிய வரலாறு,*** *பக்.22-23.*
26. *தமிழண்ணல்,* ***புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு,*** *பக்.334-335.*
27. *கி.இராசா,* ***இலக்கிய வகை விளக்க அகராதி,*** *ப.19.*

28. கி.இராசா, **இலக்கிய வகை விளக்க அகராதி**, ப.88.

29. ந.வீ.செயராமன், **பாட்டியலும் இலக்கிய வகைகளும்,** ப.19.

30. **பிரபந்த மரபியல்,** நூ.1:3-4.

31. கி.இராசா, **இலக்கிய வகை விளக்க அகராதி**, ப.8.

32. இளங்குமரன், **இலக்கிய வகை அகராதி**, ப.8.

33. கி.இராசா, **இலக்கிய வகை அகராதி**, ப.38.

34. தொல். பொருள்., இளம். உரை., நூ.88.

35. தமிழண்ணல், **புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு**, ப.339.

36. கி.இராசா, **இலக்கிய வகை விளக்க அகராதி**, ப.22.

37. மேலது., பக்.23-24.

38. மேலது., ப.20.

39. தா.ஈசுவரப்பிள்ளை, **தமிழில் சிற்றிலக்கிய வரலாறு (முதற்பகுதி),** ப.137.

40. தா.நீலகண்டபிள்ளை, **இலக்கியத்தின் நோக்கமும் பயனும், தொகுதி 1,** ப.125.

41. தமிழண்ணல், **புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு**, பக்.343-344.

42. **தொல். பொருள்., புறத்.,** நூ.25.

43. கி.இராசா, **இலக்கிய வகை விளக்க அகராதி,** பக்.53-54.

44. மு.சண்முகம் பிள்ளை, **சிற்றிலக்கிய வகைகள்,** ப.23.

45. தமிழண்ணல், **புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு**, ப345.

46. மேலது., ப.345.

47. முத்து.இராமமூர்த்தி (உ.ஆ.), **கலிங்கத்துப்பரணி போர் பாடியது,** பா.405.

48. மேலது., ப.150.

49. கதிர்முருகு (உ.ஆ.), **நந்திக்கலம்பகம்,** பா.110.

50. தா.ஈசுவரப்பிள்ளை, **தமிழில் சிற்றிலக்கிய வரலாறு,** ப.261.

51. **தொல். பொருள்., புறத்.**, நூ.24.

52. ச.வே.சுப்பிரமணியன், **இலக்கியத்தின் நோக்கமும் பயனும் (தொகுதி -2)**, ப.68.

53. **தொல். பொருள்.அகத்.,** நூ.27.

54. பி.இரத்தினசபாபதி, **தூது இலக்கியம் ஒரு புதியப்பார்வை**, ப.45.

55. பே.இரா.மாதவன், **தமிழில் தூது இலக்கியம்**, ப.15.

56. த.இராசேசுவரி (ப.ஆ.), **சதகப்பாட்டு (தொகுதி 1),** ப.xiv.

57. கி.இராசா, **இலக்கிய வகை விளக்க அகராதி**, ப.190.

58. தா.ஈசுவரபிள்ளை, **தமிழில் சிற்றிலக்கிய வரலாறு,** ப.336.

59. மேலது., ப.336.

60. **தொல். பொருள். களவு.,** நூ.11.

61. தொல். பொருள். அகத்., நூ.38.

62. **தொல். பொருள். செய்யுள்.,** நூ.229.

63. மு.வரதராசனார், **தமிழ் இலக்கிய வரலாறு**, ப.295.

64. கி.இராசா, **இலக்கிய வகை விளக்க அகராதி,** ப.97.

65. மேலது., ப.97.

# இயல் 2

# சதக இலக்கியங்களின் வரலாறு

## 2.1. சதக இலக்கியம்

தொண்ணூற்றாறு வகையான சிற்றிலக்கியங்களுள் ஒன்றாக ‘சதகம்’ விளங்குகிறது. இவ்விலக்கிய வகை வடமொழி மரபைப் பின்பற்றி தமிழில் தோன்றியது.

> சதகம் என்ற சொல் வடமொழிச் சொல். வடமொழியில் ‘சதம்’ என்றால் நூறு என்று பொருள்படும். ‘சதம்’ என்ற சொல்லின் இடையில் ‘க’ என்ற ஓர் எழுத்துக் கூடிச் ‘சதகம்’ என்று ஆகின்றது. இங்ஙனம் இடையில் ‘க’ என்ற ஓர் எழுத்துக் கூடி வருதலைக் ‘க’ப் பிரத்தியயம் என்று வடமொழிவாணர்கள் கூறுவர். எனவே சதம் என்ற சொல் கப்பிரத்தியம் பெற்றுச் சதகம் என்று வந்தது. சதகம் என்ற சொல்லுக்கு நூறு கொண்டது என்பது பொருள்[1]

என்று சதக இலக்கியங்கள் என்னும் நூலில் ந.வீ.செயராமன் குறிப்பிடுகின்றார்.

ஐங்குறுநூறு, அகநானூறு, பதிற்றுப்பத்து, புறநானூறு என எண்ணிக்கை அடிப்படையில் பெயரிடுவது தமிழ் மரபு. நூறு பாடல்களைக்கொண்ட சதக இலக்கியத்திற்கு தமிழ் மரபுப்படி பெயரிடாது வடமொழிப் பெயராலே வழங்கப்பட்டு வருகின்றது. தமிழ்மொழியில் சதக இலக்கியம் தோன்றுவதற்கு முன்னரே வடமொழியில் செல்வாக்குப் பெற்ற இலக்கிய வகையாக வளர்ச்சி பெற்றிருந்தது.

கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் மாணிக்கவாசகர் இயற்றிய ‘திருச்சதகம்’ தமிழில் தோன்றிய முதல் சதகம் ஆகும். அதன்பிறகு கி.பி. பதினோராம் நூற்றாண்டு வரை சதக இலக்கியங்கள் இயற்றப்படவில்லை. கி.பி. பதினோராம் நூற்றாண்டில் அவிநாசி ஆறைகிழார் இயற்றிய கார்மண்டல சதகம் தொடங்கி சதக இலக்கியங்கள் வளர்ச்சி பெறத் தொடங்கின.

சதகம் தனித்த இலக்கிய வகையாக வளர்ச்சி பெற்றது கி.பி. பதினேழாம் நூற்றாண்டு என்று கூறப்பட்டாலும், கார் மண்டல சதகமே முதல் சதகம் என்பதை,

கார் மண்டல சதகத்தை இயற்றிய ஆசிரியர் அவிநாசி ஆறைகிழார் என்னும் புலவர். இவரது காலம் கி.பி.1025 - 1070 என்பது ஆராய்ச்சியாளர் முடிவு[2]

*என்னும் கார் மண்டல சதக நூலின் ப.அ.முத்துத் தாண்டவராய பிள்ளையின் உரையை மேற்கோள்காட்டி ந.வீ.செயராமன் குறிப்பிடுகின்றார்.*

### 2.1.1. சதகம் - வரையறை

*சதகம் என்னும் இலக்கிய வகைக்கான வரையறை பலவாறாகக் கூறப்பட்டுள்ளது.*

மக்களின் நல்வாழ்விற்கு தேவையான அறநூற் கருத்துக்களையும், நீதிகளையும், ஒழுக்கக் கூறுகளையும் வழங்கி அவர்களை வாழ்வாங்கு வாழச் செய்யும் இயல்பினது சதக இலக்கியம்[3]

*என்று சதக இலக்கியம் பற்றி வாழ்வியல் களஞ்சியம் குறிப்பிடுகின்றது.*

நூறு செய்யுள்கள் கொண்ட பிரபந்தம்[4]

*என்று தமிழ்மொழி அகராதியும்,*

சதகம் என்னும் சொல்லிற்கு என்றும் நிலைத்திருப்பது, இறுதி என்ற பொருண்மைகளும் உண்டு[5]

*என்று தமிழ் லெக்சிகனும் விளக்கம் தருகின்றன.*

குறிப்பிட்டதொரு பொருண்மையிலின்றிப் பல பொருண்மைகளையும் சதகம் தன் பாடுபொருளாகப் பலவற்றினின்றும் தனித்த சிறப்புடையதாகிறது[6]

*என்று தமிழ்ச் சதக இலக்கியம் என்னும் நூலில் ச.சிவகாமி குறிப்பிடுகிறார்.*

சதகம் என்ற சொல் வடமொழிச் சொல்லாகும். ‘சதக’ என்பது ‘சதம்’ என்ற அடிச்சொல்லில் இருந்து வந்தது. ‘சதம்’ என்னும் வடமொழி ‘நூறு’ என்று பொருள்படும். அது ‘க’ என்ற ‘பிரத்தியயம்’ சேரச் சதகம் என்றாயிற்று. தமிழ்மொழியில் சதக இலக்கியம் தோன்றாத காலத்திலேயே வடமொழியில் சதகம் என்ற பெயரில் கி.பி. ஆறாம் நூற்றாண்டு முதலே சதக இலக்கியத்தின் வளர்ச்சி காணப்படுகிறது.[7]

சதகம் - நூறு. ஒரு பொருள் பற்றி வரும் 100 பாடல்கள் கொண்ட இலக்கிய வகை சதகம் எனப்படும். இவை பெரும்பாலும் காதல், நீதி, பக்தி என்ற பொருண்மையில் பாடப் பெற்றவை. இவையும் வளம்மிக்க இலக்கிய வகையாக வளர்ந்துள்ளன.[8]

> நூறு பாடல்களைப் பாடுவது என்ற எண்ணிக்கையின் அடிப்படையால் பெயர் பெற்ற இவ்இலக்கிய வகை, பல பாடுபொருட்களை ஏற்றுள்ளது.[9]

*இவ்வாறு சதக இலக்கியங்கள் பற்றிய பல்வேறு விளக்கங்கள் கூறப்பட்டுள்ளன. மேற்கண்ட விளக்கங்களிலிருந்து ஒரு பொதுப்பண்பு பெறப்படுகின்றது. அவை சதகம் நூறு பாடல்களில் பாடப்பட்டிருத்தல் வேண்டும். எவையேனும் ஒரு பொருள் பற்றியதாகவும் அமையலாம் என்னும் கருத்தில் யாவரும் மாறுபடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.*

### 2.1.2. சதக இலக்கணம்

*சிற்றிலக்கியங்களுக்குரிய இலக்கணத்தை வரையறை செய்த பாட்டியல் நூல்கள் மற்றும் தமிழ் இலக்கண நூல்கள் சதக இலக்கியத்திற்கான இலக்கணத்தை வரையறை செய்துள்ளன.*

> விளையும் ஒருபொருள் மேலொரு நூறு
> தழைய வுரைத்தல் சதக மென்ப

*என்று இலக்கண விளக்கமும்,*

> பயிலும் ஓர் பாட்டால் நூறு உரைப்பது சதகம்

*என சுவாமிநாதமும்,*

> சயமாம் மிகுபொருள் ஒன்றின்
> பாநூறு சதகமதே

*என்று நவநீதப் பாட்டியலும்,*

> நூறான வெண்பாக் கலித்துறையின்
> ஆதல் சதகம்

*என்று பிரபந்த மரபியலும்,*

> சதகம் என்பதுவே சதச் செய்யு ளாலே
> அகப்பொருள் புறப்பொருள் இரண்டில் ஒன்று அறைதலே

*என்று பிரபந்ததீபமும்,*

> அகப்பொருள் ஒன்றன் மேலாதல் புறப்பொருள்
> ஒன்றன் மேலாதல் கற்பித்து ஒரு நூறு
> செய்யுள் உரைப்பது சதகமாம் என்ப[10]

*என்று முத்துவீரியமும் விளக்கம் தந்துள்ளன.*

*மேற்கண்ட விளக்கங்களிலிருந்து சதக இலக்கியம் என்பது ஏதேனும் ஒரு பொருள் பற்றி நூறு பாடல்களில் பாடப்படுவது என்றும், வெண்பா அல்லது கலித்துறையில் பாடப்படுவது என்றும், அகப்பொருள் அல்லது புறப்பொருள் பற்றிப் பாடப்படுவது என்றும் நூல் முழுவதும் ஒரே வகை யாப்பில் பாடப்பட வேண்டும் என்பதும் பெறப்படுகின்றது.*

விருந்தே தானும்
புதுவது கிளந்த யாப்பின் மேற்றே[11]

*என்னும் தொல்காப்பிய விதிக்குள் சதக இலக்கியமும் அடங்கும்.*

*கால மாறுபாடு மற்றும் பொருண்மை மாறுபாட்டின் அடிப்படையில் இவ்விதிமுறைகளில் தளர்வு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.*

## 2.2. சதக இலக்கிய வகைமை

*சதக இலக்கியங்கள் காலச்சூழ்நிலைக்கு ஏற்பவும், புலவர்கள் கருத்தினை வெளிப்படுத்தும் நோக்கத்திலும் மாறுபட்டு நின்றமையால் பல வகைப்பட்டனவாய் காணப்படுகின்றன. இவ்விலக்கிய வகைகளைக் குறிப்பிடுவதில் ஆராய்ச்சியாளர்கள் மாறுபடுகின்றனர்.*

*"சதக இலக்கியங்கள் எல்லாம் பல்வேறு சூழ்நிலைகளிலும் நோக்கங்களின் அடிப்படையிலும் வரலாற்று நூல்கள், துதி நூல்கள், நீதி நூல்கள் என்னும் முப்பெரும் பிரிவினவாக வகைப்படுத்தலாம்" என்கிறார் ந.வீ.செயராமன். ஆனால் 'தமிழில் சதக இலக்கியங்கள்' என்னும் நூலில் ப.பழனியம்மாள் சதக இலக்கியங்களை நான்கு வகையாகப் பிரிக்கிறார். அவை 1. மண்டல சதகங்கள், 2. நீதிச் சதகங்கள், 3. துதிச் சதகங்கள், 4. காப்பியச் சதகங்கள் என்பனவாகும்.*

*'தமிழ்ச் சதக இலக்கிய வகையும் வடிவும்' என்ற நூலில் ச.சிவகாமி இவ்விலக்கியத்தை,*

1. இறைவனைப் போற்றிப் புகழ்வன பக்திச் சதகங்கள்
2. வாழ்க்கையைக் கூறுவன வாழ்வியல் சதகங்கள்
3. வரலாற்றை விளக்குவன வரலாற்றுச் சதகங்கள்
4. உடல்நலம் பற்றிச் சொல்வன மருத்துவச் சதகங்கள்
5. காமச்சுவையைச் சுட்டுவன அகச்சதகங்கள்

6. வள்ளல்களின் பெருமை பேசுவன பாடாண் சதகங்கள்
7. தனிமனிதரின் வாழ்க்கையை எடுத்துரைப்பன வாழ்க்கை வரலாற்றுச் சதகங்கள்[12]

என வகைப்படுத்துகின்றார். இவ்வாறு பலவிதமான வகைமைகளை சதக இலக்கியங்கள் பெற்றிருப்பினும்,

1. வரலாற்றுச் சதகங்கள்
2. நீதி சதகங்கள்
3. துதி சதகங்கள்

என்னும் இவ்வகைப்பாட்டினுள் மற்ற வகைகளையும் உள்ளடக்கிக் கூறப்பட்டிருப்பதைக் காணமுடிகின்றது.

### 2.2.1. வரலாற்றுச் சதகங்கள்

வடவேங்கடம் தென்குமரிக்கு இடைப்பட்டதான தமிழகம் மண்டலங்களாக பிரிக்கப்பட்டு இருந்தது. அவை கார் மண்டலம், கொங்கு மண்டலம், தொண்டை மண்டலம், சோழ மண்டலம் என வழங்கப்பட்டு வந்தன.

மண்டல சதகங்கள் அவ்வம்மண்டலங்களோடு தொடர்புடைய அல்லது அம்மண்டலங்களில் வாழ்ந்த மன்னர்கள், புலவர்கள், வள்ளல்கள், நாயன்மார்கள், ஆழ்வார்கள், வேளாளர்கள், நூல்கள் ஆகியோரின் சிறப்புகள் மற்றும் வரலாறுகளை எடுத்துரைக்கின்றன.

மேலும் அந்நாட்டு மக்களின் பண்பாடு, பழக்கவழக்கங்கள், கலாச்சாரம் உள்ளிட்ட பலவகைப்பட்ட செய்திகளை உள்ளடக்கியதாகவும் இச்சதகங்கள் காணப்படுகின்றன.

கார் மண்டல சதகம், கொங்கு மண்டல சதகம், தொண்டை மண்டல சதகம், சோழ மண்டல சதகம், பாண்டி மண்டல சதகம், ஈழ மண்டல சதகம் போன்ற சதகங்கள் மண்டல சதகங்களுக்கு எடுத்துக்காட்டாய் விளங்குகின்றன.

### 2.2.2. நீதி சதகங்கள்

ஒரு தலத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவனை முன்னிலைப்படுத்தி மக்கள் நல்வாழ்வு வாழ்வதற்கான அறநெறிகளை எடுத்துக் கூறும் நோக்கில் நீதி சதகங்கள்

தோன்றின. இந்நூல்களில் உவமைகள், பழமொழிகள் மற்றும் புராண, இதிகாசக் கதைகள் வாயிலாகவும் நீதிகள் விளக்கப்பட்டுள்ளன.

இந்நூல்கள் அறநெறிகள் மட்டுமன்றி சகுனங்கள், வாஸ்து சாஸ்திரம், குதிரை இலக்கணம் உள்ளிட்ட பல்வேறு செய்திகளை உள்ளடக்கிய களஞ்சியமாகவும் விளங்குகின்றன.

குமரேச சதகம், அறப்பளீசுர சதகம், செயங்கொண்டார் சதகம் போன்றவை இவ்வகைப்பட்டன.

### 2.2.3. துதி சதகங்கள்

ஒரு தலத்தில் எழுந்தருளியுள்ள கடவுளை முன்னிலைப்படுத்தி அக்கடவுளை துதிப்பதாக மட்டுமே அமைந்த சதக நூல்கள் பல உள்ளன. அவையாம்பிகை சதகம், அருணாசல சதகம், எம்பிரான் சதகம், வடவேங்கட நாராயண சதகம், குருநாத சதகம், சிவசங்கர சதகம், கோகுல சதகம் முதலிய சதகங்கள் குறிப்பிடத்தக்கவை ஆகும்.

இறைவனைத் துதிக்கும் நோக்கம் மட்டுமன்றி, தமக்கு உதவி செய்த வள்ளல் பெயரை இணைத்தும் பாடப்பட்டுள்ளது. அறப்பளீசுர சதகம், அண்ணாமலைச் சதகம், திருவேங்கட சதகம் போன்ற நூல்களில் வள்ளல் பெயர்கள் இடம்பெற்றுள்ளன.

பழமொழி மற்றும் உதாரணக் கதைகளுடன் நீதிகளை விளக்கும் தண்டலையார் சதகம் மற்றும் செயங்கொண்டார் சதகம் போன்றவையும் துதி நூல்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

### 2.2.4. காப்பியச் சதகங்கள்

பெரிய அளவிலான கதைகளை மையமாகக் கொண்டு இயற்றப்பட்ட சதகங்களை காப்பியச் சதகங்கள் என்றழைக்கிறோம். அறுபத்து மூன்று அடியார் வரலாறு கூறும் பெரிய புராண காப்பியத்தை அடியொற்றி அடியார் பெருமை

மற்றும் சிறப்புகளை விளக்கும் முகமாக திருத்தொண்டர் சதகம் பாடப்பட்டுள்ளது. இந்நூல் காப்பியச் சதகமாகும்.

மகாபாரதக் கதையின் சுருக்க நூலாக ஸ்ரீமந் நடராஜாங்கித மகாபாரதச் சதகம்[13]

விளங்குகின்றது என்பதை ப.பழனியம்மாள் ‘தமிழில் சதக இலக்கியங்கள்’ என்னும் நூலில் குறிப்பிடுகின்றார்.

### 2.2.5. இஸ்லாமிய சதகங்கள்

இந்து சமய சதக இலக்கியங்களைப் போன்று இஸ்லாமியத்திலும், சதக இலக்கியங்களைக் காணமுடிகின்றது. இஸ்லாமிய வேதநெறிகள், நபிகள் நாயகத்தின் வரலாறு மற்றும் அடியார்களின் வரலாற்றைக் கூறுவதாய் இஸ்லாமிய சதகங்கள் விளங்குகின்றன.

மஸ்தான் சாகிபு இயற்றிய முகைதீன் சதகம், சுல்தான் அப்துல் காதிர் மரைக்காயர் பாடிய முனாஜாத்து சதகம், வரகவி நாச்சிகுளத்தார் பாடிய நாகூரார் சதகம் போன்றவை குறிப்பிடத்தக்க இஸ்லாமியச் சதகங்கள் ஆகும்.

### 2.2.6. கிறித்தவச் சதகங்கள்

இந்து மற்றும் இஸ்லாம் சமயங்களைத் தொடர்ந்து கிறிஸ்தவச் சமயத்திலும் சதக இலக்கியங்கள் இயற்றப்பட்டுள்ளன. சூசையின் பிறப்பு, கிறித்தவர்கள் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகளை எடுத்துக்கூறுவனவாய் 14 சதகங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றுள் இயேசுநாதர் சதகம் குறிப்பிடத்தக்க சதகமாக விளங்குகிறது.

### 2.2.7. மொழிபெயர்ப்புச் சதகங்கள்

பிறமொழிகளில் இருந்து தமிழ்மொழியில் சதக இலக்கியங்கள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. வடமொழி, தெலுங்கு மற்றும் கன்னட மொழிகளில் இருந்து சதக இலக்கியங்கள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

வடமொழியில் இருந்து பர்த்ருஹரியின் நீதி சதகம், சிருங்கார சதகம், வைராக்ய சதகம் மற்றும் ஸ்ரீதயா சதகம், சூர்ய சதகம் போன்றவைகள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

தெலுங்கு மொழியிலிருந்து சுமதீ சதகம் தமிழில் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறாக சதக இலக்கியங்கள் பல வகைப்பாடுகளை உடையனவாயினும், வரலாற்றுச் சதகங்கள், நீதி சதகங்கள், துதி சதகங்கள், வடமொழி சதகங்கள் என்ற வகைப்பாட்டினை விளக்கும் முகமாக இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

## 2.3. சதகத்தின் சிறப்புக் கூறுகள்

சதக இலக்கியங்கள் சில சிறப்பான பண்புகளைக் கொண்டுள்ளன. அவை எவையேனும் ஒரு பொருள் பற்றி நூறு பாடல்களில் பாடப்படுவது; நூல் முழுவதும் ஒரே வகை யாப்பில் பாடப்படுவது; செய்யுளின் ஈற்றடியில் ‘மகுடத்தொடர்’ இடம்பெறுதல் என்பனவாகும். இச்சிறப்புக் கூறுகள் அனைத்து சதகங்களிலும் காணப்படுகின்றன.

### 2.3.1. பாடல் எண்ணிக்கை

சதக நூல்கள் நூறு பாடல்களில் பாடப்பட வேண்டும் என்று வரையறை செய்யப்பட்டிருப்பினும் காலப்போக்கில் புலவர்களின் மனநிலைக்கேற்பவும் கருத்து வெளிப்பாட்டுத் தேவைக்கேற்பவும் நூறு என்ற எண்ணிக்கையில் சற்று விரிந்த நிலை காணப்படுகிறது. சில சதகங்கள் காப்புச் செய்யுள் அல்லது இறுதியில் அமைந்த வாழ்த்துச் செய்யுளுடன் நூறு பாடல்களைக் கொண்டுள்ளன. இவ்வகையில் கார்மண்டல சதகம், கொங்கு மண்டல சதகம், பாண்டி மண்டல சதகம், குமரேச சதகம், செயங்கொண்டார் சதகம் முதலியவை அமைந்துள்ளன.

காப்புச் செய்யுளும், வாழ்த்துச் செய்யுளும் நீங்கலாக நூறு பாடல்களைக் கொண்டவைகளாக கயிலாசநாதர் சதகமும், அவையாம்பிகை சதகமும் விளங்குகின்றன.

*தொண்டை மண்டல சதகம், வடிவேல் சதகம், அருணாசல சதகம், எம்பிரான் சதகம், நீதி சதகம், வைராக்ய சதகம் போன்றவற்றில் நூற்றியொரு பாடல்கள் இடம்பெற்றுள்ளன.*

*சோழ மண்டல சதகம், பாண்டி மண்டல சதகம், அண்ணாமலைச் சதகம் போன்றவை காப்புச் செய்யுள் நீங்கலாக நூற்றியொரு பாடல்கள் என எண்ணிக்கையில் மிகுதியான பாடல்களைக் கொண்டும் சதக இலக்கியங்கள் அமைந்துள்ளன.*

*கார் மண்டல சதகம், சோழ மண்டல சதகம், குமரேச சதகம், அண்ணாமலைச் சதகம், தண்டலையார் சதகம், செயங்கொண்டார் சதகம் போன்ற நூல்களில் அவையடக்கமாக ஒவ்வொரு பாடல்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் சில, நூலின் முற்பகுதியிலும், சில நூலின் பிற்பகுதியிலுமாக அமைந்துள்ளன.*

> “நூறு பாடல்கள்” என்பது அனைத்தையும் உள்ளடக்கிய நூலின் மொத்த பாடல்களையும் காப்பு, அவையடக்கம், வாழ்த்து போன்றவற்றை நீக்கியுள்ள மொத்தப் பாடல்களையும் குறித்ததாகப் பல்வேறு காலச் சூழலுக்கு ஏற்ப விளங்கிய தன்மை இங்கு குறிப்பிடப்பெறுகின்றது.[14]

*தமிழ்மொழியில் இயற்றப்பட்ட மாணிக்கவாசகரின் திருச்சதகம், கார்மண்டல சதகம், கார்மேகக் கவிஞர் இயற்றிய கொங்கு மண்டல சதகம், பாண்டி மண்டல சதகம், அறப்பளீசுர சதகம், குமரேச சதகம், கயிலாசநாதர் சதகம், செயங்கொண்டார் சதகம், அவையாம்பிகை சதகம் போன்ற நூல்களில் சதக இலக்கணப்படி நூறு பாடல்கள் இடம்பெற்றுள்ளன. நூற்றுக்கும் மேற்பட்ட எண்ணிக்கையிலான சதக நூல்களின் பட்டியல் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.*

| | | |
|---|---|---|
| *தொண்டை மண்டல சதகம்* | - | *101 பாடல்கள்* |
| *வடிவேல் சதகம்* | - | *101 பாடல்கள்* |
| *எம்பிரான் சதகம்* | - | *101 பாடல்கள்* |
| *அருணாசல சதகம்* | - | *101 பாடல்கள்* |
| *நீதி சதகம்* | - | *101 பாடல்கள்* |
| *வைராக்கிய சதகம்* | - | *101 பாடல்கள்* |

| | | |
|---|---|---|
| *ஸ்ரீதயா சதகம்* | - | *102 பாடல்கள்* |
| *அண்ணாமலைச் சதகம்* | - | *103 பாடல்கள்* |
| *நடராச சதகம்* | - | *103 பாடல்கள்* |
| *திருத்தொண்டர் சதகம்* | - | *103 பாடல்கள்* |
| *சோழ மண்டல சதகம்* | - | *104 பாடல்கள்* |
| *காசி விசுவநாத சதகம்* | - | *108 பாடல்கள்* |
| *தண்டலையார் சதகம்* | - | *109 பாடல்கள்* |

*இப்பட்டியல் நூல்களின் பாடல் எண்ணிக்கை அடிப்படையில் வரிசைப்படுத்தி இங்குக் கொடுக்கப்பட்டுள்ளன.*

### 2.3.2. மகுடம் அமைதல்

*சதக இலக்கியங்கள் அனைத்திலும் ஒரு பொதுப்பண்பு காணப்படுகின்றது. அது "மகுடம் அமைதல்" என்பதாகும். மகுடம் என்பது செய்யுளின் இறுதியில் இடம்பெறும் ஒரு சொற்றொடர் ஆகும். இவ்விதி மாறி அமைந்துள்ள சதகங்களும் உள்ளன. செய்யுளின் ஒரு பாடலில் அமைந்திருக்கும் மகுடம் நூலின் நூறு பாடல்களிலும் அமைந்திருத்தல் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.*

*வடமொழி மரபைப் பின்பற்றி சதக இலக்கியங்கள் தோன்றியிருப்பினும் வடமொழியிலோ அல்லது தமிழில் உள்ள திருச்சதகத்திலோ இவ்வமைப்பைக் காணமுடியவில்லை. முதல் சதகமான கார் மண்டல சதகம் தொடங்கி சதக இலக்கியங்களில் மகுடம் இடம்பெற்றுள்ளது.*

*கீழ்க்காணும் ஆறு வகைகளில் மகுட அமைப்புக் காணப்படுவதாகத் 'தமிழில் சதக இலக்கியங்கள்' என்னும் நூலில் ப.பழனியம்மாள் குறிப்பிடுகிறார். அவை,*

1. மண்டலத்தின் பெயரில் மகுடம் அமைதல்
2. இறைவனின் பெயரில் மகுடம் அமைதல்

   அ. ஒற்றைச் சொல்லில் மகுடம் அமைதல்

   ஆ. அடுக்குத் தொடரில் மகுடம் அமைதல்

   இ. இறைவன் பெயரும் பெருமையும் இணைந்து மகுடம் அமைதல்

3. இறைவன் பெயருடன் வள்ளல் பெயரும் இணைந்து மகுடம் அமைதல்
4. ஈற்றடி மாறி மகுடம் அமைதல்
5. நூலின் தலைப்பும் மகுடமும் மாறி அமைதல்
6. மகுடம் அமையாதிருத்தல்[15]

என்பனவாகும்.

**மண்டலத்தின் பெயரில் மகுடம் அமைதல்**

மண்டல வரலாறு கூறும் சதகங்களில் அவ்வம்மண்டலங்களின் பெயரிலேயே மகுடம் அமைந்துள்ளது.

| | | |
|---|---|---|
| கார் மண்டல சதகம் | - | 'காராளர் மண்டலமே' |
| சோழ மண்டல சதகம் | - | 'சோழ மண்டலமே' |
| தொண்டை மண்டல சதகம் | - | 'தொண்டை மண்டலமே' |
| கொங்கு மண்டல சதகம் | - | 'கொங்கு மண்டலமே' |
| பாண்டி மண்டல சதகம் | - | 'பாண்டியன் மண்டலமே' |
| ஈழ மண்டல சதகம் | - | 'ஈழநன் மண்டலமே' |

என்றவாறு மகுடம் அமைக்கப்பட்டுள்ளது.

இம்மகுடம் மண்டலத்தின் பெயர் மட்டுமல்லாது நூற்பெயராகவும் அமைதல் சிறப்பிற்குரியது.

**இறைவன் பெயரில் மகுடம் அமைதல்**

அ. ஒற்றைச் சொல்லில் மகுடம் அமைதல்

ஆ. அடுக்குத் தொடரில் மகுடம் அமைதல்

இ. இறைவன் பெயரும் பெருமையும் இணைந்து மகுடம் அமைதல்

என்னும் மூன்று விதமான மகுட அமைப்பைச் சதக இலக்கியங்கள் கொண்டுள்ளன. இறைவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்ட சதக இலக்கியங்களில் இறைவன் பெயர் மகுடமாக இடம்பெற்றுள்ளது.

**ஒற்றைச் சொல்**

| | | |
|---|---|---|
| எம்பிரான் சதகம் | - | 'எம்பிரானே' |
| செயங்கொண்டார் சதகம் | - | 'செயங்கொண்டாரே' |

ஆகிய இரு நூல்களிலும் ஒற்றைச் சொல்லில் மகுடம் அமைந்துள்ளது. தெலுங்கு மொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டதான சுமதீ சதகத்தில், 'சுமதீ' என ஒற்றைச்சொல் மகுடமாக இடம்பெற்றுள்ளது.

**அடுக்குத் தொடர்**

| | | |
|---|---|---|
| அருணாசல சதகம் | - | 'அருணாசலா அருணாசலா' |
| வடவேங்கட நாராயண சதகம் | - | 'நாராயணா, நாராயணா' |
| இராமலிங்க சதகம் | - | 'இராமலிங்கமே இராமலிங்கமே' |
| மெய்க்கண்ட வேலாயுத சதகம் | - | 'வேலாயுதா வேலாயுதா' |

போன்ற நூல்களில் அடுக்குத் தொடரில் மகுடம் அமைந்துள்ளன.

**இறைவன் பெயரும் பெருமையும் இணைந்து மகுடம் அமைதல்**

இறைவன் பெயரோடு அவன் பெருமைகளையும் இணைத்துப் பாடுவதான மகுட அமைப்பையும் சதக இலக்கியங்கள் கொண்டுள்ளன.

குமரேச சதகம், கயிலாசநாதர் சதகம், காசி விசுவநாத சதகம், அவையாம்பிகை சதகம் போன்ற நூல்கள் இறைவனின் புகழை எடுத்துரைப்பதாக நீண்ட தொடரில் மகுடம் பெற்று விளங்குகின்றன.

மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே (குமரேச சதகம்)

கங்கைபுனை யீசனே! மங்கைமகிழ் நேசனே!
கயிலை யங்கிரி வாசனே! (கயிலாசநாதர் சதகம்)

காசினியை வாழ்விக்க வரநதி பெருக்கியருள்
காசிவிசு வேச சிவமே (காசி விசுவநாத சதகம்)

மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே (அவையாம்பிகை சதகம்)

என்னும் மகுடத் தொடர்கள் இறைவன் புகழை எடுத்துரைப்பனவாய் அமைந்துள்ளன.

**இறைவன் பெயருடன் வள்ளல் பெயரும் இணைந்து மகுடம் அமைதல்**

திருவேங்கட சதகம், அண்ணாமலைச் சதகம் மற்றும் அறப்பளீசுர சதகம் போன்ற நூல்களில் அந்நூலாசிரியர் இறைவன் பெயரோடு தம்மை ஆதரித்த வள்ளல் பெயரையும் இணைத்துப் பாடியுள்ள திறத்தையும் மகுட அமைப்பில் காண முடிகின்றது.

அறப்பளீசுர சதகத்தில் அம்பலவாணக் கவிராயர் தம்மை ஆதரித்த வள்ளல் மதவேள் என்பவரைப் புகழ்ந்துப் பாடியுள்ளார்.

எமதருமை மதவேள்
அனுதினமும் மனதில் நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே!

இவ்வாறு ஒவ்வொரு பாடலிலும் வள்ளல் பெயர் நன்றியுடன் எடுத்துரைக்கப் பட்டுள்ளது.

திருவேங்கட சதகம்,

மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கை மணவாளனே
வரத வேங்கடராயனே

மணவாள நாராயணன் என்னும் வள்ளல் பெயரை இணைத்துப் பாடியுள்ளது. அதன் காரணம் கொண்டு இந்நூல் மணவாள நாராயண சதகம் எனவும் வழங்கப்படுகின்றது.

அண்ணாமலைச் சதகத்திலும் வள்ளல் பெயர் இணைந்த மகுட அமைப்புக் காணப்படுகின்றது.

அருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெய் உண்ணா முலைக்குரிய
அண்ணா மலைத் தேவனே

என்னும் மகுடம் இடம்பெற்றுள்ளது. மேலும் வடிவேல் சதகத்திலும் இவ்வமைப்பைக் காணமுடிகின்றது. இதனை,

செங்கோடன் மனதிலகலாத்

திருமருவு தெய்வானை வள்ளிமண வாளனே

செயமுருக வடிவேலனே!

*என்னும் பாடலடிகள் உணர்த்துகின்றன.*

**ஈற்றடி மாறி மகுடம் அமைதல்**

*பாடலின் இறுதி அடியில் மகுடம் அமைதல் என்பது சதக இலக்கியங்களின் பொதுப்பண்பாகும். ஆனால் பழமொழிச் சதகமான செயங்கொண்டார் சதகத்தில் மூன்றாமடியில் மகுடம் இடம்பெற்றுள்ளது. இதனை,*

அருமைசெறி பாண்டவர்கள் பங்காளி செய்கொடுமை
யாற்கா டாண்டு
முரிமையுடன் றருமர்செய்த நன்றியினாற் றிரும்பவும்வந்
துலகை யாண்டார்
பருவரைவில் லாவளைத்த **செயங்கொண்டார்** ரேயெவரும்
பண்பாய்ச் செய்த
தருமமே தலைகாக்கு மதர்மமழித் திடுமெனவுஞ்
சாற்று வாரே

*என்னும் பாடல்வழி அறிந்து கொள்ளமுடிகின்றது.*

**மகுடம் அமையாதிருத்தல்**

*பழமொழி விளக்கம் என்னும் தண்டலையார் சதகத்தில் பிற சதகங்களில் உள்ளது போன்ற மகுட அமைப்பு இடம்பெறவில்லை. அதற்கு மாறாக ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் ஒரு பழமொழி இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.*

*மாணிக்கவாசகரின் திருச்சதகம் மற்றும் சிவகுரு சதகம், மழலைச் சிங்கார சதகம் போன்றவற்றிலும் மகுட அமைப்பு இடம்பெறவில்லை.*

*வடமொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட பர்த்ருஹரியின் நீதிசதகம் மற்றும் வைராக்ய சதகம், சிருங்கார சதகம் ஆகியவற்றிலும் மகுடம் அமைக்கப்படவில்லை. மேலும் பக்தி சதகமாக விளங்கும் ஸ்ரீதயா சதகத்திலும் இவ்வமைப்புக் காணப்படவில்லை.*

### 2.3.3. யாப்பமைவு

*சதக இலக்கியங்களுக்கு இலக்கணம் கூறும் பாட்டியல் நூல்கள் உள்ளிட்ட பிற நூல்களில் சதக இலக்கியங்கள் என்ன பாவகையில் பாடப்பட வேண்டும் என்ற வரையறைக் குறிப்பிடப்படவில்லை.*

*பெரும்பான்மையான சதக இலக்கியங்கள் ஆசிரிய விருத்தம் மற்றும் கட்டளைக் கலித்துறை யாப்பில் பாடப்பட்டுள்ளன.*

**கட்டளைக் கலித்துறை**

*மண்டல சதகங்களான கார்மண்டல சதகம், தொண்டை மண்டல சதகம், கொங்கு மண்டல சதகம், பாண்டி மண்டல சதகம் போன்றவை கட்டளைக் கலித்துறை யாப்பில் பாடப்பட்டுள்ளன.*

நீடார் துளப மணநாறு
        கச்சியி ணீலமொன்றும்
கோடா விளக்கொடு சேர்நீல
        மொன்றும் குலவுபுக
ழேடார் சுனையின் மலர்நீல
        மொன்றுமற் றெப்பொழுதும்
வாடாமற் காட்டவும் வல்லதன்
        றோதொண்டை மண்டலமே[16]

*என்னும் தொண்டை மண்டல சதகப் பாடல் கட்டளைக் கலித்துறை பாவகைக்கு உதாரணமாகக் கொள்ளப் பெறுகின்றது. சோழ மண்டல சதகம் ஆசிரிய விருத்தத்தில் பாடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.*

**ஆசிரிய விருத்தம்**

*நீதி கூறும் சதகங்களான குமரேச சதகம், அறப்பளீசுர சதகம், கயிலாசநாதர் சதகம் போன்றவை ஆசிரிய விருத்தத்தில் அமைந்துள்ளன.*

தங்கம்ஆ னதுதழலில் நின்றுருகி மறுகினும்
        தன்ஒளி மழுங்கிடாது
சந்தனக் குறடுதான் மெலிந்துதேய்ந் தாலுமே
        தன்மணம் குன்றிடாது

பொங்கமிடு சங்குசெந் தழலில்வெந் தாலுமே
பொலிவெண்மை குறைவுறாது
போதவே காய்ந்துநன் பால்குறுகி னாலும்
பொருந்து சுவை போய்விடாது[17]

*என்னும் இப்பாடல் ஆசிரிய விருத்தத்திற்குச் சான்றாக அமைந்துள்ளது. அறுசீர், எண்சீர், பன்னிருசீர், பதினான்கு சீர் ஆசிரிய விருத்தத்திலும் சதக நூல்கள் பாடப்பட்டுள்ளன.*

**கலிவிருத்தம்**

வில்லார்மலர்க் கணையேவிய
வேளைப்பொடி யாச்செய்தனை
கல்லால்எறிந் தவன் முத்தியே
காணாப்பரிந் தனையாதலாற்
பொல்லாமனத் தவன்என் றனைப்
புறமேவிடுத் திடல் ஐயனே
அல்லார்களத்து எம் அண்ணலே
அருணாசலா! அருணாசலா![18]

*என்னும் அருணாசல சதகப் பாடல் கலிவிருத்தத்தில் அமைந்துள்ளது. பக்தி சதகங்கள் கலிவிருத்தத்தில் பாடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.*

*சதக இலக்கியங்களில் பாடப்படும் பொருண்மை அடிப்படையில் யாப்பு கையாளப்பட்டுள்ளது. மண்டல சதகங்கள் கட்டளைக் கலித்துறையிலும் நீதி சதகங்கள் ஆசிரிய விருத்தத்திலும், துதி சதகங்கள் கலிவிருத்தத்திலும் பெரும்பான்மையான சதகங்கள் அமைந்துள்ளன. நூல் முழுவதும் ஒரே வகை யாப்பில் பாடப்பட்டுள்ளமை சிறப்புடையதாகும்.*

### 2.3.4. மொழிநடை

*சதக இலக்கியங்கள் பிற்காலத்தில் எழுந்தவை. இவ்விலக்கியங்கள் தோன்றிய காலத்தில் வடமொழிச் செல்வாக்கு மிகுதியாக இருந்தமையால் வடசொற்கள் பெருமளவில் கலந்துள்ளன.*

*பொதுமக்களுக்காக இயற்றப்பட்டவை ஆதலால் எளிமையான மொழிநடை கையாளப்பட்டுள்ளது. படிப்பவர்க்கு எளிதில் புரியும் வண்ணம் சதக இலக்கியங்கள் எளிமையான பாடல்களைக் கொண்டுள்ளன. இவை செல்வாக்குப் பெற்றிருந்த கி.பி.17, 18, 19 ஆம் நூற்றாண்டுகளில் திண்ணைப் பள்ளிக்கூடங்களில் மாணாக்கர்களுக்கு கற்பிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.*

*நீதிகள் எளிய மொழிநடையில் இருந்தால் மட்டுமே மக்களைச் சென்றடையும். அதன் காரணம் கொண்டே சதக இலக்கியங்களும் எளிய மொழிநடையில் அமைந்துள்ளன.*

## 2.4. சதக இலக்கியங்களின் வரலாறு

*கி.பி. 17, 18, 19 ஆகிய மூன்று நூற்றாண்டு காலத்தையும் 'சதக இலக்கியத்தின் பொற்காலம்' என்று ந.வீ.செயராமன் 'சதக இலக்கியம்' நூலில் குறிப்பிடுகின்றார். மேலும், இக்காலக்கட்டத்தில் தோன்றிய சதக இலக்கியங்களை,*

1. *வரலாற்று நூல்கள் (சதகங்கள்)*
2. *துதி நூல்கள்*
3. *நீதி நூல்கள்*

*என்னும் மூவகைப் பெரும் பிரிவுகளாக பிரிக்கலாம் என்று ந.வீ.செயராமன் குறிப்பிடுகின்றார். ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள இருபத்தியொரு சதக நூல்களைப் பற்றிய விளக்கங்கள் இங்குக் குறிப்பிடப்படுகின்றன.*

### வரலாற்றுச் சதகங்கள்

*நால்வகை வருணத்தார்களில் வேளாளர்களைச் சிறப்பித்துப் பாடும் நோக்கில் மண்டல சதகங்கள் தோற்றம் பெற்றன.*

> இவ்வாறு ஒரு குறிப்பிட்ட இனத்தாரைப் புகழ்ந்து பாடும் வகையில் இலக்கிய வகை தோன்றியது இக்காலத்தில் சாதிப் பாகுபாடு பெற்றிருந்த செல்வாக்கை விளக்கும்[19]

*என்று ப.பழனியம்மாள் 'தமிழில் சதக இலக்கியங்கள்' நூலில் குறிப்பிடுகின்றார்.*

வரலாற்றுச் சதகங்களை மண்டல வரலாறு கூறுவன, தொண்டர் வரலாறு கூறுவன என்ற அடிப்படையில் ஆராயலாம். மண்டல வரலாறு கூறும் சதகங்கள் வேளாளர் சிறப்பு மட்டுமின்றி அம்மண்டலத்தில் வாழ்ந்த புலவர்கள், வள்ளல்கள், அரசர்கள், நூல்கள் மற்றும் ஆலயங்கள் போன்ற அவ்வம்மண்டலத்தோடு தொடர்புடைய பல்வேறு செய்திகளை விளக்கி நிற்கின்றது.

தொண்டர் வரலாறு பகுதிகளில் பெரிய புராணம் குறிப்பிடும் அடியார்களின் வரலாறு விளக்கப்பட்டுள்ளது. வரலாற்றுச் சதகங்களை விளக்குவதன் முன்னர் சதகம் என்ற பெயரில் தமிழுக்கு முதன் முதல் அறிமுகமான திருவாசகத்தின் 'திருச்சதகம்' பற்றிய செய்திகளை முதலில் குறிப்பிடுவது பொருத்தமுடையதாகும்.

### 2.4.1. திருச்சதகம்

தமிழ்மொழியில் 'சதகம்' என்ற பெயரில் தோன்றிய முதல் நூல் திருச்சதகம் ஆகும். திருவாசகத்தின் ஒரு பகுதியான 'சதகம்' என்பது நூறு செய்யுட்களால் பாடப்பட்டது. இதன் தெய்வத்தன்மை குறித்து "திரு" என்னும் அடைமொழி பெற்று "திருச்சதகம்" என்றாயிற்று.

சதக இலக்கண வரையறை பின்பற்றப்படாமல் வடமொழி மரபின்படி நூறு பாடல்களில் பாடப்படக்கூடிய இலக்கிய வகையாக இந்நூல் அமைந்துள்ளது.

மாணிக்கவாசகர் இயற்றிய இச்சதகம் பத்துப் பகுதிகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பத்தும் ஒவ்வொரு தலைப்பும் வெவ்வேறு வகையான பாவகைகளில் பத்துப்பத்துப் பாடல்களை உடையது.

#### ஆசிரியர்

எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த மாணிக்கவாசகர் சிவபெருமானைப் போற்றிப் பாடிய பாடல்கள் திருவாசகமும் திருக்கோவையாரும் ஆகும். இவை எட்டாம் திருமுறையாக விளங்குகின்றன.

திருக்கயிலைத் திருநந்தி தேவர்சிவ னருளாற்
றிருவாத வூராதி சைவகுலந் திகழத்

தெருட்கனியுஞ் சம்புபா தாசிரய ரன்பார்
சிவஞான வதியம்மை செய்தவச்சே யாகி
அருட்குலவு திருவாத வூரரெனும் பேர்பூண்
டடல்வழுதி யமைச்சராய்ப் பரிகொளுமாறளித்த
பொருட்குரியன் சுந்தரே சுரனெனத் தேர்ந் தவன்முன்
போற்றியது மதிபெற்றுப் பெருந்துறையுற் புகுந்தே[20]

*என்னும் பாடல் மாணிக்கவாசகர் வரலாற்றை சுருக்கமாக எடுத்துரைக்கிறது.*

*திருக்கயிலாயத்தில் சிவபெருமானை தரிசிக்க வந்த தேவர்களை உள்ளே அனுமதிக்காத காரணத்தால் நந்திதேவர் பூமியிற் பிறக்க இறைவன் ஆணையிட்டபடி, பாண்டி நாட்டுத் திருவாதவூரில் சம்புபாதசிரயர், சிவஞானவதி அம்மையாருக்கு மகவாய் திருவாதவூரார் என்னும் பெயருடன் பிறந்தார்.*

*அரிமர்த்தன பாண்டியனின் அமைச்சராய் விளங்கி, தென்னவன் பிரம்மராயன் என்னும் பட்டமும் பெற்று, குதிரைகள் வாங்க பெருஞ்செல்வத்துடன் திருப்பெருந்துறை வந்தடைந்தார். அங்கு இறைவன் குருந்த மூலகுருநாதராக எழுந்தருளி அருள்பாலிக்க, அங்கு திருவாசகம் பாடியருளினார்.*

*அப்பாடல்களின் உள்ளம் தோய்ந்த இறைவன் 'மாணிக்கவாசக' என்னும் நாமம் சூட்டி மகிழ்ந்தான். திருப்பெருந்துறையில் தங்கியிருந்த காலத்தில் குதிரை வாங்க கொண்டு வந்த பெருஞ்செல்வத்தைச் சிவாலயத் திருப்பணிக்குப் பயன்படுத்தினார். குதிரைகள் வராத காரணத்தால் விவரம் அறிந்து வர மன்னன் ஆட்களை அனுப்பினான்.*

*இறைவன் ஆத்மநாதர் அருளால் நரிகள் பரிகளானதும், பிறகு மீண்டும் நரிகள் ஆனதும், பாண்டியன் மாணிக்கவாசகரைத் தண்டிக்க, இறைவன் வைகையில் வெள்ளம் பெருக்கெடுக்கச் செய்தான். மாணிக்கவாசகர் பொருட்டு பிரம்படிபட்டு அவர் பெருமையை உலகறியச் செய்தான்.*

*இறுதியில் மாணிக்கவாசகர் சிதம்பரம் அடைந்து சிற்சபாநாதரை வணங்கி 'திருக்கோவையார்' பாடி இறைவனுடன் ஒன்று கலந்தார் என்பதாக மாணிக்கவாசகர் வரலாறு விளங்குகின்றது.*

**நூல்**

*திருவாசகத்தின் ஐந்தாவது பகுதியில் திருச்சதகம் இடம்பெற்றுள்ளது. இந்நூல் பக்தி வைராக்கிய விசித்திரம் என்றும் அழைக்கப்படுகிறது.*

> இறைவனிடம் பற்றும் உலகத்தினிடத்துப் பற்றின்மையும் ஏற்படுங்கால் தோன்றும் அழகு என்பது பக்தி வைராக்கியம் என்பதன் பொருள் ஆகும்.[21]

*மெய்யுணர்தல், அறிவுறுத்தல், சுட்டறுத்தல், ஆன்மசத்தி, கைம்மாறு கொடுத்தல், அநுபோக சுத்தி, காருணியத் திரங்கல், ஆனந்தத்து அழுந்தல், ஆனந்த பரவசம், ஆனந்தாதீதம் என்னும் பத்துத் தலைப்புகளில் உலகப் பற்றை விடுத்து இறைவன் திருவடி அடைவதற்கான வழிமுறைகள் விளக்கப்பட்டுள்ளன.*

### 2.4.2. கார்மண்டல சதகம்

*கி.பி. 6 ஆம் நூற்றாண்டில் மாணிக்கவாசகர் இயற்றிய 'திருச்சதகம்' என்னும் நூலிற்கு பிறகு தமிழ்மொழியில் சதகம் என்ற பெயரிலோ, அமைப்பிலோ சதக இலக்கியங்களை காணமுடியவில்லை. சதக அமைப்பின்படி இயற்றப்பட்ட மிகப் பழமையான நூலாகவும், சதக இலக்கியங்களின் முன்னோடி நூலாகவும் கார்மண்டல சதகம் விளங்குகிறது.*

**ஆசிரியர்**

*இந்நூலாசிரியர் அவிநாசி ஆறைகிழார்.*

> இவர் ஊர், அவிநாசியைச் சூழ்ந்திருந்த ஆறை என்னும் பகுதியிலுள்ள ஆறை நாடெனும் ஊராகும். இவருடைய ஆசிரியர் மேல்கோட்டை நாராயணபுரத்தைச் சார்ந்த மாதவயோகி என்பவராவார்.[22]

*இவர் திருநாராயணபுரம் கார்காத்த வேளாளர் குலத்தில் பிறந்தவர் என்பதும், வைணவ சமயத்தார் என்பதும் அறியப்படுகின்றது. ஆயினும் இந்நூலாசிரியர் கொங்கு நாட்டு வேளாளராய் இருந்து கார்மண்டல சதகம் இயற்றியமையை எண்ணுமிடத்து அவர்தம் குரு பக்தியும் சமயப்பற்றும் புலனாகின்றது.*

*இவரது காலம் கி.பி.1025 முதல் 1070 வரையிலான காலகட்டம் என்று கார்மண்டல சதக நூலின் உரைப்பாயிரம் குறிப்பிடுகின்றது.*

தொல்காப்பியம் குறிப்பிடும் 'நாற்பெயரெல்லையகம்' என்பதற்கு மலைமண்டலம், சோழ மண்டலம், பாண்டி மண்டலம், தொண்டை மண்டலம் என்னும் நான்கை குறிப்பிடுகின்றார் நச்சினார்க்கினியர். இவற்றுள் மலைமண்டலம் என்பதில் கார்மண்டலம் அடங்கும் என்பது பெறப்படுகின்றது.

> இது காவிரி நதியின் உற்பத்தி ஸ்தான முதல் சோழநாட்டின் உய்யக்கொண்டான் வளநாடு வரை அந்நதி யிருபக்கமும் முப்பத்தாறாயிரம் சதுரமைல் விரவிய பரப்பினையுடையது.[23]

இந்நாடே கருநாடு, கருநாடகம் எனவும் பிற்காலத்தே வழங்கப் பெற்றது என்பதை கார்மண்டல சதக உரைப்பாயிரத்தின் வழி அறியமுடிகின்றது.

**பாடுபொருள்**

இந்நூலுள் கார்மண்டலத்தின் சிறப்பும், அம்மண்டலத்திற்குரிய தசாங்கங்களாக மலை, நாடு, ஆறு, நாடு, நகர், மாலை, பரி, கரி, முரசு, கொடி, கோல், ஊர் போன்றவை விளக்கப்படுகின்றது. வேளாளர், அவர்தம் பூர்வசரிதை, சமயநெறி மற்றும் அம்மண்டலத்தில் வாழ்ந்து வந்த வள்ளல்கள், புலவர்கள் மற்றும் பெண்களின் சிறப்புகள் ஆகியவைப் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன. கார்காத்த வேளாளரின் சாமானிய தருமம், அவர்களின் விசேஷலக்ஷ்ணம் மற்றும் கலை, வித்தை, அரசு பற்றிய செய்திகளும் குறிப்பிடப்பட்டுள்ளன.

### 2.4.3. தொண்டை மண்டல சதகம்

தொண்டை மண்டலத்தைச் சிறப்பிக்கும் முகமாகப் பாடப்பட்ட நூல். இந்நூலை இயற்றியவர் படிக்காசுப் புலவர். இந்நூல் தொண்டை மண்டலத்தில் வாழ்ந்த புலவர்கள், வள்ளல்கள், மன்னர்கள் ஆகியோரின் வரலாறுகளை எடுத்துரைக்கின்றது.

தமிழ்நாட்டின் வடபகுதியில் உள்ளதாகிய தொண்டை நாடு, மேற்கில் சவ்வாது மலையும் (பவளமலை), கிழக்கில் வங்கக் கடலும், வடக்கில் வேங்கடமலையும், தெற்கில் தென்பெண்ணை (பினாகினி) ஆறும் எல்லைகளாக அமைந்துள்ளன.

இப்பகுதியானது இன்றைய ஆந்திர மாநிலத்தின் சித்தூர் மாவட்டம், தமிழ்நாட்டின் காஞ்சிபுரம், சென்னை ஆகிய மாவட்டங்கள், வேலூர் மாவட்டத்தின் கிழக்குப் பகுதி, திருவண்ணாமலை மாவட்டத்தின் வடக்கு, வடகிழக்குப் பகுதி, விழுப்புரம் மாவட்டத்தின் வடக்குப் பகுதியை உள்ளடக்கியதாக தொண்டை மண்டலம் விளங்குகிறது.

இந்நூல் இயற்றப்பட்ட காலம் "கி.பி.17-18 ஆம் நூற்றாண்டிற்கு இடைப்பட்டது"[24] என்று சிற்றிலக்கிய அகராதி என்ற நூலில் ந.வீ.செயராமன் குறிப்பிடுகின்றார்.

## ஆசிரியர்

இந்நூலாசிரியர் படிக்காசுப் புலவர். இவர் தொண்டை மண்டலத்து பொன் விளைந்த களத்தூரில் செங்குந்தர் மரபில் அவதரித்தவர். இவரது இயற்பெயர் யாதென அறிய முடியவில்லை. களந்தையான் என்னும் காரணப்பெயரும் வழங்குகிறது.

சிதம்பரத்தில் தங்கி நடராசப் பெருமானைத் துதிக்கும் காலத்தில் இறைவன் அருளால் பஞ்சாட்சரப்படியில் பொற்காசு கிடைக்கப் பெற்றார். அதன் காரணம் கொண்டு படிக்காசுப் புலவர் என்னும் பெயர் வழங்கலாயிற்று.

> திருவாரூர் வைத்தியநாத தேசிகரிடம் இவர் மாணவராக அமர்ந்து கற்றுத் தேர்ந்தவர். வல்லம் மாநகரில் வாழ்ந்த காளத்தி பூபதி என்னும் கொடை வள்ளலைப் புகழ்ந்து பாடி தம் வறுமையைப் போக்கிக் கொண்டார் என்பர்.[25]

இவர்தம் வாழ்நாளின் பிற்பகுதியில் இல்லறம் துறந்து துறவறத்தை மேற்கொண்டார் என்றும், தருமபுரம் ஆதினம் ஆறாவது குருமகா சந்நிதானம், திருநாவுக்கரசு தேசிகர் இடத்தில் ஞானோபதேசம் பெற்றார்.

மாவண்டூரில் பிரபுவாயிருந்த கஸ்தூரி முதலியார் குமாரர் கறுப்ப முதலியார் என்னும் வேளாளர் வேண்டுகோளின்படி தொண்டை மண்டல சதகம் பாடினார். இந்நூல் தவிர தண்டலையார் சதகம் மற்றும் புள்ளிருக்கு வேளூர்க் கலம்பகம் ஆகிய இரு நூல்களும் படிக்காசுப் புலவரால் இயற்றப்பட்டுள்ளன.

மட்டாரும் தென்களந்தைப் படிக்காசன் உரைத்ததமிழ்
வரைந்த ஏட்டைப்
பட்டாலே சூழ்ந்தாலும் மூவுலகும் பரிமளிக்கும்
பரிந்தவ் வேட்டைத்
தொட்டாலே கைம்மணக்கும் சொன்னாலும் வாய்மணக்கும்
துய்ய சேற்றில்
நட்டாலும் தமிழ்ப் பயிராய் விளைந்திடுமே பாட்டினது
நளினந் தானே![26]

*என்று பலபட்டடைச் சொக்கநாதப் புலவர், படிக்காசுப் புலவரின் தமிழ்ப் புலமையை வியந்து போற்றுகிறார்.*

**பாடுபொருள்**

*"தொண்டை நன்னாடு சான்றோர் உடைத்து" என்பது ஔவையின் வாக்கு. சான்றோர் உடைத்து என்னும் தொடருக்கு ஏற்புடைத்தாய் தொண்டை நாட்டைச் சேர்ந்த சான்றோர்கள், புலவர்கள், வள்ளல்கள் முதலானோர் தொடர்பான பாடல்களை மிகுதியாகக் காணமுடிகின்றது.*

*திருவள்ளுவர், கச்சியப்ப சிவாசாரியார், கம்பர், பரிமேலழகர், ஒட்டக்கூத்தர், இராமாநுசர், சேக்கிழார், இரட்டையர், அருணகிரிநாதர், பவணந்தி, சுப்பைய தீட்சிதர் முதலிய புலவர்கள் மற்றும் அதியமான், கருப்பன், சடையப்பன், மார்க்கண்டன், பல பிரபுக்கள் பல அரசர்கள் பற்றிய செய்திகளைக் குறிப்பிடுகின்றது.*

*மேலும் தொண்டை நாட்டில் வாழ்ந்த வேளாளர்களின் சிறப்பும் அவர்தம் கொடை உள்ளமும் விவரித்துப் பேசப்படுகின்றது.*

தொண்டை மண்டலம் பழங்காலத்தில் சோழநாட்டின் ஒரு பகுதியாக இருந்தது என்றும் சோழன் ஒருவன் நாகலோகம் சென்று நாகக் கன்னியை மணந்தான். அவர்களுக்கு பிறக்கும் குழந்தைக்கு தன் நாட்டில் பாதி தருவதாக வாக்களித்தபடி, பிறந்த குழந்தையை தொண்டைக் கொடி சுற்றி கடலில் விட நாகப்பட்டினத்தில் கரை ஒதுங்கிய அக்குழந்தையை சோழன் எடுத்து வளர்த்து தொண்டைமான் என்னும் பெயர் சூட்டி நாட்டில் ஒரு

பகுதியை வழங்கியதாகவும் கூறப்படுகிறது. அவன் பெயராலேயே இது தொண்டை மண்டலம் என வழங்குவதாயிற்று[27]

என்று ந.வீ.செயராமன் குறிப்பிடுகின்றார்.

### 2.4.4. சோழமண்டல சதகம்

சோழ நாட்டின் பல்வேறு பெருமைகளைச் சிறப்பித்துப் பாடும் நூல் சோழ மண்டல சதகம் ஆகும். இந்நூல் வேளூர் ஆத்மநாத தேசிகர் என்பவரால் இயற்றப்பட்டது. சோழ மண்டலத்தின் கலைக்களஞ்சியமாக விளங்கும் இந்நூலில் நூற்றைந்து பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

செல்லும் குணபால் திரைவேலை
தென்பால் செழித்த வெள்ளாறு
வெல்லும் கோட்டைக் கரைவிளங்கும்
மேல்பால் வடபால் வெள்ளாறே
எல்லை ஒருநான் கினும்காதம்
இருபா னான்கும் இடம்பெரிதாம்
மல்லல் வாழ்வு தழைத்தோங்கும்
வளம்சேர் சோழ மண்டலமே[28]

என்னும் சோழமண்டல சதகப் பாடல் அதன் எல்லையைக் குறிப்பிடுகின்றது. கிழக்கே கடலும், தெற்கே வெள்ளாறும் மேற்கே கோட்டைக்கரையும், வடக்கே வடவெள்ளாறும் சோழ மண்டலத்தின் எல்லைகளாக விளங்குகின்றன.

### ஆசிரியர்

ஆத்மநாத தேசிகர் திருத்துறைப்பூண்டிக்கு வடக்குத் திசையில் உள்ள வேளூரில் பிறந்தவர். வேளூர் ஆத்மநாத தேசிகர் என்றும் அழைக்கப்பட்டார். இவர் சைவ ஆசாரியார் குலத்தைச் சேர்ந்தவர் என்றும் “காளையார் (நந்திகேசுவர) கோத்திரத்தில் பிறந்தவர்”[29] என்பதும் அறியப்படுகின்றது.

சித்தாமூரில் சோழியர் மரபைச் சேர்ந்த நள்ளாறு வைத்தியலிங்கம் என்பவருடைய மகனும் வள்ளலுமாகிய அருணாசல வேள் என்பவர் இவரை ஆதரித்து வந்தார். அவரின் வேண்டுகோளின்படியே சோழமண்டல சதகம் பாடினார். இவரது காலம் கி.பி.1650 முதல் 1728 வரை உள்ள காலப்பகுதி ஆகும்.

> சோழமண்டல சதகம் என்னும் இந்நூல், பாடப்பெற்றோர் வரலாறு முதலிய குறிப்புகளுடன் கி.பி. 1916 ஆம் ஆண்டில் இலக்கண விளக்கப் பரம்பரை திருவாரூர்ச் சோமசுந்தர தேசிகரால் பதிப்பிக்கப்பெற்றது[30]

*என்று வாழ்வியற் களஞ்சியம் குறிப்பிடுகின்றது. இந்நூல் சித்தாமூர் பொன்வைத்தநாத சுவாமி திருச்சன்னதியில் அரங்கேற்றம் செய்யப்பெற்றது.*

**பாடுபொருள்**

*சோழநாட்டு உழுகுடிகளான சோழிய வேளாளரைப் புகழ்ந்து பாடப்பட்டுள்ளது. இந்நூலுள் சிதம்பரம், திருவாரூர், திருவரங்கம் முதலிய திருப்பதிகளின் சிறப்பும், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், திருநீலநக்கர், மானக்கஞ்சாறர் முதலிய சிவனடியார்களின் பெருமையும், திருவாரூர் ஞானப்பிரகாசர், சீர்காழி கண்ணுடைய வள்ளலார், திருவாவடுதுறை அம்பலவாண தேசிகர், சடையப்ப வள்ளல், சேந்தனார், ஔவையார், ஆனைப்பாக்கமுடையான், திருக்கண்ணபுரம் முனையதரையன் முதலிய பல்துறைச் சார்ந்த சான்றோர்களின் பெருமைகள் கூறப்பட்டுள்ளன.*

### 2.4.5. கொங்கு மண்டல சதகம்

*பழங்காலம் முதல் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்ததாகக் கருதப்படும் கொங்குநாடு பற்றி மூன்று சதகங்கள் இயற்றப்பட்டுள்ளன. இம்மூன்று நூல்களும் கொங்கு நாட்டின் சிறப்புகளை முழுமையாக எடுத்துரைக்கின்றன. கொங்கு மண்டல சதகம் இயற்றியவர்கள் கார்மேகக் கவிஞர், வாலசுந்தரக் கவிராயர், கம்பநாத சுவாமிகள் ஆகிய மூவரும் ஆவர். கம்பநாதர் இயற்றிய சதகத்தில் 32 பாடல்களே கிடைத்துள்ளன. இவை கி.பி. 17 ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்டவை ஆகும். கார்மேகக் கவிஞர் இயற்றிய கொங்கு மண்டல சதகம் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.*

> மதிற்கரை கீட்டிசை தெற்குப் பழநி மதிகுடக்குக்
> கதித்துள வெள்ளி மலைபெரும் பாலை கவின்வடக்கு
> விதித்துள நான்கெல்லை சூழ வளமுற்று மேவிவிண் ணோர்
> மதித்திட வாழ்வு தழைத்திடு நீற்கொங்கு மண்டலமே[31]

*என்னும் கொங்கு மண்டல சதகப் பாடல், கிழக்கில் மதிற் (கோட்டை) கரையும், தெற்கில் பழநியும் மேற்கில் வெள்ளியங்கிரியும் வடக்கில் பெரும்பாலையும்*

*எல்லைகளாக விளங்குவதைக் குறிப்பிடுகின்றது. மேலும் இம்மண்டலம் 24 நாடுகளாகவும் 6 இணை நாடுகளாகவும் பகுக்கப்பட்டுள்ளது.*

**ஆசிரியர்**

*கொங்குநாட்டு விசயமங்கலம் என்னும் ஊரில் பிறந்த கார்மேகக் கவிஞருக்கு பெற்றோர் இட்ட பெயர் சினேந்திரன் என்பதாகும். இவர் இளம்வயதிலேயே கார்மேகம் போல் கவிபொழியும் ஆற்றல் பெற்றமையால் கார்மேகக் கவிஞர் என அழைக்கப் பெற்றார்.*

> இந்நூலாசிரியர் சமண மதத்தைச் சார்ந்தவர். பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர் என்று கருதப்படுகின்றார். நூலாசிரியர் சமணராயினும் நாட்டு வரலாற்றோடு இயைபுடைய பல்வேறு சமய அறிஞர்களையும் பாராட்டியுள்ளமை இவர்தம் சமயப்பொறையைக் குறிக்கும் சான்றாகும்.[32]

*தாம் பிறந்த மண்டலத்தின் பெருமையை உலகறியச் செய்யும் எண்ணம் உடையவராய் விளங்கிய கார்மேகக் கவிஞர் கொங்குமண்டல சதகம் பாடினார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.*

*கொங்குநாடு சிறப்புற்றால் நாட்டின் எல்லா பகுதியும் சிறப்புறும் என்பதை ‘கொங்குமலியின் எங்கும் மலியும்’ என்னும் பழந்தொடர் எடுத்துக்காட்டுகிறது. உலகில் முதன் முதலில் நெல், கரும்புப் பயிர்களை உற்பத்திச் செய்து அறிமுகப்படுத்தியது கொங்கு மாநிலமே என்பது அறியப்படுகின்றது. இந்தியாவில் குறிப்பாகத் தமிழகத்தின் பழமையான பண்பாடு மற்றும் நாகரிகத்தின் கருவூலமாகக் கொங்கு மண்டலம் விளங்குகிறது.*

**பாடுபொருள்**

*கொங்கு மண்டல சதகம் கொங்கு நாட்டின் நிலப்பரப்பு, அதன் உட்பிரிவுகள், ஊர்ப் பெயர்கள், திருத்தலங்கள், சமயங்கள், சமயச் சான்றோர்கள், முடியுடை வேந்தர்கள், குறுநில மன்னர்கள், அவர்தம் கொடைச்சிறப்பு, வீரம் பற்றிய செய்திகளை எடுத்துரைக்கின்றது.*

*மேலும் புலவர்கள், சித்தர்கள், மருத்துவக் குறிப்புகள், வள்ளல்கள், வேளாளர்கள், மக்களின் நீதி, வீரம், கொடை, கல்வி, புலவர்களை ஆதரித்த*

*பான்மை, அடக்கமுடைமை, நன்றி மறவாமை, கல்வி, நட்பு போன்ற பல கருத்துக்களை இந்நூலில் காணமுடிகின்றது.*

> காளிங்கராயன் வானியாற்றினை கட்டினான். கொங்கு பிராட்டியம்மையார் ராமானுசர்க்கு இடம் தந்து வழிபட்டார். ஆட்கொண்டான் என்பான் வில்லிப்புத்தூராரைக் கொண்டு பாரதம் பாடுவித்தான். இன்னோரன்ன சிறப்பு வாய்ந்த வரலாறுகளையும் கொங்கின்கண் நிகழ்ந்த பல உண்மை நிகழ்ச்சிகளையும் தெளிவாக விளக்குகின்றது[33]

*என்று கொங்கு மண்டலத்தின் சிறப்பினை வாழ்வியற் களஞ்சியம் குறிப்பிடுகின்றது.*

### 2.4.6. பாண்டி மண்டல சதகம்

*பாண்டி மண்டல சதகம் ஐயம்பெருமாள் என்பவரால் இயற்றப்பட்டது. இந்நூல் பாண்டிய நாட்டில் வாழ்ந்த வேளாளர் பெருமையை எடுத்துரைக்கின்றது.*

#### ஆசிரியர்

*இந்நூலாசிரியர் மதுரையைச் சேர்ந்தவர். இவரது தந்தை வீரபத்திரபூபதி ஆவார். இவரது காலம் கி.பி. 20 ஆம் நூற்றாண்டு.*

> இவர் தொண்டை மண்டலத்தைச் சார்ந்த தென்காரைக் காட்டில் தோன்றி தென்பாண்டி நாட்டு மதுரையம்பதியில் வாழ்ந்த வேளாளர் எனத் தெரிகின்றார்[34]

*என்பதை பாண்டி மண்டல சதக நூலின் பதிப்புரையிலிருந்து அறியமுடிகின்றது.*

#### பாடுபொருள்

*பாண்டிய மண்டலத்தோடு தொடர்புடைய மன்னர்கள், அறிஞர்கள், ஞானிகள், அருளாளர்கள், வள்ளல்கள் ஆகியோரின் சிறப்புகள் அமைய இந்நூல் பாடப்பட்டுள்ளது.*

*இந்நூலுள் வேளாளர்கள் பூர்வீகம் பற்றியும், இவர்கள் கங்காகோத்திரத்தார் என்பதும், பாண்டிய மன்னர்களுக்கு முடிசூட்டும் உரிமை உடையவர்கள் என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் பாண்டி மண்டலத்தில் வாழ்ந்த புலவர்கள், நூல்கள், அரசர்கள், வள்ளல்களின் கொடைத்திறன், பாண்டிய*

*நாட்டுத் திருத்தலங்கள், நாயன்மார்கள், மதுரையின் சிறப்புகள் மற்றும் இறைவன் நிகழ்த்திய திருவிளையாடல்கள் பற்றியும் இந்நூலுள் கூறப்பட்டுள்ளன.*

*மண்டலங்களின் வரலாற்றினை எடுத்துரைத்த வரலாற்றுச் சதகங்கள் வரிசையில் தொண்டர் வரலாறு கூறும் திருத்தொண்டர் சதகமும் இடம்பெறுகின்றது.*

### 2.4.7. திருத்தொண்டர் சதகம்

*இச்சதகம் காஞ்சிபுரத்தில் வாழ்ந்த கச்சி மயேசுர திலகராகிய திருப்பாண்டியக் கொடுமுடி மலைக்கொழுந்து நாவலரால் இயற்றப்பட்டது. அறுபத்து மூன்று அடியார்களின் வரலாற்றினை எடுத்துக்கூறும் நூலாகையால் வரலாற்றுச் சதகங்கள் வரிசையில் வைத்து எண்ணத்தக்கது.*

**ஆசிரியர்**

*இந்நூலாசிரியர் சைவ சமய நூல்களைக் கற்றுத் துறை போகிய புலமையாளர் என்பதற்கு 'நாவலர்' என்ற அவருடைய பெயரே சான்றாகும். இவரைப் பற்றித் திருநெல்வேலியிலிருந்த வித்வான் அழகிய சொக்கநாதப் பிள்ளை இயற்றியுள்ள சிறப்புப் பாயிரப் பாடல்கள் வாயிலாக அறிந்து கொள்ளலாம்.*

. . . . . . . . . . வெழிற் கச்சி
மலைக்கொழுந்து நாவலன்பா மாலைதொடுத் தணிந்தனனால்
சாத்திடுமம் மாலிகைப் பேர் திருத்தொண்டர் சதகம.:.
தேத்திடுநல் லடியரகத் திருளகற்றி யெப்பற்று
நீத்திடுமெஞ் ஞானநல்கி நிமலனடி நிழலிருத்திக்
காத்திடுநிச் சயமதனைக் கரதல ஆமலகமென[35]

*என்னும் பாடல்வழி இந்நூற் சிறப்பை அறியலாம்.*

**பாடுபொருள்**

கயிலை வாசனே! இராசலிங்கேசனே!
சிவதை நகர்மாணிக்க மலை நாதனே!

என்னும் மகுடத் தொடரில் மாணிக்கமலைப் பற்றிக் குறிப்பிடப்படுவதால், இந்நூல் ‘திருமாணிக்க மாமலை திருத்தொண்டர் சதகம்’ என்று பெயர் பெற்றுள்ளது. இந்நூல் பெரிய புராணக் காப்பியத்தை அடியொற்றி இயற்றப்பட்டதால் காப்பியச் சதகமாகவும் கொள்ளப்பெறுகின்றது.

அறுபத்து மூன்று நாயன்மார்களின் வரலாற்றைக் கூறுகின்றது. இந்நூலுள் நாயன்மார்களின் தொகையும், திருமரபும் கூறப்பட்டுள்ளது. நாயன்மார்கள் வீடுபேறு அடைந்த வரலாறு, அவர்களுக்குரிய குருபூசை விபரங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. சேக்கிழார் பெரியபுராணத்தில் கூறியுள்ளவற்றின் சுருக்கமாக இந்நூலைக் கொள்ளலாம்.

**நீதி சதகங்கள்**

மக்களை நன்னெறிப்படுத்தும் நோக்கில் பாடப்பட்ட சதகங்களை நீதி சதகங்கள் எனலாம். இறைவனை முன்னிலைப்படுத்தி உலகியல் நீதிகளைக் கூறுவன, பழமொழி வாயிலாக நீதி கூறுவன, பழமொழியுடன் உதாரணக் கதைகள் இணைத்து நீதி உரைப்பன என்ற நிலையில் நீதி சதகங்கள் காணப்படுகின்றன.

### 2.4.8. குமரேச சதகம்

குமரேச சதகம் முருகன் மீது பாடப்பட்ட நூல். இது சோழ வளநாட்டில் புதுக்கோட்டையை அடுத்துள்ள திருப்புல்வயலில் எழுந்தருளியுள்ள குமரக்கடவுளைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு இயற்றப்பட்டது. இத்தல முருகனை அருணகிரிநாதர் பல இடங்களில் பாடியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

**ஆசிரியர்**

இந்நூலாசிரியர் குருபாததாசன் என்பவர் ஆவார். இவரது இயற்பெயர் முத்துமீனாட்சிக் கவிராயர். இவர் வேளாளர் குலத்தைச் சார்ந்தவர் என்றும் கூறப்படுகின்றது. சிவ வழிபாட்டில் நம்பிக்கையும் முருகனிடத்துப் பேரன்பும் கொண்ட சிறந்த சிவபக்தராக விளங்கியமையை குமரேச சதகப் பாடல்கள்

உணர்த்துகின்றன. இதன் மூலம் இவர் சைவ சமயத்தைச் சார்ந்தவர் என்பது புலனாகின்றது.

வாடாமல் இவையெலாம் சிவன்செயல்கள் அல்லது
மனச்செயலி னாலும் வருமோ[36]

என்னும் பாடலடிகள் இதற்குச் சான்றாக அமைகின்றன.

குருபாததாசன் புறநானூறு, திருக்குறள், நாலடியார் போன்ற பழம்பெரும் நூல்களைக் கற்றுத் தேர்ந்த புலமையாளர் என்பதும் அறியப்படுகின்றது. இவரது காலம் கி.பி.18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி ஆகும்.

**பாடுபொருள்**

உழவுத் தொழில் புரியும் வேளாளர்களை சிறப்பிக்கும் நோக்கில் ஆலயங்களில் வழிபாடுகள் நடைபெறுவதற்கும், மாதம் மும்மாரி மழை பொழிவதற்கும், தவம் செய்தல் மற்றும் வேதம் ஓதுதல் உள்ளிட்ட அனைத்து தொழில்களும் சிறப்புற நடைபெறுவதற்கும் வேளாளர்களின் உழவுத் தொழிலே காரணம் என்பது வலியுறுத்தப்படுகின்றது.

அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் ஆகியோரின் இயல்புகள், தந்தையாரும் தகுதி பெற்றோர், இவருக்கு இவர் தெய்வம், பயன் தருவன, குணம் மாறாதவை, சிறப்புடையவை, சிறப்பற்றவை, நோய் வரும் வழிகள், நீதி தவறாமை, விதியின் வலிமை, வறுமை, கொடை, நிலையாமை போன்ற பல்வேறு செய்திகள் கூறப்பட்டுள்ளன.

மேலும் வாழ்வில் கடைபிடிக்க வேண்டியவை, விலக்க வேண்டியவை, நோய் வராமல் தடுக்கும் வழிமுறைகள் போன்ற நுட்பமான கருத்துக்கள் இந்நூலுள் கூறப்பட்டுள்ளன.

### 2.4.9. அறப்பளீசுர சதகம்

அறப்பளீசுர சதகம் அறப்பள்ளி என்னும் தலத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமான் மீது பாடப்பட்டது. சதுரகிரி என்று வழங்கப்படும் அறப்பள்ளி கொல்லிமலையில் உள்ள சிற்றூர். இவ்வூர் சேலம் மாவட்டம் நாமக்கல்

*நகரிலிருந்து ஆறு கல் தொலைவில் உள்ளது. இத்தலத்தில் எழுந்தருளியுள்ள சிவன் பெயர் 'அறப்பளீசுரன்' என்பதாகும். இவ்விறைவன் பெயரே நூலுக்கும் பெயராய் அமைந்துள்ளது.*

## ஆசிரியர்

*அறப்பளீசுர சதகம் பாடியவர் அம்பலவாணக் கவிராயர் ஆவார். இவர் இராம நாடகக் கீர்த்தனைப் பாடிய சீர்காழி அருணாசலக் கவிராயரின் மூத்த புதல்வர் என்பது குறிப்பிடத்தக்கது. தந்தையைப் போல இந்நூலாசிரியரும் புலமைத் திறன் வாய்ந்தவராக விளங்கினார்.*

> சதுரகிரி அறப்பளீசுரரை முன்னிட்டு அறப்பளீசுர சதகமெனும் நீதிநூல் பாடிய கவி. அருணாசலக் கவிராயர் குமாரர். இவர் மருதூரிலிருந்த கவிவல்லவர். ஆதித்தபுரி புராணம் பாடியவர்[37]

*என்று அபிதான சிந்தாமணி குறிப்பிடுகின்றது.*

*அம்பலவாணக் கவிராயரை ஆதரித்தவர் மதவேள் என்னும் பெரும் வள்ளலாவார். தம்மை ஆதரித்த வள்ளலின் பெயரை ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் குறிப்பிட்டு தன் நன்றியை வெளிக்காட்டுகின்றார். இதனை,*

> அண்ணல் எமது அருமை மதவேள்

*என்றும்,*

> ஆழிபுடை சூழுலகில் வேளாளர் குலதிலகன்
> ஆகும்எமது அருமை மதவேள்

*என்றும் அறப்பளீசுர பாடலடிகள் உணர்த்துகின்றன.*

> மதவேள் கொல்லி மலையிலுள்ள குண்டுணி நாட்டுத் தலைவராகிய கருமக்கவுண்டராக விளங்கியவர் என்று சிலர் கூறுவர்.[38]

> அருணாசலக் கவிராயரின் காலம் கி.பி.1712-1779 என்பது ஆராய்ச்சியாளர் கருத்து. அதனால் அம்பலவாணக் கவிராயர் வாழ்ந்த காலம் கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதி எனலாம்.[39]

*என்னும் வ.சுப.மாணிக்கனார் கூற்றிலிருந்து மதவேள் என்னும் வள்ளல் கி.பி.18 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராக இருக்கலாம் என்பதை அறியமுடிகின்றது.*

**பாடுபொருள்**

*அறப்பளீசுர சதகம் அறப்பள்ளியில் எழுந்தருளியுள்ள ஈசனை முன்னிலைப்படுத்தி நன்னெறிகளைப் போதிக்கின்றது. இந்நூலுள் உயிர் பிறப்பு ஏழு வகையுள் மனிதப் பிறவியே உயர்ந்தது என்பதும், இல்லறத்தின் சிறப்பு, மனைவி மற்றும் மக்கட்பேற்றின் மகத்துவம் பற்றியும் கூறப்பட்டுள்ளன.*

*நல்லாசிரியர் மற்றும் நன்மாணாக்கர் இயல்புகள், நால்வகை வருணத்தார் இயல்புகள், முப்பத்திரண்டு அறங்கள், திருமால் அவதாரங்கள், சிவமூர்த்தியின் பெருமைகள் நற்குணம், தீக்குணம் வாய்ந்தவர்களின் இயல்புகள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளன.*

*மேலும் செயற்கருஞ்செயல்கள், திருமகள் இருப்பிடம், வறுமையின் கொடுமை, வாழும் நெறி, ஊழின் வலிமை, கற்பின் சிறப்பு, சகுனங்களின் அடையாளம் மற்றும் பஞ்சாங்க அமைப்புகள் பற்றிய செய்திகளையும் இந்நூல் எடுத்துரைக்கின்றது.*

*எண்ணெய் முழுக்கு நாள், புத்தாடை அணியும் நாள், மனைகோலுவதற்கு ஏற்ற நாள் பற்றிய குறிப்புகளும் இந்நூலுள் இடம்பெற்றுள்ளன.*

**2.4.10. கயிலாசநாதர் சதகம்**

*கயிலாசநாதர் சதகம் சேலம் மாவட்டம் இராசிபுரத்தில் கோயில் கொண்டிருக்கும் கயிலாசநாதர் மீது பாடப்பட்டுள்ளது. இந்நூல் குமரேச சதகம் போன்று கடவுளை முன்னிலைப்படுத்தி அறநெறிகளைக் கூறுகின்றது.*

**ஆசிரியர்**

*இந்நூலை இயற்றியவர் சிதம்பரம் பிள்ளை என்பவராவார். “இந்நூல் வீரசைவ மரபினரான வி.விசுவலிங்கனார் புதல்வர் சிதம்பரம் பிள்ளை என்பவரால் தாம் விரும்பி வழிபட்ட சேலம் மாவட்டம் இராசிபுரத்திலுள்ள கைலாசநாதர் மேல் இன்றைக்கு சுமார் 156 ஆண்டுகளுக்கு முன் பாடப்பட்டது” என்று வாழ்வியல் களஞ்சியம் குறிப்பிடுகின்றது.*

சாதியில் வீரசை வன்விசுவ லிங்கன்பர்

தருசிதம் பரவாணன் யான்

சதகமெனு மிப்பனுவ னின்னடிக் கன்புகொடு

சாற்றினன் உவந் தருளுவாய்[40]

*என்னும் கயிலாசநாதர் சதகப்பாடல், விசுவலிங்கன் மகன் சிதம்பரவாணன் இயற்றியது இந்நூல் என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது. இந்நூல் கி.பி.1753இல் இயற்றப்பட்டது என்பதற்கும் இந்நூற்பாவே சான்றாகும்.*

*இந்நூலாசிரியர் சேலம் சிதம்பரம்பிள்ளை என்றும், சிதம்பரவாணர் என்றும் குறிப்பிடப்படுகிறார். இந்நூலின் நூறாவது பாடல் மூலம் இவர் கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்பது புலனாகின்றது.*

**பாடுபொருள்**

*கயிலாசநாதரைப் போற்றிப் பரவும் வகையில் மக்கள் வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய அறநெறிகளைப் போதிக்கின்றது இந்நூல். நூலின் நூறு பாடல்களில் விளக்கப்பெறும் செய்திகளின் சாரமாக முதற்பாடல் அமைந்துள்ளது.*

நால்வகைச் சாதியும் பலவகையில் நீதியொடு

நாற்கவிகள் சொலும் முறைமையும்

நவில்பரம லோபிநன் னடக்கைபண் டிதர்முறை

நாலெட்டிராக விதமும்

சால்புயர் புராணமொடு வேந்தர்கலி யாண்டநாள்

தத்துவம் அனைத்தினியல்பும்

சகலநற் கணிதசாத் திரம்அட்ட வர்க்கமும்

தகுசகுன லட்சணமுடன்

நூல்களில் சரசாத்திர மேன்மைபெறு கொக்கோக

நூலினொடு கர்ப்போட்டமும்

நுண்மையாம் கந்துகத் தியல்புசா முத்திரிக

நூன்மர பெலாம் இதனிலே

காலமுதல் யாவரும் அறிந்திட உரைத்தனன்[41]

*என்னும் பாடல் வாயிலாக அரசர் அந்தணர் வேளாளர் ஆகியோரின் இயல்பும், முப்பத்திரண்டு ராகங்கள், புராணங்கள், வேந்தர்கள் கவியாண்ட நாட்கள், தத்துவம்*

அனைத்தின் இயல்பும் கணித சாத்திரம், சகுன லட்சணம், சாத்திர நூல்கள், குதிரை இலக்கணம், சாமுத்ரிகா லட்சணம் போன்ற பல்வேறு செய்திகள் இந்நூலில் இடம்பெற்றிருப்பதை அறியமுடிகின்றது.

### 2.4.11. வடிவேல் சதகம்

கி.பி.19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இயற்றப்பட்டதாகக் கருதப்படும் வடிவேல் சதகம் நூலின் ஆசிரியர் முத்துக்குமரன் என்பது நூலின் கடைசிப் பாட்டால் புலனாகின்றது.

இவரது ஆசிரியர் மருள்சிந்தையர் போலும், இவர் தன் குருவினை மனித உருவில் வந்த சிவபெருமான் என்று கூறுவதிலிருந்து இவரது குருபக்தியை அறிந்து கொள்ள முடிகின்றது. சைவ சித்தாந்தக் கருத்துக்கள் பாடலில் இடம்பெறுவதால் இவர் சைவர் எனப்பட்டார். ஆயினும் விஷ்ணு தலங்களையும் பாடியுள்ளார்.

இவர் சிவபக்தி, குரு பக்தி, அடியார்கள் பக்தி ஆகிய மூன்றிலும் சிறந்து விளங்கினார். இவரை ஆதரித்தவர் காளியின் பேரனாகிய செங்கோடன் ஆவார். நூலின் ஒவ்வொரு பாடலிலும் மகுடத் தொடரில் செங்கோடன் பெயர் இணைத்து குறிப்பிடப்பட்டிருப்பதன் மூலம் அவரது நன்றியுணர்வை அறியமுடிகின்றது. செங்குந்தர் மரபைச் சார்ந்த இச்செங்கோடனே இந்நூலின் பாட்டுடைத் தலைவன் என்றும் இந்நூல் குறிப்பிடுகின்றது.

#### பாடுபொருள்

இந்நூல் “வள்ளி, தெய்வானை மணாளனாம் செயமுருக வடிவேலனே” என்று முருகனை முன்னிலைப்படுத்தி வாழ்விற்கு இன்றியமையாத கருத்துக்களைக் கூறுகின்றது.

சோதிடம், சுகாதாரம், வானியல், சகுனங்கள், சைவ ஆகம விதிகள், சரியை, கிரியை, யோகம், ஞான மார்க்கங்கள், சமயச் சான்றோர்கள், முனிவர்கள், உணவின் தன்மைகள் மற்றும் வாஸ்து சாஸ்திரம் பற்றிய செய்திகள் எடுத்துரைக்கப் பட்டுள்ளன.

*முப்பத்திரண்டு அறங்கள், அன்னதானமே சிறந்தது எனல், சிறப்புடையவைகள், எதையும் ஆராய்ந்து செய்ய வேண்டும். ஒன்றுக்கும் உதவாதவர்கள், கல்வியின் சிறப்பு, தீயவர் இயல்பு, பெற்றோர், மகனின் கடமை போன்ற பல்வேறு கருத்துக்கள் இந்நூலில் கூறப்பட்டுள்ளன.*

### 2.4.12. காசிவிசுவநாத சதகம்

*இறைவன் எழுந்தருளியிருக்கும் திருத்தலங்களின் வரலாறு மற்றும் அதன் பெருமைகளை எடுத்துக்கூறும் விதத்தில் இயற்றப்பட்டது காசி விசுவநாத சதகம்.*

### ஆசிரியர்

இந்நூலின் ஆசிரியர் கவிராச பண்டிதர் பி.கனகராச ஐயர் என்பவர் ஆவார். இவர் எம்.ஏ. பட்டம் பெற்றவர். செய்யுள் துறையில் பயிற்சி பெற்றவர். புதுக்கோட்டை அரசர் கல்லூரியில் தமிழாசிரியராகப் பணிபுரிந்தவர். இவர் இயற்றிய நூல்களுள் மிகுதியானவை சிற்றிலக்கியங்களே.[42]

*எனினும் இவர் வரலாற்றிலும் மிகுந்த ஆர்வமுடையவர் என்பதை அறியமுடிகின்றது. குறிப்பாக தல வரலாறு எழுதுமிடத்து அத்திருத்தலத்திற்கு நேரில் சென்று தாம் பார்த்தவற்றையே எழுதும் இயல்புடையவர்.*

### பாடுபொருள்

*இந்நூலில் காசியில் எழுந்தருளியிருக்கும் விசுவநாதக் கடவுளை முன்னிலைப்படுத்தி திருத்தலங்களின் பெருமை பாடப்பட்டிருப்பினும் சைவ சமயத் தலங்கள் மட்டுமல்லாது, வைணவ ஆலயங்கள், இறைவி கோயில்கள், திருமாலின் அவதாரங்கள், முருகப் பெருமான் கோயில்கள், சமணர் இருப்பிடங்கள் பற்றியும் எடுத்துரைக்கின்றது.*

*திருத்தலங்கள் மட்டுமின்றி பெரியபுராணக் கதைகள், பாகவதக் கதைகள், திருவிளையாடல் புராணக் கதைகள் பற்றியும் பாடியிருப்பது இந்நூலாசிரியரின் இலக்கிய அறிவைப் புலப்படுத்துகின்றது.*

இராமேஸ்வரம், காஞ்சி, சிதம்பரம், சீர்காழி, காசி உள்ளிட்ட முப்பத்தைந்து சிவாலயங்கள் பற்றியும், தருமபுரம், திருப்பனந்தாள் முதலிய சைவ மடங்கள் பற்றிய செய்திகளும் இடம்பெற்றுள்ளன.

மேலும் அண்ணல்வாயில், ஆனைமலை முதலிய சமணர் இருப்பிடங்கள், இமயமலை, விந்தியமலை ஆகிய மலைகள், குறிப்பிடத்தக்க நகரங்கள் பற்றிய செய்திகளையும் எடுத்துரைக்கின்றன.

இந்நூல் வடநாடு, தென்னாடு என்ற பாகுபாடின்றி கன்னியாகுமரி முதல் இமயமலை வரை உள்ள திருத்தலங்கள் பற்றியும், இலங்கையில் உள்ள கதிர்காமம் என்னும் திருப்பதியைப் பற்றியும் குறிப்பிடுகின்றது.

### 2.4.13. அண்ணாமலைச் சதகம்

திருவண்ணாமலையில் கோயில் கொண்டிருக்கும் அண்ணாமலையார் மீது பாடப்பட்ட நூல் அண்ணாமலையார் சதகம். இந்நூல் திருச்சிற்றம்பல நாவலர் என்பவரால் இயற்றப்பட்டது. இவர் ஊர்ப் பெயருடன் இணைத்து மாம்பாக்கம் உபாத்தியாயர் திருச்சிற்றம்பல நாவலர் என்றும் அழைக்கப்படுகிறார்.

> திருவண்ணாமலைக் கோயில் அறங்காப்பாளராக விளங்கிய சிங்கபுரி வசந்தராயர் என்பார் திருச்சிற்றம்பல நாவலரிடம் அன்புகாட்டி ஆதரித்து வந்தார்.[43]

என்று ந.வீ.செயராமன் குறிப்பிட்டுள்ளார். திருச்சிற்றம்பல நாவலர் தம்மை ஆதரித்த வள்ளலுக்கு நன்றிக்கடன் செலுத்தும் வகையில் தாம் இயற்றிய நூலுக்கு வசந்தராயர் சதகம் என்னும் பெயரைச் சூட்டினார் என்பதை,

> மன்னுதிரு அண்ணா மலைச்சதகம் என்னும்பேர்
> பின்னும் ஒருநாமம் பேசுவாம் - இந்நிலத்தில்
> தங்கு புகழ்வசந்த ராயச் சதகமென்று
> எங்குந் துதிப்ப தாமே[44]

என்னும் அண்ணாமலைச் சதகம் நூற்பெயர் என்னும் பகுதி வழி அறியமுடிகிறது.

அண்ணாமலைச் சதகம் அண்ணாமலையாரை போற்றியுரைக்கும் தன்மை மற்றும் சைவ ஆகம விதிமுறைகளைக் கூறுவதால் இந்நூலாசிரியர் சைவ

*சமயத்தைச் சார்ந்தவர் என்றும் கி.பி.18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர் என்றும் கூறப்படுகிறது. இந்நூல் சால்வாகன சகாப்தம் 1770க்குச் சமமான கி.பி.1848இல் நிறைவு செய்யப்பட்ட செய்தி இந்நூலின் 101 ஆம் பாடலின் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது.*

**பாடுபொருள்**

*நூலின் தொடக்கத்தில் அண்ணாமலைப் பெருமான் கடவுள் வணக்கம், அவருக்கு அபிடேகம் செய்யும் பொருட்கள், திருவண்ணாமலையில் உள்ள தீர்த்தங்கள், திருவண்ணாமலைக்கு அருகில் உள்ள திருக்கோவலூர் தலப் பெருமை, அவ்வூரை ஆண்ட தெய்வீகராசன், அவன் பிறப்பு, அவனுக்குரிய மலைகள், முடிகள், மன்னனின் தேவியர்கள், பாரியின் மக்கள் அங்கவை, சங்கவையை மணந்தமை பற்றிய செய்திகள் குறிப்பிடப்பட்டுள்ளன.*

*இவை தவிர நால்வகை வருணத்தாரின் இயல்புகள் மற்றும் அவர்களுக்குரிய தொழில்கள் ஆகியவை விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. சைவ ஆகம விதிமுறைகளில் விபூதி தரிக்கும் விதிகள், உருத்திராக்கமணி அணியும் முறை, சபம்செய்யும் முறை, சிவ பூசைக்குரிய மலர்கள், பூசைக்கு ஆகாத மலர்கள் பற்றியும் எடுத்துரைக்கின்றது.*

*மேலும் 32 அறங்கள், உணவு உண்ணும்போது கடைபிடிக்க வேண்டிய ஒழுகலாறுகள், நோய் வராமல் தடுக்கும் வழிகள், பெண்கள் இலக்கணம், தேவாரத் திருத்தலங்கள் போன்ற பல்வேறு செய்திகள் இடம்பெற்றுள்ளன.*

**2.4.14. தண்டலையார் சதகம்**

*தண்டலையில் கோயில் கொண்டிருக்கும் சிவபெருமானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு இந்நூல் பாடப்பட்டுள்ளது. சோழநாட்டில் அமைந்துள்ள இத்திருத்தலம் திருத்துறைப்பூண்டிக்கு அருகில் உள்ளது.*

*இந்நூலாசிரியர் படிக்காசுப் புலவர். இவர் தொண்டை மண்டலத்தில் பொன் விளைந்த களத்தூரிலே (தென்களந்தை என்றும் வழங்கப் பெறும்) சுமார்*

*260 வருடங்களுக்கு முன்னே செங்குந்தர் மரபிலே அவதரித்து சிவானுக்கிரகத்தால் தமிழ்க்கலை முழுதும் பயின்று, இல்லறத்தில் இருக்கும் நாளில், வல்ல நகர் அடைந்து காளத்தி பூபதியைப் புகழ்ந்து பாடி பாற்பசுக்களை பரிசிலாகப் பெற்றவர்.*

*தொண்டை மண்டல சதகம் பாடியமையால், சிதம்பரத்தில் படிக்காசுப் பெற்ற வரலாறு தொண்டை மண்டல சதகம் என்ற பகுதியில் முன்னர் கொடுக்கப்பட்டுள்ளது. அதன்பின் தென்னாடு அடைந்து ரெகுநாத சேதுபதியைக் கண்டு பரிசில் பெற்று மதுரைச் சென்ற இவரை திருமலை நாயக்கர் கிளிக் கூட்டுச் சிறையில் அடைத்தனர். தம் பாடலால் திருமலை நாயக்கரை வசப்படுத்தி, பரிசில் பெற்று காயல்பட்டினம் அடைந்தது.*

காய்ந்து சிவந்தது சூரிய காந்தி கலவியிலே
தோய்ந்து சிவந்தது மின்னார் நெடுங்கண்க டொல்பலநூல்
ஆய்ந்து சிவந்தது பாவாணர் நெஞ்ச மனுதினமும்
ஈந்து சிவந்தது மால்சீதக் காதி யிருகரமே[45]

*என்று வள்ளல் சீதக்காதியைப் புகழ்ந்து பாடி அவரிடம் வைர மோதிரம் பரிசாகப் பெற்றுள்ளார்.*

*பின்னர் திருச்செந்தூர் சென்று முருகனை தரிசித்து, தண்டலை என்னும் திருத்தலம் வந்தடைந்து நீள்நெறிநாதரை வணங்க அங்குள்ளவர்கள் வேண்டுகோளின்படி தண்டலையார் சதகம் பாடியுள்ளார்.*

*தருமபுரம் ஆதீனம் ஞானதேசிகரிடத்து ஞான தீட்சையும் சந்நியாசமும் பெற்று அதன் பிறகு பல தலங்களையும் தரிசித்து சிதம்பரம் வந்து இறைவன் திருவடியடைந்தார் என்பது படிக்காசுப் புலவர் சரித்திரச் சுருக்கம் ஆகும்.*

**பாடுபொருள்**

*தண்டலையார் சதகத்தில் ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் ஒரு பழமொழி இடம்பெற்றுள்ளது. பழமொழிகள் வாயிலாக அறநெறிகள் விளக்கப்பட்டுள்ளன.*

*நற்குணம் வாய்ந்தவர்களின் செயல்கள், தீச்செயல்கள், கற்புடைய பெண்டிர் இயல்பு, இல்லறம், துறவறம், கல்வி, செல்வம், ஒற்றுமை, கொடை போன்ற பல*

கருத்துக்கள் பழமொழிகள் வாயிலாக விளக்கப்பட்டுள்ளன. எல்லாம் இறைவன் செயல், விதிப்படி நடக்கும், இறையடியார்க்குத் துன்பம் இல்லை, தெய்வமே துணை போன்ற இறையுணர்வு சார்ந்த கருத்துக்களும் கூறப்பட்டுள்ளன.

பழமொழி விளக்கமாக அமையும் தண்டலையார் சதகத்தில் கூறப்பட்டுள்ள கருத்துக்களை இறையுணர்வு மற்றும் அறநெறி அடிப்படையில் ச.விஜயகுமார் ஆய்விற்கு உட்படுத்தியுள்ளார். மக்கள் வாழ்வில் கடைபிடிக்க வேண்டிய நீதிநெறிகள் இந்நூலுள் விளக்கப்பட்டுள்ளன.

### 2.4.15. செயங்கொண்டார் சதகம்

செயங்கொண்டார் சதகம் மதுரை மாவட்டத்தில் உள்ள நேமநகரத்தில் கோயில் கொண்டிருக்கும் செயங்கொண்ட சோழீசர் மீது பாடப்பட்டது. இந்நூலை இயற்றியவர் முத்தப்பச் செட்டியார் ஆவார். இவர் ஊர் மதுரைச் சீமை சிவகங்கை சமஸ்தானம் கீழைச்சேவற்பட்டு இடையாற்றங்குடி என்று சொல்லப்பட்ட நேமநகரம் ஆகும். கி.பி.1760 ஆம் ஆண்டு அழகப்பச் செட்டியார் இலக்குமி அம்மாள் இருவருக்கும் மகனாகத் தோன்றிய இவர் இளமையிலேயே கவிபாடும் ஆற்றலுடன் விளங்கியுள்ளார்.

ஊனையூர் பாரதியார் என்னும் புலவர் இவரிடத்து செயங்கொண்ட சோழீசரைக் கேலி செய்து பாட, இவர் பாட்டினாலேயே பதிலளித்தார்.

என்னசெயங் கொண்டார் இவரென்றீர் முப்புரத்தைச்
சொன்னமய மாய்ச் சமைத்த சோழீசர் - பின்னும்
சிரித்துச் செயங்கொண்டார் சித்தசனைக் கண்ணால்
எரித்துச் செயங்கொண் டாரே![46]

என்னும் பாடல் மூலம் அவரது கவித்திறன் புலப்படுமாற்றை ந.வீ.செயராமன் ‘சதக இலக்கியம்’ நூலில் குறிப்பிடுகின்றார்.

செயங்கொண்டார் சதகம் கி.பி.19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இயற்றப்பட்டது என்பதும் இவர் சிவபெருமானைப் பாடியிருப்பதால் சைவ சமயத்தவர் என்பதும் அறியப்படுகின்றது.

இந்நூலாசிரியர் திருமுக விலாசம், செட்டியார் வரலாறு, செயங்கொண்ட சோழீசர்பிள்ளைத்தமிழ், பதிற்றுப்பத்தந்தாதி, ஒலித்துறையந்தாதி, நேமக்கலம்பகம், செயங்கொண்ட சோழீசர் ஊசற்றிரு நாமம் போன்ற பல நூல்களை எழுதியுள்ளார்.

**பாடுபொருள்**

மக்களிடையே வழங்கும் பழமொழிகளை எடுத்துக்காட்டி நீதிநெறிகளை விளக்குகின்றது. பழமொழிகளை நேரடியாக விளக்காமல் உதாரணக் கதைகள் மூலம் விளக்குவது இந்நூலின் தனிச்சிறப்பாகக் கருதப்படுகிறது.

இராமாயணம், மகாபாரதம், கந்தபுராணம், திருவிளையாடற் புராணம் பற்றிய செய்திகளும், முனிவர்கள், அரசர்கள், மகளிர், புலவர்கள் பற்றிய செவிவழிக் கதைகளை எடுத்துக்கூறி, பெரியாரைத் துணைக் கொள்ளல், தீவினை அழிக்கும், உலக இயல்பு, கல்வி, நீதி தவறாமை, கற்பு நிலை, இயற்கை நம்பிக்கை, நல்லோர் செயல், உழவின் மகத்துவம், கொடை, விடா முயற்சி, துணிவு, ஒற்றுமை, தருமம் போன்ற பல்வேறு நீதிக்கருத்துக்களை விளக்குகின்றது.

உழுதிளையான் குடிமாறர் முளைவாரி யன்னமன் பர்க்
குதவிப் பாரில்
வழுவாத கீர்த்தியுட னொருநாளுங் கேடில்லா
வாழ்வு பெற்றார்
மழுவேந்துங் கரதலத்தார் செயங்கொண்டார் வளநாட்டின்
மறைக ளோதிற்
தொழுவாரெல் லாமுழுவார் தலைக்கடையி லென்றுலகஞ்
சொல்லு மாதோ[47]

என்னும் செயங்கொண்டார் சதகப் பாடல் மறை ஓதும் அந்தணர்கள் உழுபவர் வாசலிலே நிற்பர் என்பதை இளையான்குடி மாறநாயனார் கதை உணர்த்துகின்றது.

**துதி சதகங்கள்**

வரலாறு கூறுதல், நீதியுரைத்தல் என்னும் பொருண்மைகளில் மாற்றம் ஏற்பட்டு, இறைவனைப் போற்றித் துதிக்கும் துதி நூல்கள் தோற்றம் பெறலாயின.

> பிற செய்திகள் எவற்றையும் கூறாது நூல் முழுதும் பாட ஏற்றுக் கொண்ட கடவுளின் அருட்செயல்களையும் புகழ்ப் பெருமைகளையும் பலவாறு பாராட்டிக் கூறுகின்ற இயல்புடையவைகளாக துதி நூல்கள் விளங்குகின்றன[48]

என்று ந.வீ.செயராமன் துதி நூல்களின் இயல்பை எடுத்துக் கூறுவர்.

அருணாசல சதகம், எம்பிரான் சதகம், அவையாம்பிகை சதகம், வடவேங்கட நாராயண சதகம் போன்றவை இறைவனைத் துதிக்கும் நோக்கில் எழுந்த சதகங்கள் ஆகும்.

## 2.4.16. அருணாசல சதகம்

திருவண்ணாமலையில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானை (அண்ணாமலையாரை) போற்றித் துதிக்கும் வகையில் இந்நூல் அமைந்துள்ளது.

### ஆசிரியர்

காஞ்சிபுரம் சபாபதி முதலியார் எனப்படும் சபாபதி நாவலர் இச்சதகத்தின் ஆசிரியர். இவர் அருட்பிரகாச வள்ளல் இராமலிங்க சுவாமிகளின் தமையனார் சபாபதிப் பிள்ளைக்கு ஆசிரியராக விளங்கியவர்.

> சென்னையில் உள்ள பச்சையப்பன் கல்லூரியில் தமிழாசிரியராகப் பணியாற்றினார். திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளைக்கு ஆசிரியராக இருந்து கல்லாடம், திருவாசகம் முதலிய இலக்கியங்களைப் பாடம் கற்பித்தார் என்றும் கூறுவர்.[49]

என்று ந.வீ.செயராமன் 'சதக இலக்கியம்' என்னும் நூலில் குறிப்பிடுகின்றார்.

மேலும் இவர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர் என்பதும், சைவ சமய விளக்க வினாவிடை, பிரம்மோத்திர காண்டப் பொழிப்புரை, பெரிய புராண உரை முதலிய நூல்களுக்கு உரை எழுதியுள்ளமையையும் இந்நூலின் வழி அறியமுடிகின்றது.

**பாடுபொருள்**

*அண்ணாமலையாரைப் போற்றித் துதிக்கும் வகையில் இந்நூல் அமைந்துள்ளது. இந்நூலுள் இறைவனின் பெருமைகள் மற்றும் இறைவன் தனக்கு அருள்புரியுமாறு இறைஞ்சி வேண்டுவதாகவும் பாடல்கள் இடம்பெற்றுள்ளன.*

வில்லார்மலர்க் கணையேவிய வேளைப்பொடி யாச்செய்தனை
கல்லாலெறிந் தவன்முத்தியே காணப்பரிந் தனையாதலாற்
பொல்லாமனத் தவனென்றெனைப் புறமேவிடுத் திடலையனே
அல்லார்களத் தெம்மண்ணலே அருணாசலா! அருணாசலா![50]

*என்னும் அருணாசல சதகப் பாடல் பொல்லாதவன் என்று என்னைப் புறக்கணித்துவிடாதே எனக்கு அருள்செய் என இறைவனை வேண்டுவதாய் அமைந்துள்ளது. மேலும் இறைவன் வானாகவும், மண்ணாகவும், கோனாகவும், தேனாகவும், அமிழ்தமாகவும் மற்றும் இறைவன் எங்கும் நிறைந்திருக்கும் தன்மையும் விளக்கப்படுகின்றது.*

*இறைவன் விடையேறி கரங்களில் மான், மழு ஏந்தி, தலையில் மதியும் நதியும் சூடி எருக்கமாலை அணிந்து விளங்கும் தோற்றப்பொலிவு சிறப்பித்துப் பாடப்பட்டுள்ளது.*

**2.4.17. எம்பிரான் சதகம்**

*எம்பிரான் சதகம் காஞ்சிபுரம் அத்திகிரிப் பெருமானை போற்றித் துதிக்கும் வகையில் பாடப்பட்டுள்ளது. அருணாசல சதகம், அவையாம்பிகை சதகம் போன்று இந்நூலும் துதி நூலாக அமைந்துள்ளது.*

**ஆசிரியர்**

*இந்நூலாசிரியர் அரிபக்தர் கோபால கிருட்டிண தாசர் என்னும் புலமையாளர். இவர் ஸ்ரீபெரும்புதூரில் சுமார் 200 வருடங்களுக்கு முன்பு வாழ்ந்தவர். இடையர் மரபினர், வைணவ சமயத்தினர். இவரது காலம் கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டு ஆகும்.*

ஆழ்வார்கள் பன்னிருவர் பாடல்போற்றும்
அரிபக்தன் கோபால கிருஷ்ணன்[51]

*என்று நூலின் பாயிரத்தில் தம்மை அறிமுகப்படுத்திக் கொள்கிறார் இந்நூலாசிரியர்.*

**பாடுபொருள்**

*திருமாலின் தோற்ற வர்ணனை, பஞ்சபூதங்களாக எம்பெருமான் விளங்கும் நிலை, ஆழ்வார்களுக்கு இறைவன் அருளியப் பான்மை, அடியார்களுக்கு குருவாக இருந்து உபதேசிக்கும் தன்மை, இறைவனின் நாமங்கள் மற்றும் அதன் மகிமை போன்றவை இந்நூலுள் விளக்கப்பட்டுள்ளன.*

உன்னுடைய உடல்மயமே பூமி எல்லாம்
உனது செவ்வாய் நீர்மயமே உதகம் எல்லாம்
மின்னியநின் கண்மயமே தேயுஎல்லாம்
வீரியநின் சுவாசமய மேகாற்று எல்லாம்
நின்நினைவின் மயமேஆ காயம் எல்லாம்
நின்மூர்த்தி மயம்உயிர்கள் உணர்வில் எல்லாம்
என்உடலோடு உயிர்செய்கை யாவும் நீயே
இரண்டுபண்ணி அலைப்பது என்னோ எம்பிரானே![52]

*என்னும் எம்பிரான் சதகப்பாடல் இறைவன் அனைத்துமாய் விளங்கும் தன்மையைக் குறிப்பிடுகின்றது.*

### 2.4.18. அவையாம்பிகை சதகம்

*அவையாம்பிகை சதகம் மயிலாடுதுறையில் கோயில் கொண்டிருக்கும் மயூரநாதனின் வாழ்வான அன்னை அவையாம்பிகையைப் போற்றித் துதிக்கும் வகையில் பாடப்பட்டதாகும்.*

**ஆசிரியர்**

*மாயூரம் நல்லதுக்கடி கிருஷ்ணையர் என்பவரால் இந்நூல் பாடப்பட்டுள்ளது. இவர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர் என்பதும், அவையாம்பிகையைப் பாடியதால் சைவ சமயத்தவர் என்பதும் அறியப்படுகின்றது.*

*இப்பொழுது மயிலாடுதுறை என்று வழங்கப்படும் மாயூரத்தில் கோயில் கொண்டிருக்கும் இறைவர் மயூரநாதர் இறைவி அபயாம்பிகை என்பதும் குறிப்பிடப்படுகின்றது.*

> இறைவியின் பெயரான அபயாம்பிகை என்ற பெயர் தமிழில் அவயாம்பிகை என்று வழங்கப்படுகிறது. அ, ஐ முதலிசை ஒக்கும் 'ச ஞ ய முன்' என்ற நன்னூல் போலி எழுத்தின் விதியை உட்கொண்டு இமயம் இமையம் எனவும் அரசர் அரைசர் எனவும் முரசு முரைசு எனவும் அருகி வழங்குவது போல அவயாம்பிகை என்பது செய்யுளின் ஓசை இனிமை குறித்து அவையாம்பிகை என வழங்குவதாயிற்று[53]

*என்று இந்நூற்பெயருக்கான விளக்கம் இங்குக் குறிப்பிடப்படுகின்றது.*

*இந்நூற்பாடல்கள் இறைவியைப் போற்றி விளிக்கும் தொடர்களாக அமைந்துள்ளன. இப்பாடல்களில் வடசொற்கள் மிகுதியும் இடம்பெற்றுள்ளன.*

**பாடுபொருள்**

*அன்னையின் தோற்றப்பொலிவும், அவள் அருள் வழங்கும் தன்மையும், மாயூர நகரின் சிறப்பும் கூறப்பட்டுள்ளன. அன்னையின் அருட்கொடையும் கருணைத் திறமும் விளக்கும் நூலாகவும் இது அமைந்துள்ளது.*

> இந்நூல் 'சாக்தம்', 'அத்துவைதம்' சார்ந்த பல தத்துவங்களையும், சித்தாந்தங்களையும் உள்ளடக்கி, ஞானம், யோகம், பக்தி என்கின்ற முறைகளில் இறைவியைப் பற்றிய பல்வேறு செய்திகளைக் குறிப்பிட்டு, அன்னையைத் துதித்து அவளுடைய அருளை வேண்டுகின்ற நிலையிலே எழுதப்பட்டுள்ளது[54]

*என்று இந்நூலின் உரையில் முத்து இராமமூர்த்தி குறிப்பிடுகிறார்.*

> தீரா மயக்கிப் பிணிநோயைத் தீர்க்கும்
> மருந்தே அருமருந்தே
> தேவா திகளும் அறியாத ஸ்ரீகிருஷ்
> ணாதி சோதரியே[55]

*என்று அன்னையின் அருட்பண்புகள் இப்பாடலில் விரித்தோதப்படுகின்றன.*

*அன்னையைப் போற்றித் துதிக்கும் அரிய நூலாக இந்நூல் விளங்குகின்றது.*

**வடமொழி சதகங்கள்**

*உலகச் செம்மொழிகளுள் ஒன்றாகத் தமிழும் சமஸ்கிருதமும் விளங்குகின்றன. சமஸ்கிருதம் என்ற சொல்லிற்கு செப்பம் செய்யப்பட்ட மொழி என்று பொருள் கூறுவர். வடநாட்டில் வழங்கப்பட்டதால் வடமொழி என்று வழங்கலாயிற்று. வேதத்தை மூலமாகக் கொண்டு வடமொழி இலக்கியங்கள் தோற்றம் பெற்றன.*

> பல்வகை இலக்கண, இலக்கியச் சிறப்புகளைத் தன்னகத்தே கொண்ட மொழி வடமொழி[56]

*என்று அரு.மருதுதுரை குறிப்பிடுகிறார். தமிழ்மொழியில் முதன்மையான இலக்கண நூலாக தொல்காப்பியம் விளங்குவது போல வடமொழியில் பாணிணீயம் சிறந்த இலக்கண நூலாக விளங்குகின்றது. வடமொழி இரண்டு பிரிவுகளாக பிரித்தாளப்படுகின்றது.*

> இது பற்றி வேதங்களின் மொழியை வைதீக மொழி என்றும், பாணினியின் இலக்கண விதிகளாற் செப்பனிடப்பட்ட மொழியை சமஸ்கிருத மொழி என்றும் தனித்தனியாகக் குறிப்பிட்டு வேறுபடுத்திக் காட்டுவோம்[57]

*என்னும் சோ.ந.கந்தசாமியின் கருத்து இங்கு குறிப்பிடத்தக்கது.*

*சமஸ்கிருத மொழியில் நீதி நூல்களாக விளங்குபவைகளில் பெரும்பான்மையானவை சதக நூல்களேயாகும். சதக இலக்கியங்களின் தொடக்கமாக பர்த்ருஹரியின் நூல்கள் விளங்குகின்றன.*

*பர்த்ருஹரி நீதி சதகம், கிருங்கார சதகம், வைராக்ய சதகம் என்னும் மூன்று நூல்கள் பாடியுள்ளார்.*

> இவையாவும் கி.பி.1651இல் ஆம்ரஹாம் ரோகர் (Abraham Roger) என்பவரால் டட்சு மொழியில் மொழிபெயர்க்கப் பெற்றவை. ஐரோப்பியர்க்கு முதன் முதலில் அறிமுகம் ஆகிய இந்திய இலக்கியம் இவையே என்பர் விண்டர்நீட்ஸ்.[58]

*பர்த்ருஹரி இயற்றிய சதகங்களுள் கிருங்கார சதகத்தை விடுத்து மற்ற இரு சதகங்களும் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, அந்நூல்கள் பற்றிய விவரங்கள் இங்கு குறிப்பிடப்படுகின்றன. மேலும் பக்தி சதகமான ஸ்ரீதயா சதகம் பற்றிய குறிப்புகளும் இங்கு எடுத்துரைக்கப்படுகின்றது.*

### 2.4.19. பர்த்ருஹரி நீதி சதகம்

*உலக மக்கள் அனைவரும் பின்பற்றக்கூடிய பொதுவான நீதிகளை எடுத்துக்கூறும் நூறு செய்யுட்களால் ஆன நூல் நீதி சதகம். இந்நூல் பர்த்ருஹரி என்பவரால் கி.பி. ஆறாம் நூற்றாண்டில் இயற்றப்பட்டது.*

**ஆசிரியர்**

*நீதி சதகம் என்னும் நூலினை வடமொழியில் இயற்றியவர் பர்த்ருஹரி. இவர்,*

> வடமொழியில் சிறந்த புலமையாளர். இவர் கி.பி. ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்பது பி.சா.சுப்பிரமணிய சாஸ்திரியார் கருத்து.[59]

*இந்நூலாசிரியர்,*

> உஜ்ஜயினி நகரத்து அரச பரம்பரையில் பிறந்து, தனது அரசப் பதவியை 'விக்கிரம சகம்' படைத்த தன் சகோதரனுக்கு விட்டுக் கொடுத்து மனையாளின் நடத்தையால் வாழ்க்கையில் வெறுப்பு மேலிட்டு, துறவற வாழ்க்கையை மேற்கொள்ள காட்டிற்கு சென்றதாக இவரைப் பற்றிய குறிப்புகள் உணர்த்துகின்றன.[60]

*மேலும்,*

> அவர் ஒரு அரசன் என்றும் மாளவ தேசத்தை ஆண்டார் என்றும் விக்கிரம சகாப்தத்தை துவக்கிய விக்கிரமாதித்ய மன்னரின் உடன்பிறந்தவரென்றும் ஏதோ தன் மனைவியான ராணியின் நடத்தைப் பிசகினால் வாழ்க்கையை வெறுத்து அரசைத் துறந்து துறவியானார் என்றும் சொல்லப்படுகிறது.[61]

*கர்ண பரம்பரையாக வழங்கப்படும் இக்கதைகளே அன்றி பர்த்ருஹரியின் வரலாறு பற்றிய சான்றுகள் எதுவும் கிடைக்கவில்லை.*

*மூன்று சதகங்கள் மட்டுமன்றி 'வாக்யபதீயம்' என்ற ஒரு இலக்கண நூலையும் இவர் படைத்ததாகக் கருதப்படுகிறது. பட்டி காவியம் படைத்த பட்டி என்னும் முனிவரும் இவராக இருக்கலாம். இவரது காலம் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு என்றும், ஆறாம் நூற்றாண்டு என்றும், ஏழாம் நூற்றாண்டு என்றும் பலவிதமான கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.*

**நூல்**

*பர்த்ருஹரியின் படைப்புகளைக் கொண்டு அவர் வாழ்க்கையில் பட்ட துயரங்களை உணரமுடிகின்றது.*

*நீதி சதகம் மனிதகுலம் மேன்மையடைவதற்கான நூறு நீதிக் கருத்துக்களை எடுத்துரைக்கின்றது. இந்நூலின் சமஸ்கிருதப் பாக்களை ஒ.என்.அப்பாஸ்வாமி அய்யர் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். வி.கோபலாய்யங்கார் பதிப்பித்து ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார்.*

*இந்நூலுள் மூர்க்கர் குணத்தை மாற்ற இயலாது. கல்வி, வீரம், பொருள், தீயோர், நல்லோர் செயல், உதவி, துணிவு, கடவுள், ஊழ் முதலிய பொருட்கள் பற்றி விவரித்துப் பேசப்படுகின்றது. வடமொழி நீதி இலக்கியங்களுள் குறிப்பிடத்தக்க ஒரு நூலாக நீதி சதகம் விளங்குகின்றது.*

### 2.4.20. வைராக்ய சதகம்

*பர்த்ருஹரி இயற்றிய மூன்று சதகங்களில் ஒன்று வைராக்ய சதகம். வைராக்யமென்பது விருப்பமின்மை என்ற பொருளைத் தரும். உலகப் பற்றை விடுத்தற்கு பற்றற்றவனாகிய இறைவனை சரணாகதி அடைய வேண்டும் என்னும் நோக்கிலான நூறு பாடல்களே வைராக்ய சதகமாகின்றது.*

**ஆசிரியர்**

*வைராக்ய சதகம் பர்த்ருஹரி இயற்றிய மற்றொரு நூல். ஆகையால் இவர் இயற்றிய நீதிநூல் பகுதியில் அவரைப் பற்றிய குறிப்புகள் தரப்பட்டுள்ளன.*

**நூல்**

*வைராக்ய சதகம் மற்றும் நீதி சதகங்களுக்கு உரிய மூலக்கருத்துக்கள் மகாபாரதத்தில் சாந்தி பருவத்தில் காணப்படுவதாகக் கூறப்படுகிறது.*

*இந்நூலும் நீதி சதகம் போன்று பத்துத் தலைப்புகளில் பத்துப் பத்துப் பாடல்களாக உலகப்பற்றை நீத்தலுக்கான வழிமுறைகளை எடுத்துரைக்கின்றது.*

*முதல் பகுதியில் விஷயப் பற்றுக்கு மூல காரணமாக இருக்கும் ஆசை இகழப்படுகிறது. இரண்டாவது பகுதியில் இன்ப நுகர்ச்சிகளை அறவே ஒழித்து விடுவதுதான் நமக்கு மேன்மை நிலையைத் தரும் என்பது விளக்கப்படுகிறது. மூன்றாவது பகுதியில் யாசிக்கும் அவல நிலை தூற்றப்படுகிறது. நான்காவது பகுதியில் போகங்களின் நிலையற்ற தன்மை விவரிக்கப்படுகிறது. பெருவல்லமை படைத்த எல்லாவற்றையும் அழிக்கும் திறன் கொண்ட காலத்தின் பெருமை ஐந்தாவது பகுதியில் வர்ணிக்கப்படுகிறது. ஆறாவது பகுதியில் அரசன் துறவி உரையாடல் மூலம் வைராக்யத்தின் பெருமை குறிப்பிடப்படுகின்றது. மனதை அடக்கி அதை அமைதி வழியில் செலுத்துவதற்கான வழிமுறைகளைக் கவி விளம்புகிறார். எட்டாவது பகுதியில் அழிவற்ற மற்றும் அழியும் பொருட்களின் பாகுபாடு பற்றி கூறப்படுகிறது.*

*சிவ வழிபாட்டின் மூலம் பெறும் ஆனந்தனுபவத்தையும் ஜீவன் முக்தனின் செயல்பாடுகளையும் ஒன்பது மற்றும் பத்தாவது பகுதியில் கவி விளக்குகின்றார்.*

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு[62]

*என்னும் வள்ளுவப் பெருந்தகையின் வாக்கினை பர்த்ருஹரி வைராக்ய சதகமாக பத்து தலைப்புகளில் வர்ணிக்கிறார்.*

### 2.4.21. ஸ்ரீதயா சதகம்

*திருவிசநல்லூர் ஸ்ரீதர வேங்கடேச ஐயா இயற்றிய நூல் ஸ்ரீதயா சதகம் ஆகும். கருணையே உருவமாக விளங்கும் அம்பிகையைத் 'தயா' எனப் பெயர் கூறி போற்றி வணங்குவதாக இந்நூல் அமைந்துள்ளது. இந்நூலில் நூறு பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இறுதியில் 'பிரார்த்தனை'யும் நூற்பயனுமாக இரண்டு பாடல்கள் இடம்பெற்றுள்ளன.*

### ஆசிரியர்

சோழ வளநாட்டில் திருக்குடந்தைக்கு (கும்பகோணம்) அருகில் திருவிசநல்லூர் என்ற தலத்தில் பதினெட்டாம் நூற்றாண்டில் சான்றோர் ஒருவர் வாழ்ந்து வந்தார். எல்லோரும் அவரை 'ஐயா' என்றே அழைப்பர். பெற்றோர் இட்ட பெயர் வேங்கடேசர். சீரிய ஒழுக்கம், இறைப்பற்று, அன்பு,

நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை முதலான மேலான பண்புகட்கு நிலைக்களமாக வாழ்ந்தவர்[63]

என்று இந்நூலாசிரியரின் பண்பு நலன்களை ஸ்ரீதயா சதகம் எடுத்துரைக்கின்றது.

திருவிசநல்லூரிலிருந்து ஐந்து கிலோமீட்டர் தொலைவில் உள்ள திருவிடைமருதூர் மகாலிங்கப் பெருமானிடத்து அன்பு கொண்டு அவரை தரிசிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். சிவபெருமானைப் பாடும் அதே நேரம் திருமாலையும் பாடியுள்ளார். இது அவருடைய சமயப்பற்றுக்குச் சான்றாக அமைகின்றது.

இந்நூலாசிரியர் வடமொழியில் பதினான்கு நூல்கள் இயற்றி உள்ளார். அவற்றுள் ஒன்றே ஸ்ரீதயா சதகம் என்பதாகும்.

கார்த்திகை மாதம் அமாவாசை அன்று தம் தாயாரின் நினைவு நாள். காவிரியில் நீராடச் சென்றார். அங்கு பசியால் வாடிக் கொண்டிருந்த ஒரு பாமரனைக் கண்டார். வீட்டிற்கு வந்து திதிக்காக சமைத்து வைத்த உணவினை எடுத்துச் சென்று பாமரனிடம் வழங்கினார். இதனைக் கண்ட மக்கள் அனைவரும் அபசாரம் என்று கருதி, திதி கொடுக்கக் கூடாது என்றும் கங்கையில் நீராடிய பின்னே அப்பாவம் விலகும் என்றுரைத்தனர். ஐயா அவர்கள் இறைவனை வேண்ட அவர் வீட்டின் கிணற்றிலிருந்து கங்கை பொங்கி பெருக்கெடுத்தது. அதனைக் கண்ட மக்கள் அனைவரும் வியப்படைந்தனர்.

அன்று முதல் மக்கள் அனைவரும் கார்த்திகை மாதம் அமாவாசை நாளில் அக்கிணற்று நீரில் நீராட, கங்கையில் குளித்தது போன்று உணர்வடைந்தனர்.

சமஸ்கிருத மொழியில் ஸ்ரீதயா சதகம் என்ற பெயரில் மற்றொரு நூலையும் காணமுடிகின்றது. ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் அவர்களால் திருவேங்கடமுடையானது கருணையெனும் குணத்தைப் பற்றி நூறு சுலோகங்களில் பாடப்பட்ட நூல் ஸ்ரீதயா சதகம் ஆகின்றது. அன்னையைப் போற்றும் ‘ஸ்ரீதயா சதகம்’ மட்டுமே இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## 2.5. தொகுப்புரை

- *அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நால்வகை உறுதிப் பொருட்களை கூறுவன பேரிலக்கியங்கள். அவற்றுள் குறைந்து வருவன சிற்றிலக்கியங்கள் ஆகும்.*
- *நூறு பாடல்களில் பாடப்படக்கூடிய சிற்றிலக்கிய வகை சதகம் எனப்படுகிறது.*
- *கி.பி. 11 ஆம் நூற்றாண்டு முதலே சதக இலக்கியத் தோற்றம் நிகழ்ந்துள்ளது. முதல் சதகம் கார்மண்டல சதகம்.*
- *கி.பி. 17, 18, 19 ஆம் நூற்றாண்டுகளில் செல்வாக்குப் பெற்ற இலக்கிய வகையாக சதகம் வளர்ச்சியடைந்தது.*
- *சதக இலக்கியங்கள் வரலாற்றுச் சதகங்கள், நீதி சதகங்கள், துதி சதகங்கள் என்னும் மூன்று வகைப்பட்டனவாய் அமைந்துள்ளன.*
- *வரலாற்றுச் சதகங்கள் மண்டல வரலாறு கூறுதல், தொண்டர் வரலாறு கூறுதல் என்னும் இரு நிலைகளில் காணப்படுகின்றன.*
- *கார் மண்டலத்தின் வரலாற்றைக் கூறுவதாய் அமைந்த கார் மண்டல சதகத்தைப் பின்பற்றி பின்னர் எழுந்த நூல்களும் மண்டல வரலாறு கூறுவனவாய் அமைந்தன.*
- *இம்மண்டல சதகங்கள் பொருண்மை அடிப்படையில் ஒன்றுபடுகின்றன.*
- *அவ்வம்மண்டலங்களில் வாழ்ந்த புலவர்கள், வள்ளல்கள், அரசர்கள், நூல்கள், நாயன்மார்கள், திருத்தலங்கள் பற்றிய செய்திகளைக் கூறுகின்றன.*
- *மண்டல சதகங்கள் ஐந்தும் வேளாளர் பெருமையை உலகிற்கு எடுத்துக்காட்டும் நோக்கில் படைக்கப்பட்டுள்ளன.*
- *நீதி சதகங்கள் இறைவனை முன்னிலைப்படுத்தி நேரடியாக நீதியுரைப்பன, பழமொழிகள் வாயிலாக நீதியுரைப்பன, உதாரணக் கதைகள் மூலம் நீதி உரைப்பன என்னும் மூன்று நிலைகளில் அமைந்துள்ளன.*
- *துதி சதகங்கள் இறைவனின் தோற்றப் பொலிவையும், சிறப்பையும் எடுத்துக்கூறி அவன் அருள் வேண்டுவதாய் அமைந்துள்ளன.*
- *வடமொழி சதகங்கள், நீதி, இன்பம், வீடு என்னும் மூன்றையும் உணர்த்துகின்றன.*
- *சதக இலக்கியங்கள் நூறு பாடல்களில் பாடப்பட்டிருத்தல் வேண்டும்.*
- *நூல் முழுவதும் ஒரே வகை யாப்பில் அமைந்திருத்தல்.*

- மகுடம் அமைதல் என்னும் சதக இலக்கிய அமைப்புகளை ஒவ்வொரு இலக்கியங்களிலும் காணலாம்.
- ஒவ்வொரு சதகங்களுக்குரிய பாடல் எண்ணிக்கை யாப்பு, மகுடம் ஆகியவை விளக்கப்பட்டுள்ளன.
- சதக இலக்கியங்களில் உள்ள இவ்வமைப்பு முறை வடமொழி சதகங்களில் இடம்பெறவில்லை.
- நூறு பாடல்களில் பாடப்படுதல் என்னும் கருத்தில் அனைத்து சதகங்களும் ஒன்றுபட்டுள்ளன.

**சான்றெண் குறிப்புகள்**

1. *ந.வீ.செயராமன்,* ***சதக இலக்கியம்,*** *ப.8.*
2. *மேலது., ப.11.*
3. *நா.பாலுசாமி,* ***வாழ்வியற் களஞ்சியம் (தொகுதி எட்டு),*** *ப.337.*
4. *நா.கதிரைவேற்பிள்ளை,* ***தமிழ்மொழி அகராதி,*** *ப.561.*
5. ***தமிழ் லெக்சிகன், தொகுதி 3,*** *ப.1255.*
6. *ச.சிவகாமி,* ***தமிழ்ச் சதக இலக்கியம்,*** *ப.5.*
7. *ப.பழனியம்மாள்,* ***தமிழில் சதக இலக்கியங்கள்,*** *ப.7.*
8. *சோ.ந.கந்தசாமி,* ***உலகச் செம்மொழிகள் இலக்கியம்,*** *முதல் தொகுதி, ப.218.*
9. *கி.இராசா,* ***இலக்கிய வகை விளக்க அகராதி,*** *ப.111.*
10. *த.இராசேசுவரி,* ***சதகத்திரட்டு, தொகுதி 1,*** ப.xiv.
11. ***தொல்.பொருள்.,*** *நூ.239.*
12. *ச.சிவகாமி,* ***தமிழ்ச் சதக இலக்கிய வகையும் வடிவும்,*** *ப.26.*
13. *ப.பழனியம்மாள்,* ***தமிழில் சதக இலக்கியங்கள்,*** *ப.4.*
14. *ந.வீ.செயராமன்,* ***சதக இலக்கியம்,*** *ப.26.*
15. *ப.பழனியம்மாள்,* ***தமிழில் சதக இலக்கியங்கள்,*** *ப.15.*
16. *படிக்காசுப் புலவர்,* ***தொண்டை மண்டல சதகம்,*** *பா.6, ப.9.*
17. *கதிர் முருகு,* ***குமரேச சதகம்,*** *பா.17.*
18. *சபாபதி முதலியார்,* ***அருணாசல சதகம்,*** *பா.4.*
19. *ப.பழனியம்மாள்,* ***தமிழில் சதக இலக்கியங்கள்,*** *ப.23.*
20. *மாணிக்கவாசகர்,* ***திருவாசகம், எட்டாந்திருமுறை,*** *ப.1.*
21. *மாணிக்கவாசகர்,* ***திருச்சதகம் தெளிவுரை,*** *ப.6.*
22. *நா.பாலுசாமி,* ***வாழ்வியற் களஞ்சியம், தொகுதி ஏழு,*** *ப.177.*
23. *அவிநாசி ஆறைகிழார்,* ***கார்மண்டல சதகம் (உரைப்பாயிரம்),*** ப.vii.
24. *ந.வீ.செயராமன்,* ***சிற்றிலக்கிய அகராதி,*** *ப.124.*
25. *ந.வீ.செயராமன்,* ***சதக இலக்கியம்,*** *ப.54.*
26. *படிக்காசுப் புலவர்,* ***தொண்டை மண்டல சதகம்,*** *ப.12.*
27. *ந.வீ.செயராமன்,* ***சதக இலக்கியம்,*** *ப.53.*
28. *ஆத்மநாத தேசிகர்,* ***சோழ மண்டல சதகம்,*** *பா.13, ப.10.*

29. வ.சுப.மாணிக்கம், **தமிழ்ப் புலவர் வரலாற்றுக் களஞ்சியம்,** ப.153.

30. மேலது., ப.153.

31. கார்மேகக் கவிஞர், **கொங்கு மண்டல சதகம்,** பா.2.

32. ந.வீ.செயராமன், **சதக இலக்கியம்,** ப.87.

33. நா.பாலுசாமி, **வாழ்வியற் களஞ்சியம், தொகுதி எட்டு,** ப.62.

34. முத்து இராமமூர்த்தி (உரை), "பதிப்புரை", **பாண்டி மண்டல சதகம்.**

35. மலைக்கொழுந்து நாவலர், **திருத்தொண்டர் சதகம் (சிறப்புப்பாயிரம்),** ப.2.

36. கதிர் முருகு, **குமரேச சதகம்,** பா.85.

37. ஆ.சிங்காரவேலு முதலியார், **அபிதான சிந்தாமணி, பா.89.**

38. ந.வீ.செயராமன், **சதக இலக்கியம்,** ப.111.

39. வ.சுப.மாணிக்கம், **தமிழ்ப் புலவர் வரலாற்றுக் களஞ்சியம்,** ப.63.

40. சிதம்பரம் பிள்ளை, **கயிலாசநாதர் சதகம்,** பா.100.

41. மேலது., பா.2.

42. பி.கனகராச ஐயர், **காசி விசுவநாத சதகம்,** ப.4.

43. ந.வீ.செயராமன், **சதக இலக்கியம்,** ப.143.

44. திருச்சிற்றம்பல நாவலர், **அண்ணாமலைச் சதகம்,** ப.7.

45. ஏழு சதகத்திரட்டு, **படிக்காசுப் புலவர் சரித்திரச் சுருக்கம்,** ப.4.

46. ந.வீ.செயராமன், **சதக இலக்கியம்,** ப.137.

47. முத்தப்பச் செட்டியார், **செயங்கொண்டார் சதகம்,** பா.4.

48. ந.வீ.செயராமன், **சதக இலக்கியம்,** ப.146.

49. மேலது., ப.146.

50. சபாபதி முதலியார், **அருணாசல சதகம்,** பா.4.

51. இரா.வ.கமலக்கண்ணன் (உரை), **எம்பிரான் சதகம் (பாயிரம்),** ப.2.

52. மேலது., பா.4.

53. த.இராசேசுவரி, **சதகத்திரட்டு, தொகுதி 10,** ப.186.

54. மாயூரம் கிருஷ்ணையர், "என் உரை", **அவையாம்பிகை சதகம்.**

55. மேலது., பா.10.

56. அரு.மருததுரை, **புராண இலக்கிய வரலாறு,** ப.9.

57. சோ.ந.கந்தசாமி, **உலகச் செம்மொழிகள் இலக்கியம் (முதல் தொகுதி),** ப.219.

58. கா.கைலாசநாத குருக்கள், **வடமொழி இலக்கிய வரலாறு,** ப.19.

59. ந.வீ.செயராமன், **சதக இலக்கியம்,** ப.172.

*60. பர்த்ருஹரி,* ***சிருங்கார சதகம் மற்றும் வைராக்ய சதகம்,*** *பக்.7-8.*

*61. பர்த்ருஹரி,* ***நீதி சதகம்,*** *ப.10.*

*62.* ***குறள்.****350.*

*63. ஸ்ரீதர வேங்கடேச ஐயா,* ***ஸ்ரீதயா சதகம்,*** *ப.19.*

# இயல் 3

# சதக இலக்கியங்களின் அமைப்பு

## 3.0. முன்னுரை

*தமிழ் இலக்கியம் சங்க இலக்கியங்கள், நீதி இலக்கியங்கள், பக்தி இலக்கியங்கள் என காலப்போக்கில் பாடப்படும் பொருண்மைகளில் மாற்றம் ஏற்பட்டு வந்துள்ளது. கூறப்படும் கருத்துக்களுக்கு ஏற்ப வடிவத்திலும் மாற்றத்தைக் காணமுடிகின்றது. உருவமும் உள்ளடக்கமும் பிரிக்க முடியாத ஒன்று என்பது விளங்குகிறது. ஒன்றை விடுத்து மற்றொன்றை அறிய இயலாது.*

> உள்ளடக்கம் மாறும் தன்மையுடையது. உள்ளடக்கத்திற்கு ஏற்ப உருவமும் மாறுகிறது. சில நேரங்களில் உள்ளடக்கத்தின் மாற்றத்திற்கு உருவம் காரணமாகிறது[1]

*என்று இலக்கியக் கொள்கைகள் என்னும் நூலில் ந.சுப்புரெட்டியார் குறிப்பிடுகிறார்.*

*ஒவ்வொரு இலக்கியத்துக்கும் உருவம் அல்லது வடிவம் என்பது முக்கியமானதாக விளங்குகிறது. இதன் அடிப்படையில் இலக்கியங்கள் வகைப்படுத்தப் படுகின்றன. தொல்காப்பியர்,*

> பாட்டு, உரை, நூல், வாய்மொழி, பிசி, அங்கதம் முதுசொல்[2]

*என வகைப்படுத்துகிறார்.*

*இலக்கியம் வடிவம் மற்றும் பொருள் அடிப்படையில் வகைப்படுத்தப் படுவதை,*

> இலக்கியம் வடிவம் நோக்கிச் சில வகையாகவும், பொருள் நோக்கில் சில வகையாகவும், புலவர் தம் மனநிலை பற்றி வேறு சில வகையாகவும் பாகுபாடு செய்யப்படும்[3]

*என்று மு.வ. குறிப்பிடுவதிலிருந்து அறியமுடிகின்றது.*

*வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்னும் பா வகைகளின் அடிப்படையில் நளவெண்பா, கலித்தொகை, பரிபாடல், திருக்குறள் போன்ற நூல்கள் அமைந்துள்ளன.*

பாடல் எண்ணிக்கை அடிப்படையில் நான்மணிமாலை, ஒருபா ஒருபஃது, பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு போன்ற இலக்கியங்களின் வரிசையில் சதக இலக்கியங்களும் விளங்குகின்றன.

நூறு பாடல்களில் பாடப்படுவது என்னும் அடிப்படையில் சதக இலக்கியங்கள் அமைந்துள்ளன. இவ்விலக்கியங்கள் வெளிப்படுத்தும் கருத்திற்கேற்ப பா வகையும் அமைந்துள்ளன. அதாவது நீதிகளை எளிமையாக எடுத்துரைப்பதற்கேற்ப ஆசிரிய விருத்தமும், பக்தியைப் பாட கலிவிருத்தமும், வரலாற்றுச் செய்திகளைப் பாட கட்டளைக் கலித்துறையும் கொண்டு சதக இலக்கியங்கள் பாடப்பட்டுள்ளன.

ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்ற இருபத்தியொரு சதக நூல்களின் அமைப்பு முறைகள் இவ்வியலில் விளக்கப் பெறுகின்றன.

## 3.1. பா அமைப்பு

### 3.1.1. காப்புச் செய்யுள்

தாம் இயற்றிய நூலினை இறைவன் காக்க வேண்டும் என நூலாசிரியர் நூலின் முதலில் காப்புச் செய்யுள் அமைத்துப் பாடுவது மரபு. இம்மரபினை தமிழ் இலக்கியங்களில் காணமுடிகின்றது. சதக இலக்கியங்களும் இம்மரபைப் பின்பற்றுகின்றன.

#### விநாயகர்

பொதுவாக நூலாசிரியர்கள் முழுமுதற் கடவுளான விநாயகரை வணங்கி நூல் தொடங்குவதே இயல்பு. சதக இலக்கியங்களில் சைவ சமயச் சதகங்கள் விநாயகரையும் வைணவச் சதகங்கள் திருமாலையும் காப்புக் கடவுளாகக் கொண்டு பாடப்பட்டுள்ளன. விநாயகரைப் பாடுமிடத்து வாதாபி கணபதி, விகடச் சக்கர கணபதி, மூத்தபிள்ளையார் பெயர்கள் இடம்பெற்றுள்ளன.

சித்தி புத்தி என்ற இரு தேவியருடன், கொன்றை மாலை அணிந்து பிரணவ சொரூபமாய் விநாயகர் விளங்குவதாக கார் மண்டல சதகக் காப்புச் செய்யுள் குறிப்பிடுகின்றது.

உம்பர் கோன் எம்பெருமான் ஓங்கறப்ப ளீசுரன்மேற்
பைம்பொருள்சே ருஞ்சதகம் பாடவே - அம்புவியோர்
ஆக்கும் துதிக்கையுளான் அன்புடையார்க் கின்பருளிக்
காக்கும் துதிக்கையுளான் காப்பு[4]

*என்னும் அறப்பளீசுர சதகத்தின் காப்புச் செய்யுள் விநாயகரைப் பாடுவதைக் காணலாம்.*

*பூதக்கால், தெய்வ உடல், யானைத்தலை என்னும் மூவடிவுடன் அஃறிணை, உயர்திணை என இரு திணை பொருந்தி ஒற்றைக் கொம்புடன் மூத்தப் பிள்ளையார் காட்சியளிப்பதாக கொங்கு மண்டல சதகம் குறிப்பிடுகின்றது.*

**திருமால்**

*திருமாலைத் துதிப்பதாய் அமைந்துள்ள எம்பிரான் சதகத்தின் காப்புச் செய்யுள் திருமாலையே காப்பாகக் கொண்டு பாடப்பட்டுள்ளது.*

என்றும் திருமாற்கே ஆளாவென் எம்பெருமான்
என்றும் எனக்கே பிரானாவான் - என்றும்
பிறவாத பேறாளன் பேர்ஆ யிரமும்
மறவாது வாழ்த்துகஎன் வாய்.[5]

*காப்புச் செய்யுள் இடம்பெறாத நூல்களும் உள. அவை தொண்டை மண்டல சதகம், வடிவேல் சதகம் மற்றும் பர்த்ருஹரியின் நீதி சதகம், வைராக்ய சதகம் போன்றவை ஆகும். காப்புச் செய்யுளுக்குப் பதிலாக கடவுள் வாழ்த்துப் பாடல் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. வடிவேல் சதகம் காப்புச் செய்யுள் மற்றும் கடவுள் வாழ்த்துப் பாடல் ஆகிய இரண்டும் இன்றி 'வான்சிறப்பினைப்' பாடுகின்றது.*

### 3.1.2. கடவுள் வாழ்த்து

*கார்மண்டல சதகம், தொண்டை மண்டல சதகம், பாண்டி மண்டல சதகம், செயங்கொண்டார் சதகம், கயிலாசநாதர் சதகம், எம்பிரான் சதகம், அண்ணாமலைச் சதகம் போன்ற நூல்களில் கடவுள் வாழ்த்துப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன.*

*கார்மண்டல சதகத்தில் ஹரிஹரர், உமாமகேசுவரன், இலக்குமி நாராயணன், சரசுவதி மனோகரன், வித்யாகுரு என ஐவரைப் பற்றிய ஐந்து பாடல்கள் இடம்பெற்றுள்ளன. மற்ற சதகங்களில் விநாயகருடன் முருகன், கலைவாணி பற்றிய வாழ்த்துப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன.*

சீர்மேவு திங்களணி தேவனே! வண்மைபெறு
தில்லை வளர்நட ராசனே!
செங்கண்மா லயனுநின் னடிமுடிகள் காணாமல்
தேடிய மஹா தேவனே!
தார்மேவு பொங்கர வணிந்தசிவ சம்புவே!
சங்கரா! கங்கா தரா![6]

*என்று கயிலாசநாதர் சதகம் சிவபெருமானை வாழ்த்திப் பாடுகின்றது.*

*வைணவ சதகமான 'எம்பிரான் சதகம்' ஸ்ரீராமானுஜர் மற்றும் பரமபதநாதனைப் போற்றித் துதிக்கின்றது.*

கிம்புருடர் கருடர்காந் தருவர் சித்தர்
கின்னரர்வித் தியாதரர்சங் கீதம் பாடத்
தும்புருநா ரதர்சனகா தியர்நற் சேடன்
சுரருடனே ரிஷிமுனிவர் பலரும் போற்ற
அம்புயன்நான் மறைஓத வீற்றிருக்கும்
அச்சுதனே உனக்குளந்தன் புன்சொல் லாலே
எம்பிரான் சதகமென விருத்தத் தாலே
இசைப்பதற்கே முன்நிற்பாய் எம்பி ரானே![7]

*பரமபதநாதனாகிய திருமாலை வாழ்த்தி நூலைத் தொடங்குகிறார் எம்பிரான் சதகத்தின் ஆசிரியர்.*

### 3.1.3. அவையடக்கம்

*அவையடக்கப் பாடல்கள் பாடுவது என்பது, பரந்து விரிந்த இப்பூவுலகத்தை ஒரு வரைபடத்தில் வரைந்து காட்டுவதைப் போன்றது என்றும், ஓர் ஊரைப் பாடுதல் எளிது; எனினும் பல ஊர்களில் உள்ள சான்றோர் பெருமக்களைப் பாடுதல் என்பது அரிதான செயல் என்றும், அவையடக்கமாகப்*

*பாடல்கள் இடம்பெற்றுள்ளன. மண்டல சதகங்களில் (சோ.ம.ச., கொ.ம.ச.) அவையடக்கப் பாடல் இடம்பெற்றுள்ளது.*

பத்தருளத் தினிற்சூரி தண்டலையென் றெமக் குரைத்த
பரமர் மீதில்
வித்தகர்முன் னுலகவழக் கத்தையெடுத் தொருநூறு
விருத்தஞ் செய்தா
ரத்தைநிக ரெனச்செயங்கொண் டார்மீதின் முத்தையைன்சிற்
றறிவி னாலே
மத்தகயந் தனக்குமுன்னே சிற்றெறும்பு நடந்ததென
வசனித் தேனே[8]

*எனும் பாடலில் செயங்கொண்டார் சதக நூலின் ஆசிரியர் அவையடக்கமாக மதயானையின் முன் சிற்றெறும்பு நடத்தலைப் போன்றது என்று குறிப்பிடுகிறார். சதக இலக்கியங்களில் காணலாகும் அவையடக்கப் பாடல்களைக் கொண்டு புலவர்தம் கல்வித் திறனையும், பணிவினையும் அறிந்து கொள்கிறோம்.*

### 3.1.4. வாழ்த்துப்பாடல்

*நூலின் இறுதியில் வாழ்த்துப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. தொண்டை மண்டலம் மற்றும் சோழ மண்டல சதகத்தில் நூலின் இறுதியில் வாழ்த்துப் பாடல் அமைந்துள்ளது. இப்பாடல்கள் நூலை வாழ்த்தி நூல் சிறப்பிக்கும் வேளாளர்களையும் அவர்தம் உழவுத் தொழிலையும் வாழ்த்திப் பாடுகின்றது.*

நிலைவாழ்வு பெற்றிடும் வேளாளர்
வாழிநன் னீருழவு
தலைவாழி யேகம்பர் சந்நிதி
வாழிசங் காழிதண்டு
சிலைவாழி வாழிதிரு நெடு
மாறிரு வேங்கடமா
மலைவாழி யெண்ணெண் கலைவாழி
வாழ் தொண்டை மண்டலமே[9]

*என்று தொண்டை மண்டல சதகப் பாடல், வேளாளரையும் அவர்தம் உழவுத்தொழிலையும் சிறப்பித்துப் பாடுகின்றது. பெரும்பான்மையான சதகங்களில் நூலின் இறுதியில் அமைந்துள்ள பாடல்கள் மூலம் நூல் இயற்றப்பட்ட காலம், நூலாசிரியர் வரலாறு, நூற்பயன் ஆகியவற்றை அறிந்து*

கொள்ள முடிகின்றது. மேலும் அந்நூல் யாரைக் கொண்டு யாரால் பாடுவிக்கப்பட்டது என்ற செய்தியும் மற்றும் நூல் அரங்கேற்றம் செய்யப்பட்ட இடம் பற்றிய செய்திகளையும் அந்நூல்களிலேயே காண முடிகின்றது.

சுத்த குலசோ ழியருமுடி
சூட்டும் காணி யாளர்களும்
கத்தர் எனவே வரவழைத்துக்
கவிக்கும் கனக மழைபொழிந்தே
சித்தர் எனும்பொன் வைத்தவர்சந்
நிதியில் சதகம் அரங்கேற
வைத்த அருணா சலராயன்
வாழ்வாம் சோழ மண்டலமே[10]

என்னும் சோழ மண்டல சதகப்பாடல் (103) மூலம் சித்தாமூர் நள்ளாறு அருணாசலம் என்பவர் ஆத்மநாத தேசிகரைக் கொண்டு பாடுவித்து, அவ்வூர் சிவபெருமான் சந்நிதியில் சோழ மண்டல சதகம் அரங்கேற்றம் செய்யப்பட்டமையை அறியமுடிகின்றது.

### 3.1.5. நூறு பாடல்கள் பாடப்படுதல்

நூறு பாடல்களில் பாடப்பட வேண்டும் என்பது சதக இலக்கியங்களின் பொது அமைப்பு ஆகும்.

கார் மண்டல சதகத்தின் முதற்பகுதியில் காப்பு, கடவுள் வாழ்த்து, அவையடக்கம் என ஏழு பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இவையல்லாது நூலில் நூறு பாடல்களும், நூலின் இறுதியில் கார் மண்டலத்தின் சிறப்பு, குருபரன் வாழ்த்து, நூலாசிரியர் வாழ்த்து என எட்டுப் பாடல்கள் காணப்படுகின்றன.

காப்புச் செய்யுள் மற்றும் பிற பாடல்களை உள்ளடக்கி நூறு செய்யுட்களும், அவை நீங்கலாக நூறு செய்யுட்களில் பாடப்படுதல் என்பதை சதக இலக்கியங்களில் பரவலாகக் காணமுடிகின்றது.

சதக இலக்கியங்கள் நூறு பாடல்களில் பாடப்படுதல் என்ற எண்ணிக்கையில் மாறுபட்ட நிலையையும் காணலாம். நூறு பாடல்களை உடைய

சதகங்கள், நூற்றுக்கும் மேற்பட்ட எண்ணிக்கையுடைய சதகங்கள் பற்றிய விவரங்கள் இயல் இரண்டில் கொடுக்கப்பட்டுள்ளன.

பாடல் எண்ணிக்கைக்கேற்ப பெயரிடும் முறையை தமிழ் இலக்கியங்களில் காணலாம். சதக இலக்கியங்களில் ஐங்குறுநூறு, அகநானூறு, பதிற்றுப்பத்து போன்றவை எண்ணிக்கை அடிப்படையில் அமைந்துள்ளன. நூறு பாடல்களைக் கொண்ட இலக்கியங்களுக்கு தமிழில் பெயர் வழங்கப்படாமல் சதகம் என்று வடமொழிப் பெயரிலேயே அமைந்துள்ளமை நோக்குமிடத்து வடமொழி செல்வாக்கு மிக்கிருந்த காலத்தில் சதக இலக்கியங்கள் தோன்றின என்பதை அறியமுடிகின்றது.

### 3.1.6. ஒரே விதமான யாப்பில் பாடப்படுதல்

சதக இலக்கியங்கள் இன்ன யாப்பில் பாடப்படுதல்வேண்டும் என்பதை பாட்டியல் நூல்கள் குறிப்பிடவில்லை. பாடுபொருளுக்கேற்ப பாவகையைப் புலவர்கள் தாமாக அமைத்துக் கொண்டனர் என்பதை அறியமுடிகின்றது. எனினும்,

நூறான வெண்பாக் கலித்துறையின்
ஆதல் சதகம்[11]

என்று பிரபந்த மரபியல் குறிப்பிடுகின்றது. இந்நூல் வெண்பா கலித்துறையில் சதகம் இயற்றப்படல் வேண்டும் என்கிறது. இதுவரை இயற்றப்பட்ட சதக இலக்கியங்களை நோக்குமிடத்து, கட்டளை கலித்துறை, ஆசிரிய விருத்தம், கலிவிருத்தம் என்னும் மூன்று பாக்கள் அவ்விலக்கியங்களில் பயின்று வருதலைக் காணலாம்.

> கட்டளைக் கலித்துறை யாப்பு இலக்கியவாணர்களால் யாப்புப் புலமையை வெளிப்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்பட்டது. எழுத்தெண்ணி அடிவகுக்கும் இத்தகைய யாப்பியல் மரபு பிற்காலத்தில் போற்றப்படாது அருகிவிட்டாலும்கூட, சதக இலக்கியங்கள் சில இவ்யாப்பு வகையைப் பொன்னே போல் போற்றியுள்ளன[12]

என்னும் ந.வீ.செயராமன் கூற்றுப்படி மண்டல வரலாறு கூறும் சதகங்கள் கார்மண்டல சதகம், தொண்டை மண்டல சதகம், கொங்கு மண்டல சதகம், பாண்டி மண்டல சதகம் போன்றவை கட்டளைக் கலித்துறையில் பாடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**கட்டளைக் கலித்துறை**

*மண்டல சதகங்கள் அம்மண்டலங்களில் வாழ்ந்த புலவர்கள், வள்ளல்கள், அரசர்கள், நாயன்மார்கள், ஆழ்வார்கள் ஆகியோர்களின் வரலாறுகளைக் கூறுகின்றன. வரலாற்றை அறிந்து கொள்ள கற்றறிந்தவர்களே முனைவர் என்பதாலும், கற்றறிந்த மாந்தர் மத்தியில் தம் புலமைத் திறனை வெளிப்படுத்தும் நோக்கத்தினாலும் புலவர்கள் மண்டல சதகங்களை கட்டளைக் கலித்துறையில் பாடியிருக்கலாம் என்பதை உணரமுடிகின்றது.*

**ஆசிரிய விருத்தம்**

*நீதி சதகங்கள் ஆசிரிய விருத்தத்தில் பாடப்பட்டுள்ளன. மக்களுக்கு நன்னெறிகளைப் போதிப்பதற்கும், நீதிகளைக்கூறி அவர்களை அறிவுறுத்துவதற்கும் ஏற்ற பா வகையாக விருத்தம் விளங்குகின்றது. மக்கள் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் நீதிகளைக் கூறுவதற்கு விருத்தப்பா பொருத்தமுடைத்து, ஆகையால் ஆசிரிய விருத்தத்தில் நீதி சதகங்கள் பாடப்பட்டுள்ளன.*

*குமரேச சதகம், அறப்பளீசுர சதகம், கயிலாசநாதர் சதகம், வடிவேல் சதகம், அண்ணாமலைச் சதகம் போன்றவை ஆசிரிய விருத்தத்தில் அமைந்த நீதி சதகங்கள் ஆகும்.*

**கலி விருத்தம்**

*சதக நூலாசிரியர்கள் இறைவனைப் போற்றிப் பாடுவதற்கு ஏற்ற பா வகையாகக் கலிவிருத்தத்தைக் கையாண்டுள்ளனர். பொதுப்படையாக, சதகப் பாடல்களை நோக்குமிடத்து நூல் முழுவதும் ஒரே வகை யாப்பில் பாடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.*

**3.1.7. மகுடம் அமைதல்**

*தமிழ் இலக்கியங்களில் எந்த இலக்கியத்திற்கும் இல்லாத தனிச்சிறப்புடன் சதக இலக்கியங்களில் மகுடம் அமைந்துள்ளது. வடமொழியைப் பின்பற்றி சதக இலக்கியங்கள் தோன்றியிருப்பினும் அம்மொழியில் இல்லாத புது அமைப்பாக*

*மகுடம் இடம்பெற்றுள்ளது. முதல் சதகமான 'கார் மண்டல சதகம்', 'காராளர் மண்டலமே' என்னும் தொடரை மகுடமாக அமைக்க, அதைத் தொடர்ந்து அனைத்து சதக இலக்கியங்களும் இவ்வமைப்பைப் பின்பற்றியுள்ளன.*

*இம்மகுடமானது நூற்பெயரிலோ, பாட்டுடைத் தலைவர் பெயரிலோ நூலின் ஈற்றடியில் அமைதல் என்பது பொது விதி. ஈற்றடி மாறி மகுடம் அமைந்த சதகங்களும் உள்ளன. மகுடம் அமையாத நூல்களும் உள்ளன. இவை பற்றிய முழுமையான விவரங்கள் இயல் இரண்டில் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றிற்கான எடுத்துக்காட்டுக்கள் இங்கு தரப்படுகின்றன.*

**மண்டலத்தின் பெயரில் மகுடம் அமைதல்**

*மண்டல சதகங்களில் அமைந்துள்ள மகுடமானது மண்டலத்தின் பெயர் மற்றும் நூற்பெயரில் அமைந்துள்ளன.*

பொன்னும் மணியுந் தருகுன்று மாதர் புணர்ந்துவப்பத்
துன்னும் பொழிலுங் கதிரிரண் டேறாத் துடவையுநூற்
பன்னும் புலவர் பரவிய பாக்கமும் பட்டினமும்
மன்னும் நிலப்பரப் பாயது காராளர் மண்டலமே[13]

*என்னும் கார்மண்டல சதகப்பாடல் 'காராளர் மண்டலமே' என்னும் மகுடமானது, மண்டலத்தின் பெயர் மற்றும் 'நூற்பெயரில்' அமைந்துள்ளது.*

*இதைப்போன்றே தொண்டை மண்டல சதகம், சோழ மண்டல சதகம், கொங்கு மண்டல சதகம், பாண்டி மண்டல சதகம் ஆகியவைகளிலும் மகுடம் அமைந்துள்ளது.*

**இறைவன் பெயரில் மகுடம் அமைதல்**

*இறைவன் பெயரில் அமைந்துள்ள மகுடமானது ஒற்றைச்சொல், அடுக்குத் தொடர், நீண்ட தொடரில் அமைந்துள்ளன.*

நாகாரி வாகனனே கேச வாநின்
நற்பதங்கண்டு ஈடேறக் குருஉரைக்கும்
ஏகாந்த உபதேசப் பொருளை நம்பி
எண்ணமெய்ஞ்ஞா னந்தருவாய் எம்பி ரானே![14]

*என்று ஒற்றைச் சொல்லிலும்,*

நினைக்குந் தொறும் நினைக்குந் தொறும்
நீயன்றியொன் றும்காண்கிலன்
அனக்குண்டமோர் பூதக்கருள்
அருணாசலா! அருணாசலா![15]

*என்று அடுக்குத்தொடரிலும்,*

வாசவனும் உம்பரனை வரும்விசய சயஎன்று
வந்துதொழு தேத்துசரணா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே![16]

*என்று நீண்டத் தொடரிலும் மகுடம் இடம்பெற்றுள்ளது.*

அடைக்கலம் எனத்தேடி வருவோர் தமைக்காக்கும்
அவனே மகாபுரு டனாம்
அஞ்சாமல் எதுவரினும் எதுபோ கினும்சித்தம்
அசைவிலன் மகாதீ ரனாம்.
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
அடர்க்கின்ற முத்தலைச் சூலனே லோலனே
அமலனே அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுரதே வனே[17]

*என்னும் பாடலில் இறைவன் பெயருடன் வள்ளல் பெயர் இணைந்து மகுடம் அமைந்துள்ளது.*

**மகுடம் இடம்பெறாதவை**

*தண்டலையார் சதகம், மற்றும் வடமொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட நீதிசதகம், வைராக்ய சதகம், ஸ்ரீதயா சதகம் ஆகியவற்றில் மகுடம் இடம்பெறவில்லை.*

மேட்டுக்கே விதைத்த விதை, வீணருக்கே
செய்த நன்றி, மேயும் பட்டி
மாட்டுக்கே கொடுத்தவிலை, பரத்தையர்க்கே
தேடியிட்ட வண்மை யெல்லாம்
பாட்டுக்கே அருள்புரியும் தண்டலையார்
வீதிதொறும் பரப்பி டாமல்

காட்டுக்கே யெறித்தநிலா கானலுக்கே

பெய்தமழை கடக்குந் தானே![18]

என்னும் தண்டலையார் சதகப் பாடலில் மகுடம் இல்லாது பழமொழி இடம்பெற்றிருப்பதைக் காணலாம்.

### 3.1.8. மொழிநடை

ஒரு இலக்கியத்தில் மொழிநடை உவமை, உருவகம், பழமொழிகள், வர்ணனைகள் எனப் பல நிலைகளில் இலக்கிய வகைகளுக்கேற்ப அமைந்துள்ளன. சதக இலக்கியங்களில் உவமை, உருவகம், அடுக்குத் தொடர்கள், வடமொழிச் சொற்கள், சந்த நயங்கள் என்பன போன்ற மொழிநடைகளைக் காணமுடிகின்றது.

> 17, 18, 19 ஆம் நூற்றாண்டுகளில் சதகங்கள் இயற்றுவதில் ஆர்வம் மிகுதியாக விளங்கியது. சதகங்கள் அக்கறையுடன் படிக்கப்பட்டு வந்தன. திண்ணைப் பள்ளிக் கூடங்களில் சதகம் கற்பது கட்டாயமாக இருந்தது. நீதிகள் பல நல்ல உவமைகளோடு உணர்த்தப்பட்டமையால் சுவை குன்றாமல் இருந்தன. பலரும் கற்பதற்கு உரிய வகையில் அந்த நூல்களின் நடை எளிமையும் ஓட்டமும் உடையதாக உள்ளது. எதுகை மோனைகள் மனப்பாடம் செய்வதற்கு உதவியாக அமைந்துள்ளன[19]

என்று மு.வரதராசனார் கூற்று சதக இலக்கியங்கள் படிப்பதற்கு எளிமையான மொழிநடையில் அமைந்துள்ளமையைக் காணமுடிகின்றது.

#### உவமை

கருத்துக்களை எளிமையாக புரிந்து கொள்ள ஆசிரியர் கையாளுகின்ற மிகச்சிறந்த உத்தியாக உவமை விளங்குகின்றது. சதக இலக்கியங்களில் குறிப்பாக நீதி சதகங்களில் பெருமளவில் உவமைகள் பயன்படுத்தப் பட்டுள்ளன.

ஒரு உவமை கூறி கருத்தை விளக்குதல், பல உவமைகளைக் கூறி கருத்தினை விளக்குதல் என்ற இருநிலைகள் காணப்படுகின்றன. ஈகைக்குணம் இல்லாதவர்களை ‘திரவியத்தை பாதுகாக்கும் பூதம் போன்றவர்கள்’ என்று குமரேச சதகம் குறிப்பிடுவதை,

திரவியம் காக்குமொரு பூதங்கள் போல்பணந்

தேடிப் புதைத்து வைப்பார்

சீலைநல மாகவும் கட்டார்கள் நல்அமுது

செய்துணார் அறமும்செயார்[20]

*என்னும் பாடலில் காணலாம்.*

பெருத்திருந்த பூசனிப்பூ வின்கீழ்க் கொட்டை

பெருத்துஉயர்ந்து காயாகப் பூத்தேய்ந் தால்போல்[21]

*என்னும் உவமைத்தொடர் பூசனிப்பூ பெரிதாகவும் காய் சிறியதாகவும் இருக்கும். பின்னர் வளர்ந்து காய் பெரிதாகி பூ சிறியதாகி உதிர்ந்து விடும். அதுபோல நல்லறிவை கீழ்மையான அறிவு அழித்து விடும். ஆதலால் ஆச்சாரியன் சொற்படி நடக்க வேண்டும் என்பதை அறிவுறுத்துகின்றது. இவ்வாறாக ஒரு உவமைக் கூறி கருத்தினை விளக்குவதைக் காணமுடிகின்றது.*

*ஒரு பொருளை விளக்க பல உவமைகள் கூறப்படுதலை அருணாசல சதகத்தில் காணமுடிகின்றது.*

எள்ளுக்குள்எண் ணெய்போலவும்

எறிமாமணி யொளிபோலவும்

கள்ளுற்றபூ மணம் போலவும்

கனகத்தூறும் ஒளிபோலவும்

விள்ளுற்றிடாது உயிர்தோறுநீ

மேவுற்றதோர்ந்த அவர்ப் போற்றுவேன்

அள்ளுற்றநீறு அணிமெய் யனே

அருணாசலா! அருணாசலா![22]

*இறைவன் எல்லா உயிருக்குள்ளும் நிறைந்து அருள் வழங்கும் தன்மையைப் பல உவமைகள் மூலம் அருணாசல சதகம் விளக்குகின்றது.*

**உருவகம்**

*மாயூரத்தில் இருக்கும் அவையாம்பிகை அன்னையைக் கிளியாகவும், பழமாகவும் உருவகித்துப் பாடுகின்றது அவையாம்பிகை சதகம். இதனை,*

உச்சிக் கிளியே அருட்கிளியே உணர்வுக்கு

உணர்வாய் உயிர்க்கு உயிராய்

உதித்த கிளியே பரவெளியில் ஒளிவான்
பழத்தை உன்னிவரும்
நற்சொற் கிளியே[23]

*என்றும்,*

பண்டு மறையின் முடிவினுள்ளே பழுத்த
பழமே அருட்பழமே[24]

*என்றும் பாடுவதின் மூலம் சதக இலக்கியங்களின் உருவகச் சிறப்பை அறிந்து கொள்ள முடிகின்றது.*

**சந்த நடை**

வெண்பாவிற் புகழேந்தி பரணிக்குச்
செயங்கொண்டான் விருத்த மென்னும்
ஒண்பாவுக் குயர்கம்பன் கோவையுலா
அந்தாதிக் கொட்டக் கூத்தன்
கண்பாவு கலம்பகத்திற் கிரட்டையர்கள்
வசைபாடக் காளமேகம்
பண்பாகப் பகர்சந்தம் படிக்காசலா
தொருவர் பாரொ ணாதே[25]

*என்னும் தனிப்பாடல் சந்தம் பாடுவதில் வல்லவர் படிக்காசுப் புலவர் என்பதை எடுத்துரைக்கின்றது.*

இளைத்தெழு வெண்பிறை யார்கச்சி
யேகம்பர் இன்னருளால்
விளைத்தெழு நாலில் ஒருமருந்
தாலும் விலக்கரிதாய்[26]

*என்னும் தொண்டை மண்டல சதகப் பாடல் எதுகை மோனையுடன் படிப்பதற்கு இனிய சந்த நடையுடன் அமைந்துள்ளது.*

**வடசொற் கலப்பு**

*வடமொழியில் தமிழ்ச்சொற்கள் கலந்திருப்பது போன்று தமிழ்மொழியில் வடசொற்கள் மிகுதியாக இடம்பெற்றுள்ளன.*

*வடமொழிச் செல்வாக்கு மேலோங்கி இருந்த காலக்கட்டத்தில் சதக இலக்கியங்கள் தோன்றியமையால் அவற்றில் வடசொற்கள் பெருமளவில் கலந்துள்ளன. வடசொற்கள் தமிழ்ப்படுத்தப்படாது அப்படியே இடம்பெற்றுள்ளமைக்கு, அம்மொழியின் செல்வாக்கோ அல்லது புலவர்தம் விருப்பமோ காரணமாக இருக்கலாம். குறிப்பாக சில எடுத்துக்காட்டுகள் மட்டும் இங்கு தரப்படுகின்றன.*

*அறப்பளீசுர சதகத்தில் 'மிருதுபாஷி', லீலை, சதகம், வித்யா, மந்த்ரம், லவணம், தியாகம், ப்ரவாகம் என்னும் வடசொற்கள் காணப்படுகின்றன.*

கணவனுக் கினியளாய் மிருதுபாஷி யாய்மிக்க
கமலைநிகர் ரூப வதியாய்க்

*என்னும் அறப்பளீசுர சதகப் பாடலில் (பா.2) மிருதுபாஷி, ரூபவதி என்னும் வடசொற்கள் இடம்பெற்றுள்ளமை காணலாம்.*

*குமரேச சதகத்தில் காயத்திரி, ஆகமம், யாகம், புனிதம், சகுணம், நிக்கிரகம், உசிதம், தபோதனர் போன்ற சொற்கள் இடம்பெற்றுள்ளன.*

*பூர்ணசந்திரன், போஜனம் போன்ற வடசொற்களும் பழமொழிகளும் தண்டலையார் சதகத்தில் காணப்படுகின்றன. பழமொழிகள் மொழிநடையின் ஒரு பகுதி என்பதால் அவை இங்குக் குறிப்பிடப்படுகின்றன.*

## 3.2. பாடுபொருள் அமைப்பு

*கி.பி.17, 18, 19 ஆம் நூற்றாண்டுகளில் செல்வாக்குப் பெற்ற இலக்கிய வகையாக சதகம் விளங்கிற்று. அக்காலத் தமிழகம் நாயக்கர்கள், மராட்டியர்கள், ஐரோப்பியர்கள் போன்றோரின் ஆட்சிக்குட்பட்டு விளங்கியது. 'கி.பி.16 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி முதல் கி.பி.18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி வரை தமிழ் இலக்கிய வரலாற்றில் நாயக்கர் காலம் இடம்பெறுகின்றது. இராயர்கள் தெலுங்கு இலக்கியத்திற்கும் சமஸ்கிருத மொழிக்கும் கல்விக்கும் ஆதரவளித்தனர்' என்னும் கருத்தினை நோக்குமிடத்து வடமொழியிலிருந்து தமிழுக்கு அறிமுகமான சதக இலக்கியங்கள் செல்வாக்குப் பெற்று விளங்குவதற்கு இதனையும் ஒரு காரணமாகக் கொள்ளலாம்.*

### 3.2.1. வரலாற்றுச் சதகங்கள்

#### 3.2.1.1. மண்டல வரலாறு கூறுதல்

> தமிழ்நாட்டின் வரலாற்றை அறியப் பழைய கல்வெட்டுக் குறிப்புகள் உதவுகின்றன. தமிழ்க் கவிஞர்களும் அறிஞர்களும் வரலாற்றை எழுதி வைக்க முன்வரவில்லை. அந்நிலையில் புலவர் ஒருவர் தாம் வாழ்ந்த நாட்டுப் பகுதியில் கண்டும் கேட்டும் அறிந்த பல செய்திகளைத் தொகுத்து ஒரு சதகம் பாடினார். உடனே வேறு புலவர் சிலர் நாட்டின் மற்றப் பகுதிகளின் நிகழ்ச்சிகளைத் தொகுத்துச் சதகங்கள் பாடினார்கள் தொண்டை மண்டல சதகம், பாண்டி மண்டல சதகம், சோழ மண்டல சதகம், கொங்கு மண்டல சதகம் முதலியவை அப்படித் தோன்றியவை[27]

*என்று வரலாற்றுச் சதகங்களின் தோற்றம் பற்றி மு.வரதராசனார் கூறுவதிலிரந்து அறியமுடிகின்றது.*

*மண்டலங்களின் வரலாறு கூறும் சதகங்களில் ஒரு பொது அமைப்பினைக் காணமுடிகின்றது. அதாவது அம்மண்டலங்களின் எல்லை அங்கு பாயும் நதிகள், இறைவன் எழுந்தருளியிருக்கும் திருத்தலங்கள், இறைவன் நிகழ்த்திய அற்புதங்கள், நாயன்மார்கள், ஆழ்வார்கள், கடையெழு வள்ளல்கள், அரசர்கள், புலவர்கள், நூல்கள், வேளாளர்கள் பற்றிய செய்திகளைக் கூறுவதில் அனைத்து மண்டல சதகங்களும் ஒப்புமையுடன் காணப்படுகின்றன. எனினும் முதல் சதகமான கார்மண்டல சதகம் இவ்வமைப்பிலிருந்து சற்று மாறுபட்டுக் காணப்படுகின்றது.*

*மண்டலச் சிறப்பு, தசாங்கம், குழுவினர் வகை, பூர்வ சரிதை, சமய நெறி, மொழியும் நூலும் வள்ளல்களும் புலவரும், மடநல்லார் மாட்சி, வேளாளர் சாமானிய தருமம், கார்காத்த வேளாளர் விசேஷலக்ஷணம், கலை, வித்தை, அரசு வாழ்த்து என்னும் பன்னிரண்டு தலைப்புகளில் கார்மண்டலத்தின் வரலாறு கூறப்பட்டுள்ளது. நூலின் இறுதியில் மண்டலச் சிறப்பு, குருபரன் வாழ்த்து, நூலாசிரியர் வாழ்த்து என்னும் மூன்று தலைப்புகளில் பாடல்கள் இடம்பெற்றுள்ளன.*

*வடமொழி மரபைப் பின்பற்றி தமிழில் எழுந்த முதல் சதகம் ஆகையால் வடமொழி மரபின்படி பத்துத் தலைப்புகளில் கூடுதலாக ஒரு தலைப்பு என*

பதினோரு தலைப்புகளில் கார்மண்டலத்தின் வரலாற்றை இந்நூல் விரித்துரைக்கின்றது.

இவ்வாறு தலைப்புகளோடு அமைந்த இவ்வமைப்பு முறையை பின்னர் தோன்றிய மண்டல சதகங்களில் காணமுடியவில்லை. எனினும் பாடும் பொருண்மையில் மாற்றம் இன்றி வள்ளல்கள், புலவர்கள் என அம்மண்டலத்தின் வரலாறு கூறுவதில் அனைத்து மண்டல சதகங்களும் ஒன்றுபடுகின்றன.

**மண்டலங்களின் சிறப்பு**

இப்பகுதி மண்டலங்களின் எல்லைகள் மற்றும் நதிகள் பற்றிக் குறிப்பிடுகின்றது. மண்டலங்களின் நாற்புற எல்லைகள் மட்டுமன்றி அதன் உட்பிரிவுகளான நாடுகள், கோட்டங்கள் பற்றிய செய்திகளையும் எடுத்துரைக்கின்றது. கார்மண்டல சதகம், கொங்கு மண்டல சதகம், தொண்டை மண்டல சதகம், சோழ மண்டல சதகம், பாண்டி மண்டல சதகம் என்னும் ஐந்து மண்டலங்களின் எல்லைகள் மற்றும் அங்கு பாயும் புகழ்பெற்ற நதிகள் பற்றிய செய்திகளையும் இந்நூல்கள் குறிப்பிடுகின்றன.

தொண்டை மண்டலம் இருபத்து நான்கு கோட்டங்களாக பிரிக்கப்பட்டிருந்தது என்பதை,

அந்தப் புரமு மறுநான்கு
கோட்டகத் தாரு மொன்றாய்க்
கந்தப் புராணம்பன் னீராயி
ரஞ்சொன்ன கச்சியப்பர்[28]

என்னும் தொண்டை மண்டல சதகப் பாடல்வழி அறியமுடிகின்றது.

நதிகளைப் பற்றிக் கூறுமிடத்து கார்மண்டல சதகமும் கொங்கு மண்டல சதகமும் காவிரி நதியின் தோற்றுவாயைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. காவிரியால் சோழ நாடு செழிப்புற்று விளங்கியது என்பதை சோழ மண்டல சதகம் கூறுகின்றது.

பாண்டி மண்டல சதகம் வையை நதியையும், தொண்டை மண்டலம் பாலாற்றினையும் சிறப்பித்துப் பாடுகின்றது.

அலை வைத்த வையைத் திரைச் சீத னத்தையு மள்ளிக் கொண்டு
குலை வைத்த தண்ணறுந் தாதலர் பூமணங் கொள்ளை கொண்டு
நிலை வைத்த சந்தன வாசமும் வாரிநிலவு தென்றல்
மலயத் தமிழ்மணமே வீசும் பாண்டியன் மண்டலமே[29]

*என்று வையைநதி சிறப்பித்துப் பாடப்பட்டுள்ளது.*

**திருத்தலங்கள்**

*சோழ மண்டலம், பாண்டி மண்டலம், தொண்டை மண்டலம், கொங்கு மண்டலம் போன்ற பகுதிகளில் உள்ள திருத்தலங்களைப் பற்றி அச்சதகங்கள் குறிப்பிடுகின்றன. ஆனால் கார்மண்டல சதகம், திருத்தில்லை, திருவரங்கம், கடம்பாரணியமாகிய மதுரை, தொண்டை நாட்டில் காஞ்சி முதலிய சப்த ஸ்தானங்களை கார்மண்டலத்தார் அமைத்தனர் என்று குறிப்பிடுகின்றது.*

*திருமாலை வழிபடுபவர்கள் கைகளில் சங்கு சக்கர வாஞ்சியத்தை தரித்தும், சிவனை வழிபடுபவர்கள் சிவதீட்சை பெற்றும், விநாயகரை முழுமுதற் கடவுளாக வழிபட்டமையையும் கார்மண்டல சதகம் குறிப்பிடுகின்றது.*

*மேலும் பாடல் பெற்ற தலங்களையோ அல்லது சிறப்பு வாய்ந்த திருத்தலங்களைப் பற்றிய செய்திகளையோ கார்மண்டல சதகத்தில் காணமுடியவில்லை.*

*சோழ மண்டல சதகம், சுவாமிமலை, சிதம்பரம், திருவாரூர், திருவரங்கம், திருவீழிமிழலை ஆகிய திருத்தலங்களைப் பாடுகின்றது. தொண்டை மண்டல சதகத்தில் காஞ்சிபுரம் - விகடச் சக்கர விநாயகரைப் பெற்றதால் காஞ்சிபுரம் பெருமை கொள்வதுடன் மூவுலகுக்கும் இணையாக விளங்குவதும் குறிப்பிடப்பட்டுள்ளது. காஞ்சிபுரம் விளங்குவதாக தொண்டை மண்டல சதகம் குறிப்பிடுகின்றது.*

*மேலும், திருக்காளத்தி, திருக்கச்சி ஏகம்பம் கூவம், திருக்கழுக்குன்றம் உள்ளிட்ட திருத்தலங்கள் பற்றிய முப்பத்து இரண்டு பாடல்கள் இந்நூலுள் காணப்படுகின்றன. கொங்கு மண்டல சதகம் வெஞ்சமாக்கூடல், திருஆநிலை,*

திருப்பாண்டிக் கொடுமுடி, திருச்செங்கோடு, திருநண்ணாவூர், திருமுருகன்பூண்டி, அவிநாசி, பேரூர், பழனி ஆகிய திருத்தலங்களைப் பற்றியும், பாண்டி மண்டல சதகம், திருச்சுழி, திருநெல்வேலி, திருப்பரங்குன்றம், திருவாடனை, காளையார் கோயில், மதுரை, திருக்குற்றாலம், இராமேசுவரம் ஆகிய தலங்களையும் பாடுகின்றன.

**இறைவன் நிகழ்த்திய அற்புதங்கள்**

மண்டல சதகங்களில் கொங்கு மண்டல சதகம், மற்றும் பாண்டி மண்டல சதகம் ஆகிய இருநூல்களிலும் இறைவன் நிகழ்த்திய அற்புதங்கள் பாடப்பட்டுள்ளன. மற்ற சதகங்களில் இவை குறிப்பிடப்படவில்லை என்பதை காணமுடிகின்றது. கொங்கு மண்டல சதகத்தில் இடம்பெறும் அற்புதச் செயல்களாவன:

- காமதேனு கரூர் சிவனை வணங்கி - படைக்கும் ஆற்றல் பெற்றமை.
- அகத்தியருக்காக சிவன் பாதாலத்து அழுந்தி காட்சி கொடுத்தமை.
- முதலையுண்ட பாலகனை சுந்தரர் மீட்டமை.
- சுந்தரருக்கு கொடுக்கப் பொன்னில்லாத காரணத்தால் பட்டிபெருமான் பள்ளன் ஆனமை.
- நந்தியின் முகத்தை இறைவன் வெட்ட முகம் வளர்ந்தமை.
- கல்லான இடபம் எழுந்து கடலைத் தின்றமை.
- திருச்செங்கோட்டு முருகன் மாடுமேய்க்கும் சிறுவனாக வந்தமை.
- பயறு மிளகானது

போன்ற இறை அற்புதங்களை கொங்கு மண்டல சதகம் குறிப்பிடுகின்றது.

பெருமை மிகுமர வச்சிலம் பாமெனிற் பெட்புறுமவ்
வரவு படம்விரித் தடாததென் னென்றகத் துனுமோர்
கருவி வெருக்கொள வாமேய்ப் பவனாக் கனிந்துதிரு
மருகன் மயில்கொத்து மென்றெனச் சொல்கொங்கு மண்டலமே[30]

வேலவன் மேய்ப்போனாக வந்தமையை இப்பாடல் எடுத்துரைக்கின்றது.

பாண்டி மண்டல சதகம், சோமசுந்தரப் பெருமான் பிரம்படிபட்ட வரலாற்றினையும், தருமிக்கு பொற்கிழி கொடுத்த நிகழ்வும், மற்றும் இறைவன் நிகழ்த்திய 64 திருவிளையாடல்களையும் கூறுகின்றது.

**நாயன்மார்கள்**

சிவபெருமானை வழிபட்டு சிவபதம் அடைந்த அறுபத்து மூன்று நாயன்மார்களில் இருபத்து நான்கு பேர் பற்றிய வரலாறுகளை, கார்மண்டல சதகம் தவிர மற்ற நான்கு சதகங்களும் எடுத்துரைக்கின்றன.

மானக்கஞ்சாறர், இளையான்குடி மாறர், அரிவாட்டாயர், ஏயர்கோன் கலிக்காமர், கோட்புலியார், முனையடுவார் செருத்துணையார், சத்தியார், கணம்புல்லர் போன்றோரின் வரலாறுகள் தனித்தனிப் பாடல்களாக சோழ மண்டல சதகத்தில் காணப்படுகின்றன.

தில்லை மூவாயிரவர், திருஞானசம்பந்தர், சண்டிகேசுவரர், பூசலார், நீலநக்க நாயனார், சோமாசிமாற நாயனார் போன்ற இவ்வடியார்கள் சோழ நாட்டில் வாழ்ந்தவர்கள் என்னும் குறிப்பினை ஒரே பாடலில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

சாக்கிய நாயனார், இளையான்குடிமாறர், மூர்க்கர், கலியர், திருக்குறிப்புத் தொண்டர், வாயிலார், திருஞானசம்பந்தர் ஆகியோரைப் பற்றிய குறிப்புகளைத் தொண்டை மண்டல சதகத்திலும் காணமுடிகின்றது.

சோழ மண்டல சதகம், கொங்கு மண்டல சதகம், பாண்டி மண்டல சதகம் போன்றவையும் நாயன்மார்களைக் குறிப்பிடுகின்றன. மண்டல சதகங்களில் கூறப்படும் இருபத்து நான்கு நாயன்மார்களில், திருஞானசம்பந்தரை தொண்டை மண்டலம், கொங்கு மண்டலம், பாண்டி மண்டல சதகங்கள் ஆகிய மூன்று நூல்களும் சிறப்பித்துப் பாடுகின்றன.

மேலும் மானக்கஞ்சாறர், செருத்துணையார், கோட்புலி நாயனார் ஆகியவர்களைப் பற்றி சோழ மண்டல சதகம் மற்றும் பாண்டி மண்டல சதகம் முதலிய நூல்கள் குறிப்பிட்டுக் காட்டுகின்றன.

### ஆழ்வார்கள்

*வைணவ சமயம், திருமாலைப் போற்றிப் பாடிய அடியவர்கள் பன்னிருவரை ஆழ்வார்கள் என்றழைத்தது. இப்பன்னிருவரில் திருமழிசை ஆழ்வார், ஆண்டாள், நம்மாழ்வார் ஆகியோரைப் பற்றிய குறிப்புகளை மண்டல சதகங்கள் எடுத்துரைக்கின்றன.*

பின்போர் தமைக்கண்டு பாவித்த
தோவன்றிப் பின்புவந்தோர்
தன்போ னடக்கப் பணிப்பித்த
தோதமிழ்க் கேயிரங்கி
முன்போம் புலவற்குப் பின்போயி
னானு முகுந்தனிது
வன்போ மனத்தினி லன்போசொல்
வீர்தொண் டைமண்டலமே[31]

*என்னும் பாடல் திருமழிசை ஆழ்வாரைப் பாடுகின்றது.*

### வள்ளல்கள்

*குமணன், அதியமான், ஓரி, வையாவிக்கோப்பெரும்பேகன் போன்றோரையும் அவர்தம் கொடைச் சிறப்பையும் கொங்கு மண்டல சதகம் பாடுகின்றது.*

*நளன், சகரன் மற்றும் பாரி ஆகிய வள்ளல்களின் சிறப்பினைப் பாண்டி மண்டல சதகம் பாடுகின்றது. வள்ளல்களில் முதலேழு வள்ளல்கள், இடையேழு வள்ளல்கள், கடையேழு வள்ளல்கள் என மூன்று பிரிவினரைக் காணமுடிகின்றது. எனினும் ஒரு சில வள்ளல்களைப் பற்றி மட்டுமே மண்டல சதகங்கள் பாடுகின்றன.*

### அரசர்கள்

*மண்டல சதகங்கள் இதுகாறும் ஆட்சிபுரிந்த அரசர்கள், குறுநில மன்னர்கள், சிற்றரசர்கள் ஆகியோர்தம் வீரம், போர், கொடைச் சிறப்பு ஆகியவைகளைச் சிறப்பித்துப் பாடுகின்றன.*

*கார்மண்டல சதகத்தின் வாயிலாக மூவேந்தர்கள் ஆட்சி நடைபெற்றது கார்மண்டலத்தில் என்றும், இவர்கள் பதினெண்குடி வேளீரென பல பிரிவுகளாகவும் வாழ்ந்தனர் என்பதையும் அறியமுடிகின்றது. கங்கபாடி சோழர் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது என்பதையும் சுட்டிக்காட்டுகின்றது.*

*காவிரியில் கல்லணை கட்டிய கரிகாலனை சோழ மண்டல சதகம் சிறப்பித்துப் பாடுகின்றது.*

*தொண்டை மண்டல சதகத்தில், மூன்றாம் நந்திவர்மப் பல்லவனின் தமிழ்ப் பற்றும், கொடைச் சிறப்பும் கூறப்படுகின்றது. கலிங்கத்துப்பரணி, பாடக் காரணமாய் இருந்தவன் கருணாகரத் தொண்டைமான் என்பதும் தொண்டை மண்டலம் என்னும் பெயர் வருவதற்கு காரணமான தொண்டை சக்கரவர்த்தியின் வரலாறும் கட்டப்பெறுகின்றது. கரிகாலனின் வெற்றிக்கும் தொண்டை மண்டலமே காரணம் என்பது எடுத்துரைக்கப் படுகின்றது.*

*இம்முடிச் சோழியாண்டான், உத்தம சோழன், அவிநிதன், முத்தரசர்கள், கோசர்கள், சீயகங்கன் ஆகிய அரசர்கள் கொங்கு மண்டல சதகத்தில் சிறப்பித்துப் பாடப்பட்டுள்ளனர். இவைப்போல பாண்டி மண்டல சதகமும் பொற்கைப் பாண்டியன், அதிவீரராம பாண்டியன், நின்றசீர் நெடுமாறன், சவுந்தர பாண்டியன் ஆகியோரைப் பாடுகின்றது.*

மும்மண் டலத்திலும் பாண்டியன் மண்டல முக்யமென்ப
விம்மண் டலத்திலெல் லோருமே பொற்றி யியம்பவல
னம்மண் டலஞ் செய் சவுந்தர பாண்டிய னாரரசு
மம்மர் தவிர்ப்பதன் றோவெனும் பாண்டியன் மண்டலமே[32]

*மூன்று மண்டலங்களிலும் பாண்டியர் ஆட்சியே சிறந்தது என்பதை இப்பாடல் வலியுறுத்துகின்றது.*

**புலவர்கள்**

*ஞானப்பிரகாசர் இவர் கமலை ஞானப்பிரகாசர் என அழைக்கப்படுவர். தியாகராசப் பள்ளு இவர் இயற்றியதாக சோழ மண்டல சதகம் குறிப்பிடுகின்றது. ‘ஒழிவிலொடுக்கம்’ என்னும் நூலை இயற்றிய கண்ணுடைய வள்ளல்,*

அம்பலவாணத் தேசிகர், பொய்யாமொழிப் புலவர் போன்றோர் தொண்டை நாட்டினர் ஆயினும் தன் இறுதிக் காலத்தில் சோழ நாட்டில் வாழ்ந்தமையால் அவரைச் சிறப்பித்துப் பாடுகின்றது சோழ மண்டல சதகம். இரட்டைப் புலவர்கள், சத்திமுத்தப் புலவர், கம்பர், சேக்கிழார் போன்ற புலவர்களின் வரலாற்றையும் விரித்துரைக்கின்றது.

'தொண்டை நாடு சான்றோர் உடைத்து' என்பதற்கிணங்க, தொண்டை நாட்டுப் புலவர்களை தொண்டை மண்டல சதகம் பெருமைப்படுத்திப் பாடுகின்றது.

தகைவந்த சீர்த்தொண்டை மண்டலத்
தார்தஞ் சரிதையையித்
தொகையென் றொருவர்க்குஞ் சொல்லப்
படாதுசொன் னாலுமிக்க
நகைவந் திடுஞ்சொற் புலவோர்
சபையினி னாமு நம்மால்
வகைவந்த மாத்திரஞ் சொல்லிவைத்
தோமிந்த மண்டலத்தே

என்னும் இப்பாடல் தொண்டை மண்டல சதகத்தில் நூலின் பிற்பகுதியில் அமைந்துள்ள தனிக்கவிகள் பகுதியில் முதலாவதாக இடம்பெற்றுள்ளது.

இப்பாடல் வழியாக தொண்டை நாட்டுச் சான்றோர்களின் எண்ணிக்கையைச் சொல்வதும் அவர்களை வகைப்படுத்துதல் போன்ற பணிகள் மிக அரிதான செயல் என்பதையும் விளக்குகின்றது.

புகழேந்தி, பொய்யாமொழிப்புலவர், சேக்கிழார் உத்தரகோசமங்கை புராணம் பாடிய மாசிலாமணி சம்பந்தர், தொல்காப்பியப் பாயிரம் பாடிய பனம்பாரனார், பரிமேலழகர், சூளாமணி நிகண்டு பாடிய மண்டல புருடர், நன்னூல் இயற்றிய பவணந்தி முனிவர், நேமிநாதம் பாடிய குணவீரபண்டிதர், முதுமொழிக்காஞ்சி பாடிய புரிசைக்கிழார், கந்தபுராணம் பாடிய கச்சியப்பர் மற்றும் சோழ நாட்டவரான இரட்டைப் புலவர்கள் காஞ்சி வருகை புரிந்து

கச்சியுலா, ஏகாம்பரநாதர் உலா போன்ற நூல்களைப் பாடியமையால் அவர்களையும் தொண்டை மண்டல சதகம் பெருமைப்படுத்திப் பாடுகின்றது.

மதுரைத் தமிழாசிரியர் செங்குன்றூர்கிழார், கம்பர், கொங்குப் புலவர் சபை, பவணந்தி முனிவர், பரமபதபங்கம் என்னும் நூல் இயற்றிய வேதாந்த தேசிகர், இளங்கோவடிகள், கபிலதேவர், ஔவையார், அடியார்க்கு நல்லார், பொய்யாமொழிப் புலவர், உரிச்சொல் நிகண்டு பாடிய மோரூர்க் காங்கேயன், இராமானுஜர், கொங்கு பிராட்டியார், பட்டமரத்தைத் துளிக்க வைத்த ‘நம்பிகாள்’ என்னும் புலவன் போன்ற புலவர்களை கொங்கு மண்டல சதகம் பெருமையுடன் போற்றுகின்றது.

குமரகுருபரர், நச்சினார்க்கினியர், சவுந்தர்ய லகரி பாடிய கவிராச பண்டிதர் போன்ற புலவர்கள் பாண்டி மண்டலத்தவர்கள் என்பதை கொங்கு மண்டல சதகம் எடுத்துரைக்கின்றது.

இதுவரை கூறப்பட்டு வந்த பொருண்மைகள் தவிர வேறு சில பொருண்மைகளும் உள. மண்டலங்களில் வாழ்ந்த புலவர்கள் இயற்றிய நூல்கள் பற்றிய செய்திகளும் கூறப்பட்டுள்ளன.

பட்டினப்பாலை, தக்கயாகப்பரணி, திருத்தொண்டத்தொகை, கம்பராமாயணம், ஏர்எழுபது, பெரியபுராணம், வீரசோழியம் போன்ற நூல்கள் இயற்றப்பட்டமையை சோழ மண்டல சதகம் குறிப்பிடுகின்றது.

**பெண்கள்**

மங்கையர்க்கரசியார், காரைக்காலம்மையார் பற்றிய செய்திகளை பாண்டி மண்டல சதகம் குறிப்பிடுகின்றது. இவர்கள் செயற்கரும் செயல்கள் செய்தவர்களாக விளங்கியமையை இந்நூல் குறிப்பிடுகின்றது. அம்பர்த்தாசி என்னும் தாசி குலத்தைச் சேர்ந்த பெண்ணின் வீட்டின் திண்ணையில் ஒரு நாள் ஔவையார் தங்கினார். அப்பொழுது அங்கு பாதி எழுதி முடிக்கப்படாமல் இருந்த செய்யுளைக் கண்டு வினவ, அப்பாடல் கம்பர் பாடியது என்பதை அறிந்தார். தாசி கம்பரிடம் தன்னைப் பாடுமாறு கேட்க, அதற்குக் கம்பர் ஆயிரம்

பொன் கொடுத்தால் பாடுகிறேன் என்று கூறினார். ஆயிரம் பொன் கொடுப்பதற்கில்லை என ஐநூறு பொன் கொடுத்தாள் தாசி. அதனால் கம்பர் பாதி பாடல் பாடினார் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. ஔவையார் மீதியைப் பாடி தாசியை வாழ்வித்தார் என்பதையும் அறியமுடிகின்றது. அப்பாடல்,

தண்ணீர் விரவும் காவேரி
தார்வேந் தனுமே தகும்சோழன்
பெண்ணா வாள்அம் பற்சிலம்பி
பிறங்கு மலையோ மேருவென்றே[33]

என்னும் சோழ மண்டல சதகப் பாடல் அம்பர்த்தாசியின் தமிழ்ப் பற்றை நன்கு புலப்படுத்துகின்றது.

பெண்ணை இழிவுபடுத்தியவர்களுக்கு ஆண்களின் நிலையை எடுத்துக் கூறி பாடல் பாடிய பூங்கோதையைச் சிறப்பித்துப் பாடுகின்றது கொங்குமண்டல சதகம். மேலும், அரசனின் மகள் பிரசவ வலியால் துன்புற்ற போது மிகவும் சிக்கலான நிலையில் வயிற்றைக் கீறி குழந்தையை வெளியே எடுத்து இருவரையும் காத்த மருத்துவி என்ற பெண்ணால் கொங்கு மண்டலம் பெருமை கொள்கிறது. இதனை,

குறைவறு தெண்ணீர் நதியணை காந்த புரத்தொருநல்
லிறைமக னார்மக வீனப் பொறாதுட லேங்கவகிர்
துறைவழி யேற்று மகிழ்வூட்டு மங்கலை தோன்றிவளர்
மறைவழி தேர்நறை யூர்நாடு சூழ்கொண்டு மண்டலமே[34]

என்னும் கொங்கு மண்டல சதகப் பாடல் குறிப்பிடுகின்றது. இங்ஙனம் பெண்களின் பெருமைகள் மட்டுமல்லாது மருத்துவம் சார்ந்த செய்திகள், சித்தர்கள் பற்றிய குறிப்புகள் போன்றவற்றையும் மண்டல சதகங்கள் எடுத்தியம்புகின்றன.

### வேளாளர்கள்

மண்டல சதகங்கள் வேளாளர்களின் பெருமையைப் பாடுவதற்காக இயற்றப்பட்டன எனில் மிகையாகாது. கார்காத்த வேளாளரின் தோற்றம், பூர்வசரிதை, அவர்களுடைய இயல்புகள், தொழில்கள் பற்றிய முழு வரலாற்றினையும் கார்மண்டல சதகம் எடுத்துரைக்கின்றது.

சோழ மண்டல சதகம் 'சோழிய வேளாளர்களை' சிறப்பித்துப் பாடுகின்றது. இவ்வேளாளர்கள் அரசனுக்கு (கரிகாலன்) முடிசூட்டும் உரிமையுடையவர்கள் ஆவர்.

ஆலஞ்சேரி மயிந்தன், கருப்புடையான், குண்டையூர்க்கிழார், சுரைக்குடையான், ஆனைப்பாக்கமுடையான், முனையதரையன், சடையப்ப வள்ளல் போன்ற வேளாளப் பெருமக்களின் இறைப்பக்தியையும், கொடைச் சிறப்பையும் சோழ மண்டல சதகம் விவரிக்கின்றது.

கருவுற்ற தன் மனைவியின் முதுகில் சோறிட்ட சடையநாத வள்ளல், காளத்தியப்பர், நெற்குன்றவாண முதலியார், வல்லம் காளத்தி முதலியார், வல்லாள முதலியார், தவளகிரி முதலியார், வேலூர்க்கிழார், வீடூர் முதலியார், ஆற்றூர்க்கிழார், புண்ணியகோட்டி முதலியார் போன்ற தொண்டை மண்டலத்து வாழ்ந்த வேளாளர்களின் பெருமையை தொண்டை மண்டல சதகம் வழி அறிய முடிகின்றது. இத்தகைய வேளாண் வள்ளல்களில் பெரும்பான்மையோர் முதலியார் என்னும் ஓரினத்தவராய் விளங்கினும், கொடைத் தன்மையால் அவர்களை உலகம் வியந்து போற்றுகின்றது.

கொங்கு மண்டலத்தில் ஆனூர்ச் சர்க்கரை, காரையூர் சர்க்கரை, சோபண மன்றாடி, ஆனூர்க் காமிண்டன், அன்னத் தியாகி, காளிங்கராயன், முதலிக் காமிண்டன், சூரிய காங்கேயன் போன்ற வேளாளன் பெருமக்களின் வீரம் மற்றும் கொடை ஆகியவற்றை கொங்குமண்டல சதகம் எடுத்துரைக்கின்றது.

பாண்டி மண்டல சதகம், வேளாளர்கள் பற்றிய வரலாற்றினையும், வகை பற்றிய மற்ற விவரங்களையும் விளக்கமாகக் குறிப்பிடுகின்றது.

### 3.2.1.2. தொண்டர் வரலாறு கூறுதல்

பெரியபுராணத்தில் இடம்பெறும் திருத்தொண்டர்களின் வரலாற்றை திருத்தொண்டர் சதகம் எடுத்துரைக்கின்றது. இந்நூல் காப்புச் செய்யுள் தொடங்கி வயிரப்பெருமாள் என்ற அடியவருக்குச் சிவபெருமான் காட்சியளித்து அருள்

வழங்கிய செய்தியுடன் நூல் நிறைவு செய்யப்பட்டுள்ளது. காப்புச் செய்யுள் நீங்கலாக நூற்றி மூன்று பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

முதல் பாடல் திருத்தொண்டர் சதகம் பாடப்பட்டதற்கான காரணத்தைக் குறிப்பிடுகின்றது. உத்தமப்பல்லவன் (இரண்டாம் குலோத்துங்கன்) சீவகசிந்தாமணி காப்பியத்தைப் புகழ்ந்து பாட, அது இருமைக்கும் பயன்தராத பொய்ந்நூல் என்று சேக்கிழார் கூறினார். மன்னன் வேண்டுகோளுக்கிணங்க சேக்கிழார் பெரியபுராணம் பாடியமை இங்குக் குறிப்பிடப் பெறுகின்றது.

முதலில் அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் என நாயன்மார்களின் திருமரபுகள் குறிப்பிடப்பட்டுள்ளது.

மோனம்மிகு தில்லைஅந் தணர்ஞான சம்பந்தர்
முருகன்சண் டேசர், நக்கர்
முறைமைபெறு சோமாசி மாறர்கண நாதர்மென்
மொழிசிறப் புலியர் கலயர்
ஞானம்மிகு பூசலையர், அப்பூதி பசுபதியர்
நமிநந்தி வேத மறையோர்.[35]

இப்பாடல் மறையவர் குலத்தைச் சார்ந்த அடியார்களைக் குறிப்பிடுகின்றது.

நாயன்மார்களின் தொகையும் திருமரபும் கூறிய பின்னர் குரு அருளால் வீடுபேறு அடைந்தவர்கள், இலிங்க வழிபாட்டால் வீடுபேறு அடைந்தவர்கள், இயல், இசைத்தமிழில் சிறந்து விளங்கியவர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு, பெரியபுராணத்தில் குறிப்பிட்டுள்ள தனியடியார்கள் தொகையடியார்களை விளக்குகின்றது. அடியார்களுக்கு உரிய குருபூசை விபரம் மற்றும் மாணிக்க மலையை வழிபடுபவர்களை பற்றிய விவரங்களும் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன.

### 3.2.2. நீதி சதகங்கள்

மண்டல சதகங்களின் அமைப்பிலிருந்து சிறிது மாறுபட்டு நீதி சதகங்கள் தோற்றம் பெற்றன. நால்வகை வருணத்தார் இயல்புகளை முதலில் கூறி விளக்குகின்றன.

### 3.2.2.1. அறிவுறுத்தல் நோக்குடையன

*நீதி சதகங்கள், நன்னெறிகளைக் கூறி மக்களை அறிவுறுத்தும் நோக்குடையனவாக விளங்குகின்றன. சதக இலக்கியங்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்துக் கூறும் களஞ்சியமாய் விளங்குவதால் அவை அறிவிக்கும் நோக்குடையனவாக கொள்ளப் பெறுகின்றது.*

*அறிவுறுத்தல் மற்றும் அறிவித்தல் என்னும் இரு நிலைகளில் நீதி சதகங்கள் இங்கு ஆராயப்பெறுகின்றன.*

**நால்வகை வருணத்தார் இயல்புகள்**

*அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் என்னும் நால்வகை வருணத்தாரின் இயல்புகள், அவர்களுக்குரிய தொழில்கள் மற்றும் பயன்கள் பற்றியும் நீதி சதகங்கள் விரிவாகப் பாடியுள்ளன.*

**அந்தணர்**

*அந்தணரின் இயல்புகளை, அளப்பளீசுர சதகம், குமரேச சதகம், கயிலாசநாதர் சதகம், அண்ணாமலைச் சதகம் போன்றவை எடுத்தியம்புகின்றன. இந்நூல்கள் வேதம் ஓதல், வேதத்தை ஓதுவித்தல் என்பன போன்ற ஆறுவகைத் தொழில்களைப் புரிதல், மந்திரங்கள் ஓதி பூசை புரியும் நியதிகள் செய்தல் போன்ற கடமைகளைச் செய்யின் நாடு நலம் பெறும் என்று எடுத்துக்கூறும் விதத்தில் பாடல்கள் அமைந்துள்ளன.*

**அரசர்**

*அரசன் பார்ப்பதற்கு எளிமையானவனாய் விளங்க வேண்டும் என்று அவன் தோற்றத்தையும், அவன் நாற்படைகளைப் பெருக்கி, கோட்டை, மதில் என பாதுகாப்பு அரண்களை பலப்படுத்தி, பகைவர், மற்றும் மிருகங்களிடமிருந்து மக்களைப் பாதுகாக்க வேண்டும். மக்களிடமிருந்து ஆறில் ஒரு பங்கை வரியாகப் பெற வேண்டும் என்பன போன்ற கடமைகளை அரசன் தவறாது ஆற்ற வேண்டும் என்பதைக் குமரேச சதகம், அண்ணாமலைச் சதகம், அறப்பளீசுர சதகம், கயிலாசநாதர் சதகம் போன்ற நூல்கள் வலியுறுத்திப் பாடுவதைக் காணமுடிகின்றது.*

*வணிகர், வேளாளர், குரு, மாணவன் ஆகியோரின் இயல்புகள் மற்றும் கடமைகளையும் சதக இலக்கியங்கள் பாடியுள்ளன.*

**நற்குணத் தன்மைகள்**

நல்லாரைக் காண்பதுவும் நன்றே - நலமிக்க
நல்லார்சொற் கேட்பதுவும் நன்றே - நல்லார்
குணங்க ளுரைப்பதுவும் நன்றே யவரோ
டிணங்கி யிருப்பதுவும் நன்று[36]

*என்னும் மூதுரைப் பாடல் நல்லவர்களோடு நட்பு வைத்துக் கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது.*

*நற்குணம் வாய்ந்தவர்களாக நற்செயல்கள் புரிபவர்களாக மக்கள் வாழ வேண்டியதன் அவசியத்தை சதக இலக்கியங்கள் வலியுறுத்துகின்றன. அடைக்கலம் எனத் தேடி வருபவரைக் காத்தல் என்பது மிகச் சிறந்த நற்பண்பாகக் கருதப்படுகிறது.*

*ஒருவருடைய செயலைக் கொண்டு அவருடைய குணநலனை அறிந்து கொள்ளலாம். மேலும் அவரவர் கடமைகளைச் சரிவரச் செய்ய வேண்டும். சான்றோர் சொல்லை மீறக் கூடாது, நண்பன் துன்புற்ற காலத்தில் உற்ற துணையிருத்தல், நல்லவர்களுக்கு செய்யும் உதவி வீணாகாது. சான்றோரை சான்றோரே அறிவர்; சான்றோருடன் நட்புக் கொள்ள வேண்டும். காக்க வேண்டியவர்களை (பெற்றோர் உறவினர், அடைக்கலமாக வந்தவர்கள்) கைவிடாது காக்க வேண்டும் போன்ற பல நற்கருத்துக்களை கூறுவனவாய் குமரேச சதகப் பாடல்கள் அமைந்துள்ளன.*

நேற்றுள்ளார் இன்றிருக்கை நிச்சயமோ?
ஆதலினால் நினைத்த போதே
ஊற்றுள்ள பொருளுதவி அறந்தேடி
வைப்பதறி வுடைமை அன்றோ?
கூற்றுள்ளம் மலையவரும் தண்டலையா
ரே! சொன்னேன்! குடபால் வீதம்

காற்றுள்ள போதெவரும் தூற்றிக்கொள்

வதுநல்ல கருமந் தானே?[37]

என்னும் தண்டலையார் சதகப்பாடல், வாய்ப்புள்ள போதே அறஞ்செய்ய வலியுறுத்துவதாய் அமைந்துள்ளது.

இவை போன்று செயங்கொண்டார் சதகம், வடிவேல் சதகம், கயிலாசநாதர் சதகம், அண்ணாமலைச் சதகம் போன்றவை பல நன்னெறிக் கருத்துக்களை எடுத்துக் கூறுவனவாய் அமைந்துள்ளன.

**தீச்செயல்களை விலக்கல்**

மனிதர்கள் செய்யக்கூடாத செயல்களைக் கூறி அதனால் ஏற்படும் தீமைகளையும் அறிவுறுத்துகின்றது. அறப்பளீசுர சதகம், வஞ்சகருடன் பழகக்கூடாது, எல்லோரிடமும் விவாதம் புரியக்கூடாது, பிறர்க்கு தீமை செய்யக் கூடாது, அயற்பெண்களை ஏளனம் செய்யக்கூடாது, புறங்கூறக் கூடாது போன்ற தீச்செயல்களை விலக்க வேண்டும் என்று அறிவுறுத்துகின்றது.

கற்றவர்கள் சபையில் கல்லாதவன் பதர்,

வீரன்முன் பயந்து ஓடும் கோழை - பதர்[38]

எனவும்,

பெண்புத்தி கேட்டு நடப்பவன், தாய் தந்தையரை

குறைசொல்பன் - மூடர்[39]

எனவும் நற்குணங்கள் அற்றவர்களை பதர் என்றும் மூடர்கள் என்றும் கூறுகின்றது அறப்பளீசுர சதகம்.

கீழோர்கள் திருந்தமாட்டார்கள், பிறவிக்குணம் மாறாது இவர்கள் உலகில் இருந்தாலும் பிணத்திற்கு ஒப்பானவர்கள், ஆணவம் அழிவைத் தரும், நற்செயல்கள் செய்வதற்கு ஆகாதவர்கள், அளவுக்கு மீறினால் உண்டாகும் தீமை, தீயவர்கள் மற்றும் தீயவழியில் ஈட்டிய பொருட்கள் நீங்குதல், பதராவார், பேய்கள், துர்ச்சனர் இயல்பு இத்தன்மைத்து என பல நிலைகளில் தீச்செயல் புரிபவர்களின் தன்மைகள் விளக்கப்பட்டுள்ளதை குமரேசசதகம் போன்ற நீதி சதகங்களில் காணப்படுகின்றன.

**இல்லறம்**

இல்லறமே நல்லறம் என்பதால் இல்லறத்தில் உள்ளவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய அல்லது ஆற்ற வேண்டிய கடமைகளை உணர்த்தும் விதமாக அறப்பளீசுர சதகம், குமரேச சதகம், வடிவேல் சதகம் ஆகியவற்றின் பாடல்கள் அமைந்துள்ளன.

இல்லறத்தில் பெற்றோரின் கடமைகள், மனைவியின் கடமை, மகளின் கடமை, சகோதரரின் கடமை ஆக அனைவரையும் பாதுகாக்கும் கடமை ஓர் ஆண்மகனுக்குரியது என்பதும் விளக்கப்பட்டுள்ளது.

மேலும் குழந்தைகளைக் கூறுமிடத்து பல பிள்ளைகளை விட அறிவுள்ள ஒரு குழந்தை போதும் என்பதும் கூறப்பட்டுள்ளன. இதே கருத்தை தண்டலையார் சதகமும் வலியுறுத்துகின்றது.

நன்றிதரும் பிள்ளைஒன்று பெற்றாலும்
குலமுழுதும் நன்மை உண்டாம்
அன்றிஅறி வில்லாத பிள்ளைஒரு
நூறுபெற்றும் ஆவ துண்டோ?[40]

இவை தவிர இல்லறம் பற்றிய பிற விளக்கங்களை சதக இலக்கியங்களில் காணமுடிகின்றது.

இல்லறத்தின் மேன்மையையும், கடமைகளையும் நீதி சதகங்கள் அனைத்தும் சுட்டிக் காட்டத் தவறவில்லை என்பது அறியத்தக்கது.

**பெண்கள்**

கற்புடைய பெண்களின் இயல்பு, விலைமாதர்களின் இயல்பு, பெண்களின் வகை, பெண்ணின் இலக்கணம் என்னும் நான்கு நிலைகளில் பெண்களைப் பற்றிய பாடல்களை நீதி சதகங்களில் காணமுடிகின்றது.

கணவனே தெய்வம் என கருதுதல், கோபம் கொள்ளாமை, பெரியோரை உபசரித்தல், நெற்றியில் பொட்டிட்டு அலங்கரித்துக் கொள்ளுதல் போன்றவை கற்புடைய பெண்டிர் இயல்புகள் என கயிலாசநாதர் சதகம் குறிப்பிடுகின்றது.

*அருந்ததி, நளாயினி, சீதை, சந்திரமதி, திரௌபதி போன்ற கற்புடைய பெண்டிரைக் குறிப்பிட்டு விளக்குகின்றது அறப்பளீசுர சதகம். பெண்கள் தன் கற்பைத் தானே காக்கும் இயல்புடையவள் என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*விலைமாதர்களின் இயல்புகளை வடிவேல் சதகம், குமரேச சதகம், கயிலாசநாதர் சதகம் போன்றவை விளக்குகின்றன.*

*பதுமினிப் பெண்கள், சித்தினிப் பெண்கள், சங்கினிப் பெண்கள், அத்தினிப் பெண்கள் என நால்வகைப் பெண்களை கயிலாசநாதர் குறிப்பிடுகின்றது. பெண்களின் உடல் உறுப்புகளின் அமைப்பைக் கொண்டு அவர்களின் குண நலன்களைத் தீர்மானித்தல் சாமுத்ரிகா இலட்சணம் எனப்படுகிறது.*

*மேலும் பெண் எடுக்கும் முறை, பெண்ணின் இலக்கணம், பெண்கள் பூப்படையும் நட்சத்திரங்களின் பலன், பூப்படையும் கிழமைகளின் பலன் போன்றவற்றை எடுத்துரைப்பனவாய் சதக இலக்கியங்களில் பாடல்கள் அமைந்துள்ளன.*

**வறுமை**

*ஒருவன் மேன்மையான குலத்தில் பிறந்திருந்தாலும், கல்வியால் சிறப்புற்று விளங்கினும் பொருள் இல்லையெனில் அவனை ஒருவரும் மதிக்க மாட்டார்கள் என்பதை அறப்பளீசுர சதகம், குமரேச சதகம் மற்றும் கயிலாசநாதர் சதகம் போன்றவை வலியுறுத்துகின்றன.*

செய்யசபை தன்னிலே சென்றுவர வெட்கம்ஆம்
செல்வரைக் காணில் நாணும்
உறுதிபெறு வீரமும் குன்றிடும் விருந்துவரின்
உயிருடன் செத்த பிணமாம்[41]

*வறுமையுற்றவனின் மன இயல்புகளை குமரேச சதகம் படம்பிடித்துக் காட்டுகின்றது. வறுமையால் ஏற்படும் இழிநிலையை இச்சதகங்கள் எடுத்துக்காட்டுவனவாய் அமைந்துள்ளன.*

**ஈகை**

ஈகைக் குணம் உடையவர்கள் தனக்கு எத்தகையதொரு துன்பமும் இடையூறும் ஏற்படினும் கொடுக்கும் குணத்தை கைவிடமாட்டார்கள் என்பதை குமரேச சதகம் குறிப்பிடுகின்றது.

பிறருக்குக் கொடுக்கும் மனமில்லாதவர்களை கஞ்சர்கள் என்று கூறி உணவு, உடை என்னும் அடிப்படை தேவைகளைக் கூட நிறைவேற்றும் எண்ணம் இல்லாது பொருளீட்டும் மனநிலையிலேயே இருப்பர் என்பதாக குமரேசசதகப் பாடல்கள் அமைந்துள்ளன. இது போன்று மற்ற சதகங்களிலும் ஈகைக்குணம் பற்றிய செய்திகள் பரவலாக ஆங்காங்கே கூறப்பட்டுள்ளன என்பதை அறியமுடிகின்றது.

**விருந்தோம்பல்**

விருந்தோம்பல் பற்றி சதக இலக்கியங்கள் குறிப்பிடும் செய்திகளாவன: விருந்துக்கும் எல்லை உண்டு என்பதை குமரேச சதகம் கூறுமிடத்து மூன்று நாட்களுக்கு மேல் விருந்தாக தங்க நேரிடின், உறவினர் முகம் சுளித்து வெறுப்பைக் காட்டுவர் என்பதை உணர்த்தகின்றது. மேலும் எந்த கிழமையில் விருந்துண்டால் என்ன நன்மை ஏற்படும் என்பதையும், உணவு உண்ணும் இலைகளின் தன்மையும் அதனால் ஏற்படும் பயன்களும் பற்றி சதக இலக்கியங்கள் அறிவுறுத்துவதைக் காணமுடிகின்றது.

**உணவு**

உணவு கொள்வதில் காணப்பெறும் குற்றங்கள், உணவினைப் பரிமாறும் போது பின்பற்ற வேண்டிய விதிமுறைகள், உணவு உண்டபின்பு கடைபிடிக்கத் தக்க விதிமுறைகள், தாம்பூலம் தரித்தல் போன்ற செய்திகளை எடுத்துக் கூறுவனவாய் அண்ணாமலைச் சதகப் பாடல்கள் அமைந்துள்ளன.

வெந்தெடுத் திடுமட் கலத்தினும் தகரத்து
மிகவுடைந் திடுகலத்தும்
மேவும்உள் ளங்கையினும் இட்டுண்ணல் நின்றுண்ணல்
மேலான தோடமாகும்[42]

அதாவது பாவமாகும் என்பதை அறிவுறுத்துகின்றன. மேலும் விலக்க வேண்டிய உணவுகள் பற்றியும், உட்கொள்ள வேண்டிய உணவுகள் பற்றியும் அறப்பளீசுர சதகம் எடுத்துரைக்கின்றது.

வடிவேல் சதகம் சிலவகை உணவுப் பொருட்களையும் அதனால் ஏற்படும் நன்மைகளையும் விளக்குகின்றது. அரிசி, கீரை, காய், மா, பால், மூலிகை, நீர் ஆகியவற்றின் குண இயல்புகளைக் கூறி அதனை உண்பதால் ஏற்படும் பயன்களையும் எடுத்துரைக்கின்றன.

அறைக்கீரை காய்ச்சல்குளிர் சன்னியைத் தீர்த்திடும்
அருந்தவே மலசுத்தியாம்
ஆர்க்குமித மானருசி வாய்ந்த கறியாகும்
அரியபொன் னாங்காணி
திறம்பெறும் பெலனுண்டு குளிர்ச்சியாங் கண்ணுக்கு[43]

என்று கீரையின் நன்மைகளையும் அவற்றை உண்பதால் ஏற்படும் பயன்களையும் இப்பாடல் எடுத்துரைக்கின்றது.

**மருத்துவம்**

சதக இலக்கியங்கள் நோய் வருவதற்கான வழிமுறைகளை எடுத்துக் கூறுகின்றன. அதனால் நோயிலிருந்து நம்மைத் தற்காத்து கொள்வதற்கான வழிமுறைகளைக் கடைப்பிடித்தால், வருமுன் காத்து ஆரோக்யமாய் வாழலாம் என்பது அறிவுறுத்தப் பெறுகின்றது.

எனவே உடல்நலனுக்கு ஏற்ற மருத்துவக் குறிப்புகளை குமரேச சதகம் பட்டியலிட்டுக் காட்டுகின்றது. இந்நூல் மட்டுமின்றி அண்ணாமலைச் சதகம் மற்றும் வடிவேல் சதகம் ஆகியவற்றிலும் காணமுடிகின்றது. மேலும் கல்வி, செல்வம், நிலையாமை போன்ற பாடுபொருட்களை விளக்குவனவாகவும் சதக இலக்கியங்கள் அமைந்துள்ளன.

**வாஸ்து**

சதக இலக்கியங்கள் வாஸ்து பற்றிய கருத்துக்களை மிகுதியாக எடுத்துரைக்கின்றன. வீட்டு மனை கோல, புக நல்ல நாட்கள், ஆகாத நாட்கள் எவை என்பதையும், வாஸ்து புருஷன் எழுகின்ற நாள் மற்றும் மனையின் அளவுகள் குறித்தும் அறிய முடிகின்றது.

*எண்ணெய் தேய்த்துக் குளிக்க, புத்தாடை உடுத்துவதற்கு ஏற்ற நாட்கள், மனையின் அங்கங்கள் இருக்க வேண்டிய இடம், வீட்டிற்கு ஆகாத மரங்கள் மற்றும் மரம் செடி கொடி நடுவதற்கு ஏற்ற நாட்கள், குதிரை, ஆடு, மாடு வாங்குவதற்கு ஆகாத நாட்கள் போன்ற பல்வேறு செய்திகளைக் கூறுவனவாய் நீதி சதகங்கள் அமைந்துள்ளன.*

எருக்குடன் அகத்தியும் நெடும்பனை முருங்கையும்
எண்ணெய்தரும் ஆமணக்கும்
இதந்தரும் நவ்வலும் பருத்திமுள் மரங்களும்
இனிதாகும் நெல்லிமரமும்
முருக்கமரம் உதியமரம் இதுவெல்லாம் வீட்டுக்கு
முன்னாகில் அரிதாகவும்
முளைத்துமே நின்றிட லாகாது அதுகாண
மூதேவி தானடையுமே[44]

*என்னும் வடிவேல் சதகப் பாடல் வீட்டின் முன் இருக்கக் கூடாத மரங்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றது.*

**நம்பிக்கைகள்**

*யாத்திரை செல்லும்போது எதிரில் வரும் பறவை மற்றும் விலங்குகளால் ஏற்படும் பலன்களும், காக்கைச் சகுனம், தேங்காயில் சகுனம் பார்த்தல், பல்லி விழுவதால் ஏற்படும் பலன்கள், பல்லி கத்துவதால் உண்டாகும் நன்மை, பயணம் புறப்படும் போது காணும் சகுனங்கள், அதனால் ஏற்படும் பலன்கள் ஆகியனவற்றைக் கூறுவனவாய் வடிவேல் சதகம், கயிலாசநாதர் சதகம், அண்ணாமலைச் சதகம் போன்ற நூல்கள் அமைந்துள்ளன.*

**பக்தி - வழிபாட்டு முறைகள்**

*காசி முதல் கன்னியாகுமரி வரை இறைவன் எழுந்தருளியுள்ள திருத்தலங்கள் பற்றியும், சிவச்சின்னங்களான திருநீறு, உருத்திராக்கம் ஆகியவைகளை தரிக்கும் வழிமுறைகளையும், இறைவன் அபிஷேகத்திற்குரிய பொருட்கள் மற்றும் திசைகள் பற்றியும், பூசைக்குரிய புஷ்பங்கள் பற்றியும் பூசைக்கு ஆகாத மலர்கள் பற்றியும் மிக விரிவாக எடுத்துக் கூறுவனவாய் சதக இலக்கியங்கள் அமைந்துள்ளன.*

**திருத்தலங்கள்**

*இருநூற்றி எண்பத்து நான்கு சைவ சமயக் கோவில்களைப் பற்றி வடிவேல் சதகம் குறிப்பிடுகின்றது. காசி விசுவநாத சதகம் சமய வேறுபாடின்றி சைவ சமயக் கோயில்கள், மடங்கள், திருமால் திருத்தலங்கள், இறைவியர் கோயில்கள், முருகப்பெருமான் கோயில்கள், சமணர் கோயில், மலைகள், நகரங்கள் போன்றவை பற்றிய செய்திகளைக் குறிப்பிடுகின்றது. மேலும் பெரியபுராணக் கதைகள், திருவிளையாடல் புராணக் கதைகளையும் விளக்குவதாய் அமைந்துள்ளது.*

**சிவச்சின்னங்கள்**

*திருநீறும் உருத்திராக்கமும் சிவச்சின்னங்களாக விளங்குகின்றன. அவற்றுள் திருநீற்றின் முக்கியத்துவம் கருதி, திருநீற்றைத் தயாரிக்கும் முறை, அணியும் காலம் போன்றவற்றைப் பற்றி சதக இலக்கியங்கள் விரிவாக எடுத்துரைக்கின்றன.*

*எத்தனை முகங்கள் கொண்ட உருத்திராக்கம் அணிவதால் என்ன பலன்கள் ஏற்படும் என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளன. இருபத்தேழு மணிகள் கொண்ட உருததிராக்கம் அணிந்தால் செல்வம் பெருகும் எனவும், முப்பத்திரண்டு மணிகள் கொண்டதனால் கல்வி சிறக்கும் என்பதும் கூறப்படுகின்றது.*

*சிவபூசைக்குரிய மலர்கள் பற்றிக் குறிப்பிட்டு ஓராயிரம் பூக்கள் கொண்டு அர்ச்சிப்பதை விட ஒரு வில்வத்தால் அர்ச்சித்தல் சிறப்புடைத்து என்பதும் குறிப்பிடப்படுகின்றது. வழிபாட்டு முறைகள், முக்கிய விரதங்கள், சிவலிங்க வகைகள் மற்றும் வழிபாடு பற்றிய பல்வேறு விளக்கங்களை விரிவாகக் குறிப்பிடுகின்றது. அண்ணாமலைச் சதகம் மற்றும் பிற சதகங்களும் பக்தி, வழிபாட்டு முறைகள் பற்றிய தகவல்களை ஆங்காங்கே சுட்டிக்காட்டியுள்ளன.*

**பழமொழி சதகங்கள்**

*தண்டலையார் சதகம் பழமொழிகள் வாயிலாக அறநெறிகளைக் கூறுகின்றது. அதாவது ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் ஒரு பழமொழி இடம்பெற்றுள்ளது.*

வாங்காலம் உண்டசெழுந் தண்டலையார்

அடிபோற்றி வணங்கி நாடிப்

போங்காலம் வருமுன்னே புண்ணியம்செய்

தரியகதி பொருந்து றாமல்

ஆங்காலம் உள்ளதெல்லாம் விபசாரம்

ஆகிஅறி வழிந்து வீணே

சாங்காலம் சங்கரா! சங்கரா!

எனின்வருமோ தருமந்தானே![45]

*தண்டலையார் சதகத்தில் பெரும்பான்மையான பாடல்கள் அறநெறி மற்றும் இறையுணர்வை வெளிப்படுத்துகின்றன. அறநெறிகளில் நன்குணத்தன்மை, பெரியோரின் செயல்கள், தீச்செயல்கள் எவை என்பதை எடுத்துரைத்து அவற்றை விலக்க வேண்டும் என்பதை அறிவுறுத்துகின்றது. மேலும் உணவு, விருந்தோம்பல், கற்புடைய பெண்டிர் இயல்பு, இல்லறம் துறவறம், கல்வி, செல்வம், கொடை போன்ற பல அறநெறிகளை பழமொழி வாயிலாக விளக்குகின்றது.*

*இறையுணர்வு அடிப்படையிலான பாடல்களில், எல்லாம் இறைவன் செயல், விதிப்படி நடக்கும், இறையடியார்க்குத் துன்பம் இல்லை. தெய்வமே துணை, இறைவனின் ஐந்தெழுத்து மந்திரம் ஓதுதல் போன்ற கருத்துக்கள் பழமொழிகள் வாயிலாக விளக்கப்பட்டுள்ளன.*

**செயங்கொண்டார் சதகம்**

*செயங்கொண்டார் சதகம், தண்டலையார் சதகம் போன்று பழமொழிகளை விளக்கி நீதியுரைக்கின்றது. ஆயினும் பழமொழிகள் உதாரணக் கதைகள் மூலம் விளக்கப்பட்டுள்ளன. இராமாயணம், மகாபாரதம், கந்தபுராணம், திருவிளையாடற்புராணம், விநாயகர், முருகன், கருடன், விஷ்ணு போன்ற தெய்வம் பற்றிய கதைகளும், வான்மீகர், விசுவாமித்திரர், மிருகண்டர், வசிட்டர், துர்வாசர், வரரிஷி, துரோணர் என்னும் முனிவர் பற்றிய செய்திகளையும், புலவர்கள், பெண்கள் பற்றியும், பஞ்சதந்திரக் கதைகள் வாயிலாக நீதிகளை எடுத்துக் கூறுவனவாய் அமைந்துள்ளன.*

செப்புமரிச் சந்திரன்றா னீசனுக்கே விலையாகிச்

சென்றே நெஞ்ச

மொப்பிமயா னமுங்காத்த நிமித்தியத்தால் இழுக்கவனுக்
கொருபோ துண்டோ
மைப்படியுங் கண்ணிசௌந் தரிபாகர் செயங்கொண்டார்
வறஞ்சேர் நாட்டிற்
குப்பையிலே கிடந்தாலுங் குன்றிமணி நிறத்திலொன்றுங்
குறைவு றாதே[46]

*என்னும் செயங்கொண்டார் சதகப் பாடல் அரிச்சந்திரன் கதையை உதாரணமாகக் கூறி நல்லோர் பெருமைக்கு என்றும் குறைவு ஏற்படாது என்பதை விளக்குகின்றது.*

### 3.2.2.2. அறிவித்தல் நோக்குடையன

*மக்களுக்குத் தேவையான கருத்துக்களை, கலைக்களஞ்சியம் போன்று தகவல்களை அறிவிக்கும் தன்மையுடையனவாய் சதக இலக்கியங்கள் காணப்படுகின்றன. மக்களுக்கு நீதி கூறி நன்னெறிப்படுத்தும் நோக்கம் அல்லாது தெரிவிக்கும் நோக்குடையனவாக இவை அமைந்துள்ளன.*

*16 பேறுகள், 32 அறங்கள், 96 தத்துவங்கள், ஆறு சமயங்கள், மன்மதனின் கணைகள், உறுப்புகள், கருவிகள், நவக்கிரகங்களின் உருவமும் திசையும் புராணங்களின் வகைகள், 36 தத்துவங்கள் போன்ற பல்வேறு செய்திகளை அறிவிக்கும் கருவூலங்களாக சதக இலக்கியங்கள் அமைந்துள்ளன.*

நதிவளந் தருபூமி விளைகின்ற நெல்லாதி
நவதானி யப்பெருமையும்
நற்குணத் தொடுசொன்ன சொற்படி நடந்துவரு
நன்மனையு நன்மக்களும்[47]

*என்னும் அண்ணாமலைச் சதகப்பாடல் பதினாறு பேறுகளைப் பட்டியலிட்டுக் காட்டுகின்றது.*

*இவை மட்டுமன்றி குதிரை வாங்குவதற்குரிய குதிரை இலக்கணம் போன்ற பல்வேறு செய்திகளை மக்கள் அறிந்து கொள்ளும் வண்ணம் சதக இலக்கியங்கள் அறிவிக்கின்றன.*

**32 அறங்கள்**

*நோயாளிக்கு சாலை அமைத்தல், ஓதுவார்க்கு உணவு, அறுசமயத்தோர்க்கு உண்டி, பசுவிற்கு உணவு, சிறையில் உள்ளோர்க்கு உணவு, பிச்சையிடுதல் போன்ற 32 அறங்கள் பற்றி அறப்பளீசுரசதகம், வடிவேல் சதகம், அண்ணாமலைச் சதகம், அவையாம்பிகை சதகம் போன்றவை பாடியுள்ளன.*

**முப்பத்தாறு தத்துவங்கள்**

| | |
|---|---|
| *ஆன்ம தத்துவம்* | *24* |
| *வித்தியா தத்துவம்* | *7* |
| *சிவ தத்துவம்* | *5* |

*என முப்பத்தாறு தத்துவங்களை அறப்பளீசுர சதகம் குறிப்பிடுகின்றது.*

**தொண்ணூற்றாறு தத்துவங்கள்**

*பூதங்கள் ஐந்து, புலன் ஐந்து, ஞானேந்திரியம் ஐந்து, கர்மேந்திரியம் ஐந்து, அந்தக்கரணம் நான்கு, தாது ஏழு, குணம் மூன்று, மலம் ஐந்து, விகாரம் ஆறு, வாயு பத்து, மண்டலம் மூன்று, ஆதாரம் ஆறு, வாசல் ஒன்பது, அவத்தை ஐந்து, நாடி பத்து, கோசம் ஐந்து, பிணி மூன்று ஆக தத்துவங்கள் தொண்ணூற்றாறினை கயிலாசநாதர் சதகம் எடுத்தியம்புகிறது.*

*இவைபோன்ற பல்வேறு செய்திகளைத் தெரிவிக்கும் தன்மையில் சதக இலக்கியங்கள் அமைந்துள்ளன.*

**3.2.3. துதி சதகங்கள்**

**திருச்சதகம்**

*மாணிக்கவாசகர் இயற்றிய திருவாசகத்தில் ஐந்தாவதாக ‘திருச்சதகம்’ இடம்பெற்றுள்ளது.*

*இச்சதகம் நூறு செய்யுட்களைக் கொண்டு பத்துப் பகுதிகளாகப் பாடப்பட்டுள்ளது. ஒவ்வொரு தலைப்பும் பத்துப் பாடல்களாக நூறு பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இப்பாடல்கள் அந்தாதி அமைப்பில் காணப்படுகின்றன. முதல் பாடலும் நூலின் இறுதிப் பாடலாகிய நூறாவது பாடலும் அந்தாதியில் அமைந்துள்ளன. இதனை,*

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்

தன்விரை யார்கழற்கென் (திருச்சதகம், பா.1)

. . . . . . . . . . . . . . . . . . . . .

வீடவேண்டும் நான் போற்றி வீடுதந்

தருளு போற்றிநின் மெய்யர் மெய்யனே

(திருச்சதகம், பா.100)

*எனும் திருச்சதகப் பாடல்கள் எடுத்துக்காட்டுகின்றன.*

**மகுடம்**

*வடமொழி மரபைப் பின்பற்றி இயற்றப்பட்டமையால் அம்மொழி சதகங்களில் மகுடம் அமையாமல் உள்ளதுபோல் திருச்சதகத்திலும் மகுட அமைப்பைக் காண முடியவில்லை.*

**யாப்பு**

*பத்துத் தலைப்புகளாக இடம்பெற்றுள்ள நூலில் வெவ்வேறு விதமான யாப்பு பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்நூலின் பத்துத் தலைப்புகளும், அவற்றின் பாடுபொருளுக்கேற்ப மாற்றம் பெற்றுள்ள பா வகைகள் இங்குக் குறிப்பிடப்படுகின்றன.*

*1. மெய்யுணர்தல் - கட்டளைக் கலித்துறை*

*2. அறிவுறுத்தல் - தரவு கொச்சகக் கலிப்பா*

*3. சுட்டறுத்தல் - எண்சீர் ஆசிரிய விருத்தம்*

*4. ஆன்மசுத்தி - அறுசீர் ஆசிரிய விருத்தம்*

*5. கைம்மாறு கொடுத்தல் - கலிவிருத்தம்*

*6. அநுபோக சுத்தி - அறுசீர் ஆசிரிய விருத்தம்*

*7. காருணியத்திரங்கல் - அறுசீர் ஆசிரிய விருத்தம்*

*8. ஆனந்தத்து அழுந்தல் - எழுசீர் ஆசிரிய விருத்தம்*

*9. ஆனந்த பரவசம் - கலிநிலைத்துறை*

*10. ஆனந்தாதீதம் - எண்சீர் ஆசிரிய விருத்தம்*

*இந்நூலில் தமிழ்மொழி சதகங்களில் உள்ளதுபோல் நூல் முழுவதும் ஒரே வகையான யாப்பில் பாடப்படுதல் என்னும் நிலையைக் காணமுடியவில்லை.*

**பாடுபொருள்**

*இந்நூலின் முதல் பகுதி பொய்யான உடல் நிலையில்லாதது. ஆகையால் மெய்ப்பொருளான இறைவனை உணரத் தூண்டுகிறது. இரண்டாவது பகுதி உலகியல் பொருட்களின் மீது செல்லும் மனதை உண்மைப் பொருளை நாட அறிவுறுத்துகிறது. மூன்றாவது பகுதி உலகப்பொருட்களை இன்ன இன்னப் பொருள் என சுட்டி அறியலாம். இறைவனை அறிய இயலாது. எனவே சுட்டறிவை நீக்குமாறு வலியுறுத்துகிறது. யான் எனது என்னும் பற்றை நீக்குதலே ஆன்மசுத்தி என்றும், உதவி செய்தவர்க்கு பதில் உதவி செய்யும் நிலை, கைம்மாறு கொடுத்தல் என்றும், சிவ அனுபவத்தால் உயிர் தன்னை தூய்மை செய்து கொள்ளுதல் அநுபோக சுத்தி என்றும் இறைவனின் கருணையை நினைந்து இரங்குதல் காருணியத்திரங்கல் என்றும் இறைவனது பேரின்பத்துள் அழுந்தியிருத்தல், மெய்யுணர்வின் வாயிலாக இறையருளைப் பற்றி நிற்றல் மற்றும் இறைவனின் வீடுபேற்றின்பத்தில் தன்னை மறந்த பரவச நிலை என அடுத்தடுத்தப் பகுதிகளில் விளக்கப்படுகின்றது.*

*நீதி கூறும் சதகங்கள் என்ற நிலையிலிருந்து பாடுபொருளில் மாற்றம் ஏற்பட்டு இறைவனைத் துதிக்கும் துதி சதகங்கள் தோன்றின. அருணாசல சதகம், எம்பிரான் சதகம், அவையாம்பிகை சதகம் போன்றவை துதி நூல்களாக அமைந்துள்ளன.*

**அருணாசல சதகம்**

*கொன்றை மலர், பிறை, கங்கையை தலையில் சூடியவர் என்று சிவபெருமானின் தோற்ற வர்ணனையை அருணாசல சதகம் விளக்குகின்றது. இறைவன் பஞ்சபூதங்களாகவும் ஆறு ஆதாரங்களை கடந்து விளங்குபவராகவும் உலகில் உள்ள அனைத்துமாய் இறைவன் விளங்கும் தன்மை சுட்டப்பெறுகின்றது. இறையடியார் உள்ளத்தில் இறைவன் வீற்றிருக்கும் தன்மை கருதி அடியவர் பெருமை குறிப்பிடப்படுகின்றது. அடியவர் பொருட்டு இறைவன் நிகழ்த்திய திருவிளையாடல்கள் பற்றிய செய்திகளையும் இந்நூலுள் காணமுடிகின்றது.*

*இறைவனை வணங்காதவர்கள் தீமை அடைவார்கள், இப்பிறவியாகிய கடலை கடத்தல் அரிது என்பதை உணர்த்தும் இந்நூலாசிரியர் தனக்கு அருள்புரியுமாறு இறைவனை வேண்டி நிற்கும் பாடல்களை மிகுதியாகக் காணமுடிகின்றது. இந்நூலில் வினா அமைப்பைக் காணமுடிகின்றது. இந்நூலில் வினா அமைப்பிலானப் பாடல்கள் அமைந்துள்ளன.*

ஐயாஅவர் மதியென்கொலோ

அருணாசலா! அருணாசலா![48]

அடியார் அடிப்பொடிநேருமோ!

அருணாசலா! அருணாசலா![49]

*என்றவாறு பாடல்கள் அமைந்துள்ளன.*

**எம்பிரான் சதகம்**

*ஸ்ரீமந் நாராயணனைப் போற்றிப் பாடும் வகையில் இயற்றப்பட்ட எம்பிரான் சதகத்தில் திருமாலின் தோற்ற வர்ணனை மற்றும் எம்பெருமான் பஞ்சபூதங்களாகவும், மும்மூர்த்திகளாகவும் அறுசமயத்தோர்க்கும் இறைவனாகவும் விளங்கும் நிலைக் குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளது.*

*பன்னிரு ஆழ்வார்களுக்கும் இறைவன் அருளியத் தன்மை, குருவாக இருந்து உபதேசிக்கும் பான்மை, எம்பெருமானின் நாமமகிமை போன்றவற்றையும் இந்நூலுள் காணமுடிகின்றது. இறைவன் நிகழ்த்திய அற்புதங்களில் சபரிக்கு முக்தி அளித்தமை, கஜேந்திர மோட்சம், பாஞ்சாலிக்கு ஆடை வழங்கியமை, இரணியனை வதைத்தமை, பிரகலாதனைக் காத்தமை, சந்திரனின் கலைகளை உண்ணச் செய்தமை பற்றியும் குறிப்பிடுகின்றது.*

*திருமாலின் தசாவதாரங்கள், குறிப்பாக கிருஷ்ணாவதாரச் சிறப்பும் அத்திகிரி வரதராசனின் சிறப்புக்களும் அமைய இந்நூல் பாடப்பட்டுள்ளது.*

**அவையாம்பிகை சதகம்**

*அவையாம்பிகை சதகத்தில் கவலை, ஆசை, கோபம், காமம் என்ற அலைகளால் மோதப்பட்டு கண்ணீர் விட்டு அழுது நிற்கும் என்னை உன்*

*அருளாகிய தோணியில் ஏற்றி கரை சேர்க்க வேண்டுவதாய் பாடல்கள் அமைந்துள்ளன.*

### 3.2.4. வடமொழி சதகங்கள்

*இந்தியப் பண்பாட்டின் கருவூலமாகச் செந்தமிழும் வடமொழியும் திகழ்கின்றன. இவ்விரு மொழிகளும் தமிழ், வடமொழி, கிரேக்கம், இலத்தீன், ஈபுரு, சீனம், அரபு என்னும் உலகச் செம்மொழிகளின் வரிசையில் இடம்பெற்று அறிஞர் பெருமக்களின் பாராட்டைப் பெற்றவை. மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை பாடியுள்ள தமிழ்த் தெய்வ வணக்கப் பாடலில், கலைமகளின் வலது விழியாகத் தமிழும் இடது விழியாக வடமொழியும் விளங்குகின்றன எனப் புகழ்ந்துள்ளார்.*

> தமிழ்மொழியும் வடமொழியும் இருவேறு மொழிப் பிரிவுகளைச் சார்ந்தவை என்று கொள்ளப்பட்ட போதிலும், இலக்கிய வளம் பெற்ற இரண்டு சிறந்த மொழிகள் என்பதையும் ஒன்றோடொன்று தொடர்புடையவை என்பதையும் எல்லோரும் ஒருமுகமாக ஒப்புக் கொள்வார்கள்[50]

*என்னும் கருத்து தமிழுக்கும் வடமொழிக்கும் உள்ள தொடர்பை தெளிவுறுத்துகின்றது.*

*வடமொழி இலக்கியங்களை வேத இலக்கியம், சூத்திர இலக்கியம், இதிகாச இலக்கியம், செவ்வியல் இலக்கியம், பிற்கால இலக்கியம் என்னும் ஐந்து நிலைகளில் ஆராய்ந்துள்ளனர். இவற்றில் செவ்வியல் இலக்கியம் என்னும் பகுதியில் சதகம் இடம்பெறுதல் குறிப்பிடத்தக்கதாகும்.*

> இவற்றுள் செவ்வியல் இலக்கியம் என்பது கி.பி.400-800 என்ற காலப்பரப்பில் தோன்றியுள்ள காப்பியம், நாடகம், தூது, சதகம், புராணம், கதை இலக்கியம், பிரசஸ்தி இலக்கியம் (மெய்க்கீர்த்தி) என்பன குறிப்பிடத்தக்கவை ஆகும்[51]

*என்பர். வடமொழியில் கி.பி.6 ஆம் நூற்றாண்டிற்கு பின்னர் நீதிநூல்கள் தோன்றின என்பதை,*

> கி.பி.7 ஆம் நூற்றாண்டிற்கு முன் வடமொழியில் நீதி நூல்கள் இல்லை எனலாம். ஆனால் அறநெறிக் கருத்துக்கள் வேதகாலம் முதல் கூறப்பட்டு வந்துள்ளன. வடமொழியில் நீதி நூல்களாக மூதுரைகளும் பழமொழிகளும்

> நிறைய உள்ளன. நீதிநூல்கள் நூறு பாடல்களைக் கொண்ட சதகங்களாக உள்ளன[52]

என்னும் கூற்றிலிருந்து அறியமுடிகின்றது.

கி.பி. 6 அல்லது 7 ஆம்நூற்றாண்டில் முற்பகுதியில் வாழ்ந்தவராகக் கருதப்பெறும் பர்த்ருஹரி என்பவர் சதகத்திரயம் என்னும் நூலை இயற்றினார். இந்நூலே வடமொழியில் தோன்றிய முதல் சதக சாகித்யம் என்று வழங்கப் பெறுகின்றது. வடமொழியில் காணப்படும் சதகங்களை நான்கு வகையாகப் பாகுபடுத்துவர். அவை நீதிசதகம், சிருங்கார சதகம், வைராக்ய சதகம் மற்றும் பக்தி சதகம் எனப்படுகிறது.

நீதி சதகம், சிருங்கார சதகம், வைராக்ய சதகம் ஆகிய மூன்றும் பர்த்ருஹரி என்பவரால் இயற்றப்பட்டதாகும். மேற்கண்ட நான்கு வகைப்பட்ட சதகங்களும் தமிழ்மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. வடமொழி சதகங்களின் பா அமைப்பு மற்றும் பாடுபொருள் அமைப்பு எவ்வாறு அமைந்துள்ளன என்பது இங்கு எடுத்துக் காட்டப்படுகின்றது.

**பர்த்ருஹரி நீதிசதகம்**

வாழ்வியலுக்கு வேண்டப்படும் அறக்கருத்துக்களையும் உயரிய தகவுகளையும் எடுத்துரைப்பன நீதி சதகங்கள் எனப்படுகின்றன. இந்நூல் உலக நீதிகளை எடுத்துரைக்கும் நூறு பாடல்களால் அமைந்துள்ளது. இது வடமொழியில் பர்த்ருஹரி என்பவரால் இயற்றப்பட்டு அவர் பெயராலேயே பர்த்ருஹரி நீதி சதகம் எனவும் வழங்கப்பெறுகின்றது.

**பா அமைப்பு**

இந்நூலுள் கடவுள் வணக்கப் பாடல் ஒன்றும், சதகப் பாடல்கள் நூறு என நூற்றியொரு பாடல்கள் இடம்பெற்றுள்ளன. கடவுள் வணக்கப் பாடல் மற்றும் தமிழ்மொழி சதகங்களில் இடம்பெறுவது போல் தெய்வத்தை வாழ்த்துவதாக அமையாமல் சாந்தமாம் ஒளியை வணங்குவதாய் அமைந்துள்ளது. இதனை,

> அறிவும் மகிழ்ச்சியும் உருவமாய் அமைந்து
> திசையாற் பொழுதால் தீர்வு பெறலில்லாச்

சுயவனு பவமே சிறந்த அளவையாம்

சாந்தமாம் ஒளியைச் சிறப்புற வணங்குவாம்[53]

*எனும் பாடல் வாயிலாக உணர முடிகின்றது.*

*நூல் முழுவதும் ஒரே வகை யாப்பில் பாடப்பெறாது கருத்துக்களுக்கு ஏற்ப பலவிதமான பாக்கள் விரவிக் காணப்படுகின்றன.*

*நீதிசதகம் குறிப்பிடும் நீதிகளை பத்து தலைப்புகளில் வெளிப்படுத்துகின்றது. பாடலில் கருத்துக்களுக்கு ஏற்ப அதன் சாரமாக தலைப்புகள் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. எடுத்துக்காட்டாக மூர்க்கர் குணத்தை மாற்ற இயலாது என்பதை உணர்த்தும் பத்துப் பாடல்களுக்கு 'மூர்க்க பத்ததி' என்று தலைப்பிடப்பட்டுள்ளது.*

*ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்தில் இடம்பெறுவது போல் பாடல்கள் அனைத்தும் தலைப்புகள் இடப்பட்டு பத்துத் தலைப்புகளில், ஒரு தலைப்பிற்கு பத்து பாடல்கள் என பதிக அமைப்பில் அமைந்துள்ளன.*

*தலைப்புகளை வைத்து பாடலின் உட்கருத்தை அறிந்து கொள்ளும் வகையில் தலைப்புகள் அமைந்துள்ளன. அவை மூர்க்க பத்ததி, வித்வத் பத்ததி, மானசௌர்ய பத்ததி, அர்த்த பத்ததி, துர்ச்சன பத்ததி, ஸுஜன பத்ததி, பரோபகரா பத்ததி, தைர்ய பத்ததி, தைவ பத்ததி, கர்ம பத்ததி என்பனவாகும். பதிகம், பத்து என்பதற்கு இணையாக 'பத்ததி' என்னும் சொல்லாட்சியைக் காணமுடிகின்றது.*

**பாடுபொருள்**

*நீதி சதகம் மக்களை நன்னெறிப்படுத்தும் பல்வேறு நீதிகளை எடுத்துரைக்கின்றது. முட்டாளின் குணத்தை மாற்ற இயலாது, கல்வியின் சிறப்பு, நற்குடிப்பிறப்பு, செல்வத்தின் சிறப்பு, தீயவர் செயல்கள், நல்லோர் குணங்கள், உதவி, இரக்க மனப்பான்மை, துணிச்சல், முயற்சி, விதியின் செயல்பாடுகள், மற்றும் வினை பற்றிய செய்திகளை இந்நூல்கள் எடுத்தியம்புகின்றன.*

மணலைப் பிசைந்துநெய் யெடுக்கவும் முயலலாம்

அனலென உடற்றும் அருநீர் வேட்கையைக்

கானல்நீர்க் காட்சியால் தணித்தலு மாகும்;

ஆனமட் டொருவன் அலைந்து திரிந்துபின்
கானுறு முயற்கொம் படையினு மடையலாம்
தான்பிடித் ததுபிடி யென்பவர் துரிசற
நாமெடுத் தோதல் நவிலவும் படுமோ?[54]

*மூர்க்கர் குணத்தை மாற்ற இயலாது என்பதை உணர்த்துவதற்கு பல்வேறு உதாரணங்களைச் சுட்டிக் காட்டி விளக்குவதை அறியமுடிகின்றது.*

*வினா அமைப்பிலான பாடல்களையும் காணமுடிகின்றது.*

பிறப்பிறப் பமைந்த பீழையாம் சுழலில்
இறந்தவன் யாரோ பிறவா திருப்பவன்?
எவனது பிறப்பால் குடிமே லுறுமோ
அவனே பிறப்பவன், மற்றவர் பிறப்பெவன்?[55]

*இவ்வாறாக வினா அமைப்பில் கருத்துக்களை எடுத்துரைத்தல், ஒரு கருத்தை (நீதியை) விளக்குவதற்கு பல்வேறு உதாரணங்களை காரணம் காட்டி விளக்கல் என்ற நிலையில் பாடல்கள் அமைந்துள்ளன.*

*இப்பாடல்கள் அனைத்தும் அனைவரும் கற்று பயனடையும் வகையில் எளிமையான மொழிநடையில் அமைந்துள்ளன. தமிழ் மொழிச் சதகங்களில் உள்ளது போன்ற மகுட அமைப்பை இந்நூலில் காணமுடியவில்லை.*

**வைராக்ய சதகம்**

*வைராக்ய சதகம் என்னும் இந்த கவிதைத் திரட்டு பெருமை வாய்ந்த பர்த்ருஹரி என்ற கவியின் மூன்று சதகங்களில் ஒன்றாகும்.*

*வைராக்யமென்பது விருப்பமின்மை என்ற பொருளைக் கொடுக்கும் - விராகஸ்ய பாவ வைராக்யம் என வடமொழியில் இந்தச் சொல் அகத்துறவை குறிப்பதாக இருக்கிறது. இந்த வைராக்யமென்பது பேரின்பத்துக்கு ஒரு பெரும் ஏணி அல்லது அரும்சாதனம் ஆகும் என்பதை,*

தனிமையை நாடி, உண்டியை சுருக்கி, மனம், வாக்கு காயங்களை அடக்கி எப்போதும் தியான யோகத்தில் ஆழ்ந்திருப்பதை வைராக்யம் என பெரியார் உரைக்கின்றனர். ஓடும் ஆற்றில் கட்டும் அணை போன்றது போலும் இந்த வைராக்யமென அவர்கள் அபிப்ராயப்படுகிறார்கள்[56]

*எனும் வைராக்ய சதகம் உரை விளக்கம் மூலம் அறியமுடிகின்றது.*

*வைராக்ய சதகத்தில் ஒரேவகையான யாப்பு மற்றும் மகுடம் அமைதல் என்னும் அமைப்பை காணமுடியவில்லை. நீதிசதகத்தைப் போன்று இந்நூலும் பத்துத் தலைப்புகளில் பத்துப் பத்துப் பாடல்களாக நூறு பாடல்களில் உலகப் பற்றை விடுத்தலுக்கான வழிமுறைகளைக் கூறுகின்றது.*

1. *ஆசை இகழ்ச்சிப் படலம்*
2. *விஷய சுகத்தை விடவேண்டும்*
3. *யாசிக்கும் அவலநிலையைத் தூற்றுதல்*
4. *இன்ப நுகர்ச்சிகளின் நிலையற்றத் தன்மை*
5. *காலத்தின் வல்லமை*
6. *துறவி - அரசன் சம்பாஷணை*
7. *உள்ளத்தை அமைதிவழி செலுத்தும் உபதேசம்*
8. *அழிவற்ற மற்றும் அழியும் பொருள்களின் பாகுபாடு*
9. *சிவவழிபாட்டு படலம்*
10. *முக்தனின் செயல்பாடு மற்றும் தவவலிமை எத்தகையது*

*என்னும் தலைப்புகளில் வைராக்ய சதகப்பாடல் கருத்துக்களை அறியமுடிகின்றது.*

பிக்ஷாசநம் ததபி நீரஸமேகவாரம்

சய்யா சபூ: பரிஜனோ நிஜதேஹமாத்ரம்!

வஸ்த்ரம் சுஜீர்ணசதசண்டமலீ ச கந்தா

ஹா ஹா ததாபி விஷயாந்ந ஜஹாதி சேத:!![57]

*என்னும் பாடல் விஷயப்பற்றை விடாமுடியா நிலையை எடுத்துரைக்கின்றது. இந்நூலில் இடம்பெற்றுள்ள பாடல்கள் அனைத்தும் சமஸ்கிருதப் பாடலின் மொழிபெயர்ப்பாக இல்லாமல் சமஸ்கிருதத்தின் தமிழ் வடிவமாக விளங்குவதைக் காணலாம். சமஸ்கிருதம் அறியாதவர்கள் தமிழ் உரை கொண்டுதான் பாடலின் கருத்தை அறியமுடியும்.*

**ஸ்ரீதயா சதகம்**

*ஸ்ரீதயா சதகம் என்னும் நூலின் ஆசிரியர் திருவிசநல்லூர் ஸ்ரீதர வேங்கடேச ஐயா அவர்கள் ஆவர். ஸ்ரீதயாசதகம் எனப் பெயரிலேயே புதுமை படைத்த இந்நூல் கருணையே உருவமாக விளங்கும் அம்பிகையைத் 'தயா' எனப் பெயர் கூறிப் போற்றி வணங்கும் நூறு பாடல்களைக் கொண்டது. இந்நூலின் காப்புச்*

செய்யுள் தயாதேவியை வணங்குவதாக அமைந்துள்ளது. காப்புச் செய்யுள் நேரிசை வெண்பாவாலும் நூல் அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்திலும் பாடப்பட்டுள்ளது.

காப்புச் செய்யுள் ஒன்றும் நூல் நூற்றிரண்டு பாடல்கள் என நூற்றி மூன்று பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இந்நூலிலும் பாடல்கள்தோறும் இடம்பெறும் மகுட அமைப்பைக் காண முடியவில்லை.

சமஸ்கிருதப் பாடல்களின் தமிழ் மொழிபெயர்ப்பாக அமைந்து கற்பவர் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் எளிய மொழிநடை அமைந்துள்ளது.

**பாடுபொருள்**

தாயின் அரவணைப்பு இல்லாவிட்டால் சேய் சவலையாகும் தளர்ந்து மெலியும் அதுபோல் உலகத்தாயாகிய அம்பிகையின் அருள் கிடைக்காவிடின் செல்வம் இல்லை; கல்வி வராது; இன்பம் இல்லை; அமைதி கிட்டாது; வாழ்வின் பயனாகிய ஞானம் இல்லை; சிவநிறைவு என்ற வீடுபேறு இல்லை. இவற்றைத் தருமாறு உருகி உருகித் தயாதேவியை வேண்டுவதாய் இந்நூலில் பாடல்கள் அமைந்துள்ளன.

வில்லால் அடித்த விஜயனுக்கும் கல்லால் அடித்த சாக்கியருக்கும் இறைவன் அருள் வழங்கியது அம்பிகையின் கருணையால்தான். இறைவனின் இடப்பாகத்தில் அன்னை விளங்குவதால் தண்டிக்கும் குணமுடைய இறைவனிடம் அன்னையின் கருணை குணம் வெளிப்படுவதை பல பாடல்களில் எடுத்துக் காட்டியுள்ளார்.

அன்னையின் அருளினாலேயே இவ்வுலகம் இயங்குவதாகவும் பாவியான தனக்கு அருள்செய்யுமாறு வேண்டுவதாக பல பாடல்கள் அமைந்துள்ளன.

சிவநாமமே தன்னை காக்கவல்லது என்றும் அந்நாமத்தை அன்னை தனக்கு அருள வேண்டுவதாகவும் இந்நூற்பாடல்கள் அமைந்துள்ளன.

மேலும் அரியும் சிவனும் ஒன்று என்னும் கருத்தையும் இந்நூலாசிரியர் வலியுறுத்துவதைக் காணமுடிகின்றது.

"ஏ சிவ தயையே! என்னைக் காக்க வா" என்று எறு உன்னை
நேசமோடு அழைக்க வேண்டேன்; நினக்கு இருப்பிடமா மேவும்
ஆசிலாச் சிவன், என் பாவம் கண்டு அளவற்ற சீற்றம்
வீசனன்; அத்தை நீஉன் அருளினால் விடச்செய்; போதும்[58]

*இந்நூலாசிரியர் அன்னையின் மீது கொண்டு பக்தித்திறம் இந்நூலின் வழி வெளிப்படுகின்றது.*

### 3.3. தொகுப்புரை

- *சதக இலக்கியங்கள் வடமொழி மரபைப் பின்பற்றி இயற்றப்பட்டிருப்பினும் அவ்வமைப்பிலிருந்து முற்றிலும் மாறுபட்ட அமைப்பு நிலையைக் கொண்டுள்ளன.*
- *வரலாற்றுச் சதகங்கள், சைவ சமயம் தொடர்புடைய சதகங்கள் அனைத்திலும் காப்புச் செய்யுள் விநாயகரைக் கொண்டு பாடப்பட்டுள்ளன.*
- *திருமால் மற்றும் அம்பிகையைப் பாடும் சதகங்கள் அந்நூலின் பாட்டுடைத் தலைவரையே காப்பாகக் கொண்டுள்ளன.*
- *நூறு பாடல்கள் பாடப்படுதல் என்ற அமைப்பில் அனைத்து சதகங்களும் காணப்படுகின்றன. நூற்றுக்கும் அதிகமான பாடல்கள் இடம்பெற்றுள்ளனவே தவிர குறைவான எண்ணிக்கையில் எந்தவொரு சதக இலக்கியமும் காணப்படவில்லை.*
- *மகுடம் அமைதல் - சதக இலக்கியங்களுக்கே உரிய சிறப்பம்சமாக காணப்படுகின்றது.*
- *மகுடம் அமையாத சதக இலக்கியங்களும் உள்ளன.*
- *நூல் முழுதும் ஒரே வகை யாப்பில் பாடப்பட்ட வரலாற்று சதகங்கள் கட்டளைக் கலித்துறையிலும், நீதி சதகங்கள் ஆசிரிய விருத்தத்திலும், பக்தி சதகங்கள் கலிவிருத்தத்திலும் அமைந்துள்ளன.*
- *கற்பவர்களுக்கு எளிதில் புரியும் வண்ணம் மொழிநடை எளிமையாக அமைக்கப்பட்டுள்ளது.*
- *மண்டல வரலாறு கூறும் சதகங்கள் ஒரு பொது அமைப்பினைக் கொண்டுள்ளன.*

- *மண்டலங்களின் சிறப்பு, நதிகள், அரசர்கள், வள்ளல்கள், நாயன்மார்கள், ஆழ்வார்கள், புலவர்கள், வேளாளர்கள் பற்றிக் குறிப்பிடுவதில் அனைத்து மண்டல சதகங்களும் ஒன்றுபடுகின்றன.*
- *நற்குணத்தின் இயல்பு, தீச்செயல்கள், இல்லறம், பெண்கள், விருந்தோம்பல், ஈகை, வறுமை, கல்வி, செல்வம், மருத்துவம் உள்ளிட்ட பல்வேறு நீதிகளை அறிவுறுத்துவனவாக நீதிசதகங்கள் அமைந்துள்ளன.*
- *கலைக்களஞ்சியம் போலவும் அகராதிகள் போலவும் கருத்துக்களை அறிவிக்கும் நோக்குடையனவாகவும் சதக இலக்கியங்கள் விளங்குகின்றன.*
- *பக்தி சதகங்கள் இறைவனின் தோற்றவர்ணனை கூறல், இறைவனின் அருளிச் செயல்களைக் கூறல், தமக்கு அருள்புரிய வேண்டுதல் என்று பாடுவனவாய் அமைந்துள்ளன.*
- *துதி சதகங்கள் இறைவனைப் பாராயணம் செய்து துதிக்கும் நோக்கில் பாடப்பட்டுள்ளன.*
- *மக்களுக்குப் பெருமளவில் பயன்படக்கூடிய சதக இலக்கியங்கள் இன்று பயன்பாட்டில் இல்லாதிருத்தல் வியப்பைத் தருகின்றன.*
- *வடமொழி செவ்வியல் இலக்கியங்களுள் ஒன்றாக சதகம் விளங்குகின்றது.*
- *கி.பி.6 ஆம் நூற்றாண்டில் தோற்றம் பெற்றதாகக் கருதப்படும் சதக இலக்கியங்களில் பெரும்பாலானவை நீதி சதகங்களாக உள்ளன.*
- *வடமொழி சதகங்களில் நீதி சதகங்கள், சிருங்கார சதகம், வைராக்ய சதகம், பக்தி சதகம் என்ற வகைப்பாட்டினைக் காணமுடிகின்றது.*
- *காப்புச் செய்யுள் அல்லது கடவுள் வணக்கப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன.*
- *நீதிசதகம் 'சாந்தமாம் ஒளியை'யும், வைராக்ய சதகம் சிவபெருமானையும், ஸ்ரீதயாசதகம் 'பாட்டுடைத் தலைவியாகிய அம்பிகையையும்' வணங்குவதாக கடவுள் வணக்கப்பாடல்கள் அமைந்துள்ளன.*
- *பாடல்கள்தோறும் 'மகுடம்' அமைதல் என்ற அமைப்பினை வடமொழி சதகங்களில் காணமுடியவில்லை.*
- *நூல் முழுவதும் ஒரேவகை யாப்பில் பாடப்பட வேண்டும் என்ற வரையறை பின்பற்றப்படவில்லை.*

- நூறு பாடல்களில் பாடப்பட வேண்டும் என்ற எண்ணிக்கையைக் கடந்து ஸ்ரீதயா சதகத்தில் நூற்றியிரண்டு பாடல்கள் இடம்பெற்றுள்ளன.
- பத்துப்பத்துப் பாடல்களாக பதிக அமைப்பில் நீதிசதகமும் வைராக்ய சதகமும் அமைந்துள்ளன. ஸ்ரீதயா சதகத்தில் இவ்வமைப்பு காணப்படவில்லை.

இவ்வாறாக மேலே சொல்லப்பட்ட கருத்துக்கள் யாவும் தொகுப்புரையில் தொகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

## சான்றெண் குறிப்புகள்

1. ந.சுப்புரெட்டியார், **இலக்கியக் கொள்கைகள்,** ப.72.
2. **தொல். பொருள். செய்யுளியல்,** நூ.73.
3. மு.வரதராசனார், **இலக்கிய மரபு,** ப.1.
4. அம்பலவாணக் கவிராயர், **அறப்பளீசுரசதகம், காப்புச் செய்யுள்.**
5. அரிபக்தர் கோபாலகிருஷ்ணர், **எம்பிரான் சதகம், காப்புச் செய்யுள்.**
6. சேலம் சிதம்பரம் பிள்ளை, **கயிலாசநாதர் சதகம், கடவுள் வாழ்த்துப் பாடல்.**
7. அரிபக்தர் கோபாலகிருஷ்ணர், மு.கு.நூ., கடவுள் வாழ்த்துப் பாடல்.
8. முத்தப்பச் செட்டியார், **செயங்கொண்டார் சதகம், அவையடக்கச் செய்யுள்.**
9. படிக்காசுப்புலவர், **தொண்டை மண்டல சதகம்,** பா.101.
10. ஆத்மநாத தேசிகர், **சோழமண்டல சதகம்,** பா.101.
11. த.இராசேசுவரி, **சதகத்திரட்டு (தொகுதி 1),** ப.xiv.
12. ந.வீ.செயராமன், **சதக இலக்கியம்,** ப.29.
13. அவிநாசி ஆறைகிழார், **கார்மண்டல சதகம்,** பா.6.
14. அரிபக்தர் கோபாலகிருஷ்ணர், மு.கு.நூ., பா.23.
15. காஞ்சிபுரம் சபாபதி முதலியார், மு.கு.நூ., பா.23.
16. குருபாததாசன், மு.கு.நூ., பா.20.
17. அம்பலவாணக் கவிராயர், மு.கு.நூ., பா.17.
18. படிக்காசுப்புலவர், **தண்டலையார் சதகம்,** பா.13.
19. மு.வரதராசனார், **தமிழ் இலக்கிய வரலாறு,** ப.245.
20. குருபாததாசன், மு.கு.நூ., பா.34.
21. அரிபக்தர் கோபாலகிருஷ்ணர், மு.கு.நூ., பா.24.
22. காஞ்சிபுரம் சபாபதி முதலியார், மு.கு.நூ., பா.48.
23. மாயூரம் கிருஷ்ணையர், **அவையாம்பிகை சதகம்,** பா.3.
24. மேலது., பா.4.
25. ந.வீ.செயராமன், **சதக இலக்கியம்,** பக்.99-100.
26. படிக்காசுப் புலவர், **தொண்டை மண்டல சதகம்,** பா.4.
27. மு.வரதராசனார், **தமிழ் இலக்கிய வரலாறு,** ப.245.
28. படிக்காசுப்புலவர், மு.கு.நூ., பா.87.

29. மதுரை ஐயம்பெருமாள், **பாண்டி மண்டல சதகம்,** பா.51.

30. கார்மேகக் கவிஞர், **கொங்குமண்டல சதகம்,** பா.50.

31. படிக்காசுப் புலவர், **தொண்டை மண்டல சதகம்,** பா.29.

32. ஐயம்பெருமாள், **பாண்டி மண்டல சதகம்,** பா.95.

33. ஆத்மநாத தேசிகர், மு.கு.நூ., பா.43.

34. கார்மேகக் கவிஞர், மு.கு.நூ., பா.92.

35. மலைக்கொழுந்து நாவலர், **திருத்தொண்டர் சதகம்,** பா.4.

36. துரை.தண்டபாணி (உரை.), **நீதிநூல்கள், மூதுரை,** பா.81.

37. படிக்காசுப்புலவர், **தண்டலையார் சதகம்,** பா.42.

38. அம்பலவாணக் கவிராயர், மு.கு.நூ., பா.12.

39. மேலது., பா.35.

40. படிக்காசுபுலவர், மு.கு.நூ., பா.7.

41. குருபாததாசன், **குமரேசசதகம்,** பா.77.

42. திருச்சிற்றம்பல நாவலர், **அண்ணாமலைச் சதகம்,** பா.62.

43. முத்துக்குமரன், **வடிவேல் சதகம்,** பா.91.

44. மேலது., பா.83.

45. படிக்காசுப்புலவர், **தண்டலையார் சதகம்,** பா.51.

46. முத்துப்பச் செட்டியார், **செயங்கொண்டார் சதகம்,** பா.46.

47. திருச்சிற்றம்பல நாவலர், **அண்ணாமலைச் சதகம்,** பா.33.

48. காஞ்சிபுரம் சபாபதி முதலியார், **அருணாசல சதகம்,** பா.10.

49. மேலது., பா.31.

50. பெ.திருஞானசம்பந்தம், **வடமொழி இலக்கியச் சோலை,** ப.116.

51. சோ.ந.கந்தசாமி, **உலகச் செம்மொழிகள் இலக்கியம் (முதல் தொகுதி),** ப.145.

52. எஸ்.செல்வகணபதி, **ஒப்பிலக்கிய நோக்கில் தமிழிலக்கியம்,** ப.152.

53. பர்த்ருஹரி, **நீதிசதகம்,** ப.1.

54. மேலது., ப.3, பா.5.

55. மேலது., பா.24.

56. பர்த்ருஹரி, **வைராக்ய சதகம்,** ப.85.

57. மேலது., பா.16.

58. ஸ்ரீதர வேங்கடேச ஐயா, **ஸ்ரீதயா சதகம்,** பா.39.

# இயல் 4

# சதக இலக்கியங்களின் உள்ளடக்கம்

### 4.0. முன்னுரை

இலக்கியத்தில் உள்ளடக்கம் என்பது பாடுபொருள், கருத்து, எண்ணம் எனப் பல பெயர்களில் வழங்கப்படுகிறது. இதனை,

> பொதுவாகக் கருத்து என்பதைச் செய்தி அல்லது பொருள் என்று கொள்ளலாம். ஆங்கிலத்தில் இதை, 'sense' (புலனுணர்வு அல்லது உணர்வாற்றல்), 'meaning' (பொருள்), Essence (சாராம்சம் அல்லது கருத்து), Idea (எண்ணம் அல்லது கருத்து) என்ற சொற்களால் குறிப்பிடுவர்[1]

என்னும் ந.சுப்புரெட்டியார் கூற்று வலியுறுத்துகின்றது. ஒரு இலக்கியத்தின் உயிர்நாடியாக உள்ளடக்கம் விளங்குகிறது.

> பாடுபொருள் என்பது உள்ளடக்கத்தைக் (content) குறிக்கும். அதாவது பாடலில் மையப் பொருளாக நிற்பதே பாடுபொருளாகும்.[2]

தொல்காப்பியர் இலக்கியத்திற்குரிய கருத்து, எண்ணம் பற்றிக் கூறுகையில்,

> இன்பமும் இடும்பையும் புணர்வும் பிரிவும்
> ஒழுக்கமும் என்றிவை இழுக்குநெறி யின்றி
> இதுவாகித் திணைக் குறிப்பொருள் என்னாது
> பொதுவாய் நிற்றல் பொருள்வகை என்ப[3]

என்று குறிப்பிடுகிறார். இலக்கியத்தின் பாடுபொருள் என்பது ஒன்று என்றும் அது உணர்த்தும் எண்ணம் அல்லது சாரம் என்பது பிறிதொன்றாகவும் கொள்ளப் பெறுகின்றது.

இலக்கியத்தில் கருத்து என்பது உள்ளடக்கம் என்று சொல்லப்படுகின்றது. கருத்து இல்லாத இலக்கியமே இல்லை எனலாம். இலக்கியத்தில் உள்ளடக்கம் என்பது உணர்ச்சி, கற்பனை, உத்தி ஆகியவற்றின் தொடர்போடு அமைகின்றதே அல்லாமல் சமூகம் சார்ந்த கருத்துக்களை எதார்த்த நிலையில் குறிப்பிடவில்லை. உணர்ச்சி, கற்பனை, உத்தி ஆகியவற்றை நீக்கினால் மட்டுமே உள்ளடக்கத்தைக் காண இயலும். ஒரு இலக்கியத்தின் உள்ளடக்கத்தை அறிதல் என்பது சிக்கலான

பணி என்றும் அது பொருளுக்கே பொருள் காண்பது போன்றதாகும் என்று இலக்கியக் கொள்கைகள் என்னும் நூலில் ந.சுப்புரெட்டியார் குறிப்பிடுகிறார்.

மாறிவரும் காலச்சூழலுக்கு ஏற்ப இலக்கியத்தின் கருத்துக்களும் மாறிக்கொண்டே வந்துள்ளன. சங்க இலக்கியங்கள் காதல், வீரம், கொடை ஆகியவற்றைப் பாட, நீதி நூல்கள் மக்களை நன்னெறிப்படுத்தும் அறக்கோட்பாடுகளை வலியுறுத்தின. பக்தி இலக்கியங்கள் இறைவனின் பெருமைகளை எடுத்துரைத்தன. சிற்றிலக்கியங்கள் பெரும்பாலும் தனிமனித போற்றலாகவும் இறைவன் புகழ் பாடுவதாகவும் காணப்படுகின்றன. இவ்வாறு காலத்திற்கு காலம் இலக்கியம் வெளிப்படுத்தும் கருத்துக்களிலும் மாற்றத்தைக் காணமுடிகின்றது.

> எந்த ஒரு நல்ல இலக்கியமும் அல்லது கவிதையும் அல்லது கலையாக்கமும் காலம் கடந்து நிலங்கடந்து வாழ வேண்டுமானால் அதன் கரு அல்லது உள்ளடக்கம் உலகப் பொது உண்மையைப் பற்றிக் கூறுவதாகவே அமையவேண்டும்[4]

என்று ச.அகத்தியலிங்கம் கூறுகிறார்.

> பாட்டில் இன்ன பொருள் பற்றிப் பாடலாம், இன்ன பொருள் பற்றிப் பாடலாகாது என்ற வரையறை இருத்தல் இயலாது. பாடுவோரின் அனுபவத்திற்கு ஏற்ப எதுவும் பொருளாக அமையலாம்[5]

என்னும் கருத்திற்கேற்பவும் காலச்சூழல் மற்றும் புலவரின் மனநிலைக்கு ஏற்பவும் பாடுபொருளில் மாற்றம் ஏற்பட்டது.

சிற்றிலக்கியங்களின் உள்ளடக்கம் சங்கப் பாக்களைப் போலவோ அல்லது அற, காப்பிய, பக்தி இலக்கியங்களைப் போலவோ சமுதாயம் தழுவியதன்று. இடைக்காலத்தில் நிலப்பிரபுத்துவ உச்சக்கட்டத்தில் அரசனை ஆண்டவனாகக் கருதிப் பாடிப் பரிசில் பெறுவதை நோக்கமாகக் கொண்டவை.

சதக இலக்கியங்கள் எவையேனும் ஒரு பொருள் பற்றிப் பாடுவதை நோக்கமாகக் கொண்டிருப்பினும் பல பொருண்மைகளை உள்ளடக்கிய சதகங்களையும் காணமுடிகின்றது. ஒவ்வொரு சதகமும் தாம் கூற விழையும் கருத்துக்களை அறிவுறுத்துவதையே நோக்கமாகக் கொண்டுள்ளன. அதனால் ஒரு சதகத்தில் இடம்பெற்றுள்ள கருத்துக்களை பிற சதகங்களிலும் காணமுடிகின்றது.

*சதக இலக்கியங்களின் உள்ளடக்கத்தைக் காணுமிடத்து மண்டல வரலாறு கூறல், இறைவனைப் போற்றல், நல்லறங்களைப் போதித்தல் என்ற நிலையில் அமைந்துள்ளன. இறைவனைப் போற்றும் துதி சதகங்களில் பெரும்பான்மை அறங்கூறும் சதகங்களாகவே அமைந்துள்ளன.*

*சதக இலக்கியங்களின் உள்ளடக்கமானது வரலாற்றுச் சதகங்கள், நீதி சதகங்கள், துதி சதகங்கள், வடமொழி சதகங்கள் என்னும் வகைப்பாட்டின் அடிப்படையில் ஆராயப்பெறுகின்றது.*

## 4.1. வரலாற்றுச் சதகங்கள்

*வரலாற்றுச் சதகங்கள், மண்டல வரலாறு கூறுதல், தொண்டர் வரலாறு கூறுதல் என்னும் இரு வகைகளில் விளக்கப்பட்டுள்ளன.*

*பண்டைத் தமிழகம் மண்டலங்களாகப் பிரித்து ஆளப்பட்டு வந்தது. அதாவது சேரமண்டலம், சோழ மண்டலம், தொண்டை மண்டலம், கொங்கு மண்டலம், பாண்டி மண்டலம் என வழங்கப்பட்டது.*

> வடவேங்கடம் தென்குமரிக்கு இடைப்பட்டதான தமிழகம் பண்டை காலந்தொட்டு, சேர, சோழ, பாண்டியர்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. அதன் காரணத்தால் சேர மண்டலம், சோழ மண்டலம், பாண்டிய மண்டலம் என்றும் வழங்கப்பட்டது. மண்டலம் என்பதற்கு பதில் நாடு என்றும் வழங்கப்பட்டது. தொண்டை மண்டலம், கொங்கு மண்டலம் என்பது பின்னர்ஏற்பட்ட பிரிவுகள் ஆகும் என்பது குறிப்பிடத்தக்கது.[6]
>
> மண்டல சதகங்கள் தமிழ்நாட்டின் வரலாற்றை அறிய உதவும் எளிமைக் கருவூலங்களாகின்றன. முற்காலத்தில் தமிழ்க் கவிஞர்கள் வரலாற்றை எழுதி வைக்கவில்லை. அந்நிலையில் புலவர் ஒருவர் தாம் வாழ்ந்த நாட்டுப் பகுதியில் கண்டும் கேட்டும் அறிந்த செய்திகளைக் கொண்டு சதகம் பாடினர்.[7]

*அவ்வம்மண்டலங்களின் எல்லை சார்ந்த நிலப்பரப்புகள் எவை என்பதையும் மண்டலங்களின் உட்பிரிவுகள் பற்றியும் இங்கு கூறப்படுகின்றன.*

### 4.1.1. மண்டல வரலாறு கூறுதல்

#### 4.1.1.1. மண்டலங்களின் சிறப்பு

**எல்லைகள்**

*தமிழகம் மண்டலங்களாக வழங்கப்பட்டு வந்த காலத்து அதன் நாற்புற எல்லைகளாக விளங்கிய ஊர்கள் இங்கு எடுத்துரைக்கப்படுகின்றன.*

திருமணக் கும்பொழின் மால்வரை நாடெனச் சேர்ந்திரண்டாய்ப்
பொருதிரை யாரக் குடகடற் பல்லவம் போர்க்கடம்ப
மருமறை மாபலி வானந் திருத்தொண்டை யக்கொங்குசீர்
வருமுறை சூழு வயங்குறுல் காராளர் மண்டலமே[8]

*என்னும் கார்மண்டல சதகப்பாடல், கார்மண்டலம் திருமகள் விளங்கும் பொழில் நாடென்றும், திருமாலுக்குரிய மலை நாடென்றும் இரு பிரிவாக வழங்கப்படுதலையும், மேற்கே கடலும், வடக்குத் திசையில் பல்லவ தேசமும், கடம்ப தேசமும், கிழக்கே மாபலிவாணர் தேசமும் தொண்டை நாடும் தெற்கே கொங்கு தேசமும் எல்லைகளாக விளங்கியதைக் குறிப்பிடுகின்றது.*

**கொங்கு மண்டலம்**

மதிற்கரை கீட்டிசை தெற்குப் பழநி மதிகுடக்குக்
சுதித்துள வெள்ளி மலைபெரும் பாலை கவின்வடக்கு
விதித்துள நான்கெல்லை.[9]

*என்னும் கொங்கு மண்டல சதகப்பாடல் கொங்கு மண்டலத்தின் நாற்புற எல்லைகளைப் பற்றிக் குறிப்பிடுகின்றது.*

*வடக்கு - பெரும்பாலை (பாலை மலைத்தொடர்)*

*தெற்கு - வைகாவூர் (பழனி)*

*மேற்கே வெள்ளி மலை*

*கிழக்கு - மதிற்கரை (குளித்தலை வட்டாரம்)*

> இவ்வெல்லைகளுக்கு இடைப்பட்டதான கொங்கு நாடு என்பது, கோயம்புத்தூர், நீலகிரி, பெரியார் மாவட்டமாகிய ஈரோடு, தர்மபுரி ஆகிய கோட்டங்களும், திருச்சிராப்பள்ளிக் கோட்டத்தின் கரூர், குழித்தலை வட்டாரங்களும் மதுரைக் கோட்டத்தின் பழனி, திண்டுக்கல் வட்டாரங்களும் அடங்கிய பரப்பாகக் கொள்ளப்பட்டு வருகிறது.[10]

*இத்தகைய நிலப்பரப்புகளைச் சுற்றி கொங்கு நாட்டின் எல்லைகள் இயற்கை அரணாக அமைந்துள்ளன.*

**தொண்டை மண்டலம்**

*மேற்கே - சவ்வாது மலை (பவளமலை)*

*கிழக்கு - வங்கக் கடல்*

*வடக்கு - வேங்கடமலை*

*தெற்கு - தென்பெண்ணை (பினாகினி ஆறு)*

*இவை தொண்டை மண்டலத்தின் எல்லைகள் என்பதைப் பின்வரும் தனிப்பாடல் எடுத்துரைக்கின்றது.*

மேற்குப் பவளமலை வேங்கடம் நேர்வடக்காம்
ஆர்க்கும் இவரிஅணி கிழக்கு - பார்க்குளயர்
தெற்குப் பினாகி திகழ் இருப தின்காதம்
நற்றொண்டை நாடெனவே நாட்டு[11]

*என்பதே அப்பாடல் தரும் எல்லைகள் ஆகும்.*

**சோழ மண்டலம்**

*கிழக்கு - கடல்*

*தெற்கு - வெள்ளாறு*

*மேற்கு - கோட்டைக்கரை*

*வடக்கு - வடவெள்ளாறு*

*இவை சோழ மண்டலத்தின் எல்லைகளாக விளங்குவதை,*

செல்லும் குணபால் திரைவேலை
தென்பால் செழித்த வெள்ளாறு
வெல்லும் கோட்டைக் கரைவிளங்கும்
மேல்பால் வடபால் வெள்ளாறே[12]

*என்னும் சோழ மண்டல சதகப்பாடல் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது.*

**பாண்டி மண்டலம்**

*தெற்கு - கன்னியாகுமரி*

*வடக்கு - வெள்ளாறு*

*கிழக்கு - திண்டுக்கல், காரைக்காடு*

*மேற்கு - சேது*

*என்னும் இவ்வெல்லைகளுக்கு உட்பட்ட பகுதியே பாண்டியர் ஆட்சி செலுத்தி வந்த பாண்டி மண்டலமாக விளங்கிற்று.*

தென்குமரிக்கும் வடக்கு வெள்ளாற்றுக்குந் தெற்குவரு
மன்புறு திண்டுக்கல் ஓக்குங்கா ரைக்காட்டிற்குங் கிழக்கா
யன்புறு சேதுவின் மேற்கான வெல்லைக்கு ளானதெல்லாம்
வன்பெறு மாறன் புரக்கின்ற பாண்டியன் மண்டலமே![13]

*என்னும் பாண்டி மண்டல சதகப்பாடல் அதன் எல்லையைக் குறிப்பிடுகின்றது.*

பாண்டிய நாடு என்பது மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலிக் கோட்டங்களும் கீழ்க்கோடிக் கரையும் சேர்ந்த நிலப்பரப்பாகும்[14]

*என்று மா.இராசமாணிக்கனார் பாண்டிய நாட்டின் நிலப்பரப்பினைக் குறிப்பிடுகின்றார்.*

**மண்டலத்தின் உட்பிரிவுகள்**

மண்டலத்தின் உட்பிரிவுகள் வளநாடு, நாடு, கோட்டம், கூற்றம் என்னும் பெயர்களாய் வழங்கின. வளநாடு அல்லாத பிரிவுகள் பழைய தமிழ்ச்சங்க நாளிலே இருந்திருக்கின்றன என்பதற்குச் சங்க நூல்களில் அப்பெயர்கள் காணப்படுதலே சான்றாகும்.[15]

*வளநாடு என்பது சோழநாட்டைக் குறிக்கும். வளவன் என்னும் சொல் சோழனைக் குறிக்கும். ஆகையால் வளநாடு என்னும் பிரிவு பிற்காலத்தில் தோன்றியது என்பதை அறியமுடிகின்றது.*

**கார்மண்டலம்**

*கார் மண்டலம் நாடு என்னும் உட்பிரிவினை உடையது. மலைநாடு முப்பத்திரண்டு வளநாடாகவும் மேல்நாடு - முப்பத்திரண்டு வளநாடாகவும் கீழ்நாடு - அறுபத்து நான்கு வளநாடாகவும் பிரிக்கப்பட்டுள்ளது.*

*இம்மண்டலம் மலை, ஆறு, நாடு, நகர், மாலை, பரி, கரி, முரசு, கொடி, தோல் என்னும் பத்து அங்கங்களாக சிறப்பித்துப் பாடப்பட்டுள்ளது.*

**கொங்கு மண்டலம்**

*இம்மண்டலம் இருபத்தி நான்கு நாடுகளாகவும் அதற்குரிய இணை நாடுகள் எனவும் பகுக்கப்பட்டுள்ளது.*

*பூந்துறை நாடு*

*தென்கரை நாடு*

*காங்கேய நாடு*

*ஆறை நாடு*

*என்னும் இருபத்தி நான்கு நாடுகளாகவும், பருத்திபள்ளி நாடு, விமலை நாடு என்னும் ஆறு இணை நாடுகளாகவும் பிரிக்கப்பட்டுள்ளன.*

## தொண்டை மண்டலம்

*தொண்டை மண்டலம் இருபத்தி நான்கு கோட்டங்களையும் அவற்றிற்குரிய ஊர்களையும் உள்ளடக்கியதாக விளங்குகின்றது.*

அந்தப் புரமு மறுநான்கு

கோட்டகத் தாரு மொன்றாய்க்[16]

*எனும் தொண்டை மண்டல சதகப் பாடலின் உரையில் இருபத்து நான்கு கோட்டங்களும் அதற்குரிய ஊர்ப்பெயர்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.*

நெடுங்காலத்திற்கு முன் தொண்டை நாடு ‘குறும்பர் நிலம்’ என்று பெயர் பெற்றிருந்தது. குறும்பர் தம் ஆடுமாடுகளை மேய்த்துக் கொண்டு அங்குக் காலம் கழித்தனர். அவர்களே தங்கள் நாட்டை 24 கோட்டங்களாக வகுத்தனர். காவிரிப்பூம்பட்டினத்து வணிகருடன் கடல் வாணிகம் நடத்தினர். பிற்காலத்தில் ஆதொண்டை சக்கரவர்த்தி என்பவன் இக்குறும்பரை வென்று, குறும்பர் நாட்டைக் கவர்ந்து, அதற்குத் ‘தொண்டை மண்டலம்’ எனப் பெயரிட்டனன்[17]

*என்று செவிவழிச் செய்திக் கூறுகின்றது.*

## சோழ மண்டலம்

*சோழ மண்டலம் பல வளநாடுகளாகவும், இதன் உட்பிரிவு கூற்றம் எனவும் நாடு எனவும் வழங்கப்படுவதையும் அறியமுடிகின்றது. நாட்டின் சிறப்பைக் கூறுமிடத்து,*

வேழம் உடைத்து மலைநாடு

மிகுமுத்து உடைத்து தென்னாடு

தாழ்வில் தொண்டை வளநாடு

சான்றோர் உடைத்தென்று உரைத்ததல்லால்

சோழன் புவிசோறு உடைத்தென்னுந்[18]

என்னும் பாடல் அதனை விளக்கும். சோழ வளநாடு சோறுடைத்து என்னும் ஔவையின் வாக்கு இதனை மெய்ப்பிக்கும்.

**பாண்டி மண்டலம்**

சங்குகள் மேலே வந்து மிதக்கின்ற நீர் நிலைகளையுடைய மண்டலமாக பாண்டி மண்டலம் விளங்குகிறது. "முத்துக்களால் சிறப்புப் பெற்ற நாடு" சேரர்க்கும் சோழர்க்கும் மணிமுடியில் சூடுவதற்கும், பெண்கள் அணிந்து கொள்வதற்குமான முத்துக்கள் விளையும் நாடு என்று பாண்டிய நாட்டின் சிறப்புக்களை பாண்டி மண்டல சதகம் எடுத்துரைக்கின்றது.

தென்னாடு முத்துடைத் தென்னு மிதுவன்றிச் சேரனுடை
நன்னாடு கல்லென்னும் வல்லிரும் பாகுமுன்னா டென்றுதான்
சொன்னா வலர்புகழ் சோழன்மு னேநின்று சொல்லவுயர்
மன்னாளு நாடது வன்றோ தென் பாண்டியன் மண்டலமே[19]

என்னும் பாடல்வழி பாண்டியனின் சிறப்பினை அறிந்து கொள்ளலாம்.

**நதிகள்**

ஒரு நாட்டை வளப்படுத்துவன அந்நாட்டில் பாயும் நதிகளே ஆகும். மண்டல சதகங்கள் அவ்வம்மண்டலங்களின் வளமைக்குக் காரணமான நதிகளை சிறப்பித்துப் பாடுகின்றன.

**காவிரி**

சோழ நாடு, பாண்டி நாடு, சேர நாடு என்னும் மூன்றனுள் சோழநாடு வளம் மிகுந்ததாக அக்காலத்திற் காணப்பட்டது. காவிரியின் நீர்ப்பாசனமே அந்த நாட்டின் வளத்திற்குக் காரணமாதலால் காவிரியைப் பொன்னியென்றும் சோழ நாட்டைப் பொன்னி நாடென்றும் வழங்கினர்.

வான்பொய்ப்பினும் தான்பொய்யா
மலைத்தனையக் கடற்காவிரி[20]

என்று புகழ்கின்றது பட்டினப்பாலை. தென்னிந்தியாவின் குறிப்பாக தமிழகத்தின் புண்ணிய நதியாக காவிரி விளங்குகின்றது. வரலாற்றுச் சதகங்களும் காவிரியின் சிறப்பை எடுத்துரைக்கின்றன.

*சீர்காழி வளம்பெறவும், ஆற்றிடைக்குரையில் திருமால் வீற்றிருக்கப் பெற்றதுமான காவிரி ஆறு கார்மண்டலத்தே உதயமாகி வருகின்றது.*

சீரார் வளவ நிலம்புன னாடாச் செழிப்புறவும்
பேரார் வரநதி பெய்துறு பாவம் பிரிந்திறவும்
ஏராரும் பொன்னி புவியுள முன்ன குடமுதவி
வாரார் பெருமை படைத்தது நீள்கொங்கு மண்டலமே[21]

*எனும் இப்பாடல் சோழ மண்டலத்தின் நீர்ப்பாசனத்திற்காகவும், கங்கை நதியின் பாவம் போக்கவும் வாய்த்ததுமானது காவிரி நதி ஆகும்.*

*முதன்முதலில் அகத்தியரின் கமண்டலத்திலிருந்து காவிரி நீர் விழுவதற்கு இடம் கொடுத்துப் பெருமை அடைந்தது கொங்கு மண்டலம் என கொங்கு மண்டல சதகம் சிறப்பிக்கின்றது. "சூரபத்மனால் விரட்டப்பட்ட இந்திரன் சீர்காழியில் நந்தவனம் அமைத்து இறைவனை வழிபட்டு வந்தான். அப்போது மழையின்றி நந்தவனம் வாட, நாரதர் ஆலோசனைப்படி இந்திரன் விநாயகரை வேண்ட, விநாயகர் அகத்தியர் கமண்டலத்திலிருந்து காவிரியைப் பெருகச் செய்ததால் சோழ நாடு வளம் அடைந்ததாக சோழ மண்டல சதகம் குறிப்பிடுகின்றது."*

*சோழ மன்னர்கள் மற்றும் சோழ நாட்டு உழுகுடிகளான வேளாளர்களின் நல்வாழ்வுக்குக் காரணமாய் அமைந்தது காவிரி நதி ஆகும்.*

எந்த நதியைப் புகழ்ந்தாலும்
இதுக்கா வேரிக்கு இணையென்பார்
எந்த அரசைப் புகழ்ந்தாலும்
இவனே சோழற்கு இணையென்பார்
எந்த நாட்டைப் புகழ்ந்தாலும்
இதுவே சோணாடு என இயம்ப[22]

*எனும் பெருமை கொண்டது சோழ நாடு.*

*பல ஆறுகள் இருப்பினும் அவற்றுள் ஏழு ஆறுகள் சிறப்பானவை. அவற்றுள் கங்கை தலைமையானது. கங்கையும் தன் பாவம் தீரக் காவிரியில் மூழ்கியதாகக் கூறப்படுவதால் காவிரியின் பெருமை உணரப்படுகிறது.*

அநந்த கோடி நதிகளுக்குள்

இங்கார் நதிகள் ஒரேழும்

இசைக்கில் அதிகம் ஏழினுக்கும்

கங்கா நதியே அதிகம் அதன்

கன்மம் தொலைக்கும் காவிரியே[23]

*எனக் காவிரியைப் புகழ்ந்துரைக்கின்றது சோழ மண்டல சதகம்.*

**பாலாறு**

*சிவபெருமானின் திருவடிகளைப் பூசிப்பதற்கு காமதேனு சொரிந்த பால் பெருகியதால் உருவானது பாலாறு, அவ்வாற்று நீரைக் கொண்டு வசிட்ட முனிவர் தவம் செய்தது தொண்டை மண்டலத்தில் என்பது குறிப்பிடப் பட்டுள்ளது. இதனை,*

கசிட்டன் புடைய விராவணன்

வீழக் கயிலையுறைந்

தசிட்டன் றிருவடித் தாமரை

பூசிக்கச் சார்ந்த பசு

விசிட்டந் தருமுலைப் பாலாறு

கொண்டு விருப்பமுடன்

வசிட்டன் றவஞ்செய்த மண்டலங்

காண்டொண்டை மண்டலமே[24]

*என்னும் தொண்டை மண்டல சதகப் பாடல் எடுத்துரைக்கின்றது.*

**வையை**

*பாண்டி மண்டலத்தை வளப்படுத்துகின்ற வையை நதியை இளங்கோவடிகள்,*

உலகு புரந்துஊட்டும் உயர்பேர் ஒழுக்கத்துப்

புலவர் நாவிற் பொருந்திய பூங்கொடி -

வையை என்ற பொய்யாக் குலக்கொடி[25]

*என உலகத்தைப் பாதுகாக்கும் உயர்பண்பு வாய்ந்த பெண்ணாக வையையை கற்பனை செய்து பாடுகிறார்.*

அலை வைத்த வையைத் திரைச் சீதனத்தை யள்ளிக்கொண்டு[26]

*எனத் தென்றல் வீசுவதாகப் பாடுமிடத்து வையையின் வளத்தைக் குறிப்பிட்டுக் காட்டுகின்றது பாண்டி மண்டல சதகம்.*

*சம்பந்தர் எழுதிய பாடல்கள் தாங்கிய ஏடுகளைச் சுமந்து வையையும் பாண்டிய நாடும் பெருமை கொண்டதை இந்நூல் குறிப்பிடுகின்றது.*

### 4.1.1.2. திருத்தலங்கள்

*மக்கள் வாழ்க்கையில் ஆலயங்கள் முக்கிய இடம் வகிக்கின்றன. கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது முன்னோர் வாக்கு. பக்தி இயக்க காலத்தில் அடியார்கள் தம் சமயக் கொள்கைகளைப் பரப்புவதற்கு திருத்தலங்களை முக்கிய இடமாகத் தேர்ந்தெடுத்தனர். இதனை தேவாரப் பாடல்பெற்ற தலங்கள், 108 திவ்ய தேசங்கள் என்பன எடுத்துக்காட்டுகின்றன.*

*அவ்வம்மண்டலங்களில் உள்ள பாடல்பெற்ற தலங்கள் மற்றும் புகழ் வாய்ந்த திருத்தலங்களை மண்டல சதகங்கள் எடுத்துரைக்கின்றன.*

**காஞ்சிபுரம்**

*தொண்டை மண்டலத்தின் சிறப்பு வாய்ந்த திருத்தலமாக காஞ்சிபுரம் விளங்குகின்றது.*

> மாபலிச் சக்கரவர்த்தியிடம் வாமனனாகச் சென்று மூன்றடி மண் வேண்டிய திருமாலின் மருமகனாகிய முருகப்பெருமான் காவடியைப் போன்ற வடிவுடைய துலாக்கோலின் ஒருபுறம் மூவுலகங்களும் மறுபுறம் சமமாக காஞ்சியும் வைத்து நிறுத்தற்குரிய புகழ்வாய்ந்தது.[27]

*காஞ்சிபுரம் என சிறப்பிக்கின்றது தொண்டை மண்டல சதகம்.*

*முத்தி தரும் ஏழு நகர்களுள் 'காஞ்சி' என்று வழங்கப்பெறும் காஞ்சிபுரம் மிகவும் முக்கியமானது, இதனை வேதாந்த தேசிகர்,*

> காசி முதலாகிய நன்னகரி லெல்லாம்
> கார்மேனி அருளாளர் கச்சிக் கொவ்வா[28]

*என்று புகழ்வர்.*

*மேலும் இத்திருத்தலம் பிரம்மனால் பூசிக்கப்பெற்றதும் திருமால் அத்திகிரி வரதனாகத் தோன்றியமையும், சொன்ன வண்ணம் செய்த பெருமாளாகக் காட்சி*

கொடுத்ததும் யானை வழிப்பட்ட தலம் என்னும் சிறப்பிற்குரியதுமாக காஞ்சிபுரம் விளங்குகின்றது.

ஏகாம்பநாதர் - காமாட்சியம்மையின் முலைத்தழும்பு மற்றும் வளையல் தழும்பு பெற்றிருப்பது காஞ்சிபுரத்தில் என்பதை அறியமுடிகின்றது.

தொண்டை நாட்டு பாடல்பெற்ற சிவத்தலங்கள் முப்பத்திரண்டு ஆகும். அவற்றுள் பன்னிரண்டு தலங்களைப் பற்றி தொண்டை மண்டல சதகம் குறிப்பிடுகின்றது.

கயிலையும் கச்சியும் விற்கோ
லமுநற் கழுக்குன்றமும்
பயில்வலி தாயமும் பாசூரும்
அச்சிறு பாக்கமுநல்
லயிலையும் வல்லந் திருவொற்றி
யூரு மரசிலியு
மயிலையு மீசன் மகிழ்ந்ததன்
றோதொண்டை மண்டலமே.[29]

இப்பாடல் குறிப்பிடும் பன்னிரண்டு சிவத்தலங்களான திருக்காளத்தி, திருக்கச்சி ஏகம்பம், கூவம், திருக்கழுக்குன்றம், சிவன் குருவாக இருந்து உபதேசிக்கும் பாடி, திருப்பசூர், அச்சிறுபாக்கம், முருகன் வேல் பெற்ற திருவேற்காடு, திருவல்லம், திருவொற்றியூர், ஒழிந்தியாபட்டு, மயிலாப்பூர் முதலியன.

இரண்டு கழுகுகள் சிவபெருமானைப் பூசித்துப் பேறுபெற்ற தலமும், பட்சி தீர்த்தம் என்று அழைக்கப்படுவதுமான திருத்தலம் திருக்கழுக்குன்றம் ஆகும். மேலும் திருத்தணிகையும் தொண்டை மண்டலத்தைச் சார்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

**சோழ மண்டல சதகம்**

சுவாமிமலை, சிதம்பரம், திருவாரூர், திருவரங்கம், திருவீழிமிழலை மற்றும் தேவாரப் பாடல் பெற்ற தலங்களையும் சோழ மண்டல சதகம் குறிப்பிடுகின்றது.

**சுவாமிமலை**

*வெள்ளிமலையின் சிகரம் ஒன்று சோழ நாட்டில் விழுந்து ஏரகம் என்னும் மலையாயிற்று. இதனால் சுவாமிமலை, திருவேரகம் என்றும் வழங்கப்பட்டது. இதனை,*

வெள்ளி வரையில் ஓர்சிகரம்
விளங்கும் திருஏ ரகமலையாய்த்
தெள்ளு தமிழ்க்கீ ரனும் புகழச்
சிறந்தாய் இடையே சிவன்தெளிய[30]

*என்னும் சோழமண்டல சதகப்பாடல் உணர்த்துகின்றது.*

*சிதம்பரம் : எல்லா உயிர்களும் சென்று அடையத்தக்க ஓரிடம் என்றும்,*

*திருவாரூர் : சுந்தரருக்காக சிவபெருமான் தூது சென்ற தலம் என்றும்,*

*திருவரங்கம் : இலங்கை அரசனான வீடணனுக்கும் இவ்வுலக மக்களுக்கும் வரங்கள் தரும் வைகுந்தம் என்றும்,*

*திருவீழிமிழலை : அப்பர், சம்பந்தர் இருவரும் இத்தலம் அடைந்து தனித்தனி மடங்களில் படிக்காசுப் பெற்று பஞ்சம் போக்க அன்னதானம் செய்வித்தனர் என்றும்*

*அவ்வத்தல வரலாறுகளைச் சிறப்பாக எடுத்துரைக்கின்றது சோழ மண்டல சதகம்.*

**தேவாரத் தலங்கள்**

தொண்டை நாட்டில் ஆறைந்து
தொடர்ந்த பாண்டி பதினான்கு
கொண்டல் ஈழம் தனில் இரண்டு
கொங்கில் ஏழு துளுஒன்றே
தண்து ழாயின் பசும்தொடையார்
தவள விடையார் நலம்பலவும்
மண்டு பாதி நெடுங்கோயில்
மருவும் சோழ மண்டலமே[31]

*எனும் இப்பாடல்,*

| | | |
|---|---|---|
| *தொண்டை நாடு* | - | *30 சிவத்தலங்கள்* |
| *பாண்டிய நாடு* | - | *14 சிவத்தலங்கள்* |
| *ஈழ நாடு* | - | *2 சிவத்தலங்கள்* |
| *கொங்கு நாடு* | - | *7 சிவத்தலங்கள்* |
| *துளு நாடு* | - | *1 சிவத்தலங்கள்* |

*ஏனைய சிவத்தலங்கள் அனைத்தும் சோழ மண்டலத்தைச் சார்ந்தவை என்று குறிப்பிடுகின்றது.*

*சோழ நாட்டில் 190 பாடல்பெற்ற தலங்கள் உள்ளன. தொண்டை நாட்டில் முப்பத்திரண்டும், நடுநாட்டில் இருபத்திரண்டும், மலைநாட்டுத் தலம் ஒன்றும் பாடல் பெற்றவை ஆகும்.*

*ஆழ்வார்கள் மங்களாசாசனம்பெற்ற 108 திவ்ய தேசங்களில் 40 தலங்கள் சோழ நாட்டில் உள்ளன என்பதையும் சோழ மண்டல சதகத்தின் வழி அறியமுடிகின்றது.*

**கொங்கு மண்டலம்**

*திருப்பாண்டிக் கொடுமுடி, பவானி, திருமுருகன் பூண்டி, அவிநாசி, பேரூர், குரக்குத்தளி, வெஞ்சமாக்கடல், திருச்செங்கோடு, அறப்பள்ளி வெண்ணெய் மலை, பேரூர், பழநி முதலிய திருப்பதிகள், கொங்கு மண்டலத்தைச் சார்ந்தவை என்பதை,*

செஞ்சொற் கரைசை திருவானீ கூடல் திருமுருகர்
தஞ்சத்தென் புக்கொளி பேரூர் குரக்குத்தளியுடனே
வெஞ்சனற் கூடல்செங் குன்றூரறப் பள்ளி வெண்ணெய் மலை
மஞ்சு திகழ்கரு வூர்சேர் விதுகொங்கு மண்டலமே[32]

*என்று கொங்கு மண்டல சதகம் குறிப்பிடுகின்றது.*

**பாண்டி மண்டலம்**

முதியவர் மூவர் தமிழ்கொள் சுழியல் முதிர நெல்லை
துதிசெய் பரங்குன்ற மாடானை காளையார் தூவாப் பனூ
ரெதிர் கொடுங் குன்று புனவாயில் பூவண மேடகமே
மதுரை குற்றால மிராமேசன் பாண்டியன் மண்டலமே[33]

*என்னும் பாண்டி மண்டல சதகப்பாடல் மூலம், மூவர் பாடல்பெற்ற தலங்களான திருச்சுழி, திருநெல்வேலி, திருப்பரங்குன்றம், திருவாடானை, காளையார் கோயில், தூவாப்பனூர், புனவாயில், பூவணம், திருவேடகம், மதுரை, திருக்குற்றாலம், இராமேசுவரம் போன்றவை பாண்டி மண்டலத்திலுள்ள முக்கியத் திருத்தலங்கள் என்பதைக் குறிப்பிடுகின்றது.*

### 4.1.1.3. இறைவன் நிகழ்த்திய அற்புதங்கள்

*கொங்கு மண்டல சதகம், பாண்டி மண்டல சதகம் ஆகிய இரு சதகங்களில் மட்டுமே இறைவன் நிகழ்த்திய அற்புதச் செயல்கள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.*

*இறைவனின் அருட்செயல்கள் கொங்கு மண்டல சதகத்தில் மிகுதியும் பேசப்படுகின்றது. காமதேனு கரூர் சிவனை வணங்கி படைக்கும் ஆற்றல் பெற்றது; அகத்தியருக்காக சிவன் பாதாலத்து அழுந்திக் காட்சி கொடுத்தது; முதலையுண்ட பாலகனை சுந்தரர் மீட்ட கதை போன்றவை இடம்பெற்றுள்ளன.*

#### பட்டிபெருமான் பள்ளனானது

*சுந்தரர் வருகையை அறிந்த பேரூர் சிவபெருமான், அவருக்குக் கொடுக்க பொன் இல்லாத காரணத்தால் பள்ளவடிவு கொண்டு வயலில் சென்று ஒளிந்து கொண்டார். அவர் இருக்கும் இடத்தைச் சுந்தரருக்கு நந்தி காட்டிக் கொடுத்தது. அதனால் கோபமுற்ற சிவபெருமான் நந்தியின் முகத்தை வெட்டினார். இந்நிகழ்வுகள் கொங்கு மண்டல சதகப் பாடல் 18, 19 ஆகிய இரு பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.*

#### அகத்தியருக்கு பிரம்மஹத்தி தோஷம் நீக்கியருளல்

*அகத்தியர் தென்திசை நோக்கி வரும் பொழுது வாதாபி, வில்வலன் என்னும் அசுரர் இருவர் அவரை உபசரித்தனர். அப்பொழுது வாதாபி செம்மறிக் கடாவாக மாற வில்வலன் அதைச் சமைத்து அளித்தான். இதனை அறிந்த முனிவர் அவனை உண்டு ஜீரணமாக்கினார். அதனால் பிரம்மஹத்தி தோஷம் ஏற்படவே கொங்கு மண்டலத்து துடியலூர் வந்து இறைவனை வழிபட தோஷம் நீங்கியது என்னும் வரலாறு துடிசைப் புராணத்தில் கூறப்பட்டுள்ளதை கொங்கு மண்டல சதகம் எடுத்துரைக்கின்றது.*

#### நளிர் சுரம் நீக்கியது

*திருஞானசம்பந்தர் பல தலங்களுக்கும் சென்று இறைவனை தரிசித்து வருங்காலம் தம் அடியார் கூட்டத்துடன் திருச்செங்கோடு வந்தடைந்தார். அங்கு அடியார்களைச் சுரம் தாக்கவே திருநீலகண்டப் பதிகம் பாடி சுரத்தைப் போக்கினார் என்பதை,*

திருக்கூட்டத் தாரையுஞ் சேர்ந்த நளிர்சுரந் தீரவன்பின்
பெருக்காக வல்வினைக் கிவ்வினை யாமெனப் பீடுபெறத்
திருக்காழிப் பிள்ளையார் நற்றமிழ் பாடவத் தேய முற்றும்
வருத்தாதந் நோயின்னும் நீங்கிய துங்கொங்கு மண்டலமே[34]

*என்னும் கொங்கு மண்டல சதகப் பாடல் குறிப்பிடுகின்றது.*

**கல் இடபம் எழுந்து கடலை தின்றது**

*சிவப்பிரகாசரை அறிவிலர் என்று மற்றவர் கூற, அவர்கள் காணும்படி கல்லாகக் கிடந்த இடபம் எழுந்து கடலையைத் தின்ற மகிமை இறையருளால் திருச்செங்கோட்டில் நடைபெற்றமையை கொங்கு மண்டல சதகம் 49வது பாடல் மூலம் அறிய முடிகின்றது.*

**வேலவன் மேய்ப்போனாக வந்தது**

*பாண்டிய நாட்டுப் புலவன் ஒருவன் திருச்செங்கோட்டு மலையைக் கண்டு இது நாகமலையானால் ஏன் படமெடுத்து ஆடவில்லை என்று கேட்க முருகன் ஆடு மேய்க்கும் சிறுவனாக வந்து, மலை மீது இருக்கும் முருகனின் வாகனமான மயில் கொத்தும் என்று பயந்து ஆடவில்லை என்று பதிலளித்து அவன் ஆணவத்தை அடக்கியமையை கொங்கு மண்டல சதகம் (50) குறிப்பிடுகின்றது.*

**விருத்தன் குமரனானது**

*கஞ்சமலையில் கருநெல்லிக்குச்சியால் உணவுக் கிளறிவிட, அவ்வுணவை உண்ட ஒருவன் நரை திரை நீங்கி இளமைப்பருவம் அடைந்த வரலாற்றினை கொங்கு மண்டல சதகம் (69) எடுத்துரைக்கின்றது.*

**நெற்போர் வேவப் பாடியது**

*குறுப்பி நாட்டு விசயமங்கலத்தைச் சேர்ந்த சுவாமிநாதப் புலவன் புற்றிரைச்சல் என்னும் ஊருக்குச் சென்று அவ்வூர் அதிபனிடம் தம் வறுமையைக் கூறி கொஞ்சம் நெல் கேட்டார். அவன் மறுத்து விட அவன் மீது வசை பாடினார். அதனால் அவனுடைய நெற்போர் எரிந்து சாம்பலான வரலாற்றைக் (கொங்கு மண்டல சதகம் 81) கூறுகின்றது.*

**பயிறு மிளகானது**

*மலையாள நாட்டிலிருந்து மிளகு விற்க வந்த ஒரு வேளாண் வணிகனிடம், தென்கரை நாட்டில் எழுந்தருளியுள்ள அப்பிரமேயர் (சிவபெருமான்) கொஞ்சம் மிளகு தா என்று கேட்க, அவ்வணிகன் மிளகு இல்லை. இம்மூட்டையில் உள்ளது பயிறு என்று பொய் கூறி திருவாரூர் சென்றான். அம்மிளகை விற்க முற்பட்டபோது அவை பயிறானது என்னும் செய்தியை கொங்கு மண்டல சதகம் 84 ஆம் பாடல் குறிப்பிடுகின்றது.*

*மதுரையில் சோமசுந்தரப் பெருமாள் பிரம்படிப்பட்ட வரலாறும் (பா.ம.ச.42, 48), சிவபெருமான் நிகழ்த்திய 64 திருவிளையாடல்களும் (பா.ம.ச.47), தருமிக்கு பொற்கிழி பெற்றுத் தந்த வரலாற்றையும்(பா.ம.ச.93) கூறி பாண்டி மண்டல சதகம் பெருமையடைகின்றது.*

### 4.1.1.4. நாயன்மார்கள்

*சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு சைவ சமயத்தையும் தமிழையும் வளர்த்த அடியார்கள் நாயன்மார்கள் எனப்படுவர். பிற சமயத் தாக்குதலில் இருந்து தமிழ்நாட்டையும், தமிழையும் பாதுகாத்தப் பெருமை இவர்களைச் சாரும்.*

நாடு நகரமும் நற்றிருக் கோயிலும்
தேடித் திரிந்து சிவபெருமான் என்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாகக் கொள்வனே[35]

*என்னும் திருமூலர் வாக்கிற்கிணங்க, ஒவ்வொரு சிவாலயங்கள் தோறும் அலைந்து திரிந்து சைவ சமயம் பரவுவதற்கு முதற்காரணமாய் இருந்தவர்கள் நாயன்மார்களே ஆவர்.*

*ஒழுக்க நெறியை போதிப்பதே சமயத்தின் பணியாகும்.*

சிவபரம்பொருளை முழுமுதற்கடவுளாகக் கொண்ட சைவ சமயம் மக்களுக்கு வாழ்வாங்கு வாழ்விக்கும் நெறிகளைச் சொல்வது. அதனடிப்படையிலேயே சைவ சமய அருளாளர்கள் மனித வாழ்விற்கு வேண்டிய அருட்செய்திகளையும் சமய நெறிகளையும் தாம் பாடிய பாடல்களில் புலப்படுத்தியுள்ளனர்.[36]

*மண்டல சதகங்கள் அந்தந்த மண்டலங்களில் வாழ்ந்த அல்லது தொடர்புடைய நாயன்மார்களின் வரலாற்றை எடுத்துரைக்கின்றன.*

**சாக்கிய நாயனார்**

*சாக்கிய நாயனார் திருச்சங்கமங்கை என்னும் ஊரில் வேளாளர் குலத்தில் தோன்றியவர், இவர் பௌத்த சமயம் சார்ந்து பின் சைவத்திற்கு மாறியவர். இவர் தினமும் கல்லையே மலராகக் கொண்டு சிவபெருமானை வழிபட்டு அவர் அருளைப் பெற்றவர். இவ்வடியார் தொண்டை மண்டலத்தவர் என்பதை,*

கொங்கலர் மாலையும் கல்லாய்
விடுமன்பு கொண்டறிந்தா
லிங்கல ராய்விடும் கல்லா
னதுமென்ப தின்றறிந் தோஞ்
செங்கலி னாலெறிந் தேசிவ
னார் பதஞ் சேர்வர் சங்க
மங்கையின் மேவிய சாக்கிய
னார்தொண்டை மண்டலமே[37]

*என்னும் தொண்டை மண்டல சதகப்பாடல் எடுத்துரைக்கின்றது. இந்நாயன்மாரைப் பற்றியச் செய்தி பாண்டி மண்டல சதகத்திலும் இடம்பெற்றுள்ளது.*

*தூய்மை செய்த ஆடையை உரிய நேரத்தில் தர இயலாமல், தன் உயிரை மாய்த்துக் கொள்ள துணிந்து இறை அருள் பெற்ற திருக்குறிப்புத் தொண்டர் தொண்டை நாட்டினர் என்பது புலனாகிறது (தொ.ம.சதகம் 42). உள்ளத்தில் கோயில் கட்டி வழிபாடு நிகழ்த்திய வாயிலார் (தொ.ம.ச.44), சூதாட்டத்தில் தன்னுடன் மாறுபட்டு பேசியவர்களைச் சுரிகை என்னும் ஆயுதத்தால் குத்தியதால் மூர்க்கர் என அழைக்கப்பட்ட மூர்க்க நாயனார் (தொ.ம.ச.77), திருவொற்றியூர் இறைவனுக்கு திருவிளக்கேற்றும் தொண்டு செய்த கலியநாயனார் (தொ.ம.ச.78) போன்றோர் தொண்டை மண்டலத்தவர்கள் என்பதை தொண்டை மண்டல சதகம் குறிப்பிடுகின்றது.*

*சோழ மண்டலத்தைச் சார்ந்த நாயன்மார்களான மானக்கஞ்சாறர் (சோ.ம.ச.18), இளையான்குடி மாறநாயனார் (சோ.ம.ச.19), அரிவாட்டாயர் (சோ.ம.ச.20), ஏயர்கோன் கலிக்காமர் (சோ.ம.ச.21), கோட்புலியார்*

*(சோ.ம.ச.22), முனையடுவார் (சோ.ம.ச.24), செருத்துணையார் (சோ.ம.ச.25), சத்தியார், சேந்தனார், கணம்புல்லர் ஆகியோரைச் சோழ மண்டல சதகம் குறிப்பிடுகின்றது.*

*எறிபத்தர் நாயனார், பெரியபுராணம் குறிப்பிடும் பொய்யடிமையில்லா புலவர் கூட்டத்துள் ஒருவராகிய கபிலதேவர், அவிநாசியில் முதலை உண்ட பாலகனை மீட்ட சுந்தரரைப் பற்றியும் கொங்கு மண்டல சதகம் குறிப்பிடுகின்றது. துடியலூர் செல்வதற்கு வழி தெரியாது நின்ற சுந்தரருக்கு இறைவனும் அம்மையும் வேடனாகவும் வேடச்சியாகவும் வந்து வழிகாட்டியதை,*

வேட்டுவ வேட மெடுத்து வழித்துணை மேவியளங்
காட்டு முருங்கை யிலைகாய் நெய் பெய்து கூறி சமைத்துப்
பாட்டு முழக்குவன் றொண்டருக் கன்னம் படைத்து நரை
மாட்டுதிப் போன்றுடி சைப்பதி யுங்கொங்கு மண்டலமே[38]

*எனும் கொங்கு மண்டல சதகப்பாடல் குறிப்பிடுகின்றது.*

*திருத்தாண்டகம் பாடியருளிய திருநாவுக்கரசர் (பா.ம.ச.34), செருத்துணையார் (பா.ம.ச.39), குலச்சிறையார் (பா.ம.ச.43), மங்கையர்க்கரசி (பா.ம.ச.45, 86), காரைக்காலம்மையார் (பா.ம.ச.846), புகழ்த்துணையார் (பா.ம.ச.59), மாணிக்கவாசகர் (பா.ம.ச.42, 48) போன்றோர் பாண்டி மண்டலத்தவர் என்பது அறியப்படுகின்றது.*

அணிகாரைக் காலம்மை சோணாடு விட்டுவந் தங்கமே பாழ்
துணிவாய்க் கணவனோ டுடிக் கயிலை தொடர வெண்ணித்
தணிவா நடக்கும் பொழுதிலந் தாதி தனியிரட்டை
மணிமாலை கொண்டு புகழ்தரும் பாண்டியன் மண்டலமே[39]

*என்னும் பாண்டி மண்டல சதகப்பாடல் காரைக்காலம்மையார் வரலாற்றைக் குறிப்பிடுகின்றது.*

*மேலும், சிவன் மீதும் சிவனடியார்கள் மீதும் ஆழமான அன்பும் ஈடுபாடும் கொண்டிருந்ததை அறுபத்து மூவரின் வரலாறு நமக்குப் புலப்படுத்துகின்றது. அடியார்கள் இறைத்தொண்டில் ஈடுபட்டிருக்கும்போது அப்பணிக்கு இடையூறு ஏற்படின் தன் உயிரையும் மாய்த்துக் கொள்ளத் துணிந்தமையை பாண்டி மண்டல சதகம் (21) குறிப்பிட்டுக் காட்டுகின்றது.*

*மானக்கஞ்சாறர், சக்தி நாயனார், ஏயர்கோன் கலிக்காமர், கோட்புலி நாயனார் போன்றோரை சோழ மண்டல சதகம் பாடுகின்றது. இவர்கள் பாண்டி மண்டலத்திற்கு வருகை புரிந்த காரணத்தால் அவர்களையும் பாண்டி மண்டல சதகம் சிறப்பித்துப் பாடுகின்றது.*

*அவ்வம் மண்டலங்களில் வாழ்ந்த அல்லது அம்மண்டலங்களோடு தொடர்புடைய நாயன்மார்களின் சிறப்புக்களை எடுத்துரைப்பதில் மண்டல சதகங்கள் பெருமை கொள்கின்றன.*

### 4.1.1.5. ஆழ்வார்கள்

*திருமாலை முழுமுதற் தெய்வமாகப் போற்றிப் பரவுவது வைணவ சமயம் ஆகும். இது உலகிலுள்ள மிகப் பழமையான சமயங்களில் ஒன்றாகும்.*

> அது நமது வேதகாலந்தொட்டு இடையறாது இயங்கி வரும் ஒரு வாழ்நெறித் தத்துவச் சமயமாகும் பண்பட்ட சமயங்களில் வைணவமும் ஒன்று[40]

*என்று குறிப்பிடுவர்.*

*திருமாலைப் போற்றிப் பரவி பாடல்களைப் பாடியவர்கள் ஆழ்வார்கள் எனப்பட்டனர். இவர்கள் பன்னிருவர் ஆவர்.*

> ஆழ்வார்கள் என்ற சொல்லிற்கு இறை பக்தியில் தோய்ந்து ஆழக் கூடியவர்கள் எனப் பொருள் கொள்ளலாம். அறம், பொருள், இன்பம் என்ற மூன்றையும் இவர்கள் வலியுறுத்துகின்றனர்[41]

*என்று இலக்கியத் திறனாய்வு என்னும் நூலில் அரங்க.சுப்பையா விளக்கம் தருகின்றார். மேலும்,*

> எல்லாம் வல்ல எம்பெருமான் மான்காட்டி மான்பிடிப்பது போன்று மனிதரினமேயாக ஆழ்வார்களை ஆங்காங்குப் பல காலங்களில் பல இடங்களில் பல வர்ணங்களில் இடுவித்தனர்[42]

*என்னும் கருத்தினை தோ.ந.வீரராகவனின் 'ஆழ்வார்கள் வரலாறு' என்னும் நூல்வழி அறியமுடிகின்றது.*

*மண்டல சதகங்கள் அவ்வம்மண்டலங்களில் வாழ்ந்த ஆழ்வார்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. தொண்டை மண்டல சதகம், பாண்டி மண்டல சதகம் ஆகிய இரு நூல்களிலும் ஆழ்வார்களைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.*

**ஆண்டாள்**

*பன்னிரு ஆழ்வார்களில் ஒருவராகிய ஆண்டாளை திருமணம் செய்யும் விருப்பத்துடன் திருவேங்கடவனும் இராஜமன்னாரும், கள்ளழகரும், வடபத்ரசாயியும், திருவில்லிப்புத்தூர் சென்று தங்கியதை பாண்டி மண்டல சதகம் (52) குறிப்பிடுகின்றது.*

*மேலும் ஆண்டாள் தரும் பால், வெண்ணெய், தயிர் மீது ஆசை வைத்து திருமாலிருஞ்சோலைமலை அழகர், அவர் வீட்டிற்குச் சென்று தங்கியமையையும் பாண்டி மண்டல சதகம் (53) வழி அறியமுடிகின்றது. நம்மாழ்வாரைப் பற்றிய குறிப்புகளையும் இந்நூல் தருகின்றது.*

*இறைவன் புகழைப் பாடுவதற்கு அவதரித்த நம்மாழ்வார், 'வேதம் தமிழ் செய்த மாறன் எனப் போற்றப்படுவார், இத்தகு நம்மாழ்வார் அவதரித்த தென்குருகூர் பாண்டி நாட்டில் உள்ளது என்பதைக் குறிப்பிடுகின்றது.*

*தொண்டை மண்டல சதகம் திருமழிசை ஆழ்வாரைச் சிறப்பித்துப் பாடுகின்றது. இதனை,*

பாய்சுருட்டித்
திரைத்தா வணத்தி லொருபுல
வோன்பின்பு சென்ற செந்தா
மரைத்தான் மணமின்ன நாறுங்கண்
டீர்தொண்டை மண்டலமே[43]

*என்னும் பாடல் குறிப்பிடுகின்றது. இப்பாடல் மூலம் தமிழின் சிறப்புணர்ந்த திருமால் ஒரு புலவரின் கோரிக்கையை ஏற்று அப்புலவரின் பின்னே சென்றமையை அறியமுடிகின்றது. அப்புலவர் திருமழிசை ஆழ்வார் என்பது குறிப்பிடத்தக்கது.*

### 4.1.1.6. வள்ளல்கள்

*தன்னை நாடிவரும் புலவர்களுக்கும் இரப்பவர்களுக்கும் வரையாது வழங்கியவர்கள் வள்ளல்கள் எனப்பட்டனர். மூவேந்தர்களும், குறுநில மன்னர்களும், வேளாளர்களும் வள்ளல்களாக விளங்கியமையை வரலாற்றில் காணமுடிகின்றது.*

*இவ்வள்ளல்கள் இருபத்தியொரு பேர் என்றும் முதலேழு வள்ளல்கள், இடையேழு, கடையேழு வள்ளல்கள் என்று மூன்று பிரிவாகவும் வகைப்படுத்திக் கூறப்பட்டுள்ளனர்.*

**குமணன்**

*முதலேழு வள்ளல்களில் ஒருவரான குமணன். தன் தம்பியிடம் நாட்டை விட்டு காட்டில் வசிக்கும் காலத்தில் அவரை நாடிச் சென்ற பெருந்தலைச் சாத்தனார் என்னும் புலவருக்கு தன் தலையைக் கொடுத்து பரிசில் பெறுமாறுச் சொன்ன வரலாற்றினை,*

நாட்டினைத் தம்பி கொளக்காடு சென்று நலிவுறுநாள்
பாட்டிசைத் தோர்புல வன்வேண்ட வென்றலை பற்றியறுத்
திட்டியென் நம்பி யிடத்தியிற் கோடிபொ னெய்து மென்று
வாட்டங் கைத்தரு மக்குமணன் கொங்கு மண்டலமே[44]

*என்னும் கொங்கு மண்டல சதகப்பாடல் குமணனின் வள்ளல் தன்மையை எடுத்துரைக்கின்றது.*

**அதிகமான்**

*ஔவைக்கு நெல்லிக்கனி கொடுத்தவனும், இவ்வுலகில் கரும்புப் பயிரை நட்டு உற்பத்தி செய்தவன் வழி வந்தவனும், கொல்லிக் கூற்றமாகிய மலையரணையுடையவனுமாகிய அதிகமானுங் கொங்கு மண்டலம் சார்ந்தவன் என்பதைக் கொங்கு மண்டல சதகம் (42) குறிப்பிடுகின்றது.*

**ஓரி**

*மூவேந்தரும் ஆவல் கொளத்தக்க வளம் பொருந்திய கொல்லி மலைக்கு வேந்தனாய், அல்லும் பகலும் ஓயாது தமிழுக்குக் கொடுப்போனான ஓரி வள்ளல் வாழ்ந்ததும் கொங்கு மண்டலம் என்பதை கொங்கு மண்டல சதகம் (43) வழி அறியமுடிகின்றது.*

**நளன், சகரன்**

*தமிழில் படைக்கப்படும் கவிதைகளை ஏற்றுக் கொண்டு முடிவின்றிப் புலவர்களுக்குச் செல்வத்தை வாரி வழங்கிய முதலெழு வள்ளல்களுள்*

*குறிப்பிடத்தக்க நளனும், சகரனும் சந்திர குலத்தவரான பாண்டிய நாட்டினர் என்று பாண்டி மண்டல சதகம் குறிப்பிடுகின்றது.*

**பாரி**

*பாரியைப் பாடினால் பரிசில் பெறலாம் என்று புலவர்களால் போற்றிப் பாடப்பட்டவன் பாரி என்றும் மண்டல சதகங்கள் அம்மண்டலங்களில் வாழ்ந்த வள்ளல்களைச் சிறப்பித்துப் பாடுகின்றன.*

### 4.1.1.7. அரசர்கள்

*மண்டல சதகங்கள் அவ்வம்மண்டலங்களில் சிறப்புற்று விளங்கிய அரசர்களைப் பற்றிய செய்திகளை எடுத்துரைக்கின்றன. சிறப்பாக ஆட்சிபுரிந்து தமிழுக்காக உயிர்கொடுத்த மூன்றாம் நந்திவர்மப் பல்லவனையும், அவன் மறைவுக்குப் பிறகு அவனுடைய சகோதரனுக்கு முடிசூட்டும் பெருமையுடைய கொல்லாபுரிச் சந்திரனைப் பற்றியும் 'தொண்டை மண்டல சதகம்' எடுத்துரைக்கின்றது.*

பண்டையொர் நாளையி லோரேழ்
கலிங்கப் பரணி கொண்டு
செண்டையு மேருவிற் றீட்டுவித்
தோன்கழற் செம்பியன்செய்
தொண்டைநன் னாடு புரக்கின்ற
கோனந்தித் தோன்றலெங்கள்
வண்டையர் கோனங் கருணா
கரன்தொண்டை மண்டலமே[45]

*என்னும் தொண்டை மண்டல சதகப்பாடல் கருணாகரனைச் சிறப்பித்துப் பாடுகின்றது.*

*ஒரே நாளில் கலிங்கநாட்டை வென்று கலிங்கத்துப்பரணி பாடக் காரணமாயிருந்தவன். காஞ்சி காமக்கோட்டத்தில் உள்ள சாத்தனிடமிருந்து பூச்செண்டைப் பெற்று அதனையேக் கருவியாகக் கொண்டு மேருமலையில் விற்கொடி நாட்டிய கரிகால் சோழனின் வம்சத்தவர் என்பதும் குறிப்பிடப்படுகின்றது.*

*கரிகாலன் சோழமன்னனாய் இருப்பினும் அவனால் கங்கை குலத்தில் தோன்றிய வேளாளர்களுக்கு இருபத்து நான்கு கோட்டங்களையும், நன்னீர் நிலைகளையும் ஏற்படுத்தி, அவர்களுக்கு வாழ்விடம் அமைத்துக் கொடுக்கப்பட்டது. தொண்டை மண்டலத்தில் என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது.*

**கோசர்**

*தமிழை ஆதரித்தவர்களும், நல்ல மனதுடையவர்களுமாகிய கோசர்களைப் பற்றிப் புறநானூறு, குறுந்தொகை, சிலப்பதிகாரம் போன்ற நூல்கள் குறிப்பிடுகின்றன. இத்தகைய கோசர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்தது கொங்கு மண்டலம் என்பதை கொங்கு மண்டல சதகம் என்னும் நூலின்வழி அறியமுடிகின்றது.*

**சீயகங்கன்**

*கங்க வம்சத்து அரசர்களில் ஒருவனும், பவணந்தி முனிவரைக் கொண்டு நன்னூல் இயற்றப்படுவதற்கு காரணமுமான சீயகங்கனைக் கொங்கு மண்டல சதகம் பெருமையுடன் போற்றுவதைப் பின்வரும் பாடல் மூலம் அறியலாம்.*

சொல்காப் பியத்தின் குண்தோடந் தேர்ந்து சொலுவதற்குத்
தொல்காப் பியங்கற்க நீண்ட ததனைச் சுருக்கியிசை
யொல்காப் பெரும்பவ ணந்தியென் றோதி யுபகரித்த
வல்கா வலன்சீய கங்கனுந் தான்கொங்கு மண்டலமே[46]

*கொங்கு அரசர்கள் கேரளத்தைச் சார்ந்த பொன்னாடு முதலிய பகுதிகளை ஆண்டமையும், முத்தரசர் மற்றும் அநிந்தன் போன்ற அரசர்களைப் பற்றியும் கொங்கு மண்டல சதகம் குறிப்பிடுகின்றது.*

*தஞ்சைவாணன், பொற்கைப் பாண்டியன், அதிவீரராம பாண்டியன், நின்றசீர் நெடுமாறன் போன்றோரின் ஆட்சிச்சிறப்பு, கொடைத்திறன் மற்றும் தமிழ்ப் பற்றினையும் பாண்டி மண்டல சதகம் குறிப்பிடுகின்றது.*

*மேலும் சேர, சோழ, பாண்டிய என்னும் மூன்று மண்டலங்களில் பாண்டி மண்டலமே முதன்மையானது என்றும், சவுந்தரபாண்டியனின் ஆட்சியில் மக்களுக்கு எவ்விதத் துன்பமும் நேராது என்றும் பாண்டி மண்டல சதகம் (95) வழி அறியமுடிகின்றது.*

**தமிழரசர் மூவர்**

*அருவிகளையுடைய மலைச்சாரல் பொருந்திய நாவலந்தீவில், சிறப்புடைய அகத்தியரால் அடக்கப்பட்ட விந்திய மலைக்குத் தெற்கே உள்ள பகுதி தமிழ்மண்டலம். அதனை வழிப்படுத்திய சேர, சோழ, பாண்டியர்கள் விளங்குவது கார்நாடு என்று கார்மண்டல சதகம் (27) குறிப்பிடுகின்றது.*

*மேலும் பதினெண்குடி வேளிர், ஐம்பெருங்குலம், மேலைநாட்டு கங்கர், கீழ்நாட்டவர், கங்கை குலத்தில் அவதரித்தவர்கள், மலைநாட்டு கங்கவரசர், வெளிநாட்டு கங்கவரசர் பற்றிய செய்திகளையும் கார்மண்டல சதகம் (28-44) விவரித்துப் பாடுகின்றது.*

**4.1.1.8. புலவர்கள்**

*மண்டலங்களில் வாழ்ந்த அல்லது அம்மண்டலத்தோடு தொடர்புடைய புலவர்களைப் பற்றிய செய்திகள் இங்குக் குறிப்பிடப்படுகின்றன.*

**தொண்டை மண்டலப் புலவர்கள் - பொய்யாமொழிப் புலவர்**

*கி.பி.13 ஆம்நூற்றாண்டில் தொண்டை நாட்டில் உள்ள உறையூரில் பிறந்தவர் என தொண்டை மண்டல சதகம் கூறுகிறது. இவர் தன்னுடைய இறுதிக் காலத்தில் தஞ்சாவூரை அடுத்த அரசூரில் வாழ்ந்தார். அப்பொழுது தஞ்சாவூரை ஆண்ட சோழ மன்னனிடம் புலவர் பரிசில் பெற்றார் என்பதை சோழ மண்டல சதகம் எடுத்துரைக்கின்றது.*

*பாண்டியனின் அமைச்சராக இருந்த தஞ்சைவாணன் மீது கோவை பாடித் திரும்புகையில் காட்டு வழியில் வேடுவச் சிறுவனாக முருகன் இடைமறித்து தன்னைப் பற்றிப் பாடுமாறு கேட்க புலவர்பாடிய பாடலில் பொருட்குற்றம் இருப்பதை எடுத்துரைத்து அவரே பாடிச் சென்றதை கொங்கு மண்டல சதகம் குறிப்பிடுகின்றது.*

*பேரரசூர், சிற்றரசூர், கண்டியூர், தென்மாலை, கொத்தமல்லி, முருகாவூர், திருப்பூந்துருத்தி முதலான ஏழு ஊர்களுக்குத் தலைவராக விளங்கிய சீநக்கர் பொய்யாமொழியாருக்கு புளியஞ்சோறு அளித்து உபசரித்தான் என்பதை,*

பொய்யா மொழியார் பசிதீரப்
புளியஞ் சோறு புகழ்ந்தளித்த

செய்யார் அரசூர் சீநக்கர்

செய்தது எவரும் செய்தாரோ[47]

*எனும் பாடல்வழி அறியமுடிகின்றது.*

*சீநக்கன் கட்டிலில் பொய்யாமொழியார் படுத்து உறங்கிவிட்டார். அதை அறியாது சீநக்கன் மனைவி அருகில் படுத்து உறங்கிவிட ஊரார்கண்டு இகழ்ந்தனர். சீநக்கன் இறந்த போது பொய்யாமொழியாரும் தீப்பாய்ந்து இறந்ததைக் கண்ட ஊரார் தாமும் தீப்பாய்ந்து உயிர்விட்டனர் என்பதை சோழ மண்டல சதகம் எடுத்துரைக்கின்றது.*

**மண்டலபுருடர்**

*பண்டைக் காலத்தில் விளங்கிய நிகண்டு நூல்களான திவாகரம், பிங்கலம் போன்றவற்றையும் பல உரிச்சொற்கள் எண்டிசை வழங்கும் திசைச்சொற்கள், வடமொழிச் சொற்கள் முதலியவற்றுடன் செய்யுள் நூல்கள் எல்லாம் நன்கு கற்றுணர்ந்து குளிர்ந்த தமிழில் தன் ஆசிரியர் குணபத்திரர் ஆணைப்படி 'சூளாமணி நிகண்டி'னைச் செய்த 'மண்டலபுருடர்' தொண்டை நாட்டு குன்றையூரில் பிறந்தவர், இவர் சைன சமயத்தவர் என்பதும் அறியப்படுகின்றது.*

**சேக்கிழார்**

*தொண்டை நாட்டு குன்றத்தூரில் பிறந்து இரண்டாம் குலோத்துங்கச் சோழனிடம் அமைச்சராக பணியாற்றிய காலத்து சேக்கிழார் பெரியபுராணம் பாடுவித்தார் என்னும் செய்தியை அறியமுடிகிறது.*

விண்ணிற் பறக்கும் புகழ்க்குன்ற

நாடன் விளங்கு தமிழ்ப்

பண்ணிற் பிறக்கும் பெரிய

புராணம் பகர்ந்த பிரான்

எண்ணிற் பிறக்கும் பததூளி

என்றலை யெய்தவந்த

மண்ணிற் பிறக்கவும் வைக்குங்கொ

லோதொண்டை மண்டலமே.[48]

**இரட்டைப் புலவர்கள்**

*சோழநாட்டைச் சார்ந்த இரட்டைப் புலவர்கள் தொண்டை மண்டலம் காஞ்சிபுரம் வந்தடைந்து காஞ்சிக்கலம்பகம், ஏகாம்பரநாதர் உலா, திருவாமத்தூர் கலம்பகம் முதலிய நூல்களைப் பாடியதால் பெருமைக் கொள்கிறது தொண்டை மண்டல சதகம், மாசிலாமணிச் சம்பந்தர், பனம்பாரனார், பரிமேலழகர், பாரதம் பாடிய பெருந்தேவனார், நன்னூல் இயற்றிய பவணந்தி முனிவர், நேமிநாதம் இயற்றிய குணவீரபண்டிதர், வேளாண் வள்ளல் கூடற்கிழார், முதுமொழிக் காஞ்சி பாடிய புரிசைக்கிழார், கந்தபுராணம் பாடிய கச்சியப்பச் சிவாச்சாரியார், கச்சிக்கலம்பகம் பாடிய கச்சிஞானப்பிரகாசர் முதலானோர் தொண்டை மண்டலத்தில் வாழ்ந்த புலவர்கள் ஆவார்கள்.*

**சோழ மண்டல புலவர்கள்**

**கம்பர்**

*கம்பரை ஆதரித்து வளர்த்து அறிஞராக்கியவர்கள் சோழ நாட்டு வேளாளர்கள். கம்பர் பிறந்த திருவழுந்தூரில் 'கம்பர் மேடு' எனும் பகுதி உள்ளது. தமிழக அரசு அங்கு மணிமண்டபம் கட்டியுள்ளது. கம்பரை ஆதரித்தவர் வெண்ணெய் நல்லூர் சடையப்ப வள்ளல் ஆவார். சடையப்ப வள்ளல் மற்றும் சோழநாட்டு வேளாளர் குலப்பெருமக்கள் அனைவரும் கம்பருக்கு பரிசுகள் கொடுத்துள்ளனர்.*

*இவ்வேளாளர்கள் புகழ் உலகெங்கும் பரவும்படியாக 'ஏர் எழுபது' என்னும் நூலைப் படைத்தார் கம்பர். கம்பர் தமது இறுதி நாளில் சடையப்ப வள்ளல் மீது ஒரு வெண்பாப் பாடினார். அப்பாடல்,*

ஆன்பாலும் தேனும் அரம்பைமுதல் முக்கனியும்
தேன்பாய உண்டு தெவிட்டு மனம் - தீம்பாய்
மறக்குமோ வெண்ணெ வருசடையா கம்பன்
இறக்கும்போ தேனும் இனி[49]

*என்பதாகும்.*

*குலோத்துங்கச் சோழன் ஆட்சிக்காலத்தில் காவிரி கரை புரண்டு ஓட அதைத் தடுக்க இயலாது நின்ற போது கங்கை குலத்தவரான வேளாளர்கள் கம்பரை*

*வரவழைத்து பாடச் செய்தால் நீர்ப்பெருக்கு குறையும் என்றனர். அவ்வாறே கம்பரை அழைக்க,*

கன்னி யழிந்தனள் கங்கை திறம்பினன்
பொன்னி கரையழிந்து போயினளென் - றின்னீர்
உரை கிடக்க லாமோ வுலகுடைய தாயே
கரை கடக்க லாகாது காண்[50]

*என்று கம்பர் பாட நீர்ப்பெருக்கு குறைந்தது. இச்செயலுக்கு மன்னன் பரிசில் தர விரும்ப, அதனை மறுத்த கம்பர் மக்கள் அரசுக்கு செலுத்தும் கலியாண வரியை தமிழுக்காக செலுத்தும்படி கேட்டுக் கொண்டார்.*

*திருவாமூரில் சைவ ஆச்சாரிய பரம்பரையில் தோன்றிய கமலை ஞானப்பிரகாசர், சீர்காழியில் ஞானசம்பந்தரின் அருள்பெற்றவரும், ஒழிவிலொடுக்கம் என்னும் நூலினை இயற்றியவருமாகிய கண்ணுடைய வள்ளல், அநதாரிப்புலவர், சத்திமுற்றப்புலவர், கன்றாப்பூர் உடையான் மற்றும் ஒட்டக்கூத்தர் முதலிய புலவர்களை பற்றிய செய்திகளை சோழ மண்டல சதகத்தின் வழி அறியமுடிகின்றது.*

**பாண்டி மண்டல புலவர்கள்**

**அகத்தியர்**

தண்டமிழ் கொண்டு சிவத்தலம் விண்டு தலம் விளக்கி
எண்டரு முற்சங்க மேறி யிலக்கண லக்யஞ் செய்து
குண்டிகை நீர்கொண்டு காவேரி தந்து கொழுந்தமிழன்
மண்டலங் கண்ட குறுமுனி பாண்டியன் மண்டலமே.[51]

*தமிழால் கைலாயம் மற்றும் வைகுந்தம் ஆகியவற்றை குளிர்ச்சியுடையதாக்கி முச்சங்கம் ஏறி இலக்கண, இலக்கிய நூல்களைச் செய்து காவிரி நீரை கவிழ்த்தவர் அகத்தியர் என்பது குறிப்பிடப்படுகிறது.*

**புகழேந்திப் புலவர்**

*புகழேந்திப் புலவர் நளவெண்பாவைப் பாடினார். தொண்டை நாட்டு பொன் விளைந்த களத்தூரில் பிறந்தவர் புகழேந்தி. இவரை முரணை என்னும் நகரை ஆண்ட சந்திரன் சுவர்க்கி என்பவன் ஆதரித்தான். இவர் பாண்டியனின் அரசவைப் புலவராக சில காலம் விளங்கினார். பாண்டியன் தன் மகளோடு சீதனமாகப் புகழேந்திப் புலவரையும் அனுப்பி வைத்தான்.*

*வேளாளர்களுக்கு நாம் எந்நாளும் அடிமை என்று மன்னன் கூற, பாண்டியன் அமைச்சராகச் சென்று தமிழால் உலகை ஆண்ட புகழேந்தி பாண்டி மண்டலத்தவர் ஆவார். தொல்காப்பியம், சீவகசிந்தாமணி, பத்துப்பாட்டு ஆகிய நூல்களுக்கு உரை செய்த நச்சினார்க்கினியர், சேதுபுராணம் பாடிய நிரம்பவழகியார், மகாபாரதம் இயற்றிய வில்லிப்புத்தூரார், ஆதிசங்கரர் இயற்றிய சௌந்தர்யலகரி, ஆனந்த லகரி முதலிய நூல்களை தமிழில் விருத்தங்களாக மொழிபெயர்த்த கவிராசப்பண்டிதர், மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் பாடிய குமரகுருபரர், திருவள்ளுவமாலை பாடிய புலவர்கள் (49), கருமாணிக்கன் போன்ற புலவர்கள் பாண்டி மண்டலத்தில் வாழ்ந்தவர்கள் என்பதை பாண்டி மண்டல சதகத்தின் வழி அறியமுடிகின்றது.*

**கொங்கு மண்டலம்**

**செங்குன்றூர்க்கிழார்**

புலவர் திருவள் ளுவரன்றிப் பூமேற்
சிலவர் புலவரெனச் செப்பல் - நிலவு
பிறங்கொளிமா லைக்கும் பெயராகு மற்றுங்
கறங் கிருண்மா யைக்கும் பெயர்[52]

*எனும் பாடல் வள்ளுவரைப் புகழ்ந்து செங்குன்றூர்க்கிழார் பாடியது இப்பாடல் திருவள்ளுவ மாலையில் இடம்பெற்றுள்ளது. மதுரைத் தமிழாசிரியராக விளங்கிய செங்குன்றூர்க்கிழார் கொங்கு மண்டலத்து திருச்செங்கோட்டைச் சார்ந்தவர்.*

**ஔவையார்**

*சித்தன் வாழ்வு எனும் பழனியில் வீடுகள்தோறும் மூன்று அக்கினி மாறாமல் இருக்கிறது என ஔவை கூறியது கொங்கு மண்டலம். தமிழ்நாட்டில் என்னென்ன பெருமை இருக்கிறது என பாண்டியன் கேட்க,*

நல்லம்பர் நல்ல குடியுடைத்துச் சித்தன் வாழ்
வில்லந் தொறுமூன் றெரியுடைத்து - நல்லரவப்
பாட்டு டைத்துச் சோமன் வழிவந்த பாண்டியநின்
நாட்டுடைத்து நல்ல தமிழ்[53]

*எனப் பாடினார்.*

*மூன்று அக்கினி → ஆகவேனீயம், காருகபத்யம், தக்கினாக்கிநேயம்*

*சிலப்பதிகாரம் இயற்றிய இளங்கோவடிகள், சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லார், பெருங்கதை இயற்றிய கொங்குவேளிர் ஆகிய புலவர்கள் கொங்கு மண்டலத்தில் வாழ்ந்தவர்கள் என்பது குறிப்பிடப் படுகின்றது.*

**கூடலூர்கிழார் - கார்மண்டலம்**

*முல்லைக்குறிஞ்சி நெய்தல் என்னும் திணைத் துறைகளிலும், வேதத் துறைகளிலும் இயற்றமிழ் பாக்கள் பாடிய கூடலூர்கிழார் வாழ்ந்த ஊர் கார்மண்டலத்தேயுள்ளது என்பதைக் கார்மண்டல சதகம் வழி அறிய முடிகின்றது.*

### 4.1.1.9. நூல்கள்

**தக்கயாகப்பரணி - சோழ மண்டலம்**

*செங்குந்தர்கள் தங்கள் மரபைப் பற்றி ஒட்டக்கூத்தர் பாடிய ‘தக்கயாகப்பரணி’ நூலுக்காக முத்துச்சிவிகை பரிசளித்தனர்.*

**இராமாயண அரங்கேற்றம்**

*பங்குனி உத்தர நாளன்று திருவரங்கத்தில் அரங்கநாதன் முன்னிலையில் அரங்கேற்றம் செய்ய வைத்து இராமாயணத்தின் புகழை உலகறியச் செய்தவர்கள் சோழர்கள் என்பதை சோழ மண்டல சதகம் எடுத்துரைக்கின்றது.*

**திருத்தொண்டத் தொகை**

உரைசூழ் திருத்தொண் டத்தொகையின்
நெருங்கும் அடியார் உடன்நிகழ்த்த
வரையாது அளித்த கொடைவேளாண்
மரபோர் சோழ மண்டலமே[54]

*எனும் திருத்தொண்டத்தொகை நூல் சோழ மண்டலத்தில் பாடப்பெற்றது.*

**தியாகராசப்பள்ளு**

*கருணாகரன் செய்த திருப்பணியை முன்னின்று முடித்தவர் நாலத்தொண்ணு என்னும் ஊரைச் சேர்ந்த மல்லைய பூவன் என்பவன். அவனே தியாகராசப்பள்ளு என்னும் நூலை அரங்கேற்றி வைத்தவன். திருவாரூரில் ஆவணி மாதம் நடைபெறும் பவித்ரோத்சவப் பத்துநாள் விழாவில் தியாகராசப் பள்ளு நாடகமாக நடிக்கப்பட்டது.*

**காங்கேயன் நாலாயிரக்கோவை**

*காங்கேயன் எனும் வள்ளல் ஒட்டக்கூத்தரைப் படிக்க வைத்து கவுடப்புலவன் என்று புகழ்பெறுமாறு செய்தான். நன்றி மறவாத ஒட்டக்கூத்தர் அக்காங்கேயன் மேல் நாலாயிரக்கோவை எனும் நூலைப் பாடினார் (சோ.ம.உ., பா.96).*

**வீரசோழியம்**

*வீரசோழன் என்னும் சிறப்புப் பெயருடைய வீரராசேந்திரன் (1063-1070) காலத்தில் பொன்பற்றி புத்தமித்திரன் என்பவர் வீரசோழியம் என்னும் ஐந்திலக்கண நூலை இயற்றினார் (பொன் பற்றி சோழ நாட்டில் அறந்தாங்கி வட்டாரத்தில் பழைய மிழலைக் கூற்றத்தில் உள்ளது). இந்நூலிற்கு பெருந்தேவனார் உரை எழுதியுள்ளார். இதற்கு எதிர்நூல் ஒன்றை ஒட்டக்கூத்தர் பாடியதாகவும் கூறப்படுகின்றது.*

**பெரியபுராண அரங்கேற்றம்**

*குலத்தில் பெரியோர்களும், புகழ்பெற்ற குணத்தில் பெரியோர்களும், கொடையில் பெரியோர்களும் ஒன்றாகக் கூடிப் பெரியபுராணத்திற்குச் செய்ய வேண்டிய மரியாதைகளையெல்லாம் செய்து யானை மீதேற்றி வைத்து ஊர்வலமாகக் கொண்டு வந்து அநபாய சோழன் முன்னிலையில் தில்லைப் பொன்னம்பலத்தில் பஞ்சாச்சரப்படியில் வைத்து அரங்கேற்றம் செய்யப்பட்டது.*

**தொல்காப்பியம்**

*அகத்தியரின் மாணவருள் முதன்மையானவராக விளங்கும் தொல்காப்பியர் தாம் இயற்றிய தொல்காப்பியத்தை பாண்டிய மன்னன் மாகீர்த்தி முன் அரங்கேற்றம் செய்தார் என்பதில் பாண்டி மண்டலம் பெருமை கொள்கிறது.*

**யாப்பருங்கலக்காரிகை**

*பாண்டிய நாட்டுப் புலவர்கள் (சங்கப் புலவர்கள்) உரை கண்ட சிறப்புடையது இந்நூல். மேற்கண்ட நூல்கள் பற்றிய செய்திகளை மண்டல சதகங்கள் வழியாக நாம் அறிந்து கொள்ள முடிகின்றது.*

### 4.1.1.10. மருத்துவம்

*தொண்டை மண்டல சதகம் நான்கு விதமான மருந்துகள் பற்றியும் அது குணப்படுத்தும் நோய்கள் பற்றியும் எடுத்துரைக்கின்றது.*

1. சல்லியகரணி - அம்பு, வாள், வேல் முதலான ஆயுதங்களால் ஏற்பட்ட காயங்களை மாற்றிக் குணப்படுத்த வல்லது.
2. சந்தானகரணி - துண்டிக்கப்பட்ட உறுப்புக்களை ஒட்டுவிக்க வல்லது.
3. சமநீயகரணி - பலவகைப்பட்ட புண்களை ஆற்றி மாற்றவல்லது.
4. சஞ்சீவிகரணி - பிரிந்த உயிரைப் பின்னும் கூட்டிப் பிழைப்பிக்க வல்லது[55]

*என்னும் நான்கு வித மூலிகைகளும் அதன் பயன்களும் கூறப்பட்டுள்ளன.*

**கருநெல்லி**

*கருநெல்லிக்குச்சி நரையினைப் போக்கி, முடியினைக் கருமையாக்க வல்லது என்றும், முதுமை நீக்கி இளமையுடன் வைத்திருக்கும் என்னும் மருத்துவக் குறிப்பினை கொங்கு மண்டல சதகம் தருகின்றது.*

உலையி லமுது படைத்துண்டு சீட னொளித்திருப்பத்
தலையின் மயிருங் கருக்கக்கண் டேயவன் சற்குருவும்
நிலையுடன் கக்குவித் துண்டடைந் தானன் னெறியிற் கஞ்ச
மலையி லதிசயங் கண்டது வுங்கொங்கு மண்டலமே[56]

*என்னும் பாடல், நரையை நீக்கி முடியை கருமையாக்க வல்லது கருநெல்லி என்பதைக் குறிப்பிடுகின்றது.*

### 4.1.1.11. சித்தர்கள்

*கரூர்ச்சித்தர், கஞ்சமலைச்சித்தர், போகநாதர், புலிப்பாணி, கொங்கணச்சித்தர், இடைஞானியார் போன்றோர் கொங்கு மண்டலத்தில் வாழ்ந்த சித்தர்கள்.*

**கரூர்ச்சித்தர்**

*தம்பல எச்சிலால் அட்டபந்தனம் இறுகவும், வன்னிமரம், மீன் காய்த்து சொரியவும், திருவிசைப்பா ஓதியருளிய சித்தர் பிறந்த கரூர் கொங்கு மண்டலம் என்பதாம்.*

**கஞ்ச மலைச்சித்தர்**

*இவர் திருமூலநாயனாரின் பரம்பரையில் உதித்தவர். இவர் வாழ்ந்த கஞ்சமலையும் கொங்கு மண்டலம் என்பதை கொங்கு மண்டல சதகம் குறிப்பிடுகின்றது.*

**போகநாதர் புலிப்பாணி**

*யோகம், வைத்தியம், ரசவாதம், நீண்ட ஆயுளைப் பெறும் காயகற்பம், அட்டமாசித்தி முதலியவைகளைக் கூறிய போகநாதர், புலிப்பாணி முதலிய பெரியோர்கள் வசித்துள்ள வைகாவூர் (பழனி) கொங்கு மண்டலம் என்பதாம்.*

யோக வயித்தியஞ் சொல்ரச வாத மெலாக்கலையுந்
தேக நிலைபெறுங் காயகற் பங்களெண் சித்தியுஞ்செய்
போக ருடன்புலிப் பாணி முதலிய புண்யரெலா
மாக முறவமர் வைகா நகர்கொங்கு மண்டலமே[57]

*எனும் பாடல் போகநாதர் புலிப்பாணி போன்ற சித்தர்களைப் பற்றி குறிப்பிடுகின்றது.*

**கொங்கணச்சித்தர்**

*செம்பு முதலிய லோகங்களுடன் பச்சிலைச்சாறு, ரச கந்தக முதலியன சேர்த்துப் பொன் செய்து மாற்றுக் காணும் கொங்கணச்சித்தர் வசிக்கும் ஊதியூர் மலையுங் கொங்குமண்டலம் ஆகும். இதனை,*

தோற்றிய செம்பு தராவீயம் பித்தளை சூழ்பச்சிலைச்
சாற்றுட னாக ரசங்கந் தகமிட்டுத் தந்திரமாய்
தேற்றுந் தவம்பெற்ற கொங்கணச் சித்தர்முன் செம்பொன்செய்து
மாற்றுரை கண்டது பொன்னூதி யூர்கொங்கு மண்டலமே[58]

*என்னும் கொங்கு மண்டல சதகப்பாடல் மூலம் அறியலாம்.*

### 4.1.1.12. வேளாளர்கள்

*மண்டல சதகங்கள் அவ்வம் மண்டலங்களில் வாழ்ந்த வேளாளர்களின் பெருமையை எடுத்துரைப்பனவாய் அமைந்துள்ளன. இச்சதகங்களில் வேளாளர் பூர்வீகம், வேளாளர் வகை (இனம்), இயல்புகள் மற்றும் கொடைத்திறன் ஆகியவைப் பற்றி விரிவாகக் கூறப்பட்டுள்ளன.*

**வேளாளர் - பூர்வீகம்**

*வேள், வேளிர், வேளாளர், காராளர் என்று வழங்கப்படுகின்ற வேளாளர்கள் சிவனருளால் கங்கையிடம் தோன்றியவர்கள். இவர்கள் கங்கா கோத்திரத்தார் என்றழைக்கப்பட்டனர்.*

பார்த் தொரு பாணன் பிணமுஞ் சுமந்து பறையனுயிர்
காத்திதற் குப்பின்பு நீலி பழியைத் தழுவிக் கங்கா
கோத்திரத் தாரென்றே பேர்கொண்டு கம்பற்குக் கொத்துடனே
மாத்தொழில் தான்செய்யும் வேளாளர் பாண்டியன் மண்டலமே[59]

*என்னும் பாண்டி மண்டல சதகப்பாடல், வேளாளர்களை கங்கா கோத்திரத்தார் என்று குறிப்பிடுகின்றது.*

*கங்கை பாவங்களை ஏற்று புனிதத்தைத் தருவது போல வேளாளர்களும் செயல்படுவதால் கங்கா கோத்திரத்தார் என அழைக்கப்பட்டனர்.*

வேளாளர்கள் கங்காபுத்திரர்கள் என்பதும், இவர்கள் நாற்பத்தெட்டாயிரம் இருடிகளை வணங்க அந்த இருடிகள் அவரவர்கள் பெயரைத் தங்கள் கோத்திர முதலாகக் கொள்ளுமாறு கட்டளை இட்டனர். சிவபெருமான் அனுக்கிரகித்த எருதையும், இயமனுடைய கடாவையும், இந்திரனின் காமதேனுவையும் கொடுத்துப் பெற்றுப் பூமி திருத்தி வேளாண்மை செய்து எல்லா உயிர்களையும் காத்து வந்தனர்[60]

*என்னும் விளக்கம் பாண்டி மண்டல சதக நூலின் உரை விளக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.*

*கார்மண்டல சதகம் கங்காதத்தன், காங்கேயன் ஆகியோர் வழிவந்தவர்களே வேளாளர்கள் என்று குறிப்பிடுகின்றது. இவர்கள் 'வேளாளன்' - வெள்ளத்தை ஆள்பவன் என்றும், உழவனுக்குப் பிறந்ததால் பூபாலன் என்றும், கங்கைக் கரையில் பிறந்தமையால் 'காங்கேயன்' என்றும் கலப்பையுடன் பிறந்ததால் 'உழுபடையோன்' என்றும் பெயரிடப்பட்டனர். இவர்களுக்கு மேகத்தை ஆள்வோர் என்னும் பொருளில் 'காராளர்' என்னும் பெயரும் வழங்கப்பட்டது.*

*ஆடு, மாடு மேய்க்குந் தொழிலை மேற்கொண்டு வெவ்வேறு இடங்களில் குடிபெயர்ந்து இந்தியா வந்தடைந்தவர்கள் ஆரியர்கள். இவர்கள் வட இந்தியாவில் தொழில் வளம் மற்றும் நாகரிக வாழ்க்கை வாழ்ந்து வந்த*

*வேளாளர்களைக் கண்டு வியப்படைந்து அவர்களை அண்டிப் பிழைக்கலாயினர். வேளாளர்களும் தங்களுடைய செல்வப்பெருக்கு மற்றும் இரக்கவுணர்வு அடிப்படையில் அவர்களைப் பாதுகாத்து வந்தனர் என்பதை 'வேளாளர் நாகரிகம்' என்னும் நூலில் மறைமலையடிகள் கூறுவதிலிருந்து அறியமுடிகின்றது.*

தரங்கக் கருங்கடற் றாரணி மெய்க்கலை சார்பறநூ
லிரங்கற் கொடுவினை மாற்றுந் தழல்வினை யெம்மாபுங்
குரங்கற் குரைக்கும் புராணம் விபுதர் குலமநந்தை
மருங்கிற் றுவரா பதிவேளிர் காராளர் மண்டலமே[61]

*என்று கார்மண்டல சதகம் குறிப்பிடுகின்றது.*

> 'தேவரெல்லாம் கூடி' யாம் சேரவிருத்தலின் மேரு தாழ்ந்து தென்திசை உயர்ந்தது. இதற்கு அகத்தியனாரே ஆண்டிருத்தற்குரியர் என்று அவரை வேண்டிக் கொள்ள அவரும் தென்றிசைக்கட் போதுகின்றவர் . . . துவராபதி யோந்து, நிலங்கடந்த நெடுமுடி யண்ணல் வழிக்கண் அரசர் பதினெண் மறையும் பதினெண் குடிவேளிர் உள்ளிட்ட வரையும் அருவாளரையுங் கொண்டு போந்து குடியமர்த்தினர்[62]

*என்று தொல்காப்பியப் பாயிர உரையில் நச்சினார்க்கினியர் குறிப்பிடுவதை மேற்கோள் காட்டி மு.இராகவையங்கார் விளக்குவதிலிருந்து வேளாளர்கள் அரச வம்சத்தினர் என்பதும், அகத்தியரால் தென்னாட்டில் குடியமர்த்தப் பட்டவர்கள் என்பதும் புலப்படுகின்றது.*

நற்குடி நாற்பத் தெண்ணாயிர வோரை முன்னாள் தொண்டைமான்
சக்கரவர்த்தி தர வேண்டும் என்று வந்து ஆதரிப்பத்
திக்கனைத்தும் புகழ் தென்னவன் தேடித் தெரிந்தனுப்பும்
வர்க்கமாகிய வேளாளர் பாண்டியன் மண்டலமே![63]

*'நற்குடியில் பிறந்த நாற்பத்தெட்டாயிரம் போர்களை எனக்குத் தந்து உதவ வேண்டும்' என்னும் பாண்டியனிடம் தொண்டைமான் வைத்த வேண்டுகோளை ஏற்று, பாண்டிய மன்னன் தெரிவு செய்து அனுப்பியவர்களே வேளாளர்கள் என்று பாண்டி மண்டல சதகம் குறிப்பிடுகின்றது.*

கொல்ல னொடு தச்சன் தட்டான் வண்ணான் குயவன் கணக்கன்
புல்லிய பூக்கட்டி நாவிதன் வீரன் புனமடக்கி
நல்ல வுவச்சன் பறைகொட்டி தொண்டை நன்னாட்டினிலே
வல்ல குடிவைத்த மாறனும் பாண்டியன் மண்டலமே[64]

*என்னும் பதினெண் குடியினர் பெயர்கள் குறிப்பிடப்படுகின்றது.*

*இதன்மூலம் வேளாளர்கள் பாண்டிய நாட்டிலிருந்து தொண்டை நாட்டிற்கு அனுப்பப்பட்டனர் என்பதை அறியமுடிகின்றது. ஆனால் சோழ மண்டல சதகம் பாண்டிய மன்னன் தன் நாட்டுக்கு வேளாளர் வேண்டும் என்பதற்குச் சோழ நாட்டுக்கு வந்து காரைக்காடர் குடியைச் சேர்ந்த வேளூர்கிழவன் என்ற வேளாளர் தலைவனையும், பிறரையும் அழைத்துச் சென்று மதுரையிலும் பாண்டிய நாட்டின் பிற பகுதியிலும் குடியமர்த்தினான் என்றும் குறிப்பிடுகின்றது.*

ஓதார் காரைக் காடர்குடி
ஒன்று கொடுத்தே உயர்மாறன்
கொத்தார் கொடைவே ளாளர்குடி
கொண்டே மதுரை குடியேற்றிப்
பத்தார் திசையில் இருங்கள்ளனப்
பாண்டி நாடன் பட்டமிட்டு
வைத்தார் வேளூர்க் கிழவனது
மரபோர் சோழ மண்டலமே[65]

*என்று சோழ மண்டல சதகமும்,*

குழுவார் குடிமக்க ளானகண்
ணாளர் குறும்படக்கி
யெழுவா யமைந்த மனுநீதி
யாற்பதி னெண்மரபு
முழுவா னரித்துக் கிடந்து
விடாம லுலகுக் கெல்லாம்
வழுவா தமைக்கவும் வல்லது
நீடொண்டை மண்டலமே[66]

*என்று தொண்டை மண்டல சதகமும் பதினெண்குடி வேளிர் குடியமர்த்தப்பட்ட வரலாற்றை எடுத்துரைக்கின்றது.*

*பதினெண் குடியினரில் சிலர் கடமை தவறிய போது நீதி கூறி முறைப்படுத்தி இக்குடியினர் சிதைந்து போகாமல் காத்தவர்கள் வேளாளர்கள் என்று தொண்டை மண்டல சதகம் குறிப்பிடுகின்றது.*

**வேளாளர் வகை**

வேளாளர்கள் உழுதுண்போர், உழுவித்துண்போர் என இருவகைப்படுவர். அவர்களுள் உழுவித்துண்போர் மண்டில மாக்களும், தண்டத்

தலைவருமாய்ச் சோழ நாட்டுப் பிடவூரும், அழுந்தூரும், நாவூரும், ஆலஞ்சேரியும், பெருஞ்சிக்கலும், வல்லமும், கிழாரும் ஆகிய ஊர்களில் தோன்ற 'வேள்' எனவும் 'அரசு' எனவும் உரிமைப் பெற்றோரும் பாண்டி நாட்டுக் 'காவிதி'ப் பட்டம் பெற்றவர்களும் குறுமுடி குடிப்பிறந்தோர் முதலியோருமாய், முடியுடை வேந்தர்க்கு 'மகட்கொடை'க்குரிய வேளாளராம்[67]

*என்று பாண்டி மண்டல சதகம் குறிப்பிடுகின்றது.*

தொண்டை கட்டி வேளாளர்

பெருந்தாலி கட்டி வேளாளர்

துளுவ வேளாளர்

சோழிய வேளாளர்

*என்றும் வேளாளர் பல வகைப்படுவர்.*

வடநாட்டு அந்தணப் புரோகிதர்கள், இந்து சமயத்தை தென்னாட்டுக்கு கொண்டு வந்து பரப்புவதற்கு முன்னே, தென்புல மக்கள் மூன்று முக்கிய இனங்களாகத் தனித்தனி குடிமரபு தழுவிய நாகரிகத்துடன் வாழ்ந்து வந்தனர்[68]

*என்று டி.கே.சக்திதேவி வேளாளர் வகைகளைப் பிரித்துக் காட்டுகிறார். மேலும்,*

கொண்டை கட்டி வேளாளர், பெருந்தாலிகட்டி வேளாளர், துளுவ வேளாளர் ஆகியோர் இன்றைக்கு சுமார் 4000 ஆண்டுகளுக்கு முன்பு சோழ நாட்டிலே தனித்தனி ஜாதியாக வாழ்ந்து வந்தனர். முதல் சோழ ராஜா வேளாளர் ஜாதியிலே தோன்றியவன். சோழன் பூர்வ பட்டயத்திலே சோழன், காளை கட்டி உழுது உண்ணும் வெள்ளாளன் எனக் குறிக்கப்பட்டுள்ளது[69]

*என்பதை டி.கே.சக்தி தேவி குறிப்பிடுகிறார்.*

*சோழிய வேளாளர், கார்காத்த வேளாளர் என்னும் வேளாளர் வகைகள் தொழில் காரணமாக ஏற்பட்ட பெயராகக் கொள்ளப்படுகிறது.*

**தொல்காப்பியம் - குறிப்பிடும் வேளாளர்**

வேளாண் மாந்தர்க்கு உழுதூண் அல்லது

இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி[70] (தொல்.பொருள்.மரபு.81)

வேந்துவிடு தொழிலிற் படையுங் கண்ணியும்

வாய்ந்தனர் என்ப அவர்பெறும் பொருளே[71]

அன்ன ராயினும் இழிந்தோர்க்கு இல்லை.[72]

*வேளாளர்களுக்கு உழவுத்தொழில் உரியது என்றும் வேந்தன் பொருட்டு படையும் கண்ணியும் பெறுவர் என்றும் தொல்காப்பியம் கூறுகின்றது.*

> வேளாளர் காடு கெடுத்து நாடாக்கிக் குளந்தொட்டு வளம்பெருக்கி உழவுசெய்யும் வகையினை முதன்முதற் கண்டறிந்த நாகரிக உயர்குடி மக்களாதல் பற்றி அவர்க்கு உழவுத்தொழிலைச் சிறந்ததாக வைத்துக் கூறினாராயினும், அவர்கள் அரசர்க்கு உதவியாளராய் அவர்க்குப் படைத்தலைவரும் அமைச்சரும் ஆதற்குரியாரென்பதூஉம் அரசர் தரும் வரிசைகளைப் பெற்றுக் குறுநில மன்னர் ஆதற்குரியார்[73]

*என்னும் மறைமலையடிகள் கூற்று இவண் குறிப்பிடத்தக்கது.*

*தொல்காப்பியம் 'இழிந்தோர்' எனக்கூறுவது வேளாளர்க்கு ஏவல் புரிவதற்காக வகுக்கப்பட்ட பதினெண் வகுப்பினரைக் குறிக்கும் என்றும் விளக்கம் தருகின்றார்.*

*இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதான தொல்காப்பியம் அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் ஆகிய நால்வகைப் பிரிவினரின் இயல்புகள் மற்றும் தொழில்கள் பற்றியும் குறிப்பிடுகின்றது.*

*வேளாளர்களுடைய முதன்மையானத் தொழில் உழவுத்தொழில் என்பதும் அரசர் பொருட்டு படைத்தலைவராயும், அமைச்சராயும் இருத்தற்குரியர் என்றும் தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது. இழிந்தோர் எனக் குறிக்கப்பட்டவர் வேளாளர்க்கு ஏவல்புரிபவராக வகுக்கப்பட்ட பதினெண் வகுப்பினரைக் குறிக்கும் என்பது அறியப்படுகின்றது. இவ்வாறிருக்க, சோழ மண்டல சதகம் வேளாளர்களை, சற்சூத்திரர் என்று குறிப்பிடுகின்றது.*

> பூ மாது இருக்கும் பசும்துளவப்
> புயமால் உந்தி பூத்தமறைக்
> கோமான் திருத்தாள் மலர்உதித்த
> குணத்தோர் சற்சூத் திரகுலத்தோர்[74] (சோ.ம.ச.9)

*வேளாளர்கள் பிரம்மனின் கால்களில் தோன்றியவர்கள் என்றும், இவர்கள் சோழிய வேளாளராய் உழவுத் தொழில் செய்து உலகம் காக்கின்றனர் என்பதையும் எடுத்துரைக்கின்றது.*

*நால்வகைப் பிரிவினரில் வேளாளரைப் பின்பற்றியே மற்ற மூவரின் வாழ்வு அடங்கியுள்ளது. இக்கருத்தை உறுதி செய்யும் முகமாக மறைமலையடிகள் கூறும் கருத்து இங்கு நோக்கத்தக்கது.*

> உழவுத்தொழில் செய்யும் வேளாளர், தம்முள் நுண்ணறிவாற் சிறந்தாரை அறிவு நூல் ஓதுதற்குந் திருக்கோயில்களிற் கடவுள் வழிபாடு ஆற்றுதற்கும் ஒரு வகுப்பினரைப் பிரித்து வைத்தனர். அவர்களே தமிழ்நாட்டு அந்தணராவார்.
>
> போர் செய்வதற்குரிய ஆற்றனுங் குடிகளைப் பாதுகாத்தற்குரிய அறிவு வலியுமுடைய வேளாண் மக்களைப் பிரித்து அரசாளுதற்கு வைத்தார்கள்.
>
> (எ.கா.) 'மிழலைக் கூற்றத்தை ஆண்ட வேள்எவ்வி'
>
> 'பறம்பு மலையை ஆண்ட 'வேள்பாரி'
>
> இதனைப் போலவே கணக்கறிவும் இன்சொல்லும் இயற்கையில் வாய்ந்தவர்களை பிரித்து வணிகராக்கினர் (வேளாண் செட்டிகள்).[75]-

*இதன்மூலம் ஆசிரியர் வகுத்த நால்வகை வருணத்தாருள் தென்னாட்டு வேளாளர்கள் அடங்காமையை உணரமுடிகின்றது. இவ்வேளாளர்கள் வாய்மை, கொடைத்திறன் ஆகிய உயர்பண்புகள் மற்றும் நாகரிக வாழ்க்கை ஆகியவற்றில் சிறந்து விளங்கினர் என்பதை மண்டல சதகங்கள் நமக்கு புலப்படுத்துகின்றன.*

## மண்டல சதகங்களில் வேளாளர்கள்

*அவ்வம்மண்டலங்களில் வாழ்ந்த வேளாளர்களும் அவர்தம் பெருமைகளும் இங்குக் குறிப்பிடப்படுகின்றது. கார்காத்த வேளாளர் குலத்தில் வள்ளல்களாக விளங்கியவர்களைப் பற்றியும் அவர்களது பெருமைப் பற்றியும் இந்நூல் குறிப்பிடுகின்றது. அவர்களின் பெயர்கள் பின்வருமாறு.*

*இருங்கோ அதியன், பெருநள்ளி, நன்னன், எவ்வி, அன்னி, கங்கன், இளங்கோசர், குன்றத்துப் பூதரன், கூடலூர்கிழார், பெருங்குன்றூர்கிழார், ஆலியார், அரிசில்கிழார், கருவூர்க்கதப்பிள்ளை, உம்பலார் என்னும் வள்ளல்களின் பெயர்களைக் குறிப்பிட்டு இவர்களின் பெருமைக்கு இணையில்லை என்கிறது கார்மண்டல சதகம்.*

*தொண்டை மண்டல சதகம், பாண்டி மண்டல சதகம், சோழ மண்டல சதகம், கொங்கு மண்டல சதகம் போன்ற நூல்கள் வேளாளர்தம் பெருமைகளை விரிவாக எடுத்தோதுகின்றன.*

**தொண்டை மண்டல சதகம்**

*'பழையனூர் நீலியின் பொருட்டு சொன்ன சொல்லைக் காக்க எழுபது வேளாளர்கள் தீயினுள் பாய்ந்து உயிர் விட்டனர். இவ்வரலாற்றை,*

மாறுகொடு பழையனூர் நீலி செய்த

வஞ்சனையால் வணிகன் உயிர்இழப்பத் தாளிகள்

கூறியசொல் பிழையாது துணிந்து செந்தீக்

குழியிலெழு பதுபேடும் முழுகிக் கங்கை[76]

*என்னும் தொண்டை மண்டல சதகப் பாடல் எடுத்துரைக்கின்றது. வேளாளர்கள் எழுபது பேரும் திருவாலங்காட்டில் இறைவன் திருவடி அடைந்தனர் என்று சேக்கிழார் புராணமும் குறிப்பிடுகின்றது.*

**சடையநாத வள்ளல்**

*புலவர்களுக்கு வேண்டியதை வழங்கும் சடையநாத வள்ளல், ஒரு புலவரின் விருப்பத்திற்கிணங்க கருவுற்றிருந்த தன் மனைவியின் முதுகில் அன்னம் படைத்து உபசரித்தார்.*

**சடையப்ப வள்ளல்**

*கம்பரை ஆதரித்தவர் சடையப்ப வள்ளல். சீன நாட்டு வணிகன் கொண்டு வந்த பட்டாடையை அரசனாலும் வாங்க இயலாத போது வணிகனுக்காக தான் வாங்கிக் கொண்ட வள்ளல் என்று போற்றுகிறது தொண்டை மண்டல சதகம்.*

*பரராசன் ஆட்சிக்காலத்தில் இலங்கையில் பஞ்சம் ஏற்பட்ட போது ஆயிரம் கலங்களில் நெல் அனுப்பி பஞ்சம் போக்கியவர் சடையப்ப வள்ளல் என்று சோழ மண்டல சதகம் சிறப்பிக்கின்றது. மேலும் இவர் விருந்தினரை உபசரித்தபான்மையால் காவிரி எச்சில் நீராயிற்று என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது.*

அளிக்கும் படைமூ வேந்தரும்கொண்

டாடும் விருந்தால் அதிசயமாய்த்

திளைக்கும் திரிகர்த்த ராயன்எனச்

செப்பும் வரிசைத் திறம் சேர்ந்தோன்

விளைக்கும் அரிசி மாற்றியநீர்

வெள்ளம் கிழங்கு விளையும் என.[77]

*சடையப்ப வள்ளல் அளித்த விருந்தால் மகிழ்ந்த மூவேந்தர்களும் அவருக்கு திரிகர்த்தராயன் என்னும் பட்டம் வழங்கியமையை சோழ மண்டல சதகம் குறிப்பிடுகின்றது.*

*கம்பர் இராமகாதையில் புகழ்ந்தமையால் இராமாயணம் உள்ள அளவும், இவ்வுலகு உள்ள அளவும் சடையப்ப வள்ளல் புகழ் நிலைத்து நிற்கும் என்று சோழ மண்டல சதகம் (பா.72, 75, 76, 94) போற்றுகின்றது.*

**தொண்டை மண்டல சதகம்**

*பாணன் பிணம் சுமந்த* ***எல்லன்.***

*புலவருக்குக் கொடுக்கப் பொருள் இல்லாத காரணத்தினால் சாகத் துணிந்து பாம்புப் புற்றினுள் கைவிட்ட* ***காளத்தியப்பர்****, தன்னுடைய பணிப்பெண் புலவருக்கு வீட்டைத் தர, தன்னுடைய பரம்பரையினர் புலவருக்கு அடிமை என்று எழுதிக் கொடுத்த* ***நெற்குன்றவாண முதலியார்.***

*சொன்ன சொல் காத்த* ***தளவாய் அரியநாதர்.***

*தான் கட்டியிருந்த ஆடையை அவிழ்த்துக் கொடுத்த* ***வல்லாள முதலியார்.***

*பாம்பு கடித்து இறந்த தன் மகனை மறைத்து கம்பரை உபசரித்த* ***தவளகிரி முதலியார்.*** *இவர் மீது கம்பர் ஏரெழுபது பாடினார்.*

*இரவலர்களை வலிய அழைத்து தன் தோட்டத்தில் உள்ள கரும்பினை உண்ணச் செய்து அதற்குக் கூலியும் கொடுத்த* ***வீரபத்திர முதலியார்.***

*சிவனடியார்களுக்கு உணவு, உடை, அணிகலன்கள் வழங்கிய பின், மேலும் அவர்கள் கேட்பதற்கு தயங்குவர் என்றெண்ணி வீட்டு முற்றத்தில் மணலைப் பரப்பி அதில் எழுதச் செய்து வழங்கிய வள்ளல்* ***புண்ணிய கோட்டி முதலியார்.***

*பஞ்ச காலத்திலும் புலவர்களுக்கு உணவளித்து ஆதரித்து வந்தவர்* ***வேலூர்க்கிழார்.***

*புலவர் கேட்க மனைவியை வழங்கிய* ***வீடூர் முதலியார்.***

*ஒரு குதிரை கேட்டவனுக்கு ஆயிரம் குதிரைகள் வழங்கிய* ***ஆற்றூர்க்கிழார்.***

*பாடல்பாடி முடிக்கும் முன்னே காளமேகப் புலவருக்குப் பரிசில் வழங்கியவன்* ***ஆமூர் முதலி (களப்பாளன்)*** *போன்ற அரும்பெரும் செயல்களைச் செய்த வேளாண் வள்ளல்களைத் தொண்டை மண்டல சதகம் சிறப்பித்துப் பாடுகின்றது.*

**வல்லை காளத்தி முதலியார்**

கொல்லையிற் பாற்பசு மேய்ப்போன்
கறப்பவன் கொண்டு சென்றே
எல்லையிற் சேர்ப்பவன் பாலடு
வோனிவை யித்தனையுஞ்
சொல்லையிற் பாவல னோரார்
கவிசொல்லச் செல்வ நல்கும்
வல்லையிற் காளத்தி வாழ்வா
னதுந்தொண்டை மண்டலமே.[78]

*வல்லம் காளத்தி முதலியார் தன்னைப் புகழ்ந்து பாடிய படிக்காசுப் புலவருக்குக் கறவைப் பசுவை, பரிசளித்து, அதனுடன் பசுவை மேய்ப்பவன், பால்கறக்கிறவன், பால் காய்ச்சுவோன் என அனைவரையும் உடன் அனுப்பிய பெருந்தகையாளர் என்பது அறியப்படுகிறது.*

*ஏகம்பவாண முதலியார், வடுகநாத முதலியார், வயிரப்ப முதலியார், மாராபிராம முதலியார், கொல்லாபுரிச் சந்திரன் என்னும் வேளாளப் பெருங்குடி மக்கள் சிறப்பிக்கப்பட்டுள்ளனர். தொண்டை மண்டலத்து வாழ்ந்த வேளாளர் தம் மன உறுதியும், வாய்மையும், கொடைத்திறனும் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தக்கூடியதாக அமைந்துள்ளது.*

**சோழ மண்டல சதகம்**

*சோழ மண்டல சதகம் உடையார், வேளாளர், குடையார், கோனார் குடியில் பல வள்ளல்கள் குபேரனைப் போல் பெருஞ்செல்வத்துடன் வாழ்ந்தனர் என்பதைக் குறிப்பிடுகின்றது. இம்மண்டலத்தில் வாழ்ந்த சோழிய வேளாளர்கள் கரிகாலனுக்கு முடிசூட்டும் உரிமை உடையவர் என்பதும் குறிப்பிடப்படுகின்றது.*

*சோழ மண்டல சதகம் குறிப்பிடும் வேளாண் வள்ளல்களின் பெயர்கள் மற்றும் குறிப்புகள் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றன.*

**ஆலஞ்சேரி மயிந்தன்**

*பன்னீராண்டு மழை பெய்யாது பஞ்சம் வந்த போது தமிழ்ப்புலவர்களை ஆதரித்தவன் ஆலஞ்சேரி மயிந்தன்.*

பயந்த மழைநீர் பெய்யாது
பன்னீ ராண்டு பஞ்சமெல்லாம்
வியந்த சங்கத் தமிழோர்க்கு
வெவ் வேறுதவி விடிந்தவுடன்
நயந்த காலை யெனும் தமிழை
நாட்டும் துரைஆ லஞ்சேரி
மயிந்தன் உயர்பான் டியன்புகழ
வந்தோன் சோழ மண்டலமே[79]

*என்னும் சோழ மண்டல சதகப் பாடல் ஆலஞ்சேரிமயிந்தனின் கொடைச் சிறப்பினை வியந்து போற்றுகின்றது.*

**கருப்புடையான்**

*தாகத்துடன் இருந்த சோழனுக்கு கரும்புச்சாறு வழங்கியவன்.*

**குண்டையூர்க்கிழார்**

*சுந்தரருக்கு நெற்குவியல்களை வழங்கியவர்.*

**சுரைக்குடையான்**

*தனது சுரைக்கொடியில் காய்க்கும் காயை கஞ்சனூர் அக்னிபுரீசுவரருக்கு அர்ப்பணம் செய்து வந்தார். விதைக்காக விட்டிருந்த காயின் ஒரு பாதியை அவர் மனைவி அடியார்க்கு சமைத்துக் கொடுக்க, மனைவியை கொல்ல முற்பட்டவர்.*

**ஆனைப்பாக்க முடையான்**

*ஒரு கடா யாசகம் கேட்க, எருமைக்கடாக்களோடு யானைகளையும் வழங்கியவன்.*

**நாகை வேளாளர்**

*தம்மை வசைபாடிய காளமேகப் புலவருக்கு ஆயிரம் பொன் பரிசளித்தனர் நாகை வேளாளர்.*

**பாக்கம் உடையான்**

*தன்னை அவமதித்துப் பாடிய புலவனுக்கு அவன் வேண்டும் பரிசிலைத் தந்தவன்.*

**அரசூர், சீநக்கன்**

*பொய்யாமொழிப் புலவருக்குப் புளியஞ்சோறு அளித்தவன்.*

**வேளூர்கிழான்**

*கத்தரிக்காய் பறித்தபோது முள்மாட்ட சீ! விடு! என்ற தன் மகளைச் சந்தேகப்பட்டு தீப்பாயச் சொன்னவர்.*

**நாங்கூர் அதிபன் சேந்தன்**

*வரிசெலுத்தாமைக்காக சோழ மன்னனால் சிறையில் அடைக்கப்பட்டு பட்டினத்தாரால் விடுவிக்கப்பட்டவன்.*

**புங்கனூர்க்கிழவன்**

*குடிதாங்கி என்னும் வேளாளர் பெருமக்கள் கொடைத்திறனால் சிறந்து விளங்கினர் என்பதை சோழ மண்டல சதகம் எடுத்துரைக்கின்றது. மேலும், வேளாளர்கள் 64 குடியினராய் விளங்கியமையும் கரிகாலனுக்கு முடிசூட்டும் உரிமையுடையவர்கள் என்பதும், சந்திரன், திருமகள், திருமால், சிவபெருமான் ஆகியோரிடத்தில் களங்கம் இருக்கலாம். சோழிய வேளாளர்களிடத்தில் களங்கமில்லை என்று சிறப்பிக்கின்றது.*

*இவர்கள் கடுவாய்க்கரை புத்தூரில் சிவாலயத்துக்குக் கோபுரமும் மதிலும் அமைத்தனர். வேளாளர்கள் உழுகுடியினரிடமிருந்து எட்டில் ஒரு பங்கை வரியாகப் பெற்றனர். அரசனைவிட இவர்கள் உயர்ந்தவர்கள் என்று சிறப்பிக்கின்றது.*

*அகலிகை விமோசனம் பெற்ற இடம் சோழ நாட்டுத் தேவூர். அங்கு வந்த கௌதம முனிவர் வேளாளர்களின் பொற்கலப்பையை வாங்கி உழுது நெல் விளைத்து அன்னதானம் செய்தனர் என்று குறிப்பிடுவதிலிருந்து வேளாளர் பெருமை புலப்படுகின்றது.*

**கொங்குமண்டல சதகம்**

**ஆணூர்ச்சர்க்கரை**

*விருந்துண்ண வந்த புலவரில் ஒருவன் தாயின் முதுகில் ஏற, அவன் தன் தாயிடம் என்னைப் பத்து மாதம் சுமந்து தாங்கள் இப்புலவரைச் சற்று நேரம் சுமந்திருக்க வேண்டினார்.*

*தன்னை இகழ்ந்ததாக எண்ணி வருத்தமுடன் சென்ற புலவரைத் தேடிச் சென்று, தாம் இகழவில்லை என்பதை காய்ச்சிய நெய்யில் கைவிட்டும், புலவரின் வாயைக் கழுவியும் நிரூபித்தார். இதனை,*

திருத்து புகழ்பெறு மாணூரிற் சர்க்கரை செந்தமிழோன்
விருத்த முட னன்னை மேலேறத் தாய்வெகு ளாமலெனைப்
பொருத்த முடன் பத்து மாதஞ் சுமந்து பொறை யுயிர்த்தாய்
வருத்த மிதிலென்ன வென்றா னவன்கொங்கு மண்டலமே.[80]
முகஞ்சோர்ந் தகன்றிடு மேகாலிப் பாவலன் முன்ன நின்றே
யிகழ்ந்தே னிலையைய வென்று சுடுநெ யினிற்கை யைவிட்[81]

*என்னும் பாடலடிகள் குறிப்பிடுகின்றன.*

**காரையூர்ச் சர்க்கரை (ஆணூர்க்காமிண்டன்)**

*சோழர் படையை ஓடச் செய்தவர் என்றும், கேட்டவுடன் பொருள் தராமையால் உன்னை விலை கூறி விற்பேன் என்று ஒரு புலவன் தன்னை இழுக்க, அவனுக்கும் பரிசில் வழங்கியவன் காரையூர்ச் சர்க்கரை.*

**காளிங்கராயன்**

*காவேரி நதியுடன் கூடுகின்ற பவானி ஆற்றை அணைகட்டி பாசனஞ்செய்து வடிநீர் காஞ்சியாற்றில் விழும்படிச் செய்தவன் காளிங்கராயன். இவன் மேல்கரை பூந்துறை வெள்ளோட்டில் வாழ்ந்தவன். வீரபாண்டியனின் சேனாதிபதி என்பதும், பவானி நதியின் குறுக்கே அணை கட்டினான் என்பதும், இன்றும் அவ்வணை காளிங்கராயன் அணை என்று வழங்கப்படுவதும் குறிப்பிடப்பட்டுள்ளது.*

**அன்னத்தியாகி**

*முறசை நகரில் வாழ்ந்த வேலப்பன், பாண்டிய நாட்டில் பஞ்சம் ஏற்பட்டபொழுது பாண்டியன் தன் சேனையின் ஒரு பகுதியை அனுப்ப, அதற்கு உணவளித்துப் பாதுகாத்து அன்னத்தியாகி என்ற பட்டமும் பெற்றான்.*

**உலகுடையான்**

*அகத்துறைக் கோவை பாடிய புலவனுடைய பல்லக்குச் சுமந்து அவனுக்கு வயனிலமும் பொருளும் பரிசாகக் கொடுத்தவன்.*

**வேணாவுடையான்**

*தேர் நகராத போது தன் மகனை வெட்டி பலி கொடுத்தவன்.*

**வாணராயன்**

*வீட்டின்முன் ஏடும் எழுத்தாணியும் தொங்கவிட்டு வேண்டியவற்றை எழுதிச் செல்லும் புலவருக்கு பரிசில் வழங்கி சிறப்பிப்பவன்.*

**பாரியூர் செட்டி பிள்ளையப்பன்**

*வறுமையால் வாடும் புலவருக்குக் கொடுக்கப் பொருளில்லாத காரணத்தால் புலி வாழும் புதருக்குள் புகுந்து உயிர்விடத் துணிந்த நிலையில், அங்கு கள்வர்கள் மறைத்து வைத்திருந்த செல்வத்தைக் கொண்டு பரிசளித்தவன்.*

*இவ்வாறாக கொங்கு மண்டலத்தில் வாழ்ந்த வேளாளர்களின் பெருமைகளை கொங்கு மண்டல சதகத்தின் வழி அறியமுடிகின்றது.*

**பாண்டி மண்டல சதகம்**

*பாண்டி மண்டல சதகம் இம்மண்டலத்தில் வாழ்ந்த வேளாளர்களை தனிப்பட சிறப்பிக்காமல் பொதுப்பட அவர் பெருமைகளை எடுத்துரைக்கின்றது. அதாவது, பதினெண் குடியினரில் நாற்பத்தெட்டாயிரம் பேர்கள் தொண்டை நாட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டனர் என்பதும், இவர்கள் கங்கா கோத்திரத்தார் என்பதும், மன்னனுக்கு முடிசூட்டும் உரிமை உடையவர்கள் என்பதும் இந்நூலுள் குறிப்பிடப்பட்டுள்ளது.*

### 4.1.2. தொண்டர் வரலாறு கூறுதல்

*திருத்தொண்டர் சதகம் தொண்டர் வரலாறு கூறும் நூலாக அமைந்துள்ளது. திருத்தொண்டர்களாகிய சிவனடியார்கள் அறுபத்து மூவரின் வரலாறு கூறப்படுகின்றது.*

*நாயன்மார்கள் எந்த திருமரபைச் (சாதி) சார்ந்தவர்கள் என்பது பட்டியலிட்டுக் கொடுக்கப்பட்டுள்ளது.*

| | | |
|---|---|---|
| *அந்தணர்* | - | *13* |
| *சிவாச்சாரியார்* | - | *4* |
| *மருத்துவர்* | - | *1* |
| *அரசர்கள்* | - | *6* |
| *சிற்றரசர்* | - | *5* |
| *தனவைசியர்* | - | *5* |
| *வேளாளர்* | - | *13* |
| *குயவர், வேடர், பாணர், பறையர், செக்கார், ஈழவர், வண்ணார், செம்படவர், சாலியர் (ஆடைநெய்பவர்)* | - | *9* |
| *இடையர்கள்* | - | *2* |
| *மரபு தெரியாதவர்கள்* | - | *13* |
| | | *71* |

*என எழுபத்தியொரு அடியார்களின் மரபு குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்சுட்டிய மரபில் தோன்றியவர்கள் யார் யார் என்பதும் விளக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*நாயன்மார்கள் அறுபத்துமூவர், தொகையடியார் ஒன்பது பேர், பரவையார், சங்கிலியார் இருவர் என எழுபத்து நான்கு அடியார்களின் வரலாற்றினை இந்நூல் விரிவாகக் குறிப்பிடுகின்றது.*

*மேலும் குரு அருளால் வீடுபேறு பெற்றவர்கள் (11), இலிங்க வழிபாட்டால் வீடுபேறு பெற்றவர்கள் (30), அடியார்க்கு அடியாராய் விளங்கி*

*வீடுபேறு அடைந்தவர்கள் (19), இயல், இசைத்தமிழால் வழிபட்டு முக்தி அடைந்தவர்கள், இல்லறம், துறவறம், பிரம்மசரியம் கடைப்பிடித்து வீடுபேறு அடைந்தவர்கள் என அடியார்கள் வீடுபேறு அடைந்த நிலையை விளக்கமாகப் பாடுகின்றது.*

*எந்தெந்த மாதங்களில் எந்த அடியார்க்கு பூசைகள் நடைபெறும் என்னும் விபரங்களையும் திருத்தொண்டர் சதகம் எடுத்துரைக்கின்றது. அடியார் திருக்கூட்டத்தைக் குறிப்பிடுகையில்,*

| | | | |
|---|---|---|---|
| *காஞ்சி* | - | *நாற்பத்தெண்ணாயிரவர்* | *(48,000)* |
| *காரோணம்* | - | *நாலாயிரவர் அடியார்* | *(4,000)* |
| *தில்லை* | - | *மூவாயிரவர் அந்தணர்* | *(3,000)* |
| *ஆரூர்* | - | *அறுநூற்றொருவர்* | *(601)* |
| *பெருந்துறை* | - | *முந்நூற்றொருவர்* | *(301)* |
| *வீழிமிழலை* | - | *நூற்றொருவர்* | *(101)* |
| *இரத்தினகிரி* | - | *பன்னிருவர்* | *(12)* |

*ஆகிய அடியார்கள் வணங்க சிவபெருமான் அருள்செய்யும் தன்மை குறிப்பிடப் பெறுகின்றது.*

*நைமிசாரணியம் வந்த முனிவர்கள் கூறியதாக வாட்போக்கியன் வரலாறு கூறப்பட்டுள்ளது. இது மாணிக்க மலை, இரத்தினகிரி எனவும் வழங்கப்படும்.*

*இவ்வாறு அடியார்களின் வரலாறுகளைத் திருத்தொண்டர் சதகம் விரிவாகக் கூறுகின்றது.*

## 4.2. நீதி சதகங்கள்

### அறம் - விளக்கம்

*அறம் என்பதற்கு "தருமம், தீப்பயனுண்டாக்கும் சொல், இயமன், நீதி"[82] எனப் பலப்பொருட்கள் கூறப்படுகின்றன. அறம், நீதி என்ற இரு சொற்களுக்கிடையே சிறு வேறுபாடு உள்ளது. அதாவது,*

> மன்னராட்சிக் காலத்தில் இது செல்வாக்குப் பெற்றது. குற்றமுண்டாகிற வழி அதில் நடுநின்று எது தவறு எது சரி என ஆராய்ந்து கூறுவதை நீதி வழங்கல் எனக் கூறினர். நீதி என்பதற்கு வழிமுறைகளைத் தெரிவிப்பது என்று பொருள்[83]

*என்று 'நீதி' என்பதற்கு அரங்க.சுப்பையா விளக்கம் தருகின்றார்.*

அறம் என்பது பிறர்க்குச் செய்யப்படும் நன்மையைக் குறிக்கும். இலக்கிய வரலாற்றில் நீதிகூறும் சதகங்கள் பெருமளவில் காணப்படுகின்றன. 'உலகியல் நீதிகள் பல கூறுவனவாக அற இலக்கியங்கள் அமைகின்றன. இவை அறிவுரைகளாகவும், அறிவுறுத்தும் நோக்குடனும் அமைந்துள்ளன. மேலும்,

> அற இலக்கியங்களை அவற்றின் தன்மை நோக்கி, மூவகையாக, மூதுரை, பழமொழி, நீதி எனப் பகுத்துக் காட்டுவர். முறையே முதுமொழிக் காஞ்சி, பழமொழி நானூறு, திருக்குறள் என்பன சான்றாகின்றன.[84]

அறம் கூறும் சதகங்கள் இடைக்காலத்தில் எழுந்தவை என்பதும் பழமொழிகளைக் கூறும் தண்டலையார் சதகம் அறிவுறுத்தல் நோக்கில் அமைந்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

**நீதி சதகங்கள்**

இறைவனை முன்னிலைப்படுத்தி நீதியைக் கூறும் சதகங்களாக அறப்பளீசுர சதகம், குமரேச சதகம், கயிலாசநாதர் சதகம், வடிவேல் சதகம், அண்ணாமலைச் சதகம் மற்றும் தண்டலையார் சதகம், செயங்கொண்டார் சதகம் போன்றவை விளங்குகின்றன.

நீதி சதகங்கள் நால்வகை வருணத்தார் இயல்புகள், நற்குணம் உடையவர்கள், நல்லோர் நட்பு, தீக்குணம் உடையவர்கள், வறுமை, ஈகை, விருந்தோம்பல், பெண்கள், மருத்துவம், வானியல், சகுனங்கள், வாஸ்து, கல்வி, நிலையாமை, பயன் அற்றவை, சிறப்புடையவை, சமய நெறிகளும் வழிபாட்டு முறைகளும் உள்ளிட்ட பல்வேறு கருத்துக்களை உள்ளடக்கமாகக் கொண்டு அமைந்துள்ளன.

### 4.2.1. நால்வகை வருணத்தார் இயல்புகள்

அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்னும் நால்வகை வருணத்தாரின் இயல்புகள் கூறப்பட்டுள்ளன.

**அந்தணர்**

> நூலே கரகம் முக்கோல் மணையே
> ஆயுங் காலை அந்தணர்க் குரிய[85]

என்று தொல்காப்பியம் அந்தணர்க்குரிய இயல்புகளைக் குறிப்பிடுகின்றது.

*அந்தணர்களுக்குரிய தொழில்கள் எவை என்பதை சதக இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.*

1. *வேதம் ஓதுதல்*
2. *வேதத்தை ஓதுவித்தல்*
3. *வேள்வி செய்தல்*
4. *வேள்விகளைச் செய்வித்தல்*
5. *தானம் செய்தல்*
6. *தானம் செய்தலை ஏற்றுக் கொள்ளுதல்*

*இவ்வாறும் அந்தணர்க்குரியதாக அண்ணாமலைச் சதகம் குறிப்பிடுகின்றது.*

*இத்தொழில்கள் மட்டுமன்றி விதிகளில் கூறியுள்ளபடி ஆசாரத்தைக் கடைப்பிடித்தல், அதிகாலை நீராடி மூன்று காலங்களிலும் காயத்ரி மந்திரம் செபித்தல், அதிதி பூசை மற்றும் யாகங்கள், மந்திரங்களை முறையாகச் செய்தல் போன்ற கடமைகள் கூறப்பட்டுள்ளன. இவை தவறாது கடைபிடிப்பவர்களின் பெருமையை மழைக்கு நிகராக வைத்துப் போற்றுகிறது அறப்பளீசுர சதகம். இதனை,*

ஓராறு தொழிலையும் கைவிடார்; சௌசவிதி

ஒன்றுதப் பாது புரிவார்;

உதயாதி யிற்சென்று நீர்படிகு வார்; காலம்

ஒருமூன்றி னுக்கும் மறவா

பெய்யெனப் பெய்யும் முகில் அவர்மகி மையெவர்களும்

பேசுதற் கரித ரிதுகாண்?[86]

*எனும் பாடல் அறிவுறுத்துகின்றது.*

*அந்தணர்கள் தம்முடைய கடமை தவறாது செயல்படின் தவறாது மழை பொழிந்து நாடு நலம் பெறும் என்று குமரேச சதகம் எடுத்துரைக்கின்றது.*

*வேதநெறி வழுவாது அந்தணர்கள் செயல்படுவதை கயிலாசநாதர் சதகம் குறிப்பிடுகின்றது.*

*அந்தணர்களைப் பற்றிக் குறிப்பிடும் சதக இலக்கியங்கள் அனைத்திலும் குறிப்பாக, நால்வகைப் பாகுபாட்டில் அந்தணர்களை முதலில் விளக்கியிருக்கும் தன்மை கொண்டு அவர்களின் செல்வாக்கை அறிந்து கொள்ளமுடிகிறது.*

**அரசர்**

ஒரு நாடு சிறப்படைய வேண்டுமெனின் அந்நாட்டை ஆளும் மன்னன் சிறப்புடையவனாய் விளங்க வேண்டும். இதை அடியொற்றியே மன்னர்கள் நீதி தவறி நடக்கும் பொழுது புலவர்கள் அவர்களை நெறிப்படுத்தினார்கள். இதன் காரணம் கொண்டே சதக இலக்கியங்களும் மன்னனின் கடமைகளைச் சுட்டிக் காட்டுகின்றன.

படையுங் கொடியுங் குடையும் முரசும்
நடைநவில் புரவியுங் களிறுந் தேரும்
தாரும் முடியும் நேர்வன பிறவும்
தெரிவுகொள் செங்கோல் அரசர்க்குரிய.[87]

நாற்படைகள், கொடி, குடை, முரசு, புரவி, களிறு, யானை முதலியவை அரசர்க்குரிய என்று தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது. அதேபோன்று,

படைகுடி கூழ்அமைச்சு நட்புஅரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு[88]

என்கிறது திருக்குறள்.

சதக இலக்கியங்கள் ஒரு அரசனுக்குரிய கடமைகளைத் தெளிவாகக் குறிப்பிடுகின்றன.

- மலைகள், காடுகள், கோட்டை மதில்கள், நீர்நிலைகள் அரணாக விளங்குதல் வேண்டும்.
- அறிவுடைய மந்திரி, போர்த்தளபதி, குடிமக்கட்படை உடையவராய் இருத்தல் வேண்டும்.
- நால்வகைப் படைகளைக் கொண்டிருக்க வேண்டும்.
- காட்சிக்கு எளியனாய் விளங்கல்.
- ஆறில் ஒரு பங்கு வரி வசூலித்தல்.
- கலகக்காரர்கள், கள்வர்கள், மிருகங்கள் ஆகியவற்றிடம் இருந்து மக்களைப் பாதுகாத்தல்.

இத்தன்மையில் ஒரு அரசனானவன் செங்கோல் ஆட்சி நடத்த வேண்டும் என அண்ணாமலைச் சதகம் அறிவுறுத்துகிறது. இதனை,

மலையரண் காடரண் மதிலரணும் நீரரண்
மருவும்இந் நான்கு அரணமும்

மந்திரிகள் தளகர்த்தர் குடிபடையும் உடையவராய்

வலியசது ரங்கசேனை

கண்டித்து மணநூல் அறிந்துசெங் கோலின் முறை

காத்திடுதல் அரசாட்சிகாண்[89]

*என்னும் அண்ணாமலைச் சதகப் பாடல் வழி அறியமுடிகின்றது.*

குடிபடையில் அபிமானம் மந்திரா லோசனை

குறிப்பறிதல், சத்யவசனம்

கொடைநித்தம் அவரவர்க் கேற்றமரி யாதை பொறை

கோடாத சதுருபாயம்[90]

*என்னும் குமரேச சதகப் பாடல், அரசனானவன், நுட்பமான அறிவு, கொடைத் திறன், தகுதிக்கேற்ற மரியாதை அளித்தல் போன்ற நற்பண்புகள் உடையவனாய் இருத்தல் வேண்டும் என்பதை அறிவுறுத்துகின்றது.*

*அறப்பளீசுர சதகம், கயிலாசநாதர் சதகம் போன்றவையும் அரசனுடைய இயல்புகளை எடுத்துரைக்கின்றன.*

**வணிகர் இயல்பு**

வைசிகன் பெறுமே வாணிக வாழ்க்கை[91]

மெய்தெரி வகையின் எண்வகை உணவின்

செய்தியும் வரையார் அப்பா லான[92]-

*வாணிபம் செய்யும் வாழ்க்கை வைசிகருக்கு உரியது என்றும், உழவுத் தொழிலும் இவர்களுக்கு உரித்து என்றும் தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது.*

கொண்டபடி போலும்விலை பேசிலா பம்சிறிது

கூடிவர நயமுரைப்பார்

கொள்ளுமொரு முதலுக்கு மோசம்வ ராதபடி

குறுகவே செலவுசெய்வார்[93]

*என்னும் குமரேச சதகப் பாடல் முதலுக்குக் கேடு வராதபடி சிறிது லாபம் வைத்துப் பொருளை விற்றல், சிக்கனமாக செலவு செய்தல், நல்ல வழியில் அதிக பொருளை செலவு செய்தல், கணக்குகளைச் சரியாகப் போடல், நாணயமுடன் விளங்குதல் ஆகியவற்றை வணிகர்களின் இயல்புகளாகக் குறிப்பிடுகின்றன.*

*கடல் கடந்து நீண்ட தொலைவு பயணம் செய்து பெரும்பொருள் ஈட்டுபவர்கள் வணிகர்கள் என்பதை,*

நீள்கடல் கடந்திடுவர் மலையாள மும்போவர்

நெடிது தூரம் திரிந்த

நினைவுதடு மாறார்கள் சவியார்கள் பொருள்தேடி

நீணிலத் தரசு புரியும்[94]

*என்னும் அறப்பளீசுர சதகப் பாடல் எடுத்துரைக்கின்றது. மேலும், இவ்வாறு ஈட்டிய பொருளைக் கொண்டு தருமகாரியங்களை ஆற்றியும் பிறர்க்கு உதவி செய்தும் வாழக் கூடியவர்கள் வணிகர்கள் என்பதும் குறிப்பிடப்படுகின்றது.*

*முதலைப் பாதுகாத்தல், 12% வட்டி வாங்குதல், நேர்மையற்றவர்களுக்கு கடன் கொடாமை, நாணயம் இல்லாதவர்களைப் புறக்கணித்தல் போன்ற இயல்புடையவர்கள் வணிகர்கள் என்கிறது கயிலாசநாதர் சதகம்.*

**வேளாளர் இயல்பு**

வேளாண் மாந்தர்க் குழுதூ ணல்லது

இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி[95]

*என்னும் தொல்காப்பிய நூற்பா உழவுத்தொழில் புரிபவர்கள் வேளாளர்கள் என்பதைச் சுட்டுகிறது.*

*"நீதி, அரசர், வலிமை, வீரர்களின் மாட்சி, வாணிப வளர்ச்சி, பசி போக்குதல், அந்தணர் பெருமை, நற்செயல்கள், ஜபம், தவம், பூஜை இவை தவறாமல் செய்வது, குரு உபதேசம், முனிவர் வாழ்வு இவையாவும் வேளாளரின் உழவின் மேன்மையால் நிகழ்வன" என்பதை,*

ஆட்சிதரு நீதியுங் கொற்றவர்கள் புஜபலமு

மதிவீர சூரர் வலியு

மாயிரவர் வாணிப மியற்றுதலு முலகெலாம்

அன்னதா தாவென் பதுந்[96]

*என்னும் கயிலாசநாதர் சதகப் பாடல் எடுத்துரைக்கின்றது.*

*பருவம் தவறாது மழை பொழிவதற்கும், முனிவர்கள் தவம் செய்வதற்கும், அரசன் முறையான ஆட்சி நடத்துவதற்கும், வணிகர்களின் வியாபாரம் சிறக்கவும்*

வேளாளர்களின் உழவுத்தொழிலே காரணம் என்று குமரேச சதகம் குறிப்பிடுகின்றது.

நல்லதே வாலயம் பூசனை நடப்பதும்;
நாள்தோறும் மழைபொழிவதும்
நாடிய தபோதனர்கள் மாதவம் புரிவதும்
. . . . . . . . . .
வல்லமைகள் சகலமும் வேளாளர் மேழியின்
வாழ்வினால் விளைவ அன்றோ?[97]

என்பது குமரேச சதகம் தரும் விளக்கம் ஆகும். இவ்வேளாளர்கள் பற்றிய விரிவான விளக்கம் மண்டல சதகங்களில் வேளாளர்கள் பகுதியில் கொடுக்கப் பட்டுள்ளது.

அண்ணாமலைச் சதகம் (29) நால்வகை வருணத்தாரின் தொழில்களை ஒரே பாடலில் எடுத்துரைக்கின்றது.

அந்தணர் : வேதம் படித்தல், வேதம் ஓதுவித்தல், வேள்வி செய்தல், வேள்வி செய்வித்தல், பொருளீட்டல், தானம் செய்தல்.

அரசர் : பிறர்க்கு ஓதுதல், வேள்வி செய்தல், தானதருமம் செய்தல், பகைவரிடமிருந்து உலகைக் காத்தல், போர் செய்தல், போர்ப் பயிற்சி அளித்தல்.

வணிகர் : ஓதுதல், வேள்வி செய்தல், பொருளீட்டல், தானதருமம் செய்தல், பசுக்களைக் காத்தல், ஏர் உழுதல்.

வேளாளர் : பழுது பார்த்தல், ஏர் உழுது பயிர்செய்தல், பசுக்களைப் பராமரித்தல், நெசவுத் தொழில் செய்தல், பொருளீட்டுதல், தான தருமங்கள் செய்தல்.

இவ்வறுவகைத் தொழில்களிலும் ஒரு பொதுத் தன்மை காணப்படுகின்றது. அவை பொருளீட்டல், அதன் மூலம் தான தருமங்கள் செய்தல் ஆகியவை நால்வகை வருணத்தார்களுக்கும் உரிய பொதுத் தொழில்களாகக் கூறப்பட்டுள்ளன.

நால்வகை வருணத்தாரின் இயல்புகள் மட்டுமன்றி குரு, மாணாக்கன், மருத்துவர், கவிஞர், அமைச்சர், கருமி, நகரம் ஆகியோரின் இயல்புகளை அறப்பளீசுர சதகம் மற்றும் கயிலாசநாதர் சதகம் போன்றவை குறிப்பிடுகின்றன.

**குரு**

*வேதாந்த சித்தாந்த சாத்திரங்களை அறிந்தவர்*

*ஆசார சீலம் உடையவர்*

*ஆறுசமயத் தத்துவங்களில் தேர்ந்தவர்*

*சமயக் கோட்பாடுகள், நீதி உணர்ந்தவர்*

*பற்று அற்றவனாக இருத்தல்*

*ஞானத்தைப் போதித்தல்*

*என குருவின் இயல்புகளைக் கயிலாசநாதர் சதகம் எடுத்துரைக்கின்றது.*

**மாணாக்கன்**

வைதாலும் ஓர்கொடுமை செய்தாலு மோசீறி
மறாது இகழ்ந்தா லுமோ
மனதுசற் றாகிலுங் கோணாது நாணாது
மாதாபி தாஎனக்குப்
பொய்யாமல் நீயென்று கனிவொடும் பணிவிடை
புரிந்து பொருள் உடல்ஆவியும்
புனித வுன்றனதுஎனத் தத்தம்செய்து இரவுபகல்
போற்றி மல ரடியில் வீழ்ந்து
மெய்யாக வேபரவி உபதேச மதுபெற
விரும்புவோர்ச ற்சீ டராம்[98]

*என்னும் அறப்பளீசுர சதகப்பாடல் ஒரு மாணவன் எப்படி இருக்க வேண்டும் என்பதை அறிவுறுத்துகின்றது.*

*மேலும் மருத்துவர், கவிஞர், அமைச்சர் ஆகியோரின் இயல்புகளை எடுத்துரைப்பதின் மூலம் சமூகத்திற்கு சிறந்த வழிகாட்டியாக சதக இலக்கியங்கள் விளங்குவதை அறியமுடிகின்றது.*

## 4.2.2. நல்லோர் குணங்கள்

*அறப்பளீசுர சதகம் மற்றும் குமரேச சதகம் ஆகிய இரு சதக நூல்களும் குறிப்பிடும் சான்றோரின் இயல்புகள், பெருமை, குணம் போன்ற பண்புகள் இங்கு விரித்துரைக்கப்படுகின்றன.*

**சான்றோரின் இயல்புகள்**

செய்ந்நன்றி மறவாத பேர்களும் ஒருவர்செய்
　　தீமையை மறந்த பேரும்
திரவியம் தரவரினும் ஒருவர்மனை யாட்டிமேல்
　　சித்தம்வை யாத பேரும்
கைகண்டு எடுத்தபொருள் கொண்டுபோய்ப் பொருளாளர்
　　கையிற்கொ டுத்த பேரும்
காசினியில் ஒருவர்செய் தருமம்கெ டாதபடி
　　காத்தருள்செய் கின்ற பேரும்
. . . . . . . . . . . . . . .
புவிமீது தலைபோகும் என்னினும் கனவிலும்
　　பொய்மையுரை யாத பேரும்
ஐயஇங் கிவரெலாம் சற்புருடர்[99]

*செய்ந்நன்றி மறவாமை, பிறர் தீமையை மறத்தல், பிறன்மனை நயவாமை, மற்றவரின் தருமத்தைக் காத்தல், பொய் பேசாதிருத்தல் போன்ற நற்குணங்கள் உடையவர்களே சான்றோர்கள் என்பதை அறப்பளீசுர சதகப் பாடல் உணர்த்துகின்றது.*

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று[100]

*என்னும் வள்ளுவரின் வாய்மொழி இங்கு குறிப்பிடத்தக்கது. மேலும்,*

அடைக்கலம் எனத்தேடி வருவோர் தமைக்காக்கும்
　　அவனே மகாபுரு டனாம்[101]

*என்று சான்றோரின் இயல்பு சுட்டப்பெறுகின்றது.*

*நண்பன் துன்புற்ற காலத்தில் தாமும் துன்புற்று வருந்துபவரே நற்குணம் படைத்த சான்றோர் என்பதை,*

மாமதியில் முயலான ததுதேய வுந்தேய்ந்து
　　வளருமப் போதுவளரும்
வாவிதனில் ஆம்பல்கொட் டிகளதனில்
　　வற்றிடும் பெருகிலுயரும் நீர்வற்றில்
பூமருவு புதல்பூடு கோடையில் தீய்ந்திடும்
　　பொங்கா லந்தழைக்கும்
. . . . . . . . . . . . . . . . .

சேர்ந்தோர்க் கிடுக்கணது வந்தாலும் நல்லோர்
சிநேகம்அப் படிஆகுமே[102]

*என்னும் குமரேச சதகப் பாடல் குறிப்பிடுகின்றது.*

*இப்பாடல் குளத்தில் நீர் நிறைந்திருக்கும் போது அல்லியும் தாமரையும் செழித்து வளரும். நீர் வற்றி காய்ந்து போனால் அதுவும் காய்ந்து போகும். இத்தகைய தன்மையுடையவர்களே சான்றோர்கள் என்பதை எடுத்துரைக்கின்றது.*

*ஔவையாரின் மூதுரைப் பாடல் இக்கருத்தை வெளிப்படுத்தி நிற்கும்.*

அற்ற குளத்தின் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வா ருறவல்லர் - அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஓட்டி யுறுவார் உறவு.[103]

**சான்றோரை சான்றோரே அறிவர்**

நற்றாமரைக் கயத்தில்நல் லன்னம் சேர்ந்தாற் போல்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர்

*என்பது ஔவையின் மூதுரை.*

*மணமுடைய மாலையின் சிறப்பை அதனை அணிபவர்களே அறிவார்கள்; குழந்தையின் சிறப்பை பெற்றோரே அறிவர்; கணவனின் சிறப்பை மனைவியே அறிவாள்; கிளியின் சிறப்பை வளர்த்தவனே அறிவான்; அதுபோல சான்றோரின் குணத்தை சான்றோரே அறிவர் என்பதை பின்வரும் குமரேச சதகப்பாடல் வழி அறியலாம்.*

மணமாலை அருமையைப் புனைபவர்க ளேஅறிவர்
மட்டிக் குரங்கறியுமோ
மக்களுடை அருமையைப் பெற்றவர்க ளேஅறிவர்
மலடிதான் அறிவதுண்டோ
கணவருடை அருமையைக் கற்பான மாதறிவள்
கணிகையா னவள் அறிவளோ
கருதும் ‘ஒருசந்தி’யின் பாண்டம்என் பதைவரும்
களவான நாயறியுமோ

குணமான கிளியருமை தனைவளர்த் தவரறிவர்

கொடியபூ னையும் அறியுமோ

குலவுபெரி யோரருமை நல்லோர்க ளேயறிவர்

கொடுமூடர் தாம் அறிவரோ[104]

*என்று பல சான்றுகளை எடுத்துக்காட்டி சான்றோரைச் சிறப்பிக்கின்றது இப்பாடல்.*

*கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே சங்கு சுட்டாலும் வெண்மை தரும் என்பர். சான்றோரின் பெருமையை அறிவற்றவர்களால் மறைக்க இயலாது என்பதை,*

தறிபட்ட சந்தனக் கட்டைபழு தாயினும்

சார்மணம் பழுதா குமோ

நிறைபட்ட கதிர்மணி அழுக்கடைந் தாலுமதின்

நீள்குணம் மழுங்கி விடுமோ

நெருப்பிடை உருக்கினும் அடுக்கினும் தங்கத்தின்

நிறையுமாற் ருக்கு றையுமோ

கற்றபெரி யோர்மகிமை அற்பர் அறிகிலரேனும்

காசினி தனிற்போ குமோ[105]

*என்னும் பாடல் உணர்த்துகின்றது.*

## இறைவனுக்கு ஒப்பாவார்

*நற்குணம் வாய்ந்த சான்றோர்களை இறைவனுக்கு ஒப்பாகும் தன்மையுடையவர்கள் என அறப்பளீசுர சதகம் குறிப்பிடுகின்றது.*

தன்மட்டில் இரவாது சீவனம் செய்பவன்

சாமர்த்தி யம்உளபு ருடனாம்

சந்தகம் பதின்மரைக் காப்பாற்று வோன்மிக்க

தரணிபுகழ் தருதேவனாம்

பொன்மட்டி லாமல் ஈந்துஒருநூறு பேரைப்

புரப்பவன் பொருவில் இந்த்ரன்

புவிமீதில் ஆயிரம் பேர்தமைக் காப்பாற்று

புண்யவா னேபிரமன் ஆம்

நன்மைதரு பதினாயி ரம்பேர் தமைக்காத்து

ரட்சிப்ப வன்செங் கண்மால்

நாளும்இவன் மேல்அதிக மாகவெகு பேர்க்குதவு

நரனே மகாதேவ னாம்[106]

*என்னும் இப்பாடல், பிறரிடம் கையேந்தாது தானே பொருளீட்டி வாழ்பவனை திறமையுடைய ஆண்மகன் எனவும், பதின்மரைக் காப்பதற்காக உழைப்பவன் தேவருக்கு நிகராவான் எனவும், அனைவருக்கும் கேட்பனவற்றை வழங்கி நூறு பேரை பாதுகாப்பவன் இந்திரனுக்கு ஒப்பாவான் எனவும், ஆயிரம் பேரைக் காப்பவன் பிரமனாகவும், பதினாயிரம் பேரைக் காப்பவன் நாராயணன் எனவும் நாள்தோறும் எண்ணற்ற பேர்களுக்கு உதவுபவன் மகாதேவன் எனவும் வழங்கப்படுவதை எடுத்துரைக்கின்றது.*

### 4.2.3. தீயோர் செயல்கள்

*சதக இலக்கியங்கள் நன்னெறியில் நற்குணங்களோடு வாழ வேண்டும் என்று எடுத்துரைத்தன. ஆயினும் தீச்செயல்கள் எவை என்பதைச் சுட்டிக் காட்டி அவற்றை விலக்க வேண்டும் என்பதை அறிவுறுத்துகின்றன.*

வஞ்சகர் தமைக்கூடி மருவொணாது அன்பிலார்

வாசலிற் சொல்லொ ணாது

வாதெவ ரிடத்திலும் புரியொணாது அறிவிலா

மடையர்முன் நிற் கொணாது

கொஞ்சமே னுந்தீது செய்யொணாது[107]

*என்னும் அறப்பளீசுர சதகப்பாடல், துன்பத்தைத் தரும் தீயவழியிலிருந்து நீங்குவதற்கான வழிமுறைகளைக் குறிப்பிடுகின்றது. அதாவது வஞ்சகருடன் பழகக் கூடாது, அன்பில்லாதவர்களிடம் பேசக்கூடாது, எல்லாரிடமும் விவாதிக்கக் கூடாது, பிறர்க்கு தீமை செய்யக் கூடாது, பெண்களை ஏளனஞ் செய்யக் கூடாது, புறங்கூறக் கூடாது. அரசன் முன்னால் அச்சம் இன்றிப் பேசக் கூடாது எனும் இச்செயல்களைச் செய்யாது விடுத்தால் நமக்குத் துன்பம் இல்லை என்பது கூறப்பட்டுள்ளது.*

*தீய வழியில் நடப்பவர்கள் இவ்வுலகில் உயிருடன் இருப்பினும் அவர்கள் இறந்தவர்களேயாவர். கீழோர் (தீயவர்) எவ்வளவு அறிவுரைகள் கூறினாலும் திருந்தமாட்டார்கள் என்பதை,*

கட்டியெரு இட்டுச் செழுந்தேனை வார்க்கினும்

காஞ்சிபுரம் கைப்புவிடுமோ

கழுதையைக் கட்டிவைத் தோமம் வளர்க்கினும்
கதிபெறும் குதிரையாமோ
மட்டிகட் காயிரம் புத்திசொன் னாலும்அதில்
மார்க்கமரி யாதைவருமோ[108]

என்னும் குமரேச சதகப்பாடல் வலியுறுத்துகின்றது.

ஆணவம் என்னும் தீக்குணம் அழிவைத் தரும் என்பதை, சூரபதுமன், இராவணன், இரணியன், வாலி, துரியோதனன், மதுகைடவர், மகாபலி, சோமுகாசுரன், கீசகன், திரிபுர அசுரர்கள், தக்கன் ஆகியோர் இறைவனிடம் வரம்பெற்று பெருமையுடன் விளங்கிய போதும் ஆணவம் என்னும் தீக்குணத்தால் அழிவுற்றனர் என்பதை குமரேச சதகம் (47) எடுத்துக் காட்டுகின்றது.

தீயவர்களுக்கு எவ்வளவு எடுத்துரைக்கினும் அவர்கள் குணம் மாறாது என்பதையும் தீச்செயல் புரிவதால் ஏற்படும் பலன்களையும் கயிலாசநாதர் சதகம் குறிப்பிடுகின்றது.

வேதமந் திரமோதித் தேன்பால் புகட்டினும்
வேம்பது கரும்பா குமோ
வெண்மைதரு சீனிச் சொரிந்துபயிர் செய்யினும்
வெள்ளுள்ளி குணம் மாறுமோ[109]

வடிவேல் சதகமும் தீயவர்களைத் திருத்த இயலாது என்பதைக் கூறுகின்றது. பால், தயிர், வெண்ணெய், பெருங்காயம், உப்பு முதலான துகள் சேர்த்து நன்றாகச் சமைத்தாலும் பேய்ச் சுரைக்காய் கசப்பு நீங்காது. சர்க்கரையும் முக்கனிகளும் இட்டு தேன்விட்டு நாற்று நட்டு வளர்த்தாலும் வேம்பு தித்திக்காது. பாம்புக்கு பால் வார்த்தாலும் அதன் விஷம் நீங்காது. நீதி, நேர்மை, ஞான நெறிகளை விதவிதமாகக் கூறினாலும் மூர்க்கர் குணம் மாறாது என்னும் வடிவேல் சதகப் பாடல் மூலம் அறியமுடிகின்றது. மனிதன் தீச்செயல் மற்றும் தீயவர் பக்கம் சாராமல் நற்செயல்கள் செய்ய வேண்டும் எனச் சதக இலக்கியங்கள் அறிவுறுத்துகின்றன.

### 4.2.4. இல்லறம்

இல்லறம் அல்லது நல்லறம் அன்று[110]

என்பார் ஔவையார். ஒருவன் இல்லறத்தில் இருந்து கொண்டு தம் கடமைகளை நிறைவேற்றுவதே சிறந்த அறமாகக் கொள்ளப்படுகிறது.

அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை அதுவும்

பிறன் பழிப்பதில் லாயின் நன்று[111]

*என்னும் வள்ளுவன் வாய்மொழிக்கு இணங்க, இல்லறத்தான் புரிய வேண்டிய அறச்செயல்களை அறப்பளீசுர சதகம் எடுத்துரைக்கின்றது.*

தந்தைதாய் சற்குருவை இட்டதெய் வங்களைச்

சன்மார்க்கம் உளமனை வியைத்

தவறாத சுற்றத்தை ஏவாத மக்களைத்

தனைநம்பி வருவோர் களைச்

சிந்தை மகிழ் வெய்தவே பணிவிடைசெய் வோர்களைத்

தென்புலத் தோர் வறிஞரைத்

தீதிலா அதிதியைப் பரிவுடைய துணைவரைத்

தேனுவைப் பூசுரர் தமைச்

சந்ததம் செய்கடனை யொன்றும் இவை பிழையாது

தான்புரிந் திடல்இல் லறம்.[112]

*தந்தை, தாய், குரு, தெய்வம், மனைவி, சுற்றம், மக்கள், தன்னை நம்பி வந்தார், பணிவிடை செய்பவர், தென்புலத்தோர், வறிஞர், அதிதி, அன்புடைய சகோதரன் இவர்களைப் பாதுகாத்தல் ஒரு இல்லறத்தானுடைய கடமை என்பதை வலியுறுத்துகின்றது. இப்பாடல்,*

மாமிமா மற்குஇதம் செய்பவளு மாய் வாசல்

வருவிருந் தோம்பு பவளாய்

இணையில்மகிழ் நன்சொல்வழி நிற்பவளு மாய்வந்தி

யென்பெய ரிலாத வளுமா . . .[113]

*மனைவியானவள் மாமியார், மாமனாருக்கு சேவை செய்பவளாகவும் கணவன் சொற்படி நடப்பவளாகவும் விளங்குதல் வேண்டும் என்கிறது. மேலும் நற்புதல்வன் கடமைகளையும் எடுத்துரைக்கின்றது.*

*புதல்வனின் கடமைகள் கூறப்பட்டிருப்பினும், அவன் அறிவுடையவனாய் இருத்தல் வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகின்றது. இதனை,*

தாரகைகள் ஒருகோடி வானத் திருக்கினும்

சந்திரற் கீடாகுமோ

கொட்டிமலர் வாவியல் பல கூடி னாலும்மொரு

கோகனக மலராகுமோ

பலனிலாப் பிள்ளைகள் அநேகம் பிறந்துவிற்

பனன்ஒருவ னுக் குநிகரோ[114]

*என்னும் குமரேச சதகப் பாடல் எடுத்துரைக்கின்றது (பா.53).*

*சௌபரி முனிவர் ஒருமுறை யமனை ஆற்றில் தன் குஞ்சுகளுடன் உலாவிய மீனைக் கண்டு இல்லறத்தில் விருப்பம் கொண்டு துறவறத்தை விட்டு விலகி திருவள்ளுவரைப் போலத் தன் மனைவியுடன் அறவாழ்வாகிய இல்லற வாழ்க்கை நடத்தினர். அதனால் இல்லறமே சிறந்ததாகும் என்பதை,*

சொல்லறமா தவம்புரியும் சௌபரியும்
துறவறத்தைத் துறந்து மீண்டான்
நல்லறமாம் வள்ளுவர்போற் குடிவாழ்க்கை
மனைவியுடன் நடத்தி நின்றான்!
இல்லறமே பெரிதாகும்! துறவறமும்
பழிப்பின்றேல் எழில தாமே![115]

*எனும் தண்டலையார் சதகப் பாடலால் அறிந்து கொள்ளலாம்.*

### 4.2.5. பெண்கள்

*சதக இலக்கியங்கள் பெண்களின் இயல்புகள், கற்புடையவர்களாய் விளங்கும் தன்மை, பெண்ணின் இலக்கணம், வகைகள் என பெண்களின் சிறப்புக்களை எடுத்துரைக்கின்றன.*

**இயல்புகள்**

*பெண் கற்புடையவளாக விளங்கும் தன்மை, பெண்ணின் மனதை அறிய இயலாத் தன்மை, பூப்படையும் தன்மை என அவள் இயல்புகள் கூறப்பட்டுள்ளன.*

*கற்பு*

*போரில் தோல்வியடைய நேர்ந்தாலும் வீரன் பின்வாங்க மாட்டான். புலி சாகும்வரைத் தன் தோலைத் தராது. சான்றோர்கள் உடல் அழிந்து போவதானாலும் சொன்ன சொல் தவறமாட்டார்கள் கவரிமான் உயிர் வாழும் வரை தன் உடலில் மயிரை இழக்காது. அதுபோல எவ்வளவு துன்பம் வரினும் ஒரு பெண் தன் கற்பினை இழக்க மாட்டாள். இதனை,*

கனபாரம் ஏறினும் பிளந்திடுவ தன்றியே
கற்றூண் வளைந்திடாது
வளம்ஏறு கவரிமான் உயிர்போகும் அளவும்தன்
மயிரின்ஒன் றும்கொடாது

வாராத ஆபத்து வருகினும் கற்புடைய

மாதுநிறை தவறி நடவாள்[116]

*என்னும் குமரேச சதகப்பாடல் பெண்களின் கற்புத்தன்மையை எடுத்துரைக்கின்றது.*

தற்காத்து தற்கொண்டான் பேணித் தகைசான்ற

சொற்காத்துச் சோர்விலாற் பெண்.[117]

*ஒரு பெண் தன்னையும் காத்து, தன் கணவன் மற்றும் குடும்பத்தினரையும் காத்து சோர்வில்லாதவளாக விளங்கும் தன்மையை வள்ளுவர் குறிப்பிடுகின்றார்.*

*மேலும், பரிவோடு அன்னமூட்டுவதில் தாயைப் போலவும், இன்னதுக்கு இன்னபடி என்று புத்தி சொல்லுகிற மந்திரி போலவும் பொறுமையில் பூமியாகவும் கோபமில்லாதவளாகவும் விளங்குபவளே கற்புடைய பெண் என்று வடிவேல் சதகம் குறிப்பிடுகின்றது.*

அன்னையவள் போலவே பசிவேளை தானறிந்து

அமுதூட்டு கின்றபரிவும்

அழகினில் செந்தாம ரைத்திருவை யொப்பதுவும்

அடுமைக்கு வெள்ளாட்டி போல

இன்னதுக் கின்னபடி என்றுமே புத்திசொல்

இனிய மந்திரி போலவும்[118]

*என்னும் வடிவேல் சதகப்பாடல் பெண்ணின் இயல்பை விளக்குகின்றது.*

**பெண்கள் மனதை அறியமுடியாது**

*கடல்நீரின் ஆழத்தினை அளந்தாலும் அளக்கலாம், தராசில் வைத்து மதயானையை நிறுக்கலாம். பெரிய மேருவின் அளவு பொன்னை மாற்றறிந்து விலை மதிக்கினும் மதிக்கலாம். பாம்பின் கால்களை அறியலாம். ஆற்று மணலினை எண்ணிவிடலாம். அம்பு போன்ற விழிகளைக் கொண்ட பெண்களின் மனதை அறிய முடியாது என்பதை வடிவேல் சதகம் (பா.16) குறிப்பிடுகின்றது.*

*பெண்கள் பூப்படையும் நாளன்று உள்ள நட்சத்திரம் மற்றும் லக்னம் இவற்றைக் கொண்டு பலன்களை எடுத்துரைக்கின்றது. அறப்பளீசுர சதகம், அண்ணாமலைச் சதகம் ஆகிய இரு நூல்களிலும் பெண்கள் பூப்படைதலின் இலக்கணம் கூறப்பட்டுள்ளது.*

**பெண்ணின் வகை**

உடல்தோற்றம் மற்றும் குணநலன் அடிப்படையில் பெண்களை நான்கு வகையாகப் பாகுபடுத்துகிறது கயிலாசநாதர் சதகம். பதுமினி, சித்தினி, சங்கினி, அத்தினிப்பெண் என பெண்களை நால்வகைப்படுத்தி அவரது குணங்களை இந்நூல் விளக்குகின்றது. மேலும் சாமுத்ரிகா இலட்சணம், பெண் எடுக்கும் முறை மற்றும் பரத்தையர் இயல்பு பற்றியும் சதக இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன.

### 4.2.6. வறுமை

நசையிற் பெரியதோர் நல்குர வில்லை

ஆசையைவிட பெரிய வறுமை இவ்வுலகில் இல்லை என முதுமொழிக் காஞ்சி குறிப்பிடுகிறது.

பொருள் இல்லார்க்கு இன்பம் இல்லை;
புண்ணியம் இல்லை; என்றும்
கருதிய கருமம் இல்லை; கதிபெறு
வழியும் இல்லை;
பெருநிலத் திடைநடக்கும் பிணம்
எனப்படுவர் அன்றே[119]

என பொருளில்லாதவனுடைய நிலையைத் தனிப்பாடல் திரட்டு எடுத்துரைக்கின்றது.

வறுமையால் ஏற்படும் கொடுமையை அறப்பளீசுர சதகம், குமரேச சதகம், கயிலாசநாதர் சதகம் போன்றவை குறிப்பிடுகின்றன.

மேன்மையான குலத்தில் பிறந்தாலும் அரிய கல்வி கற்றாலும், தன்மானம், ஆசாரசீலம், வீரம், ஞானம் கொண்டு விளங்கினாலும் பொருள் இல்லையெனில் 'பெற்ற தாயும் சலிப்பைக் காட்டுவாள்; சுற்றத்தினர் இகழ்வர், மனைவியும் அவதூறு சொல்வாள்' என்பதை,

மேலான சாதியில் உதித்தாலும் அதிலென்ன
 வெகுவித்தை கற்றும் என்ன
. . . . . . . . . . . . . . . . . . . .
 பாக்கியம் இலாதபோது

வாலாய மாய்பெற்ற தாயும் சலித்திடுவள்
வந்த சுற் றமும்இ கழுமே
மரியாதை இல்லாமல் அனைவரும் பேசுவார்
மனைவியும் தூறுசொல்வாள்[120]

*என்னும் அறப்பளீசுர சதகப்பாடல் உணர்த்துகின்றது.*

*மேலும் வறுமைப் பற்றி கயிலாசநாதர் சதகம் தரும் விளக்கமானது, வறுமையுற்றவனிடம் உள்ள கல்வியும் பண்பும் வெளிப்படாது, அவர்களிடம் சோம்பல், உறக்கம், மிக உண்ணுதல் ஆகிய பண்புகள் காணப்படும். அவர்களைக் கைம்பெண்களும் மதிக்கமாட்டார்கள் என்கிறது.*

தாங்கொணா வறுமை வந்தால் சபைதனில் செல்ல நாணும்
வேங்கைபோல் வீரம் குன்றும் விருந்தினர் காண நாணும்
பூங்கொடி மனையாட்கு அஞ்சும் புல்லருக்கு இணங்கச்செய்யும்
ஓங்கிய அறிவு குன்றி உலகெலாம் பழிக்கும் தானே[121]

*என வறுமையுற்றவனின் நிலையை விவேக சிந்தாமணி குறிப்பிடுகின்றது. வறுமையால் ஏற்படும் துன்ப நிலையைச் சதக இலக்கியங்கள் சித்தரிக்கின்றன.*

**4.2.7. ஈகை**

வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை

*வறுமையால் வாடுபவர்களுக்கு கொடுப்பதே ஈகை என்பது வள்ளுவர் வாக்கு.*

*எக்குலத்தில் பிறந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் இரவலர் கையில் ஈவரே உலக மரபு. மானை ஏந்தியுள்ள சிவபெருமான் திருக்கரங்களிலேயே கொடை அளித்த பெருமை சோழநாட்டு வேளாளரைச் சாரும் என சோழ மண்டல சதகம் கூறுகின்றது.*

*மக்கள் துன்பம் நீங்க ஈதலே சிறந்தது. செல்வம் உடையவர்கள் வறுமையில் வாடுபவர்களுக்கு உதவ வேண்டும்.*

ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்

*என்பர் ஔவையார்.*

*ஆற்றில் தண்ணீர் வறண்டு போய்விட்டாலும் அது தன் ஊற்றினால் இனிமையான குடிநீரைத் தரும். சூரியனின் பாதியைப் பாம்பு மறைத்தாலும் மீதிப்பாதியால் சூரியன் ஒளி தருவான். புன்செய் நிலம் விளைவின்றிப்*

*போனாலும் அங்கு வரும் பறவைகளுக்கு உணவு கொடுக்கும் கொடை வழங்குபவன் வறுமையுற்றாலும் அக்காலத்திலும் தன்னை நாடி வந்தவர்களுக்கு இல்லை என்று கூறாமல் தன்னால் இயன்ற பொருள்களைக் கொடுப்பான். இதனை குமரேச சதகம்,*

ஆறுதண் ணீர்வற்றி விட்டாலும் ஊற்றநீர்
அமுதபா னம்கொடுக்கும்
கொல்லைதான் சாவிபோய் விட்டாலும் அங்குவரு
குருவிக்கு மேய்ச்சலுண்டு
வீறுடன் உதாரிதன் மீடியான போதினிலும்
மிகநாடி வருபவர்க்கு
வேறுவகை இல்லையென் றுரையா தியன்றன
வியந்துளம் மகிழ்ந்து தவுவான்[122]

*என்று கூறுகிறது.*

திரவியம் காக்குமொரு பூதங்கள் போல்பணந்
தேடிப் புதைத்துவைப்பார்
சீலைநல மாகவும் கட்டார்கள் நல்அமுது
செய்துணார் அறமும்செயார்[123]

*எனும் குமரேச சதகப் பாடல் ஈகைக்குணம் இல்லாத கஞ்சத்தனம் உடையவர்களின் இயல்புகளைக் குறிப்பிடுகிறது.*

பக்தியுடன் இனியதயை உள்ளவர் இடந்தனிற்
பகர்தருமம் மிக இருக்கும்
பகர்தருமம் உள்ளவர் இடந்தனிற் சத்துரு
பலாயனத் திறல் இருக்கும்[124]

*திருமாலின்மேல் அன்புடையவர்களிடத்தில் இரக்கக் குணமும், ஈகைக்குணமும் இருக்கும். ஈகைக்குணம் உள்ளவர்களிடம் பகைவர்களை வெல்லத்தக்க வலிமைக் குணம் இருக்கும் என்பதைக் குமரேச சதகம் எடுத்துரைக்கின்றது.*

### 4.2.8. விருந்தோம்பல்

*தமிழர்தம் பண்பாட்டின் தலையாயப் பண்பாக விளங்குவது விருந்தோம்பல்.*

அல்லி லாயினும் விருந்துவரி னுவக்கும்
முல்லை சான்ற கற்பின் மெல்லியல்.[125]

*இரவுப்பொழுதில் விருந்தினர்கள் வந்தாலும் அவர்களைப் போற்றி வரவேற்றனர் என்பதை இந்நற்றிணைப் பாடல் வரி உணர்த்துகின்றது.*

*நம் இலக்கியங்களில் கணவனும் மனைவியும் சேர்ந்து விருந்தினரை உபசரித்தமையைக் காண முடிகின்றது. இதன்பொருட்டே கோவலனைப் பிரிந்த நிலையில்,*

அறவோர்க் களித்தலும் அந்தணர் ஓம்பலும்
துறவோர் எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை[126]

*என கண்ணகியின் நிலையை இளங்கோவடிகள் குறிப்பிடுவதைக் காணமுடிகின்றது.*

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை[127]

*என்னும் திருக்குறளை வழியொற்றியே, 'வேளாள னென்பான் விருந்திருக்க வுண்ணாதான்' என்னும் முன்னோர் வாக்கிற்கிணங்க உழுதுண் குடிகளாகிய வேளாளர்கள் விருந்தோம்பலில் சிறந்து விளங்கினர் என்பதை மண்டல சதகங்கள் எடுத்துரைக்கின்றன.*

*உலகத்தை உழுது பெற்ற நெல்லையும், தானியங்களையும் இறந்த மூதாதையர், வழிபடு கடவுள், ஏழை உறவினர், விருந்தினர் ஆகியோரோடு அரசனும் பெறும் வண்ணம் வேளாளர்கள் வழங்கினர் என்பதை,*

அன்புறப் பார்முழு துமுழு தேபயி ராக்கு முதிர்ந்
தின்புறத் தான்விளை நெல்லோடு தானிய மீட்டியவை
தென்புலத் தார்தெய்வ மொக்கல் விருந்தொடு தென்னவனா
மன்பெறத் தந்தருள் வேளாளர் பாண்டியன் மண்டலமே[128]

*எனும் இப்பாடல் வழி அறியமுடிகின்றது.*

**விருந்துண்ணும் நாட்கள்**

*என்னென்ன கிழமைகளில் விருந்துண்டால் என்ன பயன் ஏற்படும் என்பதை அறப்பளீசுர சதகம் குறிப்பிடுகின்றது.*

| | | |
|---|---|---|
| *ஞாயிறு* | - | *உறவுகெடும், பகை ஏற்படும்* |
| *திங்கள்* | - | *உறவு மேம்படும், நன்மை உண்டாகும்* |
| *செவ்வாய்* | - | *பகையாகும்* |

*புதன் - நன்மை*

*வியாழன் - அதிக பகையாகும்*

*வெள்ளி - நீண்டநாள் பகை தீர்ந்து நல்லுறவு உண்டாகும்*

*சனி - நல்லதாகும்.*

*இவ்வாறான பலன்கள் கூறப்பட்டிருப்பினும் மனம் ஒத்து எந்த இடத்தில் விருந்துண்டாலும் நன்மையே ஏற்படும் என்பதையும் குறிப்பிடுகின்றது. மேலும் விருந்துக்கும் எல்லை உண்டு. இதனை, வீட்டிற்கு மருமகன் வந்தால் எண்ணெய்த் தேய்த்துக் குளிக்க வைத்து, புதுப்புது உணவுகள் சமைத்து அன்புடன் உபசரிப்பர். வெற்றிலைப்பாக்கு கொடுப்பார்கள். நான்கு நாட்களுக்கு மேல் ஆகிவிட்டால் மரியாதை குறையும் என்கிறது குமரேச சதகம் (72).*

வேட்டகந் தன்னிலே மருகன்வந் திருமளவில்

மேன்மேலும் உபசரித்து

விருந்துகள் சமைத்துநெய் பால்தயிர் பதார்த்தவகை

வேண்டுவ எலாமைப்பார்

. . . . . . . . . . . . . . . . . .

உற்றநாள் நாலாகிலோ

நாட்டம் ஒரு படியிறங் குவதுபோல் மரியாதை

நாளுக்கு நாள் குறைவு றும்.[129]

*“மருந்தே ஆயினும் விருந்தோடு உண்” என்கிறது கொன்றை வேந்தன் விருந்தோம்பல் தமிழரின் பழமையான பண்பாட்டு நெறி. வள்ளுவரும் விருந்தோம்பலின் முக்கியத்துவத்தை உணர்த்துகிறார். பெரியோர்கள் விருந்தினர்கள் இல்லாமல் ஒரு நாள் கூட உணவு உண்ணுவது இல்லை. அப்படி உண்டாலும் அந்த நாளைச் சிறந்ததாகக் கருதுவதில்லை. நட்புடன் வந்த விருந்தினர்க்கு முதலில் உணவிட்டு அன்புடன் உபசரித்த பின்பு விருந்தாக இன்னும் வருபவர்கள் இருக்கிறார்களா என்று பார்த்து உண்டார்கள் என்பதை தண்டலையார் சதகம்,*

திருவிருந்த தண்டலையார் சதகம்,

இல்வாழ்க்கை செலுத்தும் நல்லோர்

ஒருவிருந்தா யினுமின்றி உண்டபகல்

பகலமோ? உறவாய்வந்த

பெருவிருந்துக் குபசாரம் செய்தனுப்பி

இன்னு மெங்கே பெரியோர் என்று

வருவிருந்தோ டுண்பதல்லால் விருந்தில்லா

துணுஞ்சோறு மருந்து தானே[130]

*'விருந்தில்லாச் சோறு மருந்து' என்னும் பழமொழி வாயிலாக மனிதர்கள் விருந்தோம்பலைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று அறிவுறுத்துகிறது.*

## 4.2.9. கல்வி

மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்

மன்னனிற் கற்றோன் சிறப்புடையன் - மன்னனுக்குத்

தன்நேசம் அல்லாற் சிறப்பில்லை கற்றோர்க்குச்

சென்ற விடமெல்லாஞ் சிறப்பு[131]

*என்னும் மூதுரைப்பாடல் கல்வியின் சிறப்பை எடுத்துரைக்கின்றது.*

*இவ்வுலகில் நிலைத்து வாழும் இயல்புடையது கல்வி மட்டுமே. அக்கல்வி, நீரால், நெருப்பால், கள்வரால், அரசரால் அழித்துவிட இயலாது என்பதை கயிலாசநாதர் சதகம் குறிப்பிடுகின்றது.*

கடலுலகி லுற்றபொரு ளுக்குளே நன்மைதரு

கல்விநிலை பெற்ற பொருளாங்

கனவினா ஒருகாது புனலினாற் கரையாது

கள்ளராற் றிருடொ ணாது[132]

*என்கிறது. அக்கல்வியை எவ்வாறு கற்க வேண்டும் என்பதை வடிவேல் சதகம் கூறுகின்றது. ஒருவன் பதினாறு வயதில் படித்த கல்வி கல்லில் எழுத்து என்றும் முப்பது வயதிற்குள் செம்பொன் தகட்டில் எழுதின எழுத்து என்றும் முப்பதிற்கு மேல் ஐம்பதுக்குள் பனை ஓலை எழுத்திற்கு நிகர் என்றும், ஐம்பதுக்கு மேல் காகித எழுத்து என்றும் எழுபதுக்கு மேல் நூறு வயதுக்குள் கற்ற கல்வி நீர்மேல் எழுத்துக்கு நிகராகும் என்றும் இந்நூல் குறிப்பிடுகின்றது.*

தழுதழுத்துப் பாடுவதின் மௌனமாய்

இருப்பதுவே தக்க தாகும்

குழைகுழைத்த கல்வியினும் கேள்வியினும்

கல்லாமை குணமே[133]

*என்பது தண்டலையார் சதகப்பாடல், தெளிவில்லாமல் கற்பதை விட கல்லாமல் இருப்பதே நலம் என்று கூறி கற்கும் கல்வியை தெளிவாகவும் முழுமையாகவும் கற்க வேண்டும் என்று அறிவுறுத்துகின்றது.*

### 4.2.10. செல்வம்

கல்லானே ஆனாலும் கைப்பொருளொன் றுண்டாயின்

எல்லாரும் சென்றங் கெதிர்கொள்வர் - இல்லானை

இல்லாளும் வேண்டாள்மற் றீன்றெடுத்த தாய் வேண்டாள்

செல்லா தவன்வாயிற் சொல்[134]

*என்னும் நல்வழிப்பாடல் பொருளில்லாதவனுடைய வார்த்தைக்கு மதிப்பில்லை என்பதை அறிவுறுத்துகின்றது.*

புண்ணிய வசத்தினால் செல்வமது வரவேண்டும்

பொருளைரட் சிக்க வேண்டும்

புத்தியுடன் அதுவொன்று நூறாக வேசெய்து

போதவும் வளர்க்க வேண்டும்[135]

*என்னும் அறப்பளீசுர சதகப் பாடல் புண்ணிய வழியில் செல்வத்தை ஈட்ட வேண்டும் என்கிறது. கயிலாசநாதர் சதகம்,*

பொருளுள்ள பேர்களுக் கருளுண்டு புகழுண்டு

புண்யவச மிக்க வுண்டு

பூதலத் தவரெலாங் கண்டவுட னேதொழுது

பூபதி குபேர னென்பார்[136]

*எனும் பாடல் மூலம் பொருளைத் தேடி பிறருக்கு உதவி செய்து புகழீட்டுபவர்கள் நலமுடன் வாழ்வர் என்றுரைக்கின்றது.*

### 4.2.11. புகழ்

ஈதல் இசைபட வாழ்தல் அதுஅல்லது

ஊதியம் இல்லை உயிர்க்கு[137]

*என்பார் வள்ளுவர். ஈதல் அதன்மூலம் பெறும் புகழ் இவையிரண்டும் உயிருக்கு ஊதியமாய் விளங்கும். ஆகையால் தோன்றின் புகழோடு தோன்ற வேண்டும் என்பதை குமரேச சதகம்,*

சடம்ஒன் றெடுத்தால் புவிக்குநல் லவனென்று

தன்பேர்வி ளங்கவேண்டும்

சதிருடன் இதல்லாது மெய்ஞ்ஞானி என்றவ

தரிக்கவே வேண்டும் அல்லால்[138]

*என்னும் பாடல், இவ்வுலகில் ஒருவன் பிறந்தான் எனில் நல்லவன் என்று பெயர் எடுக்க வேண்டும். இல்லையேல் அறிவாளி என்றும் அச்சம் இல்லாதவன் என்றும்*

*பெயர் எடுக்க வேண்டும். அவ்வாறும் இல்லையெனில் தன்னை நாடி வருபவர்களுக்கு இல்லை என்னாது கொடுப்பவன் என்றும், கல்வியறிவினால் புலவன் என்றும் தலைவன் என்றும் விளங்க வேண்டும் என்பதைக் குறிப்பிடுகின்றது. இப்பாடல் புகழ்பெறுவதற்கான வழிமுறைகளை நமக்குக் காட்டுகின்றது.*

இன்னாமை வேண்டின் இரவெழுக; இந்நிலத்து

மன்னுதல் வேண்டின் இசைநடுக; தன்னொடு

செல்வது வேண்டின் அறஞ்செய்க; வெல்வது

வேண்டின் வெகுளி விடல்[139]

*என்னும் நான்மணிக்கடிகைப் பாடல், இவ்வுலகில் நிலைபெற்று வாழ வேண்டுமெனில் புகழை நடுக என்றுரைப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.*

*அறப்பளீசுர சதகம், குமரேச சதகம், வடிவேல் சதகம், அண்ணாமலைச் சதகம் போன்றவை புகழோடு வாழ வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகின்றனர்.*

### 4.2.12. நிலையாமை

நெருநல் உளன்ஒருவன் இன்றுஇல்லை என்னும்

பெருமை உடைத்துஇவ் வுலகு[140]

*என்னும் வள்ளுவர் வாய்மொழிக்கு ஏற்ப நேற்று இருந்தவன் இன்று இல்லை என்னும் நிலையாமை தத்துவத்தை உணர்ந்து அறஞ்செய்க என்பது அறிவுறுத்தப் படுகின்றது.*

மன்னா வுலகத்து மன்னுதல் குறித்தோர்

தம்புகழ் நிறீஇத் தாம்மாய்ந் தனரே[141]

*என்னும் புறநானூற்றுப் பாடலும் நிலையாமையைக் குறிப்பிடுகின்றது.*

*குமரேச சதகமும் நிலையாமை உணர்ந்து அறம் செய்க என்பதை வலியுறுத்துகின்றது.*

மனுநல்மாந் தாதாமுன் ஆனவர்கள் எல்லோரும்

மண்மேல் இருந்து வாழ்ந்து

மடியா திருந்தபேர் இல்லைஅவர் தேடியதை

வாரிவைத் தவரும்இல்லை[142]

*அழியும் தன்மைமிக்க உடலை உண்மை என்று நம்பி வீணாக இறந்து போவதன்றி, உலகில் வாழ்கின்ற காலத்திலேயே நல்லறம் புரிய வேண்டும் என்கிறது.*

*மேலும், செல்வம் நிலையில்லாதது என்பதைக் கூறுமிடத்து நீர் உள்ள ஆற்றின் பள்ளம் மேடாக மாறும் மேடுகள் பள்ளங்களாகும். மக்கள் வாழும் நாடுகள் எல்லாம் விலங்குகள் வாழும் காடாகும், காடுகள் எல்லாம் நாடாகும். வறுமையுடையவர் செல்வராவர். செல்வர் வறுமையடைவர். உலகில் எதுவும் நிலையானதல்ல. மாறும் இயல்புடையவை. எனவே, வெள்ளம் வருவதற்கு முன்னே அணைகோலி வைத்துக் கொள்வது போல் காலன் வருமுன்னே நல்லறம் செய்திருத்தல் வேண்டும் என்பதை நீதி சதகங்கள் வலியுறுத்துகின்றன.*

### 4.2.13. உணவு

*உணவு கொள்வதில் காணப்பெறும் குற்றங்கள், உணவு சாப்பிடக் கூடிய இலைகளின் தன்மை, விலக்க வேண்டிய உணவுகள், உணவிடும் விதிமுறைகள், உணவு உண்ட பின்பு கடைபிடிக்க வேண்டிய விதிகள் போன்ற உணவு பற்றிய பல கருத்துக்கள் சதக இலக்கியங்களில் காணப்படுகின்றன.*

**உணவு கொள்வதில் காணப்பெறும் குற்றங்கள்**

பந்தியிடை யோதனம் இருப்புக் கரண்டியாற்
பரிமாற உண்ணல்தோடம்
பாவையர் இடுங்கறியை மீண்டுகொடு வாவெனப்
பன்னியிட உண்ணல்தோடம்
சந்தியா காலத்தும் அத்தராத் திரியினும்
தயிரடிசில் உண்ணல் தோடம்[143]

*என்னும் அண்ணாமலைச் சதகப் பாடல், பந்தியில் இரும்புக் கரண்டியால் உணவு பரிமாறுதலும், உண்ணுதலும், மாலை, இரவு நேரத்தில் தயிர் உட்கொள்ளுதலும் அயலவர் உண்ட பாத்திரத்தில் உண்ணுதலும், மண் பாத்திரம், தகரம், உடைந்த பாத்திரம், உள்ளங்கையில் இட்டு உண்ணுதல், நின்று கொண்டு உண்ணுதலும் பெரும்பாவம் என்றுரைக்கின்றது.*

**உணவு சாப்பிடும் இலைகளின் தன்மை**

*வாழையிலை, புன்னை, பூவரசு, குருக்கத்தி, மா, பலா, பன்னீர் ஆகியவற்றில் உண்ணலாம். அரசு, தாமரை, பாதிரி, தாழை, அத்தி, ஆல், ஆமணக்கு, முருக்கன், வெள்ளெருக்கு, கிச்சிலி ஆகியவற்றில் உணவு கொள்ளலாகாது. மற்றும் சிற்றுண்டி, அடிக்கடி நீர்ப்பருகுதல், உண்ணல், மெத்தனமாக உண்ணல் ஆகியவற்றால் உடற்பிணி உண்டாகும் என்பதை அறப்பளீசுர சதகம் குறிப்பிடுகின்றது. மேலும்,*

கைவிலைக் குக்கொளும் பாலசப் பால்வரும்
காராக் கறந்த வெண்பால்
காளான் முருங்கை சுரை கொம்மடி பழஞ்சோறு
காந்திக் கரிந்த சோறு[144]

*என்னும் அறப்பளீசுர சதகப் பாடல், கைவிலைக்கு வாங்கிய தாய்ப்பால், எருமைப்பால், முருங்கை, சுரை, பழைய சோறு, கரிந்த சோறு, வெள்ளை உப்பு, வெங்காயம், கத்தரிக்காய் போன்றவைகளை சீலமுடையவர்கள் உட்கொள்ள மாட்டார்கள் என்று குறிப்பிடுகின்றது.*

*வடிவேல் சதகம் அரிசி, தானியங்கள், கீரை வகைகள், பால், மாங்காய், நீர் ஆகியவற்றின் வகைகள் மற்றும் குணங்களை எடுத்துரைக்கின்றது.*

*அரிசியின் குணங்கள்*

*சம்பா அரிசி - உடம்புக்கு சுகத்தைத் தரும், பலம் உண்டாகும்.*

*காரரிசி - மந்தத்தைத் தரும், உடல் பெருக்கும்.*
*கரப்பான், தினவு உண்டு.*

*வரகு, வாலான் அரிசி, சோளம் - வயிறு எரியும். பித்தம் பேதிக்கும், கரப்பான், வாய்வு உண்டாகும்.*

*கம்பு வகை*

*அரிசிக்கம்பு - வாய்வு உண்டாகும்*

*கருங்கம்பு - கரப்பான்*

*பெருங்கம்பு - குளிர்ச்சி*

*சாமை - சன்னியும், பித்தரும் சேராது. ஆரோக்கியம் தரும்.*

*திணை - பித்தம், உடம்பெரிச்சலுக்கு நல்லது.*

*கேழ்வரகு - வெட்டை, மூலம் உண்டாகும்.*

*பழையதின் நீராகாரம் - பித்தம், வாதம், கிரந்தி, சோகை இவற்றைப் போக்கும். பெண்களுக்குத் தாய்ப்பால் சுரப்பு அதிகரிக்கும்.*

*மேற்கண்ட தானியங்களை உட்கொள்வதால் ஏற்படும் பயன்களை வடிவேல் சதகம் சுட்டிக் காட்டுகின்றது.*

**கீரையின் குணம்**

*முருங்கையின் அனைத்து பாகங்களும் பயன்படும் விதத்தை வடிவேல் சதகம் குறிப்பிடுகின்றது.*

| | | |
|---|---|---|
| முருங்கையிலை | - | மந்தை |
| முருங்கைச்சாறு | - | ஆரோக்கியம் |
| காய் | - | மோகம், போகங்கள் உண்டாகும் |
| பூ | - | குளிர்ச்சி |
| வேர்ப்பட்டை | - | சன்னி, திரிதோஷம், வீக்கம் நீக்கும். வாய்வை அடக்கும். |
| முருங்கை ஈர்க்கு | - | சுரைக்கால் வாதம், அயர்ச்சி தீர்க்கும். |
| இலை | - | வித்தம் வரும். |
| கொழுந்து | - | திரிவாத தோஷம் அகற்றிடும். |

மேலும்,

அறைக்கீரை காய்ச்சல் குளிர் சன்னியைத் தீர்த்திடும்
அருந்தவே மலசுத்தியாம்
ஆர்க்குமித மானருசி வாய்ந்த கறியாகும்
அரிய பொன்னாங்காணி
திறம்பெறும் பெலனுண்டு குளிர்ச்சியாங் கண்ணுக்கு
தீனிபசி தோணாதுகாண்
செகமீது நல்வேளை குடல்வாதங்களையுமே
(தூது வேளைக்கீரை)[145]

*என்னும் வடிவேல் சதகப்பாடலில் பலவகையான கீரைகளின் குணங்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.*

**மாவின் குணங்கள்**

*மாங்காய் - கிரந்தி, நாக்குப்புண், இருமல், காசம், காமாலை, கண்நோய், வயிற்றுவலி, கால் பித்தவெடிப்பு, வாதம், தினவு முதலான நோய்களை உண்டாக்கும்.*

*மாங்கனி - பித்தம் உயரும், மந்தம், சீதம், வீக்கம், உடம்பு வறட்சி போன்ற பல நோய்கள் ஏற்படும்.*

*மாவற்றல் - வயிற்றுக்கடுப்பு, வழலை, காதுநோய், பித்தம், வாதம், வெக்கை, சீதபேதி முதலானவைகளைத் தீர்த்திடும்.*

**பாலின் குணம்**

| | | |
|---|---|---|
| *பசும்பால்* | - | *உள்பித்தம் போக்கும்* |
| *மேனி சிவப்பாக உள்ள பசுவின் பால்* | - | *வாதங்கள் அகற்றும்* |
| *காறாம்பசுவின் பால்* | - | *காசநோய் நீக்கும்* |
| *கபிலைப்பசுவின் பால்* | - | *திரிதோஷங்களை நீக்கும்* |
| *எருமை மோர்* | - | *பெருஞ்சோகை, காமாலை, சலக்கழிச்சல், தாகம், பாண்டு, கிராணி இவை நீக்கும்.* |
| *பெண்களின் பால்* | - | *கண்ணுக்கு நல்லது.* |
| *சிகப்பு பெண்ணின் பால்* | - | *காய்ச்சல், திரிதோஷம், சன்னி போக்கும்.* |
| *கலைமானின் பால்* | - | *திரிதோஷம் போக்கும்* |
| *இளநீர், தேங்காய் நீர்* | - | *தாகம், பித்தம் தீர்க்கும்* |

*இவ்வாறாக மக்களுக்குப் பயன்படும் வகையில் பாலின் குணங்களை வடிவேல் சதகம் (97, 98) இரு பாடல்களில் குறிப்பிடுகின்றது.*

**நீரின் குணம்**

| | | |
|---|---|---|
| *(பாசியில்) உண்டான நீர்* | - | *நோயை உண்டாக்கும்* |
| *சுனை நீர்* | - | *குடல்வாதத்தை உருவாக்கும்* |
| *மழைநீர்* | - | *குளிர்ச்சி தரும்* |
| *பாறை நீர்* | - | *சுரத்தை உண்டாக்கும்* |
| *கிணற்று நீர்* | - | *குளிர்காலத்துக்கு சூட்டைத் தரும். கோடைக்கு குளிர்ச்சியைத் தரும்.* |

*தண்ணீரைக் காய்ச்சிப் பருகினால் நோய் வராது எனவும் வடிவேல் சதகம் குறிப்பிடுகின்றது.*

**தாம்பூலம் தரித்தல்**

*உணவு உண்டபின் தாம்பூலம் தரித்தல் என்பது ஒரு பொதுமரபாக உள்ளது. எப்படித் தாம்பூலம் தரிக்க வேண்டும் என்பதில் சில விதிமுறைகளை அண்ணாமலைச் சதகம் குறிப்பிடுகின்றது.*

மெல்லிணாக் காம்பும் புழுப்போடு காம்புதன்
மேற்றொறும் புங்கசங்கள்
மிகமுறுகல் அழுகலும் வதங்கல்இவ் வெட்டாகும்
வெற்றிலைக் குற்றம் நீக்கி
நல்லபாக் கெச்சின்முக் கால்உமிழ்ந் தாராய்ந்த
நறியவெள் ளிலைகிழித்து[146]

*என்னும் பாடலில், பாக்கினை வாயில் போட்டு மெல்லிய வெற்றிலையைக் கிழித்துச் சுண்ணாம்பு தடவிக் கிராம்பு, ஏலம், தாம்பூலத்திற்குரிய நன்மிளகு, வால்மிளகு, சுக்கு, சாதிக்காய், சாதிபத்திரி, பச்சை கற்பூரம் ஆகியவற்றைச் சேர்த்து தாம்பூலம் இடுதல் வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.*

## 4.2.14. மருத்துவம்

*'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'. இத்தகைய நோயற்ற வாழ்வு வாழ்வதற்கு மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய சில வழிமுறைகளை சதக இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. நோய் வரும் வழிகளையும், அவற்றைத் தடுக்கும் முறைகளையும் கூறுகின்றன.*

**நோய் வரும் வழிகள்**

கல்லினால் மயிரினால் மீதூண் விரும்பலால்
கருதிய விசாரத்தினால்
சுடுவழி நடக்கையால் மலசலம் அடக்கையால்
கனிபழங் கறி உண்ணலால்
நெல்லினால் உமியினால் உண்டபின் மூழ்கலால்
நித்திரைகள் இல்லாமையால்[147]

என்னும் குமரேச சதகப்பாடல், உணவில் கல்லும் நெல்லும் உமியும் கலந்திருத்தல், நீண்ட தொலைவு நடத்தல், சிறுநீர் மற்றும் மலம் அடக்குதல், பனிக்காற்றில் உடலை வருத்துதல், அதிகமான உடலுறவு, இரவில் கள், தயிர், கீரை ஆகியன உண்ணுதல் ஆகிய இவை எல்லாம் நோய் வருவதற்கான வழிகள் என்று குறிப்பிடுகின்றது.

இதே கருத்தை அடியொற்றி கயிலாசநாதர் சதகமும் நோய் வரும் காரணங்களைக் கூறுகின்றது. மயிர், உமி ஆகியவை வயிற்றில் புகுதல், மனத்தில் வீண் கவலை, மிகவும் கனிந்த பழங்களை உண்ணுதல், காலம் கடந்து உண்ணுதல், அளவுக்கு மீறி உறங்குதல் இவைகள் நோயினைத் தந்து தீப்பயன்களைத் தரும் ஆதலால் அவற்றை விலக்க அறிவுறுத்துகிறது.

**உடல் நலனுக்கு ஏற்றவை**

- மாதத்திற்கு இரண்டு முறை பெண்களுடன் உடலுறவு கொள்வது.
- வயிறு சுத்தம் செய்யும் மருந்தை வருடத்திற்கு இரண்டு முறை உட்கொள்ளல்.
- வாரத்திற்கு இரண்டு தடவை எண்ணெய் தேய்த்துக் குளித்தல்.
- காய்ச்சிய பால், நீர் மோர், உருக்கிய நெய், வழுக்கை உடைய இளநீர் உண்டபின் நீர் குடிப்பது, உண்ட பின் உலாவுதல்

இவை உடலுக்கு நலம் பயப்பவை என்று குமரேச சதகம் (பா.19) குறிப்பிடுகின்றது.

எட்டுநா ளைக்கிரு முழுக்காடு ஒவ்வோர்பட்சம்
இருகண் கலிக்கம் இடுவோர்
எத்தாகம்திதொறும் பித்தநீர் எல்லாம்
எடுத்திட மருந்து கொள்வோர்
திட்டமால் எண்ணான்கு நாளினுக் கொருகால்
திருந்திழை புணர்ச்சி செய்வோர்[148]

என்னும் அண்ணாமலைச் சதகப்பாடல்,

வாரம் இருமுறை - எண்ணெய் தேய்த்தல்

பதினைந்து நாட்களுக்கு இருமுறை - கண்ணுக்கு மருந்திடல்

மாதம் ஒருமுறை, பித்தநீர் வெளியேற்றல்

முப்பத்திரண்டு நாளுக்கு ஒருமுறை - தாம்பத்ய உறவு கொள்ளல்.

மூன்று மாதங்களுக்கு ஒருமுறை - முடிதிருத்தம் செய்தலும்

பேதிகை மருந்து உட்கொள்ளுதலும், பசித்த பின்னர் உணவு உட்கொள்ளல் ஆகிய வழிமுறைகளைக் கடைப்பிடித்தல் உடல்நலனுக்கு ஏற்றவை என்றும் இவைகளைத் தவறாது கடைப்பிடித்தால் நோய் வராமல் பாதுகாத்துக் கொள்ளலாம் என்பதை சதக இலக்கியங்கள் அறிவுறுத்துகின்றன.

நெய்யினை யுருக்கியும் மோரைப் பெருக்கியும்
நீரினை யருக்கி யுண்பார்
நிசியினில் தயிரதும் பகலதில் பாலதும்
நிதபோக மும்விரும்பார்
மெய்தனில் தலையினில் எண்ணெயது சிக்காமல்
மீண்டுசுமை சுமவாமலும்
மெத்தவும் பசியாமல் பசியன்றி யுண்ணாமல்
விரைந்துநடை அதிராமலும்
வெயில்பனி மழைக்காற்றில் அலையார் பழங்கறிகள்
வேண்டார் மலஞ்சலத்தை
மிகவடக் காமலும் இருப்போர்கள் பேர்தனை
விளம்பினும் நோயணுகுமோ.[149]

மேற்சொன்ன வழிமுறைகளைக் கடைப்பிடிப்பவர்களுடைய பேரைச் சொன்னாலே நோய் அணுகாது என்கிறது வடிவேல் சதகம்.

மேலும் நாம் நோயுறும் பட்சத்தில் மூலிகை மருந்துகளை உட்கொள்ளும் போது என்ன சாப்பிடக் கூடாது என்பதையும் வடிவேல் சதகம் குறிப்பிடுகின்றது. தூதுவளை பேய்ப்புடல் தவிர மற்ற கசப்புடையவை அனைத்து பித்தமாகும் என்றும், நெல்லிக்கனி தவிர புளிப்புடைய மற்றவை எல்லாம் வாதமாகும் என்றும் தேன் தவிர இனிப்புடைய மற்றவை சேத்துமத்தை உண்டாக்கும் என்றும் கூறப்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி மருந்துகள் உட்கொள்ளும் பொழுது இறைச்சி (கோழி, ஆடு, பன்றி, கரடி) பாகற்காய், பசளை, அவரை ஆகியவற்றை உண்டால் அவை மருந்தின் தன்மையைக் கெடுத்து விடும் என்பதால் அவற்றை உண்ணக்கூடாது என்று அறிவுறுத்துகின்றது.

### 4.2.15. வாஸ்து

*வாஸ்து சாஸ்திரம் என்பது நகர அமைப்பு, கட்டிடக் கலை என்பன சம்பந்தப்பட்ட இந்தியாவின் மிகவும் பழமையான அறிவுத் துறைகளில் ஒன்றாகும் என்றும், வாஸ்து என்ற சொல் கட்டிடமொன்று கட்டப்பட்டுள்ள அல்லது கட்டப்படவுள்ள நிலத்தைக் குறிக்கும் என்றும், வாஸ்து சாஸ்திரம் என்பது ஒரு நிலத்தில் கட்டிடம் கட்டுவதற்குரிய முறைகளையும் அதன் தத்துவங்களையும் விளக்கும் ஒரு வேதம் சார்ந்த அறிவுத் துறையாகும் என்றும் வாஸ்து பற்றிய பல விளக்கங்களைக்* (Wikipedia) *காணமுடிகின்றது. வாஸ்து பற்றிய செய்திகளை சதக இலக்கியங்கள் விரிவாக எடுத்துரைக்கின்றன.*

**வாஸ்து எழுகின்ற நாள்**

*சித்திரைத் திங்கள் பத்தில் ஐந்து நாழிகை,*
*ஐப்பசி இருபத்தொன்றாம் தேதியில் எட்டு நாழிகை,*
*ஆடி பதினொன்றில் இரண்டு நாழிகை,*
*ஆவணி ஆறில் இருபத்திரண்டு நாழிகை,*
*கார்த்திகை எட்டில் இரண்டு நாழிகை,*
*தை பனிரெண்டில் எட்டு நாழிகை*
*மாசி இருபதில் எட்டு நாழிகை*

*இந்த தேதியில் வாஸ்து புருடன் எழும் நேரம். இவ்வாறு வாஸ்து எழுகின்ற நேரம் அறிந்து மனைகோலும் போது, 'மனையின் அகலம் மூன்றடி, ஆறடி, ஏழடி, பத்தடியும், நீளம் - எட்டு, பதினொன்று, பதினைந்து, பதினாறு, பத்தொன்பது, இருபது, இருபத்திரண்டு, இருபத்தேழு, இருபத்தியெட்டு, இருபத்தொன்பது, முப்பது அடிகளைக் கொண்ட வாசல் (நன்றாம்). சுவர், மண்படை வைக்கும் போது ஒற்றைப்படையாயிருத்தல் வேண்டும். வைத்த சுவற்றை மறுபடியும் இறக்கிக் குறைத்து வைப்பது நன்றல்ல என்று வடிவேல் சதகம் (80) குறிப்பிடுகின்றது.*

**மனை கோலும் போது நன்னிமித்தம்**

*வீட்டைச் சுற்றி அத்திவாரம் பறித்து நீர் ஊற்றினால் நீர் வலம் சுழன்றால் நலம். இடம் சுழன்றால் பகை. கருங்கல் இருந்தால் செல்வம், வண்டும் புழுவும் இருப்பின் தீது. செங்கல், நாணயம், அரணை, நண்டு, பல்லி, தேரை, சிலந்தி பூச்சி இருப்பின் நன்று. ஆமை, பாம்பு, தேள், உடும்பு, பூரான் இவை இருப்பின் தீது. சங்கு கிடைத்தால் செல்வம். வேர்கள் காணப்பட்டால் நஷ்டம் ஏற்படும் என்பதை,*

மனைகோல வேகுழிகள் கெல்லிநீர் விட்டுமேன்
மலர்தூவ வலமா கிடில்
வாழ்வா மிடப்புறஞ் சுற்றிடிற் பகையதாம்
வண்டுபுழு காணில் தீதாஞ்
சினையாகு சிலைகாணி லாக்கமாஞ் செங்கல்நிதி
சீரரணை நண்டு பல்லி
தேரை சிலந்தியாம் பூச்சியிவை கண்டிடிற்
செம்மையா மம்மனைக டாந்[150]

எனும் கயிலாசநாதர் பாடல் எடுத்துரைக்கின்றது.

மேற்கூறிய நிமித்தம் பார்த்து மனைகோலும் போது தன்னுடைய பேர் இராசி வலமாகில் மனை கோலுதல் நன்மை தரும். இடமாகில் ஆகாது. வீட்டில் நடுப்பாகத்தில் வாசல் அமைத்தால், அந்த வீட்டை விட்டு அவனை விரட்டி விடும்.

வலப்புறம் ஐந்தும், இடப்புறம் நாலு பங்கும், இதன் நடுவில் வாசல் அமைந்தால் சுகந்தரும். வாசலுக்கெதிரே தூண்கள், கால்கள், கம்பளிகள் இருத்தல் கூடாது. வீட்டின் கதவு தானே வலிய சாத்திக் கொள்ளுமாயின் வீடு பாழாகும். கதவை எங்கே நிறுத்துகின்றோமோ அங்கேயே கதவு நிற்கவேண்டும். அப்படி சாத்துதல் நன்று. வெகு வாழ்வு தரும்.

**மனைக்கு அங்கங்கள் இருக்க வேண்டிய இடம்**

வீட்டிற்கு,

கிழக்கில் - அடுக்களையும் (சமையல் கட்டு), பொக்கிஷமும்
தென்கிழக்கு - பசுக்கொட்டகை
தெற்கில் - குப்பைக்குழி
தென்மேற்கில் - தோப்பு
மேற்கில் - எருமைக்கொட்டில்
வடமேற்கில் - நெல்குதிர்
வடக்கில் - உள்வீடும்
வடகிழக்கில் - கிணறும் அமைத்துக் குடியிருந்தால் வாழ்வு செழிக்கும் என்கிறது வடிவேல் சதகம்.

மனைக்குக்கி ழக்காக அடுக்களை பொக்கிஷம்
வைத்திடத் தென்கிழக்கு
வளரும்ப சுப்பட்டி தெற்கிலே குப்பையும்
வருதென்மேற் குயர்தோப்புமே
கணக்கவே பால்தரும் எருமைகளை மேற்குமே
கட்டவே வடமேற்கினில்க
கதிக்கவே நெல்சேரும் வைக்கலாம் வடக்கினில்
கனிவாக உள்வீடுமே[151]

## வீட்டில் இருக்கக் கூடாத மரங்கள்

*எருக்கு, அகத்தி, பனன், முருங்கை, ஆமணக்கு, நாவல், பருத்தி, முள்மரங்கள், நெல்லி, கலியான முருங்கை, உதியன் போன்ற மரங்கள் வீட்டில் முன்னால் இருப்பின் வீட்டில் மூதேவி அடைவாள். வினைகள் வாட்டும். செல்வம் நீங்கும் என்பது வடிவேல் சதகம் எடுத்துரைப்பது. மேலும் சிற்ப சாஸ்திரம் மற்றும் சரசுவதி மகாலில் உள்ள மருத்துவச் சுவடியில் கூறியதை ஒப்புநோக்க, பருத்தி, அகத்தி, பணை, நெல்லி, நாவல், எருக்கு, முருங்கை, இலவு ஆகிய எட்டு மரங்களும் வீட்டில் இருக்கக் கூடாதவை என்பது புலனாகின்றது.*

*மேலும் இருக்க வேண்டிய மரங்களாய் இருப்பின் அவைகளை நல்ல நாள் பார்த்து நடவேண்டும் என்பதையும் கயிலாசநாதர் சதகம் வலியுறுத்துகின்றது.*

## மனை கோல, புக ஏற்ற மாதங்கள்

*மனைகோலுவதற்கு புதுமனை புதுவதற்கும் ஏற்ற மாதங்கள் மற்றும் ஆகாத மாதங்களைப் பற்றிய குறிப்புகளை அறப்பளீசுர சதகம் மற்றும் வடிவேல் சதகம் ஆகியன எடுத்துரைக்கின்றன.*

| | | |
|---|---|---|
| *சித்திரை* | - | *செல்வம் பெருகும்* |
| *வைகாசி* | - | *நலம் சேரும்* |
| *ஆவணி* | - | *சுகத்தைத் தரும்* |
| *ஐப்பசி* | - | *மேன்மையுடையது* |
| *கார்த்திகை* | - | *உத்தமம்* |
| *தை* | - | *உயர்வுண்டு* |

*மேற்கண்ட ஆறுமாதங்களும் மனைபுக ஏற்ற மாதங்கள் என்பதை அறியமுடிகிறது.*

**மனை புக ஆகாத மாதங்கள்**

| | | |
|---|---|---|
| *ஆனி* | - | *கம்சன் இறந்தது, ஈசன் முப்புரம் எரித்த மாதம்* |
| *ஆடி* | - | *சீதை சிறைவைக்கப்பட்ட மாதம், இராவணன் இறந்தது* |
| *புரட்டாசி* | - | *இரணியன் மாண்ட மாதம்* |
| *மார்கழி* | - | *மகாபாரத யுத்தம் நடந்தது* |
| *மாசி* | - | *சிவபெருமான் ஆலால விஷம் உண்டது.* |
| *பங்குனி* | - | *மன்மதனை எரித்த மாதம்* |

*ஆகையால் இம்மாதங்கள் மனைகோலவும் புகவும் ஆகாதவை எனக் குறிப்பிடுகிறது.*

**புத்தாடை உடுத்துவதற்கு ஏற்ற நாள்**

*ஞாயிறு, வியாழன், வெள்ளி ஆகிய மூன்று கிழமைகளிலும் உத்தரம், உத்தராடம், உத்தரட்டாதி, ஹஸ்தம், புனர்பூசம், பூசம், ரோகிணி, அனுசம் ஆகிய நட்சத்திரங்கள் மற்றும் துவிதியை, திரிதியை, பஞ்சமி, சத்தமி, அட்டமி, தசமி, துவாதசி, திரயோதசி ஆகிய திதிகள் வரும் நாட்களில் புத்தாடை உடுத்தினால் நற்பலன் ஏற்படும், நோயில்லை, செல்வம் வரும், ஆடை அணிகலன்கள் வரும். பெருமை உண்டு என்கிறது கயிலாசநாதர் சதகம்.*

*ஞாயிறு, புதன், வியாழன், வெள்ளி ஆகிய நாட்கள் புத்தாடை உடுத்துவதற்கு ஏற்ற நாட்கள் எனவும் மற்ற நாட்களில் புத்தாடை உடுத்தினால் தீமையே உண்டாகும் என்பதை,*

கறைபடாது ஒளிசேரும் ஆதிவா ரற்தனிற்
கட்டலாம் புதிய சீலை
கலைமதிக்கு ஆகாது பலகாலும் மழையினிற்
கடிதுநனை வுற்றொ ழிதரும்
குறைபடாது இடர்வரும் வீரியம்போம் அரிய
குருதிவா ரந்த னக்கு[152]

*என்னும் அறப்பளீசுரப் பாடல் குறிப்பிடுகின்றது.*

**எண்ணெய் தேய்த்துக் குளித்தல்**

| | | |
|---|---|---|
| *ஞாயிறு* | - | *வாழ்வு அழியும்* |
| *திங்கள்* | - | *புகழுண்டாகும்* |

| | | |
|---|---|---|
| *செவ்வாய்* | - | *இடையூறு உண்டாகும்* |
| *புதன்* | - | *வாழ்வு தரும்* |
| *வியாழன்* | - | *அறிவு மங்கும், குற்றம்* |
| *வெள்ளி* | - | *செல்வம் அழியும்* |
| *சனி* | - | *செல்வமும் நீண்ட ஆயுளும் உண்டாகும்* |

*என்பதை அறப்பளீசுர சதகப்பாடல் மற்றும் வடிவேல் சதகப்பாடல் வழி அறியமுடிகின்றது.*

### 4.2.16. நம்பிக்கைகள்

*பழந்தமிழர் வாழ்க்கையில் நம்பிக்கைகள் முக்கிய இடம்பெற்றுள்ளன. தொல்காப்பியர் காலத்திலேயே சகுனம் பற்றிய நம்பிக்கைகள் இருந்திருக்கின்றன என்பதை அறியமுடிகின்றது.*

> நம்பிக்கைகள் பெரும்பாலும் அச்சவுணர்வின் அடிப்படையாகத் தோன்றியதாகக் காட்சியளித்தாலும் இயற்கைக்கு அப்பாற்பட்ட செயல்களை உணராதபொழுதும் மனித வாழ்வில் ஏற்படும் சில நிகழ்ச்சிகளுக்கும் காரணம் கற்பிக்க இயலாத பொழுது மனித மனமானது சிலவற்றைப் படைத்த காரணம் கற்பித்து கொள்கிறது. அவைகளே மக்கள் மனதில் நம்பிக்கைகளாக உருவாகின்றன[153]

*என்னும் கருத்துப்படி நம்பிக்கைகளின் அடிப்படையில் நிமித்தங்கள் அறியப்பட்டன என்பதை உணரலாம்.*

### நிமித்தங்கள்

*எந்த ஒரு செயலைச் செய்வதற்கும் முன்னர் நிமித்தம் அறிந்து செயல்படுவது தமிழர்தம் நம்பிக்கைகளுள் ஒன்றாக விளங்குகிறது. நிமித்தங்கள் விலங்கு நிமித்தங்கள், பறவை நிமித்தங்கள், பயண நிமித்தங்கள் என்ற வகையில் விளக்கப்படுகின்றன.*

### விலங்கு நிமித்தங்கள்

*பல்லியின் ஒலியை நிமித்தமாகக் கொண்டு மக்கள் பலன் அறிந்தமையை சங்க இலக்கியங்களில் காணலாம்.*

> பல்லியைப் பொறுத்த வரையில் பல்லி ஏற்படுத்தும் ஒலி (கௌளி அல்லது கெவுளி)யைத் தனிபலனாகவும், பல்லி மனிதர் உறுப்புகளின் மீது

விழுதலைத் தனிப்பலனாகவும் கொள்கின்றனர். எத்தனையோ விலங்குகள் இருக்க பஞ்சாங்கங்களில் தவறாமல் இடம்பெறும் தனிச்சிறப்புப் பல்லிக்கு மட்டுமே உண்டு[154]

*என்னும் பாக்யமேரியின் கருத்து இங்கு குறிப்பிடத்தக்கது.*

**பல்லி விழும் பலன்கள்**

*சகுனஞ் சொல்லுகின்ற பல்லி உடல் உறுப்புக்களின் மேல் விழுவதைக் கொண்டு பலன்கள் கணிக்கப்படுகின்றன.*

| | | |
|---|---|---|
| *தலை* | - | *கலகம், சண்டை* |
| *உச்சி* | - | *விக்கினம் வரும்* |
| *நெற்றி* | - | *நன்மை* |
| *கண்ணிமைகள்* | - | *துக்கம்* |
| *புருவம்* | - | *செல்வம் போகும்* |
| *இடது புயம்* | - | *தீமை* |
| *வலது புயம்* | - | *யோகம்* |
| *வயிறு* | - | *விருந்து உண்டு* |
| *முதுகு* | - | *கூட்டுறவு ஏற்படும்* |
| *முன்கால்* | - | *விலங்கு வந்து சேரும்* |

*இவ்வாறாக பல்லி விழுதலின் பலன்களை வடிவேல் சதகம் எடுத்துரைக்கின்றது. இவை மட்டுமல்லாது பல்லி ஒலி எழுப்புவதைக் கொண்டும் பலன்கள் கணிக்கப்பட்டுள்ளன என்பதை சதக இலக்கியங்களில் காணமுடிகின்றது.*

**பறவை நிமித்தங்கள்**

**காக்கைச் சகுனங்கள்**

*விடியற்காலையில் காக்கை கரைந்தால் விருந்தினர் வருவர் என்றும், காக்கை தங்கிய இடத்திலிருந்து வலமாகச் சென்றால் நன்மையுண்டாகும். தரை, புற்று, நெல்வயல், பால்மரம் இவற்றிலிருந்து கரைந்தால் மிக்க நன்மையாம் என்கிறது கயிலாசநாதர் சதகம். இதனை,*

அங்குதய நன்மையாய் விருந்துபொ குணஷ்டியா
மழுகையான் மடந்தை வருவ
ளதிவருணந் தீமூட்டல் முகில்பொழுதீ லுதிரஞ்சா
மாமிது காக சாஸ்திரஞ்[155]

*என்னும் கயிலாசநாதர் சதகப்பாடல் அறிவுறுத்துகின்றது.*

*பயண நிமித்தங்கள், யாத்திரை அல்லது பயணம் புறப்படும் போது எதிரில் வருகின்ற பறவை, விலங்குகளைக் கொண்டு பலன்களை சதக இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. கயிலாசநாதர் சதகம், வடிவேல் சதகம், அண்ணாமலைச் சதகம் போன்ற நூல்கள், பயணம் புறப்படும் போது ஏற்படும் நிமித்தங்களை தெளிவாக எடுத்துரைக்கின்றன.*

நிறைகொண்ட நீர்க்குடம் பாற்குட மெருக்கூடை
நீடுமங் கிலி யரசர்பார்
நிகழ்ந்திடுங் கர்ப்பமுறு மாதர்வே சையர்சிறார்
நீள்வளைக ளுபய மறையோர்
கறைபலாக் கனியன்ன யிவையெலா முன்வரிற்
காரியங் கைகூ டிடுங்[156]

*என்னும் கயிலாசநாதர் சதகப் பாடல் பயணம் புறப்படும் போது எதிரில் வருவதைக் கொண்டு பலன்களை எடுத்துரைக்கின்றது.*

## 4.2.17. பக்தி-வழிபாட்டு முறைகள்

### சிவச்சின்னங்கள்

*சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயம் சைவ சமயம். சிவபக்தர்களுக்குரிய அடையாளச் சின்னங்களாக, திருநீறு, உருத்திராட்சம், நமசிவாய எனும் ஐந்தெழுத்து மந்திரம் போன்றவை விளங்குகின்றன. திருநீறு தரித்து, உருத்திராக்கம் அணிந்து நமசிவாய மந்திரத்தை உச்சரிக்க வேண்டும் என்பதை சைவ ஆகம விதிகள் வலியுறுத்துகின்றன.*

பரம சிவனமலன் பத்தர்க்குச் சின்ன
முழுவுடலிற் கண்டியுநீ றும்[157]

*என சைவ சமய நெறி எனும் நூலில் கூறப்பட்டுள்ளமை இவண் நோக்கத்தக்கது. சிவச்சின்னங்களுள் திருநீற்றின் முக்கியத்துவம் கருதி, திருநீற்றைத் தயாரிக்கும் முறை, அணியும் முறை, அணியும் காலம் ஆகியவற்றை சதக இலக்கியங்கள் எடுத்தோதுகின்றன.*

### திருநீறு

*விபூதி, பசிதம், பஸ்பம், க்ஷாரம், ரட்சை என ஐந்து பெயர்கள் உபநிடதங்களில் உரைக்கப்பெறுகின்றன. தமிழில் திருநீறு, காப்பு, மருந்து என்ற பெயர்கள் வழங்குகின்றன.*

பூதி: இது செல்வத்தின் பெயர். திருநீறு செல்வத்தைத் தருவதாலும், செல்வமாகவே விளங்குவதாலும் பூதி எனப் பெயர் பெற்றது. இதன் சிறப்பு நோக்கி விசேடமான செல்வம் செல்வத்துள் செல்வம் என்ற காரணம் நோக்கி விபூதி எனவும் வழங்கப்பெறும் என்பர்.[158]

விபூதி கற்பவிபூதி, அனுகற்ப விபூதி, உபகற்ப விபூதி என மூவகைப்படும்.

1. கற்ப விபூதியாவது - கோமயமாகிற சாணம் தரையில் விழுவதற்கு முன் தூய்மையான கலத்தில் ஏற்று ஐந்து வகையான வில்வங்களுடன் கூட்டி நன்றாகப் புடமிட்டு விளையச் செய்ததாம்.
2. அநுகற்பமாவது - சாணத்தை முன்பு கூறியவாறு ஏற்று, ஐந்து வில்வங்களோடு கூட்டாது தனியே நீற்றப்பட்டதாம்.
3. உபகற்பமாவது - பூமியில் விழுந்த சாணத்தைக் கொண்டு, வில்வங்களுடன் கூட்டாது ஆக்கப்பட்டதாம்.[159]

*இந்த மூன்றனுள் கற்பவிபூதியே மிகச்சிறந்தது எனக் கூறுவர்.*

**திருநீறு பெறும் முறை**

*திருநீறு அணிபவர்கள், அதனை மற்றவரிடமிருந்து பெறும் போது,* குதிரை, பல்லக்கு, உயரமான இருக்கை அல்லது திண்ணையில் அமர்ந்தும், கொடுப்பவர் கீழிருக்க மேலிருந்து பெறுதல் கூடாது. ஒரு கையால் மூன்று விரல்களாலும் வாங்கினாலும் அதை தாம்பூலம் இட்டுக் கொண்டும், அசுத்தமான இடத்திலும் நின்று பூசிக் கொண்டாலோ, அல்லது திருநீறு கொடுப்பவரிடம் வேண்டாம் என்று மறுத்தாலோ அவர்களுக்கு நரகம் கிட்டும்[160]

*என்று குமரேச சதகம் அறிவுறுத்துகிறது.*

**திருநீறு அணியும் முறை**

நீறில்லா நெற்றி பாழ்[161]

*என்பது ஔவை வாக்கு. திருநீறு அணியாத நெற்றி பாழாகும். திருநீற்றினை எவ்வாறு அணிதல் வேண்டும் என்பதற்கான விதிகளை குமரேச சதகம் மற்றும் அண்ணாமலைச் சதகம் போன்றவை வகுத்துரைக்கின்றன.*

திருநீற்றைக் குழைத்துத் தலைமேல் மூன்று அங்குலமும், நெற்றியில் நெல் அல்லது எள் அளவு இடைவெளிவிட்டு முப்பட்டையாக எட்டு அங்குல அளவோ அல்லது திரிசூல வடிவிலோ அணிதல், மார்பிலும் புயத்திலும் ஆறு அங்குலமும், முழங்கை, மணிக்கட்டு இவற்றில் சிறிதளவும், உந்தியில் ஓர்

அங்குலமும், கழுத்து மற்றும் இடுப்பில் மூன்று அங்குலமும் இடல் வேண்டும் என்பது மகுடாகம விதி[162]

*எனவும், மேலும்,*

வைதீகர், ஆதிசைவர் முதலிய அந்தணர் 12 அங்குலமும், அரசர் 9 அங்குலமும், வைசியர் ஏழு அங்குலமும், வேளாளர் ஆறு அங்குலமும், மகளிர் நான்கு அங்குலமும் நெற்றியில் அணிய வேண்டும்[163]

*என்னும் விதிமுறைகளை அண்ணாமலைச் சதகத்தில் காணமுடிகின்றது.*

*உரிய நேரத்தில் முறைப்படி திருநீறு அணிவதால் ஏற்படும் நற்பலன்களையும் சதக இலக்கியம் குறிப்பிடுகின்றது.*

**திருநீறு அணிவதால் ஏற்படும் பயன்கள்**

*முறைப்படி ஆக்கப்பட்ட திருநீறு குற்றங்கள் களைந்து இருவினைகளை அகற்ற வல்லது என்பதை சேக்கிழார்,*

ஆதார மாயனைத்தும் ஆகிநின்ற அங்கணன்எம் பெருமான்
நீர்அணிந்த வேணிக்
காதார்வெண் திருக்குழையான் அருளிச்செய்த கற்பம்அநு
கற்பம் உபகற்பந் தானாம்
ஆகாதென் றங்குரைத்த அகற்பம் நீக்கி ஆமென்று
முன்மொழிந்த மூன்று பேத
மோகாதி குற்றங்கள் அறுக்கும் நீற்றை மொழிவதுநம்
இருவினைகள் கழிவதாக[164]

*எனப் பெரியபுராணத்தில் கூறுவது இவண் காணத்தக்கது.*

*திருநீற்றால் ஏற்படும் பயன்களைக் குமரேச சதகம் குறிப்பிடும்போது,*

பத்தியொடு சிவசிவா என்றுதிரு நீற்றைப்
பரிந்துகை யாலெடுத்தும்
பாரினில் விழாதபடி அண்ணாந்து செவியொடு
பருத்தபுய மீது ஒழுக
நித்தம்மூ விரல்களால் நெற்றியில் அழுந்தலுற
நினைவாய்த் தரிப்பவர்க்கு

நீடுவினை அணுகாது தேகபரி சுத்தமாம்
நீங்காமல் நிமலன் அங்கே
. . . . . . . . . . . . . . . . . .
சஞ்சலம் வராதுபர கதியுதவும்[165]

*என்கிறது. திருநீறு பூசுவதால் வினை அகலும் என்பதை,*

கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை
மங்காமல் பூசி மகிழ்வரே யாமாகில்
தங்கா வினைகளும் சாரும் சிவகதி
சிங்கார மான திருவடி சேர்வரே[166]

*என்னும் திருமந்திரப் பாடல் உணர்த்துவதும் இங்கு கொள்ளத்தக்கது.*

**உருத்திராக்கம்**

*சிவசொரூபமாக விளங்குபவர்கள் சிவ பூசை செய்யும் காலத்தில் உருத்திராக்கம் அணிய வேண்டிய விதிமுறைகளை அண்ணாமலைச் சதகம் குறிப்பிடுகின்றது. உடம்பில் எந்த இடத்தில் எத்தனை மணிகள் அணிய வேண்டும் என்பதை,*

தலை உச்சியில் - ஒரு மணியும், இரு காதுகளிலும் பன்னிரண்டு மணியும், தலையில் நாற்பது மணிகளும், கழுத்தில் முப்பத்திரண்டும், மார்பில் நூற்றெட்டும், முழங்கையில் இருபத்தாறும், மணிக்கட்டில் இருபத்திரண்டு மணிகளும் அணிந்திருத்தல் வேண்டும்[167]

*என்கிறது அண்ணாமலைச் சதகம்.*

*மேலும், எத்தனை உருத்திராக்கம் கொண்ட மணிமாலையைக் கொண்டு செபம் செய்வதால் ஏற்படும் பலன்களையும் நாம் அறிந்து கொள்கிறோம். இருபத்தைந்து உருத்திராக்கம் கொண்ட மணிமாலையில் செபம் செய்யின் முக்தி கிட்டும் எனவும்,*

| | | |
|---|---|---|
| *இருபத்தேழு மணிகள்* | - | *செல்வம் பெருகும்* |
| *முப்பத்திரண்டு மணிகள்* | - | *கல்வி சிறக்கும்* |
| *பதினைந்து மணிகள்* | - | *தீங்கை நாடிய மந்திரப் பிரயோகம்* |
| *பதின்மூன்று மணிகள்* | - | *உச்சாடனப் பயனும் கிட்டும்* |

*என்பதை,*

செய்யஇரு பத்தைந்து ருத்திர மணிக்கோவை
சேர்த்துசெபம் அன்பொடுசெயிற்
செப்பரிய முத்திதரு மூவொன்ப தக்கமணி
செல்வமேன் மேலாயிடும்
பையவெண் ணான்குமணி கல்விநல முந்தரும்
பதினைந்து மரபுசாரப்
பாலதாம் பதின்மூன்று மேவும் உச்சாடன
பலந்தருஞ் செபமாலிகை[168]

*எனும் அண்ணாமலை சதகப்பாடல் குறிப்பிடுகின்றது.*

*அதேநேரம் செபமாலையைச் சிறுவிரலில் பொருத்திச் செய்யின் ஞானமும், பவித்திர விரலில் பொருத்திச் செய்யின் பொன் பொருள் தரும். நடுவிரலைக் கொண்டு செபம் செய்யின் நோயும் பகையும் உண்டாகும் என்னும் கருத்து வியப்பைத் தருகின்றது.*

*உருத்திராக்க மணியைக் கொண்டு செபம் செய்பவர் அமரும் திசையைக் கொண்டு பலாபலன்கள் அமைகின்றன.*

*கிழக்கு முகமாக இருந்து செபம் செய்தால் வசியம் உண்டாகும் என்றும், தென்கிழக்கு திசை (அக்னிமூலை) நோய் நீங்கும். தென்திசை தீமை ஏற்படும். தென்மேற்கு திசையில் வறுமையும், மேற்கில் பொருட்செலவும், வடமேற்கு திசை (வாயுதிசை) உச்சாடன பலனும், வடக்கில் சொர்ணமும் கல்வி நலமும் தோன்றும். வடகிழக்கு (ஈசானிய) முக்திப் பேறு வாய்க்கும் என்று சிவாகமங்களில் கூறப்பட்டுள்ளமையை அண்ணாமலைச் சதகம் எடுத்துரைக்கின்றது.*

**வழிபாட்டு முறைகள்**

**திருத்தலங்கள் (சைவம்)**

*நாட்டில் உள்ள சிவத்தலங்களின் எண்ணிக்கையைத் தொகுத்துத் தருகிறது வடிவேல் சதகம் (45). அவை,*

| | | |
|---|---|---|
| *கயிலாய மலை* | - | *1* |
| *துளுவ நாட்டில்* | - | *1* |
| *வடநாட்டில்* | - | *5* |
| *கொங்கு நாடு* | - | *7* |

| | | |
|---|---|---|
| *பாண்டிய நாட்டில்* | - | *14* |
| *மலைநாடு* | - | *2* |
| *சோழநாடு* | - | *196* |
| *மலையாளம்* | - | *15* |
| *ஈழநாடு* | - | *42* |

*ஆக 284 தலங்கள் ஆகும். இத்தலங்களைக் கண்டு வந்தவர்க்குப் புண்ணியமும் செல்வமும் சேரும் என்பது கூறப்பட்டுள்ளது. 108 விஷ்ணு தலங்களின் பட்டியலை வடிவேல் சதகம் (46) குறிப்பிடுகின்றது.*

## அபிடேகப் பொருட்கள்

*சிவபெருமானுக்குரிய அபிடேகப் பொருட்கள் பற்றி சதக இலக்கியங்கள் மிகுதியாக எடுத்துரைக்கின்றன.*

சுத்தசலம் அபிடேக நல்லெண்ணெய் அரிசிமாத்
தூள்மஞ்சள் நெல்லிமுள்ளி
தூபஞ்ச கௌயமோடு ஆவினெய் பால்தயிர்
சுவையான பஞ்சாமிர்தம்
உற்றபல மாக்கதலி மாதுளையும் எலுமிச்சை
யோங்குதம ரத்தை நார்த்தை
ஒண்கனிச் சுளைகுளஞ் சித்தேன் திரட்டுபால்
உயர்கருப் பஞ்சாறுடன்[169]

*இளநீர், அன்னம், வில்வநீர், தபனநீர் என அண்ணாமலை நாதருக்குரிய அபிடேகப் பொருட்கள் பற்றி அண்ணாமலைச் சதகத்தில் கூறப்பட்டுள்ளன.*

*மாதந்தோறும் வரும் பௌர்ணமி நாளன்று செய்யப்படும் அபிடேகப் பொருட்களாவன:*

| | | |
|---|---|---|
| *சித்திரை* | - | *மரிக்கொழுந்து* |
| *வைகாசி* | - | *சந்தனம்* |
| *ஆனி* | - | *மா, பலா, வாழை* |
| *ஆடி* | - | *சர்க்கரை* |
| *ஆவணி* | - | *அதிரசம்* |
| *புரட்டாசி* | - | *காய்ச்சித் திரட்டிப்பால்* |
| *ஐப்பசி* | - | *அன்னம்* |

| | | |
|---|---|---|
| கார்த்திகை | - | தீபம் |
| மார்கழி | - | நெய் |
| தை | - | தேன் |

மாசி, பங்குனி ஆகிய மாதங்களில் பவுர்ணமி அன்று தயிர் கொண்டு அபிடேகம் செய்தல் வேண்டும் என்று அண்ணாமலைச் சதகம் குறிப்பிடுகின்றது.

**அருச்சனை**

சிவபெருமானை ஓராயிரம் பூக்கள் கொண்டு அர்ச்சிப்பதை விட ஒரு வில்வ இலை மேலாகும் என்கிறது அண்ணாமலைச் சதகம். இதனை,

ஓராயி ரம்பூவி னால்அருச் சித்தனிகர்
ஒருவில்வம் அர்ச்சித்தலாம்
பேராயிரம் சொல்லும் மந்திரம் நிகர்க்கும்ஒரு
பெருமுத்தி பஞ்சாக் கரம்[170]

எனும் பாடல் வாயிலாக அறிந்து கொள்ளலாம்.

**பூசைக்கு உரிய மலர்கள்**

இறைவனைப் பூசித்தற்குரிய மலர்களும் அம்மலர்களால் பூசித்தால் ஏற்படும் பலன்களையும் சதக இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

வெண் புஷ்பத்தால் பூசித்தால் அனைத்து விருப்பங்களும் நிறைவேறும்; மஞ்சள் நிற பூவினைப் பூசித்தால் செல்வம் தரும். பகைவரை அழிக்க நீலமலரால் பூசிக்க வேண்டும். தங்கநிற மலரால் பூசித்தால் ராஜசூய யாகம் செய்த பலனைத் தரும்[171]

என்று ஆலய அர்ச்சனை என்ற நூலில் சிவராமகிருஷ்ண சர்மா குறிப்பிடுவது இவண் பொருத்தமுடையதாகிறது.

சிவபூசைக்குரிய நாட்களும் அவற்றிற்குரிய மலர்களும் பலன்களும் வடிவேல் சதகத்தில் (52) கூறப்பட்டுள்ளன.

| | | | | |
|---|---|---|---|---|
| ஞாயிறு | - | வில்வம் | - | அட்டமாசித்திகள் வாய்க்கப்பெறும் |
| திங்கள் | - | துளபம் | - | செல்வம் உண்டாகும் |
| செவ்வாய் | - | விளாம்பூ | - | அன்புக்குரிய மைந்தர்கள் அமைவார்கள் |
| புதன் | - | மாதுளம்பூ | - | மெய்ஞ்ஞானம் உண்டாகும் |
| வியாழன் | - | வங்கமலர் | - | கல்வி |

*வெள்ளி - நாவற்கொழுந்து - அரசபோகம்*

*சனி - விஷ்ணுகிரந்தி - நோயற்ற வாழ்வு தரும்*

*என்பதை,*

ஆதிவா ரந்தனின் வில்வமுக் கிளையதும்
அம்புலிவார மதிலே
அதிகவெண் துளசியுஞ் செய்தனில் வினாவிலே
அரும்புதன் மாதளையுமே
நீதிசேர் குருவினில் வங்கமும் வெள்ளியில்
நீழ்நாவ லின்கொழுந்தும்
நீலனாஞ் சனியினின் விஷ்ணுகரந் திப்பூவும்
நித்தமுந் தவறாமலே[172]

*என்னும் பாடல் கொண்டு அறியமுடிகின்றது.*

*வில்வம், கொன்றை, மாந்தளிர், புன்னை, மல்லிகை, சதகுப்பை, பருத்தி, ஊமத்தை, வெண்தாமரை, வெண்பட்டி வழுதுணை, செந்தாமரை, நறும்பச்சை, காயாம்பூ, மருக்கொழுந்து, மந்தாரை, பன்னீர், முல்லை, மாதுளம், ஆத்தி, அறுகு, அழிஞ்சில், ஆவாரை, செவ்வந்தி, குதம்பை, வெட்சி, பூளைமலர், நாரத்தை, ஞாழல் ஆகியன பூசைக்கு உரிய மலர்கள் என அண்ணாமலைச் சதகம் (45) குறிப்பிட்டுள்ளது.*

**பூசைக்கு ஆகாத மலர்கள்**

- *அரசு, பூசணி, எருக்கு, ஆமணக்கு ஆகிய இலைகளில் எடுத்த பூக்கள்.*
- *ஈச்சவோலை, பனையோலை ஆகியவற்றால் பின்னப்பட்ட கூடைகளில் எடுத்த பூக்கள்.*
- *இடது கையால் பறித்த பூக்கள்.*
- *வெறுங்கையால் கொண்டு வந்த பூக்கள்.*
- *வெண்மையான ஆடைகளில் எடுத்த பூக்கள்.*
- *அசுத்தமான இடத்தில் எடுத்த பூக்கள் மற்றும் தரையில் உதிர்ந்த பூக்கள், நறுமணத்தை முகர்ந்து பார்த்த பூக்கள்*

*என இவ்வாறான பூக்களை சிவபூசைக்குப் பயன்படுத்துதல் குற்றமாகும் என சிவாகமங்கள் கூறுகின்றன என்பதை அண்ணாமலைச் சதகம் (44) எடுத்துரைக்கின்றது.*

**தீபங்களின் பெருமை**

*ஆலயங்களில் தேங்காய் எண்ணெயில் ஒரு கோடி தீபம் ஏற்றுவதற்குப் பதில் நல்லெண்ணெயில் ஒரு தீபம் ஏற்றுவதற்குச் சமம். ஒரு கோடி நல்லெண்ணெய் விளக்கிற்கு பதில் பசு நெய்யில் ஒரு தீபம் இடுதல். பசுநெய்யில் ஓராயிரம் தீபம் ஏற்றுவதற்கு இணையானது இலுப்பை நெய் கொண்டு ஒரு சுடர் ஏற்றுதல், இலுப்பை நெய்யில் ஓராயிரம் சுடர் ஏற்றுவதற்கு இணையாக ஒரு கற்பூர தீபம் விளங்குகிறது. கற்பூர தீபம் ஏற்றுவதன் பெருமையை அண்ணாமலைச் சதகம் குறிப்பிடுகின்றது.*

## 4.3. துதி சதகங்கள்

### 4.3.1. திருச்சதகம்

*வடமொழியில் கி.பி. ஆறாம் நூற்றாண்டு முதல் சதக இலக்கியம் செல்வாக்குப் பெற்று விளங்கியது. தமிழ்மொழியில் கி.பி. பதினோராம் நூற்றாண்டு வரை சதக இலக்கியம் தோற்றம் பெறவில்லை. ஆயினும் கி.பி. 8 ஆம் நூற்றாண்டில் மாணிக்கவாசகர் இயற்றிய 'திருச்சதகம்' தமிழின் முதல் சதகமாகக் கொள்ளலாம். சதக இலக்கியங்களுக்குரிய எந்த அமைப்பும் பின்பற்றப்படாது பெயரளவில் மட்டும் முதல் சதகமாக விளங்குகிறது. இந்நூல் வடமொழியைப் பின்பற்றி இயற்றப்பட்ட போதிலும் அவ்விலக்கிய வகையின் பெயரிலேயே வழங்கப்படுகின்றது.*

*பக்தி வைராக்கிய விசித்திரம் எனப்படும் திருச்சதகத்தில் இடம்பெறும் கருத்துக்கள் இங்கு எடுத்துக்காட்டப்படுகின்றன. இறைவா உன்னை வணங்கி உன் திருநாமத்தை உச்சரிக்கும்படி அருளுவாயாக. உன்னையே எண்ணி உள்ளம் உருகி நான் பேசும் வார்த்தைகளைக் கேட்டவர் என்னைப் பித்துப் பிடித்தவன் என்று சொல்லுமளவிற்கு என்னை ஆக்குவது எக்காலம் என்கிறார் ஆசிரியர்.*

தவமே புரிந்திலன் தண்மலர்
    இட்டுமுட் டாதிறைஞ்சேன்
அவமே பிறந்த அருவினை
    யேன்உனக் கன்ப ருள்ளாஞ்
சிவமே பெறுந்திரு வெய்திற்றி
    லேன்நின் திருவடிக்காம்
பவமே யருளுகண் டாயஅடி
    யேற்கெம் பரம்பரனே.[173]

*இறைவன் திருவடியை அடைய விரும்பும் மாணிக்கவாசகரின் மனநிலையை இப்பாடல் புலப்படுத்துகின்றது.*

*காளையை வாகனமாக உடையவன், உமையம்மையை தன் இடப்பாகம் கொண்டவன், தோள்களில் திருநீறு அணிந்தவன், பாம்பினை ஆபரணமாக அணிந்தவன் என்றும் சிவபெருமானின் தோற்ற வர்ணனைகள் சுட்டிக் காட்டப்பெறுகின்றன.*

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை யென்சொல்லி வாழ்த்துவனே.[174]

*இறைவன் பஞ்சபூதங்களாகவும், மும்மூர்த்திகளுள் தலைவனாகவும், முத்தொழில்களையும் புரிபவனாகவும் விளங்கும் தன்மை குறிப்பிடப் பெறுகின்றது.*

*நாயின் தன்மை உடையவனான எனக்கு உலகப் பற்றாகிய அகப்பற்று, புறப்பற்று ஆகிய இருவகைப் பற்றை விடுவதற்கு அருள்செய்ய வேண்டுகிறார். உண்மைப் பொருளை உணராது இவ்வுலக மாயையில் சிக்கி கேட்டினைத் தேடிக் கொண்டேன். மாயையிலிருந்து விடுபட்டு இறைவன் திருவடியாகிய பேரின்ப வீட்டை அருளுமாறு வேண்டுகிறார்.*

*மாணிக்கவாசகரின் இத்திருச்சதகம் உலகப்பற்றை விடுத்து இறைவன் திருவடியில் வீடுபேறு அடைவதற்கான வழிகளை எடுத்துரைக்கின்றது.*

**துதிசதகங்கள்**

*இறைவனைப் போற்றித் துதிக்கும் வகையில் பாடப்பட்ட சதகங்கள் துதிசதகங்கள் எனப்பட்டன. அருணாசல சதகம், எம்பிரான் சதகம், அவையாம்பிகை சதகம் போன்றவை குறிப்பிடத்தக்க துதிசதகங்களாக விளங்குகின்றன.*

### 4.3.2. துதி சதகங்களில் பாட்டுடைத் தலைவனின் தோற்ற வர்ணனை

*துதி சதகங்களான அருணாசல சதகம், எம்பிரான் சதகம், அவையாம்பிகை சதகம் போன்ற நூல்கள் தாம் பாட விரும்பும் பாட்டுடைத் தலைவரின் தோற்ற வர்ணனையைச் சிறப்பித்துப் பாடுகின்றன. அருணாசல சதகம் சிவபெருமானையும் எம்பிரான் சதகம் திருமாலையும், அவையாம்பிகை சதகம் மாயூரம் அவையாம்பிகை அன்னையையும் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு விளங்குகின்றன.*

**சிவபெருமானின் தோற்ற வர்ணனை**

பொன் பாவுகொன் றையினோடு வான்
புனலாறுவெண் மதிசூடுநீ[175]

முன்னாளிதழ் நறுமாலையும்
முரிதோலுமே புனையத்தரும்
பொன் னாரித ழியினோடும் வெம்
புலியானைமற் றிவைதம்மொடு
மன்னாப்பயி ரறவெண் ணியோ
வளர்மாமலை யுருவாயினை[176]

நதி மதி யாடரவு
அப்பார் சடை முடியண்ணலே[177]

மானேந்தினை மழுவேந்தினை
மதியேந்தினை நதியேந்தினை
கானேந்திலா எருக்கேந்தினை
கமலன்முடி கரத்தேந்தினை
வானேந்தினார் எலும்பேந்தினை
வறியேன்மொழி யையும் ஏந்திநல்
ஆனேந்தவே வந்தாளுவாய்
அருணாசலா! அருணாசலா![178]

*என்னும் அருணாசல சதகப் பாடல் அடிகளில் குறிப்பிடப்பட்டுள்ள தோற்ற வர்ணனைகளாவன,*

- *சிவபெருமான் திருமுடியில் கொன்றை மலர், பிறை, கங்கை, அரவு சூடியவர்.*
- *வில்வ மாலை, எருக்கம்பூ மாலை சூடியவர்.*
- *திருக்கரத்தில் மான், மழு, பிரம்மகபாலம், சூலப்படை ஏந்தியவர்.*
- *மான் தோல், புலி, யானைத் தோலோடு விளங்குபவர்.*
- *திருமாலின் விழிமலர் பாதத்தில் விளங்குதல்.*
- *உமையவளை இடப்பாகம் கொண்டவர்.*
- *கரிய மிடறும், பச்சை, பொன், சிவப்பு, வெண்மை, கரிய நிறம் என ஐந்து வண்ணங்களாக விளங்கும் தன்மை (இங்கு) இந்நூலுள் குறிப்பிடப்பட்டுள்ளது.*

**திருமால்**

*எம்பிரான் சதகம் நூலில் பாடப்பட்டுள்ள திருமாலின் தோற்ற வர்ணனை (பொலிவு) இங்குக் குறிப்பிடப்படுகின்றது.*

திருமாது வீற்றுஇருக்கும் கமல மார்பா!
திகிரிசங்கம் தரித்துஅருளும் செய்ய கையா!
கருமாணிக் கக்கிரிபோல் நிறத்த மெய்யா!
கதிர்இரவி மதிஇரண்டும் கண்ஆம் கண்ணா!
அருமா மறைப்பொருளாம் ஆதி தேவா!
அனைத்துஉலகும் படைத்து அளித்து அழிக்கும் ஐயா![179]

பாதத்தில் பிரியாமல் இருக்கும் கங்கை
பரமேட்டி பிறந்ததுஉந்தி பதுமத் தண்பூ
தீதற்ற கௌத்துவமா மணிபூண் ஆரம்
தேசுற்றபீ தாம்பரம்நீ உடுக்கும் கூறை.[180]

சக்கரம்சங்கு உயர்கதைவாள் தனுவோடு ஐந்தும்
தரித்தருளும் பரம்புருடா கமலக் கண்ணா
மிக்கபரா பரமூர்த்தி துளபத் தாமா
விறலுடனே மண்ணளந்து உண்டுஇருக்கும் சோதி[181]

*என்னும் இப்பாடல்கள் மூலம், திருமால் திருக்கரங்களில் பாஞ்சசன்யம் என்னும் சங்கையும், சுதரிசனம் என்னும் சக்கரத்தையும் கௌமோதகி என்னும் கதையையும் நஞ்சுகம் என்னும் வாளையும் சார்ங்கம் என்னும் வில்லையும் தரித்துக் காட்சியளிப்பது குறிப்பிடப்பட்டுள்ளது.*

*மார்பில் திருமகளும், துளசி மாலையும் விளங்குகிறது. பீதாம்பரத்தை உடுத்தியவர். தாமரை மலர் போன்ற கண்களை உடையவர். சூரியனும் சந்திரனும் இரு கண்களாக விளங்குபவர். கருமாணிக்ககிரி போல் கறுத்த மெய்யை உடையவர் என்றும் திருமாலின் தோற்றப் பொலிவை எம்பிரான் சதகம் விளக்குகின்றது.*

**அம்பிகை**

*மயிலாடுதுறையில் கோயில் கொண்டிருக்கும் அன்னை அவையாம்பிகையின் தோற்றப்பொலிவு இங்கு குறிப்பிடப்படுகின்றது.*

பாதாம் புயத்தில் சிறுச தங்கைப் பணியும்
சிலம்பும் கிண்கிணியும்
படர்பா டகமும் தண்டையுடன் பணியும்
கொலுசும் தழைத்தருளும்
பீதாம்பரமும் துவற்கிடையும் பிரியாது
அரைஞாண் மாலைகளும்
பெருகும் தரள நவமணியும் புனையும்
குயமும் இருபுறமும்[182]

*என்னும் பாடலில் அன்னை அணிந்திருக்கும் அணிகலன்கள் குறிப்பிடப் பட்டுள்ளன.*

*பாதம் - சலங்கை, பணி, சிலம்பு, கிண்கிணி, பாடகம், தண்டை, கொலுசு ஆகியவையும் பீதாம்பரமும் (பட்டாடை) இடையில் அரைஞாண் கயிறு என்னும் ஆபரணமும் மார்பில் முத்து, நவரத்தினங்களால் ஆன மாலையும், மீன் போன்ற விழிகளும், தாமரை மலர் போன்ற நெற்றியும் பொன்போலும் சடையும், மதிமுகமும் கொண்டு பாம்பைத் தோளில் அணிந்தவளுமாய் அன்னை காட்சிதரும் அழகை அவையாம்பிகை சதகம் எடுத்துரைக்கின்றது.*

### 4.3.3. இறைவனின் இயல்புகள்

*அருணாசல சதகம் சிவபெருமானின் இயல்புகளைக் குறிப்பிடுமிடத்து, இறைவன் ஆறு ஆதாரங்களைக் கடந்து விளங்குபவர் என்றும் பஞ்சபூதங்களாகவும், மும்மூர்த்திகளாகவும் மற்றும் உலகில் உள்ள எல்லாப் பொருட்களிலும் இறைவன் விளங்கும் தன்மையைக் குறிப்பிடுகின்றது.*

*வைணவ சதகமான எம்பிரான் சதகமும் மேற்சொன்ன அனைத்துமாய் திருமாலும் விளங்குவதாகக் கூறுகின்றது.*

பாரின்கணே ஐந்தாகினை
பகர்நீரிடை நான்காகினை
சேருந்தழற் கண்மூன்றெனச்
செறிந்தாய்வளிக் கிரண்டாகினை
நேரும்விணில் ஒன்றாகினை
நிமிரும் உயிர்க்கு உயிராகினை
ஆருன்நிலை அறிவார்சொலாய்
அருணாசலா! அருணாசலா![183]

*என்றும் இறைவன் பஞ்சபூதங்களாக விளங்கும் தன்மையை அருணாசல சதகம் எடுத்துரைக்கின்றது.*

பரப்பிரம்மம் ஆம்ஆதி மூலமேநீ
படைத்தளித்திட்டு அழித்துவிளை யாடஎன்றே
திருத்தமுடன் பிரமாவாய்ச் சிருட்டித்து அன்றே
ஸ்ரீபதியாம் விஷ்ணுவாய் உயிரைக் காத்து
உருத்தினராய் உயிரைஎல்லாம் சங்கரித்திட்(டு)
ஓர்உருவே மூன்றுருவாய் மூன்றும் ஒன்றாய்[184]

*என்னும் எம்பிரான் சதகப்பாடலில், திருமால் மும்மூர்த்தியாகவும் விளங்கும் தன்மை சுட்டிக் காட்டப்பெற்றுள்ளது.*

*அவையாம்பிகை சதகம் அன்னையின் இயல்புகளைக் கூறுமிடத்து,*

மூலத் துஉதிக்கு ஞாயிறு போல் முளரி
இதழாய்ச் சதுர்முகனாய்
மூலஉந்தித் திருமாலாய் மூளும்
கால காலனுமாய்

மேலுற் றுஅருளும் சதாசிவனும் விரியும்

இதம்ஒன் றருள் பரையும்

வித்தா ரமுமாய் உலகனைத்தும் விரிவாய்

நின்ற விரிசுடரே[185]

*என்னும் பாடலில் அம்பிகை, நான்முகனாக, திருமாலாக, சிவபெருமானாக, மும்மூர்த்திகளுக்கும் மேலான தன்மையில் விளங்கி அருள் செய்கின்ற சதாசிவனாக (படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களைச் செய்து உயிர்களுக்கு அருள்பவராக), உமையம்மையாக உலகமெங்கும் பரந்து நிற்கும் விரிசுடராக அன்னை விளங்கும் தன்மை குறிப்பிடப்பட்டுள்ளது.*

### 4.3.4. இறைவனின் திருவிளையாடல்கள்

*அருணாசல சதகம், பிரம்மனுக்கும் திருமாலுக்கும் காட்சி தராது சிவபெருமான் சோதி வடிவாய் நின்றமையைக் குறிப்பிடுகின்றது.*

கடியார் துளவத் தொங்கலான்

கமலப்புது மலர் மேவினான்

படியூடிடந் தடி தேடவும்

பறந்தன்னமாய் முடி தேடவும்[186]

*என்னும் பாடல் அடிமுடி தேடிய வரலாற்றைச் சுட்டுகின்றது. மேலும் மாணிக்கவாசகருக்காக இறைவன் பாண்டிய மன்னனிடம் பிரம்படி பட்ட வரலாற்றை,*

பொடிபட்டநின் திருமேனியிற்

பொரு பூழியன் கையிற் பிரம்பு

படிபட்டபோது என்பட்டதோ

அருணாசலா! - அருணாசலா[187]

*என்னும் பாடல் உணர்த்துகின்றது.*

*சுந்தரரைத் தடுத்தாட்கொண்டது, கண்ணப்பன் கண் கொடுத்தது, கல்லாணை கரும்புண்ணுமாறு செய்தது, பாணனுக்காக விறகு சுமந்தது, சந்திரனை தலையில் சூடியது போன்ற சிவபெருமான் நிகழ்த்திய அற்புதச் செயல்களை திருவிளையாடல்களை அருணாசல சதகம் எடுத்துரைக்கின்றது.*

**எம்பிரான் சதகம்**

*காஞ்சிபுரம் அத்திகிரி வரதராசனைப் புகழ்ந்து பாடும் இந்நூல் திருமாலின் தசாவதாரங்களையும் பாடுகின்றது. எனினும் கிருஷ்ணவதாரம் சிறப்பித்துப் பாடப்பட்டுள்ளது.*

*சபரிக்கு முக்தியளித்தது, கஜேந்திர மோட்சம், பாஞ்சாலிக்கு ஆடை வழங்கியமை, பிரளயக் காலத்தில் உலகைக் காத்தமை, இரணியனை வதைத்தல், பிரகலாதனைக் காத்தல் ஆகிய நிகழ்வுகளை எம்பிரான் சதகம் எடுத்துரைக்கின்றது.*

ஆவணிரோ கிணிநாளில் அமரபட் சத்து
அஷ்டமியில் சசிஉதிக்கும் வேளை தன்னில்
தேவர்தொழும் வடமதுரா புரியில் தோன்றி
சிசுவடிவாய் வசுதேவன் கைம்மீது ஏறி
நீவறில்ச யந்திநாள் வனத்துக் காளி
நேயமுடன் கனிகடலில் உகந்து கொண்டே
யாவருக்கும் அரியபதம் காளிக்கு ஈந்தாய்[188]

*என்னும் பாடல் கிருஷ்ணனின் பிறப்பு வரலாற்றைச் சுட்டுகின்றது.*

**அவையாம்பிகை சதகம்**

*அன்னை அணுவுக்குள் அணுவாய் உள்ளவள் என்றும், எண்திசை பாலகர்களும் வணங்கக் கூடிய இயல்பினள் என்பதும், ஐம்புலன்களால் மனம் கலக்கமுறாது காத்தருள்பவள் என்றும் இருவினைகளைப் போக்கக் கூடியவள் என்றும் அன்னையில் அருளிச் செயல்களை அவையாம்பிகைச் சதகம் சிறப்பித்துப் பாடுகின்றது.*

### 4.3.5. அருள்புரிய வேண்டும் தன்மை

*இருவினைகள், வறுமை, பகை, மனக்கவலை ஆகியவற்றால் மனம் அழுந்தாதவாறு அருள்புரிவாய் என்றும், மும்மலங்களை அறுத்து, வினைகளைப் போக்கி உற்றார் பகைத்த போதும் பகைக்காது அன்னை அருள்புரியுமாறு இந்நூலாசிரியர் வேண்டுவதை அவையாம்பிகை சதகம் குறிப்பிடுகின்றது.*

மலமாக் காதி அகலஎன்பால் வந்துன்
அருட்பால் தந்தருள்வாய்[189]

புல்லாகியே பூடாகியே

புழுவாகியே மரமாகியே

கல்லாகியே னும்நின்னகர்க்

கண்மேவிலேன். . .[190]

என்று எல்லாப் பிறப்பும் பிறந்த எனக்கு இப்பொல்லாப் பிறவி ஒழிய அருள்புரியுமாறு சிவபெருமானை வேண்டுகிறார். அருணாசல சதகம் குறிப்பிடுவது போன்று இப்பிறவி ஒழிய அருள்புரியுமாறு திருமாலை வேண்டுகிறார் அரிபக்தர் கோபாலகிருஷ்ணர்.

ஐம்பொறியு முடையநான் அலைந்திடாமல்

இணையில்உப தேசத்தால் திருத்திக் காக்கற்கு

எழில்குருவாய் உதித்தனையே எம்பிரானே[191]

இறைவன் குருவாக இருந்து அருள்புரிவதாகப் பாடுகிறார்.

அருணாசல சதகப் பாடலில் உயிர்கள் பிறவி கொள்ளாதவாறு முக்தி தருபவரும், மீண்டும் உயிர்களுக்குப் பிறவியை வழங்குபவரும், மீண்டும் அவ்வுயிருக்கு இறப்பை வழங்குபவரும் சிவபெருமானே ஆவார். எனவே மறவாது இறைவனை துதிக்கவும், அடியேனை ஆட்கொண்டு பிறவா (நெறியை) நிலையை தந்து அருளுமாறு இந்நூலாசிரியர் வேண்டுகிறார்.

## 4.4. வடமொழி சதகங்கள்

வடமொழியில் பர்த்ருஹரி இயற்றிய நீதிசதகம் வாழ்வியல் ஒழுகலாறுகளை, மக்களை நன்னெறிப்படுத்தும் நீதிகளை, மூர்க்க பத்ததி, வித்வத் பத்ததி, மானசௌர்ய பத்ததி, அர்த்த பத்ததி, துர்ச்சன பத்ததி, ஸுஜன பத்ததி, பரோபகாரப் பத்ததி, தைர்ய பத்ததி, தைவ பத்ததி, கர்ம பத்ததி என்னும் பத்துத் தலைப்புகளில் எடுத்துரைக்கின்றன.

### மூர்க்கர் குணத்தை மாற்ற இயலாது

மணலைப் பிசைந்து நெய் எடுக்கலாம், சுறாவின் பல் வரிசையில் முத்தை எடுக்கலாம். நடந்தே கடலை கடக்கலாம். தாம் பிடித்தது பிடி என்பவருக்கு எவ்வளவு எடுத்துரைக்கினும் உண்மை விளங்காது என்றும், இன்சொல் கூறி அறிவில்லாதவன் மனத்தை திருத்துதல் என்பது தாமரைத் தண்டின் நூலால் புலியைக் கட்டுவது போன்றதாகும் என்றும், நோய்க்கு மருந்துளது அறிவிலார்

*சிறக்க மருந்துளதோ என்றும் பல்வேறு உவமைகளுடன் மூர்க்கர் குணத்தை மாற்ற இயலாது என்பதை வலியுறுத்துகின்றது. மேலும்,*

அறிவிலார் தமக்கே யழகிய போர்வையாம்
விதியினா லமைந்ததாம் விரகுறு மௌனம்
சான்றோர் குழுவிற் சார்ந்திடும் போதில்
ஆன்ற வேரெணியா யறிவிலார்க் கமைவே[192]

*என்னும் நீதிசதகப் பாடல் அறிவிலாதவருக்கு மௌனமே அழகிய போர்வை என்றுரைக்கின்றது.*

**வித்வத் (கல்வி) பத்ததி**

*கல்வி அறிவால் சிறப்புற்று விளங்கும் தன்மை குறிப்பிடப் பட்டுள்ளது. கல்வியால் சிறப்புற்றோர்க்கு செல்வம் நீங்கினும் ஒரு குறையும் ஏற்படாது என்று கூறுகின்றது.*

புரையிலாக் கல்வி பொருந்தி யவற்கு
நிறைபொருட் செல்வம் நீங்கிலென் குறையே[193]

*என்றும்,*

பொருட்சுவைச் சித்தராம் புலவோர் தமக்கு
அருட்டிற வெற்றி யமைந்திட என்றும்
நல்லிசை யுருவாய் நிறைந்தவர் உடற்கு
இல்லையே மூப்புச் சாக்காட் டச்சம்.[194]

*அறிவிற் சிறந்த புலவர்களுக்கு மூப்பு, சாக்காடு, அச்சம் என்பது கிடையாது என்கிறது.*

**மானசௌர்ய பத்ததி**

*மானமுடைய உயர்ந்தோரின் குணத்தை இப்பகுதி விளக்குகின்றது.*

பிறப்பிறப் பமைந்த பீழையாம் சுழலில்
இறந்தவன் யாரோ பிறவா திருப்பவன்?
எவனது பிறப்பால் குடிமே லுறுமோ
அவனே பிறப்பவன், மற்றவர் பிறப்பெவன்?[195]

*என்னும் பாடல் இறந்தவர்களின் மீண்டும் பிறப்பவர் எவர் எனில் யாருடைய பிறப்பால் குடி உயர்வடையுமோ அவனே பிறப்பவன் ஆவான் என்கிறது.*

*இவ்வாறாக செல்வத்தின் பெருமை, கீழ்மக்களின் இயல்பு, உதவி செய்யும் மனப்பான்மை, முயற்சியை கைவிடாமை, துணிச்சல், விதியின் செயல்பாடுகள், வினைப்பயன் பற்றிய பல அரிய கருத்துக்களை உள்ளடக்கியதாக நீதிசதகம் விளக்குகின்றது.*

**வைராக்ய சதகம்**

*வைராக்கியம் - விருப்பமின்மை, இச்சொல் வடமொழியில் அகத்துறையைக் குறிக்கும். தனிமையை நாடி, உண்டியை சுருக்கி, மனம் வாக்கு காயங்களை அடக்கி எப்போதும் தியான யோகத்தில் ஆழ்ந்திருப்பதே வைராக்யம் என உரைப்பர்.*

*ஆசை இகழ்ச்சிப் படலம், விஷய சுகத்தை விடவேண்டும் எனல், யாசிக்கும் அவல நிலையைத் தூற்றுதல், இன்ப நுகர்ச்சிகளின் நிலையற்றத் தன்மை, காலத்தின் வல்லமை, துறவி-அரசன் சம்பாஷனை, உள்ளத்தை அமைதி வழியில் செலுத்துதல், அழிவற்ற மற்றும் அழியும் பொருட்கள், சிவ வழிபாடு, ஜீவன் முக்தனின் செயல்பாடு, தவ வலிமை எனும் பத்துக் கருத்துக்களை விளக்குகின்றது வைராக்ய சதகம்.*

ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும்.[196]

*அவா அழிந்தால் இன்ப வாழ்வைப் பெறலாம் என்பது வள்ளுவர் வாக்கு.*

*பர்த்ருஹரியும் ஆசையை இகழ்கிறார்.*

வலிபிர்முகமாக்ராந்தம் பலிதைரங்கிதம் சிர
காத்ராணி சிதிலாயந்தே த்ருஷ்ணைகா தருணாமதே![197]

*என்னும் வைராக்ய சதகப்பாடல் முதுமையால் முகத்தில் வளையங்கள் தோன்றி, தலையும் நரைத்து, எல்லா அங்கங்களும் தளர்ந்து விட்டன. ஆசை மட்டும் இளமைக் கோலத்திலேயே இருக்கிறது என்பதைக் காட்டுகின்றது.*

*எல்லாம் அறிந்த அறிஞர்களும் விஷய சுகங்களுக்கு பலியாவதைச் சுட்டிக் காட்டி 'மோஹத்தின் மஹிமைதான் என்ன இதன் மர்மத்தை புரிந்து கொள்ளாமல் இதில் தத்தளிப்பது எதனால் என்னும் கேள்விகளைக் கேட்டு, இன்ப நுகர்ச்சிகளை அறவே ஒழித்து விடுவது தான் நமக்கு மேல் நிலையைத் தரும் என்பதை கவி விளக்குகிறார். நம் மனத்தை அடக்கி நம் வசப்படுத்திக் கொள்ள வேண்டுமெனவும், பரம்பிரம்மத்தை அடையும் வழிமுறைகளையும் வைராக்ய*

*சதகம் எடுத்துரைக்கின்றது. வைராக்யத்தின் சாதனங்களான பற்றறுத்தல், அவாவின்மையை விளக்குவதாய் வைராக்ய சதகம் அமைந்துள்ளது.*

> கொஞ்சம் சிவகதைகளை கேட்பதுடனும், கொஞ்சம் தரிசனங்களுடனும், கொஞ்சம் துதிகளுடனும் சந்தோஷத்தால் மனத்தை உம்மிடம் அர்ப்பணம் செய்பவன் எவனோ, அவன் நிச்சயமாக இவ்வுடல் இருக்கும் பொழுதே சீவமுக்தி அடைந்தவன் ஆவான்[198]

*என்றும்,*

> ஆசை, கோபம் இவை அற்றவனாய் தியானத்தில் முயல்பவனாய் உள்ளவன் சீவமுக்தனே[199]

*என்றும், சிவானந்த லஹரி கூறும் கருத்துக்கள் வைராக்ய சதகத்திலும் இடம்பெற்றுள்ளன. இங்ஙனமே சீவன் முக்தனின் செயல்பாடுகளை வைராக்ய சதகம் விவரிக்கின்றது.*

கௌபீனம் சதகண்ட ஜர்ஜரதரம் கந்தா புநஸ்தாருசீ
நைஸ்சிந்த்யம் நிரபேக்ஷபைக்ஷமசநம் நித்ரா ச்மசாநே வநே![200]

*என்னும் பாடல் உயிருள்ள போதே முக்தியடைந்தவனின் நிலையைக் குறிப்பிடுகின்றது.*

**ஸ்ரீதயா சதகம்**

*உலக மாதாவாகிய தயாதேவியைப் பற்றிப் பாடப்பட்ட நூல். வடமொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்டதான இந்நூல் அன்னையே உலக உயிர்களை அரவணைத்துக் காப்பாற்றுகிறாள். அவளே தம் பாவங்களைப் போக்கி அருள வேண்டும் என்ற நிலையிலும் பாடல்கள் அமைந்துள்ளன.*

எவரையும் அழித்தற் கென்றே இனிய பாற்கடலில் வந்த
நவமுறும் ஆலகால விடத்தையும் நல்லதென்றே
சிவமுற உணர்த்தி ஈசன் உண்டிடச்செய் தயாவே!
இவனிடைச் செறிந்த பாவம் உண்டிடச் செய்யாய் ஏனோ[201]

*ஸ்ரீதயையாகிய அன்னையே பாற்கடலில் தோன்றிய நஞ்சினை சிவனை உண்ணச் செய்தாய். அதுபோல் என் பாவங்களையும் உண்ணச் செய்து அருள்புரிய வேண்டுகிறாள்.*

*நான் உன்னையே கதி என்று வந்துள்ளேன். எனக்கு நீ அருள்புரியவில்லையாயின் அடைக்கலமாக வந்தவரைக் காக்கத் தவறினாய்*

என்னும் பழிச்சொல்லுக்கு ஆளாக நேரிடும். ஆகையால் எனக்கு அருள்புரிவாயாக என்பதாய் பாடல் அமைந்துள்ளது.

காற்று வீசும் திசைக்கே பஞ்சு பறக்கும். அதுபோல முன்னை வினைப்பயனுக்கு ஏற்பவே இவன் ஆடுகிறான். அவனுக்கு அருள்புரிக என்று சிவபெருமானை ஆணையிடச் சொல்லி அன்னையை வேண்டுவதாய் பல பாடல்கள் அமைந்துள்ளன. இதனை,

“காற்று உய்க்கும் வழியில் பஞ்சு கடுகிடும் அ.ஃ.தேபோல்
ஆற்றலார் தெய்வமே! நீ ஆட்டிட ஆடினான்மேல்
ஏற்றருங் குற்றம் ஏற்றி, இவனை நீ முனிய வேண்டாம்
போற்றுக” என்று தாயே! ஆணையைப் புகுத்து வாயே[202]

என்னும் ஸ்ரீதயா சதகப் பாடல் குறிப்பிடுகின்றது.

## 4.5. தொகுப்புரை

- சதக இலக்கியங்களின் உள்ளடக்கமானது வரலாற்றுச் சதகங்கள், நீதி சதகங்கள், துதி சதகங்கள் என்னும் வகைப்பாட்டின் அடிப்படையில் விளக்கப்பட்டுள்ளது.
- வரலாற்றுச் சதகங்கள் மண்டல வரலாறு கூறுதல், தொண்டர் வரலாறு கூறுதல் என்னும் இரு வகைகளின் அடிப்படையில் அமைந்துள்ளன.
- மண்டலங்களின் வரலாறு கூறும் நோக்கில் மண்டல சதகங்கள் இயற்றப்பட்டுள்ளன.
- மண்டலங்களில் வாழ்ந்த வள்ளல்கள், அரசர்கள், புலவர்கள், நாயன்மார்கள், ஆழ்வார்கள், சித்தர்கள் ஆகியோர்களின் வரலாறுகளைப் பாடுகின்றன.
- மண்டலங்களின் எல்லைகள், நதிகள், திருத்தலங்கள், மற்றும் இறைவன் நிகழ்த்திய அற்புதங்கள் பற்றியும் அறிந்து கொள்ள முடிகின்றது.
- மண்டல சதகங்கள் வேளாளர்களைச் சிறப்பிக்கும் முகமாகப் பாடப்பட்டுள்ளன.
- வேளாளர்கள் கங்கைக் குலத்தைச் சேர்ந்தவர்கள் என்பது கூறப்பட்டுள்ளது.
- இவர்கள் திருமாலின் வழித்தோன்றி, அகத்திய முனிவரால் தென்நாட்டில் குடியமர்த்தப்பட்டவர்கள் என்பதும் அறியப்படுகின்றது.

- இவர்கள் பதினெண் குடியினராய் நாற்பத்தெட்டாயிரம் பேர்களாகத் தென்னாடு முழுக்கப் பரவியிருந்தனர்.
- ஆரிய வேளாளர், தென்னாட்டு வேளாளர் என இரு பிரிவினர் இருந்தமை உய்த்துணரப் படுகின்றது.
- ஆரிய வேளாளர் வெளிநாட்டிலிருந்து இந்தியா வந்தவர்கள் என்பதும் இந்தியாவின் பூர்வகுடி வேளாளர்கள் இவர்களைப் பாதுகாத்து வந்தனர் என்பது விளக்கமுறுகின்றது.
- இவர்கள் புலவர்களை ஆதரித்த பான்மை கொண்டு கொடைத் தன்மையில் சிறந்து விளங்கினர் என்பதை அறியமுடிகின்றது.
- வாக்குத் தவறாத வள்ளண்மையும், தமிழ் மீது கொண்ட பற்றும் புலப்படுகின்றது.
- வேளாளர்கள் அரசனுக்கு முடிசூட்டும் உரிமை உடையவர்கள் என்பதும் பெறப்படுகின்றது.
- அந்தணர், வணிகர், வேளாளர் ஆகிய மூவரின் வாழ்வும் வேளாளர்களைப் பின்பற்றியுள்ளது என்பதைக் குறிப்பிடுகின்றது.
- அவ்வம் மண்டலங்களில் வாழ்ந்த புலவர்கள், சான்றோர்கள், வள்ளல்கள், நாயன்மார்கள், ஆழ்வார்கள், குறுநில மன்னர்கள் ஆகியோர் வேளாளப் பெருமக்களாய் விளங்கியமையை மண்டல சதகங்கள் பறைசாற்றுகின்றன.
- அறுபத்து மூன்று நாயன்மார்களின் வரலாற்றினை திருத்தொண்டர் சதகம் எடுத்துரைக்கின்றது.
- அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் என்னும் நால்வகை வருணத்தாரின் இயல்புகள் பாடப்பட்டுள்ளதால் அக்காலத்தில் வருணப் பாகுபாடு மேலோங்கியிருந்தமையை அறிந்து கொள்ள முடிகின்றது.
- நற்செயல்கள் மற்றும் தீச்செயல்களை எடுத்துக்கூறி மக்களை நன்னெறிப்படுத்துகின்றன.
- இல்லறத்தில் உள்ளவர்களின் கடமைகள் கூறப்பட்டுள்ளன.
- பெண்களின் இயல்புகளின், வறுமையால் ஏற்படும் நிலை, ஈகையின் பயன்கள், விருந்தோம்பலின் சிறப்புகள் ஆகியவையும் பாடப்பட்டுள்ளன.
- கல்வி, செல்வம், புகழ், நிலையாமை பற்றிய செய்திகளையும் அறிந்து கொள்ள முடிகின்றது.

- உணவு, மருத்துவம், வாஸ்து, நம்பிக்கைகள், பக்தி-வழிபாட்டு முறைகள் பற்றி சதக இலக்கியங்களில் விரிவாக எடுத்துரைக்கப் பட்டுள்ளன.
- திருச்சதகம், அருணாசல சதகம், எம்பிரான் சதகம், அவையாம்பிகை சதகம் போன்றவை துதி நூல்களாக விளங்குகின்றன.
- இந்நூல்கள் இறைவனின் தோற்றத்தை சிறப்பித்துப் பாடியுள்ளன.
- இறைவனின் இயல்புகள் பாடப்பட்டுள்ளன.
- இறைவன் நிகழ்த்திய திருவிளையாடல்கள் கூறப்பட்டுள்ளன.
- இறைவனிடம் தனக்கு அருள்புரிய வேண்டுமாறு துதிசதகங்கள் காணப்படுகின்றன.
- வடமொழியில் உள்ள நீதி சதகம் மக்களை நன்னெறிப்படுத்தும் பல்வேறு நீதிகளை எடுத்துரைப்பதைக் காணமுடிகின்றது.
- உலகப் பற்றுக்களை நீக்கி இறைவனை அடைவதற்குரிய வழிமுறைகளை வைராக்ய சதகத்தில் காணமுடிகின்றது.
- ஸ்ரீதயாசதகத்தில் அன்னையின் அருட்குணங்கள் எடுத்தோதப் படுகின்றன.
- இவ்வாறாக சதக இலக்கியங்கள் பல்வேறு பாடுபொருட்களில் பாடப்பட்டுள்ளமையை அறியமுடிகின்றது.

## சான்றெண் குறிப்புகள்


1. *ந.சுப்புரெட்டியார்,* ***இலக்கியக் கொள்கைகள்,*** *ப.104.*
2. *அரங்க.சுப்பையா,* ***இலக்கியத் திறனாய்வு, இசங்கள் கொள்கைகள்,*** *ப.168.*
3. *தொல்காப்பியம், பொருள். செய்யுளியல், நூ.196.*
4. *ச.அகத்தியலிங்கம், சங்க இலக்கியம், உள்ளடக்கமும் உருவ ஆக்கமும், ப.2.*
5. *மு.வரதராசனார்,* ***இலக்கியத்திறன்,*** *ப.59.*
6. *ந.மு.வேங்கடசாமி நாட்டார்,* ***கள்ளர் சரித்திரம்,*** *ப.73.*
7. *உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்,* ***இலக்கியத்தின் நோக்கமும் பயனும்,*** *ப.269 (தொகுதி 1).*
8. *அவிநாசி ஆறைகிழார்,* ***கார்மண்டல சதகம்,*** *பா.1.*
9. *கார்மேகக் கவிஞர்,* ***கொங்குமண்டல சதகம்,*** *பா.2.*
10. *கா.அப்பாதுரையார்,* ***கொங்கு தமிழக வரலாறு,*** *ப.11.*
11. *துரை.தண்டபாணி (உரை.),* ***தனிப்பாடல் திரட்டு,*** *ப.90.*
12. *ஆத்மநாத தேசிகர்,* ***சோழ மண்டல சதகம்,*** *பா.13.*
13. *மதுரை ஐயம்பெருமாள்,* ***பாண்டிமண்டல சதகம்,*** *பா.98.*
14. *மா.இராசமாணிக்கனார்,* ***பல்லவர் வரலாறு,*** *ப.17.*
15. *ந.மு.வேங்கடசாமி நாட்டார்,* ***கள்ளர் சரித்திரம்,*** *ப.74.*
16. *படிக்காசுப்புலவர்,* ***தொண்டை மண்டல சதகம்,*** *ப.7.*
17. *மா.இராசமாணிக்கனார்,* ***பல்லவர் வரலாறு,*** *ப.19.*
18. *ஆத்மநாத தேசிகர்,* ***சோழ மண்டல சதகம்,*** *பா.31.*
19. *மதுரை ஐயம்பெருமாள்,* ***பாண்டி மண்டல சதகம்,*** *பா.80.*
20. *பொ.வே.சோமசுந்தரனார் (உரை.),* ***பத்துப்பாட்டு, பட்டினப்பாலை,*** *அடி.5-6.*
21. *கார்மேகக் கவிஞர்,* ***கொங்கு மண்டல சதகம்,*** *பா.8.*
22. *ஆத்மநாத தேசிகர்,* ***சோழ மண்டல சதகம்,*** *பா.11.*
23. *மேலது., பா.12.*
24. *படிக்காசுப் புலவர்,* ***தொண்டை மண்டல சதகம்,*** *பா.85.*
25. *சிலப்பதிகாரம், புறஞ்சேரியாத்த காதை, பா.168-170.*
26. *மதுரை ஐயம்பெருமாள்,* ***பாண்டி மண்டல சதகம்,*** *பா.51.*

27. படிக்காசுப் புலவர், **தொண்டை மண்டல சதகம்,** பா.2.

28. ந.சுப்புரெட்டியார், **தொண்டை நாட்டுத் திருப்பதிகள்,** ப.1.

29. படிக்காசுப் புலவர், **தொண்டை மண்டல சதகம்,** பா.3.

30. ஆத்மநாத தேசிகர், **சோழ மண்டல சதகம்,** பா.5.

31. மேலது., பா.14.

32. கார்மேகக் கவிஞர், **கொங்கு மண்டல சதகம்,** பா.4.

33. மதுரை ஐயம்பெருமாள், **பாண்டி மண்டல சதகம்,** பா.44.

34. கார்மேகக் கவிஞர், மு.கு.நூ., பா.48.

35. திருமூலர், **திருமந்திரம்,** பா.1418.

36. அ.வே.சாந்திகுமார சுவாமிகள், சுந்தரமூர்த்தி சுவாமிகள், **இந்திய இலக்கியச் சிற்பிகள்,** ப.108.

37. படிக்காசுப்புலவர், மு.கு.நூ., பா.12.

38. கார்மேகக் கவிஞர், **கொங்கு மண்டல சதகம்,** பா.21.

39. மதுரை ஐயம்பெருமாள், **பாண்டி மண்டல சதகம்,** பா.46.

40. மு.கு.ஜெகநாதராஜா, **தமிழக, ஆந்திர வைணவ தொடர்புகள்,** ப.3.

41. அரங்க.சுப்பையா, **இலக்கியத் திறனாய்வு இசங்கள், கொள்கைகள்,** ப.172.

42. தோ.ந.வீரராகவன், **ஆழ்வார்கள் வரலாறு,** ப.93.

43. படிக்காசுப்புலவர், மு.கு.நூ., பா.94.

44. கார்மேகக்கவிஞர், மு.கு.நூ., பா.41.

45. படிக்காசுப்புலவர், மு.கு.நூ., பா.92.

46. கார்மேகக்கவிஞர், **கொங்கு மண்டல சதகம்,** பா.46.

47. ஆத்மநாத தேசிகர், மு.கு.நூ., பா.57.

48. படிக்காசுப்புலவர், மு.கு.நூ., பா.19.

49. ஆத்மநாத தேசிகர், மு.கு.நூ., ப.59.

50. கார்மேகக்கவிஞர், மு.கு.நூ., ப.30.

51. மதுரை ஐயம்பெருமாள், **பாண்டி மண்டல சதகம்,** பா.5.

52. கார்மேகக் கவிஞர், **கொங்கு மண்டல சதகம்,** ப.27.

53. மேலது., ப.84.

54. ஆத்மநாத தேசிகர், மு.கு.நூ., பா.78.

55. படிக்காசுப்புலவர், **தொண்டை மண்டல சதகம்,** ப.6.

56. கார்மேகக்கவிஞர், **கொங்கு மண்டல சதகம்,** பா.69.

57. கார்மேகக்கவிஞர், **கொங்கு மண்டல சதகம்,** பா.36.

58. மேலது., பா.37.

59. மதுரை ஐயம்பெருமாள், மு.கு.நூ., பா.29.

60. மேலது., உரைப்பாயிரம், ப.7.

61. அவிநாசி ஆறைக்கிழார், **கார் மண்டல சதகம்,** பா.29.

62. மு.இராகவையங்கார், **வேளிர் வரலாறு,** ப.3.

63. ஐயம்பெருமாள், மு.கு.நூ., பா.9.

64. மேலது., பா.10.

65. ஆத்மநாத தேசிகர், மு.கு.நூ., பா.95.

66. படிக்காசுப்புலவர், மு.கு.நூ., பா.56.

67. ஐயம்பெருமாள், மு.கு.நூ., ப.7.

68. டி.கே.சக்திதேவி, **கொங்கு வேளாளர் வரலாறு,** ப.21.

69. மேலது., ப.30.

70. தொல். பொருள். மரபு., நூ.81.

71. மேலது., நூ.82.

72. மேலது., நூ.85.

73. மறைமலையடிகள், **வேளாளர் நாகரிகம்,** ப.34.

74. ஆத்மநாத தேசிகர், **சோழ மண்டல சதகம்,** பா.9.

75. மறைமலையடிகள், **வேளாளர் நாகரிகம்,** ப.7.

76. படிக்காசுப் புலவர், **தொண்டை மண்டல சதகம்,** பக்.14-15.

77. ஆத்மநாத தேசிகர், மு.கு.நூ., பா.94.

78. படிக்காசுப்புலவர், **தொண்டை மண்டல சதகம்,** பா.52.

79. ஆத்மநாத தேசிகர், மு.கு.நூ., பா.33.

80. கார்மேகக்கவிஞர், **கொங்கு மண்டல சதகம்,** பா.51.

81. மேலது., பா.52.

82. ந.சி.கந்தையா, **செந்தமிழ் அகராதி (திரட்டு 22),** ப.27.

83. அரங்க.சுப்பையா, **இலக்கியத் திறனாய்வு, இசங்கள் கொள்கைகள்,** ப.139.

84. ச.வே.சுப்பிரமணியன், **திராவிட மொழி இலக்கியங்கள்,** ப.50.

85. **தொல். பொருள். மரபியல்,** நூ.71.

86. அம்பலவாணக் கவிராயர், **அறப்பளீசுர சதகம்,** பா.81.

87. **தொல். பொருள். மரபியல்,** நூ.72.

88. **திருக்குறள்.381.**

89. திருச்சிற்றம்பல நாவலர், **அண்ணாமலைச் சதகம்,** பா.13.

90. குருபாததாசன், **குமரேச சதகம்,** பா.3.

91. தொல். பொருள். மரபியல், நூ.78.

92. மேலது., நூ.79.

93. குருபாததாசன், மு.கு.நூ., பா.4.

94. அம்பலவாணக் கவிராயர், மு.கு.நூ., பா.83.

95. தொல். பொருள். மரபியல், நூ.81.

96. சேலம் சிதம்பரம்பிள்ளை, **கயிலாசநாதர் சதகம்,** பா.6.

97. குருபாததாசன், மு.கு.நூ., பா.5.

98. அம்பலவாணக் கவிராயர், மு.கு.நூ., பா.6.

99. மேலது., பா.16.

100. திருக்குறள்.108.

101. அம்பலவாணக் கவிராயர், மு.கு.நூ., பா.17.

102. குருபாததாசன், மு.கு.நூ., பா.48.

103. துரை.தண்டபாணி (உரை.), **நீதிநூல்கள் (மூதுரை),** பா.17.

104. குருபாததாசன், மு.கு.நூ., பா.54.

105. அம்பலவாணக் கவிராயர், மு.கு.நூ., பா.23.

106. மேலது., பா.14.

107. அம்பலவாணக் கவிராயர், **அறப்பளீசுர சதகம்,** பா.8.

108. குருபாததாசன், **குமரேச சதகம்,** பா.37.

109. சேலம் சிதம்பரம் பிள்ளை, **கயிலாசநாதர் சதகம்,** பா.37.

110. துரை.தண்டபாணி (உரை.), **ஔவையார், கொன்றைவேந்தன்,** பா.3.

111. **திருக்குறள்.49.**

112. அம்பலவாணக் கவிராயர், மு.கு.நூ., பா.95.

113. மேலது., பா.2.

114. குருபாததாசன், மு.கு.நூ., பா.53.

115. படிக்காசுப்புலவர், **தண்டலையார் சதகம்,** பா.5.

116. குருபாததாசன், மு.கு.நூ., பா.66.

117. **திருக்குறள்.56.**

118. முத்துக்குமரன், **வடிவேல் சதகம்,** பா.37.

119. *துரை.தண்டபாணி (உரை.),* ***தனிப்பாடல் திரட்டு,*** *ப.233.*

120. *அம்பலவாணக் கவிராயர், மு.கு.நூ., பா.37.*

121. *ஞா.மாணிக்கவாசகன் (உரை.),* ***விவேகசிந்தாமணி,*** *பா.21.*

122. *குருபாததாசன், மு.கு.நூ., பா.79.*

123. *மேலது., பா.34.*

124. *மேலது., பா.7.*

125. ***நற்றிணை,*** *பா.142:9-11.*

126. *இளங்கோவடிகள்,* ***சிலப்பதிகாரம், கொலைக்களக்காதை,*** *பா.அடி.71-73.*

127. ***திருக்குறள்.****43.*

128. *மதுரை அய்யம் பெருமாள், மு.கு.நூ., பா.20.*

129. *குருபாததாசன், மு.கு.நூ., பா.72.*

130. *படிக்காசுப்புலவர், மு.கு.நூ., பா.9.*

131. *துரை.தண்டபாணி (உரை.),* ***ஔவையார், மூதுரை,*** *பா.26.*

132. *சேலம் சிதம்பரம்பிள்ளை,* ***கயிலாசநாதர் சதகம்,*** *பா.17.*

133. *படிக்காசுப்புலவர்,* ***தண்டலையார் சதகம்,*** *பா.83.*

134. *துரை.தண்டபாணி (உரை.),* ***ஔவையார், நல்வழி,*** *பா.34.*

135. *அம்பலவாணக் கவிராயர்,* ***அறப்பளீசுர சதகம்,*** *பா.7.*

136. *சேலம் சிதம்பரம் பிள்ளை,* ***கயிலாசநாதர் சதகம்,*** *பா.14.*

137. ***திருக்குறள்.****231.*

138. *குருபாததாசன்,* ***குமரேச சதகம்,*** *பா.74.*

139. ***நான்மணிக்கடிகை,*** *பா.17.*

140. *திருக்குறள்.336.*

141. *பி.விருத்தாசலம்,* ***சிந்தனைச் சுடர்,*** *ப.23.*

142. *குருபாததாசன், மு.கு.நூ., பா.71.*

143. *திருச்சிற்றம்பல நாவலர்,* ***அண்ணாமலைச் சதகம்,*** *பா.62.*

144. *அம்பலவாணக் கவிராயர், மு.கு.நூ., பா.65.*

145. *முத்துக்குமரன்,* ***வடிவேல் சதகம்,*** *பா.91.*

146. *திருச்சிற்றம்பல நாவலர்,* ***அண்ணாமலைச் சதகம்,*** *பா.65.*

147. *குருபாததாசன், மு.கு.நூ., பா.30.*

148. *திருச்சிற்றம்பல நாவலர், மு.கு.நூ., பா.91.*

149. *முத்துக்குமரன், மு.கு.நூ., பா.25.*

150. சேலம் சிதம்பரம் பிள்ளை, மு.கு.நூ., பா.68.

151. முத்துக்குமரன், **வடிவேல் சதகம்,** பா.82.

152. அம்பலவாணக் கவிராயர், மு.கு.நூ., பா.61.

153. சு.சக்திவேல், **நாட்டுப்புற இயல் ஆய்வு,** ப.188.

154. பாக்யமேரி, **ஆயக்கலைகள்,** ப.45.

155. சேலம் சிதம்பரம்பிள்ளை, **கயிலாசநாதர் சதகம்,** பா.77.

156. மேலது., பா.81.

157. மறைஞான சம்பந்த நாயனார், **சைவ சமய நெறி,** ப.153.

158. மகாவித்துவான் ச.தண்டபாணி தேசிகர், **திருநீறு,** ப.5.

159. மேலது., ப.10.

160. குருபாததாசன், **குமரேச சதகம்,** பா.87.

161. துரை.தண்டபாணி (உரை.), **நீதிநூல்கள், நல்வழி,** பா.24.

162. திருச்சிற்றம்பல நாவலர், **அண்ணாமலைச் சதகம்,** பா.43.

163. மேலது., பா.8.

164. சேக்கிழார், **பெரியபுராணம், முழுநீறு பூசிய முனிவர் புராணம்,** பா.1, ப.508.

165. குருபாததாசன், மு.கு.நூ., பா.88.

166. புலவர் அடியன் மணிவாசகன், **திருமந்திரம்,** பா.1666.

167. திருச்சிற்றம்பல நாவலர், மு.கு.நூ., பா.55.

168. மேலது., பா.56.

169. மேலது., பா.3.

170. மேலது., பா.50.

171. சிவராமகிருஷ்ண சர்மா, **ஆலய அர்ச்சனை,** ப.392.

172. முத்துக்குமரன், **வடிவேல் சதகம்,** பா.52.

173. மாணிக்கவாசகர், **திருச்சதகம்,** பா.5.

174. மேலது., பா.15.

175. சபாபதி முதலியார், **அருணாசல சதகம்,** பா.1.

176. மேலது., பா.12.

177. மேலது., பா.28.

178. சபாபதி முதலியார், **அருணாசல சதகம்,** பா.35.

179. அரிபக்தர் கோபாலகிருஷ்ணர், **எம்பிரான் சதகம்,** பா.1.

180. மேலது., பா.14.

181. மேலது., பா.96.

182. மாயூரம் கிருஷ்ணையர், **அவையாம்பிகை சதகம்,** பா.1.

183. *சபாபதி முதலியார், மு.கு.நூ., பா.14.*

184. *அரிபக்தர் கோபாலகிருஷ்ணர், மு.கு.நூ., பா.10.*

185. *மாயூரம் கிருஷ்ணையர், மு.கு.நூ., பா.28.*

186. *சபாபதி முதலியார், மு.கு.நூ., பா.2.*

187. *மேலது., பா.5.*

188. *அரிபக்தர் கோபாலகிருஷ்ணர், மு.கு.நூ., பா.48.*

189. *மாயூரம் கிருஷ்ணையர், மு.கு.நூ., பா.54.*

190. *சபாபதி முதலியார், மு.கு.நூ., பா.7.*

191. *அரிபக்தர் கோபாலகிருஷ்ணர், மு.கு.நூ., பா.22.*

192. *பர்த்ருஹரி, **நீதிசதகம்,** பா.7.*

193. *மேலது., பா.18.*

194. *மேலது., பா.21.*

195. *மேலது., பா.24.*

196. ***திருக்குறள்.**370.*

197. *பர்த்ருஹரி, **வைராக்ய சதகம்,** பா.9.*

198. *என்.சிவராமன் (உரை.), **ஆதிசங்கரர்-சிவானந்த லஹரி,** ப.112.*

199. *மேலது., ப.114.*

200. *பர்த்ருஹரி, **வைராக்ய சதகம்,** பா.92.*

201. *ஸ்ரீதரவேங்கடேச ஐயர், **ஸ்ரீதயா சதகம்,** பா.64.*

202. *மேலது., பா.33.*

# இயல் 5

# ஒப்பீட்டு நோக்கில் சதக இலக்கியங்கள்

## 5.0. முன்னுரை

தமிழ் மற்றும் வடமொழி ஆகிய இரு மொழிகளும் இலக்கிய, இலக்கணச் செறிவுடைய மொழிகள் ஆகும். உலகச் செம்மொழிகளுள் ஒன்றாக வைத்து எண்ணத்தக்க பெருமை உடையதும், ஒன்றுக்கொன்று தொடர்புடைய மொழிகளாகவும் இவ்விரு மொழிகளும் விளங்குகின்றன.

தென்னிந்திய மொழிகளான தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளிலும் சதக இலக்கியங்கள் காணப்படுகின்றன. வடமொழியில் சதக இலக்கியம் பாடிப் புகழ்பெற்றவர் பர்த்ருஹரி. இவர் பாடிய சதக இலக்கியங்கள்,

> கி.பி.1651இல் அப்ரஹாம் ரோகர் (Abraham Roger) என்பவரால் டட்சு மொழியில் மொழிபெயர்க்கப் பெற்றவை. ஐரோப்பியர்க்கு முதன்முதலில் அறிமுகம் ஆகிய இந்திய இலக்கிய இவையே என்பர் விண்டர்நீட்ஸ்[1]

என்னும் விண்டர்நீட்ஸின் கூற்றை மேற்கோள் காட்டி சோ.ந.கந்தசாமி கூறுவதிலிருந்து வடமொழி சதகங்கள் உலகளாவிய செல்வாக்குப் பெற்றமையை அறியமுடிகின்றது.

வடமொழி மரபைப் பின்பற்றி தமிழ்ச் சதக இலக்கியங்கள் தோன்றியிருப்பினும் இவ்விரு மொழிச் சதகங்களுக்கிடையே அமைப்பு மற்றும் பாடுபொருள் ஆகியவற்றின் அடிப்படையில் சில ஒப்புமைத் தன்மைகள் காணப்படுகின்றன. இவ்விரு மொழிச் சதகங்களும் எத்தன்மையில் ஒத்துள்ளன; எத்தன்மையில் வேறுபடுகின்றன என்பதை இவ்வியல் விளக்குகின்றது.

## 5.1. ஒப்பிலக்கியம் - விளக்கம்

ஒத்தத் தன்மையுடைய இரு பொருட்களைக் காணும்போது அதனை ஒப்பிட்டுக் காண்பது மனித இனத்தின் பொது இயல்பாகும். இவ்வாறு ஒப்பிட்டுக் காணுகின்ற ஒப்பாய்வு பற்றி பல்வேறு கருத்துக்களை அறிஞர்கள் முன்வைக்கின்றனர்.

> இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட பொருட்களை ஒரு சேர நிறுத்தி வைத்து, அவற்றிற்கிடையேயுள்ள ஒப்புமையையும் வேற்றுமையையும் பார்ப்பது மனித இயல்பு. அதுபோலவே கலை இலக்கியங்களுக்கிடையே ஒன்றுபட்ட பண்புகளைப் பார்ப்பது என்பது இயல்பே. ஒப்பிடுவது என்பது சில கூறுகளில் வேறுபட்டும் சிலவற்றில் ஒன்றுபட்டும் இருக்கின்ற இரண்டு பொருட்களின்மேல் நிகழ்த்துகின்ற ஒரு செயலாகும். ஒப்புமைக்கு இரு பொருட்களின் ஒத்த தன்மைகள் அவசியம்[2]

*என்கிறார் தி.சு.நடராசன்.*

> ஒப்பீடு என்பது மனித இனத்தின் இயல்பான ஓர் உணர்வு. பசி, தூக்கம், அழுகை போல ஒப்பீட்டு உணர்வும் மனிதனிடம் குடி கொண்டுள்ள ஓர் அடிப்படை உணர்வு ஆகும்[3]

*என்பது ஒப்பிலக்கியம் என்ற நூலில் கி.இராசா கூறும் விளக்கம் ஆகும்.*

> ஒப்பீடு, ஒப்பாய்வு என்ற இரு சொற்கள் வேறுபட்ட பொருளுடையன. இரண்டு பொருட்களின் தோற்றம், பண்பு, பயன் ஆகியவற்றை ஒப்பீட்டுக் காண்பது ஒப்பாய்வு எனப்படும்[4]

*என்று விளக்கம் தருகின்றார் கு.வெ.பாலசுப்ரமணியன்.*

*இவ்விளக்கங்களிலிருந்து ஒப்பிடுவதற்கு ஒத்தத் தன்மையுடைய இரு பொருட்கள் தேவை என்பதும், அவ்விரு பொருட்களின் தோற்றம், பண்பு, பயன் ஆகியவற்றை ஒப்பிட்டுக் காண்பதே ஒப்பிலக்கியம் என்றும் அறியப்படுகின்றது.*

**ஒப்பிலக்கிய வகை**

*இத்தகைய ஒப்பாய்வு பல நிலைகளில் நிகழ்த்தப்படுகின்றது. அதாவது, தமிழில் உள்ள ஒரு இலக்கியத்தை, இன்னொரு இலக்கியத்தோடு ஒப்பிடுதல்; ஒரு மொழிப் படைப்பாளரை அதே மொழியைச் சார்ந்த இன்னொரு படைப்பாளரோடு ஒப்பிடுதல், ஒரு இலக்கிய வகையை இன்னொரு இலக்கிய வகையோடு ஒப்பிடுதல் எனப் பல நிலைகள் கூறப்பட்டாலும் அவை ஒரே மொழியில் நிகழ்த்தப்படுவதால் ஒப்பிலக்கியம் என்று கொள்ளலாகாது என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.*

*ஆகையால் எந்தெந்த தளங்களில் செய்யப்படுவது ஒப்பிலக்கியம் எனப் பல்வேறு விளக்கங்கள் தரப்படுகின்றன.*

> ஒரு மொழி இலக்கியத்துடன் மற்றொரு மொழி இலக்கியத்தையோ, ஒரு மொழிப் படைப்பாளரோடு மற்றொரு மொழிப் படைப்பாளரையோ ஒரு மொழி இலக்கிய வகையுடன் பிறமொழி இலக்கிய வகைகளையோ அறிவியல் பூர்வமாக ஒப்பிட்டு நோக்குவதே ஒப்பிலக்கிய ஆய்வாகும்[5]

*என்று கி.ராசா குறிப்பிட்டுள்ளார்.*

H.H.*ரீமாக்கு தரும் விளக்கத்தைச் சுட்டிக்காட்டி தமிழண்ணல் கூறுவதாவது,*

> உலக நோக்கில் இலக்கியத்தை ஆய்வது, இலக்கியங்களுக்கிடையேயுள்ள உறவை ஆய்வது, ஒப்புமைகளை ஆய்வது, இலக்கியத்தைப் பிற கலைகளுடனும் அறிவியல் வரலாற்றுத் துறைகளுடனும் ஒத்து நோக்கி ஆய்வது[6]

*என இவ்வொப்பிலக்கியத் துறை பல வகைகளாக விரிந்து கொண்டே செல்வதை தமிழண்ணல் கூற்று வழி அறியமுடிகின்றது.*

*ஒரு மொழி இலக்கிய வகையை மற்றொரு மொழி இலக்கிய வகையுடன் ஒப்பிடுதல் என்னும் வகைப்பாட்டின் அடிப்படையில் தமிழ் மற்றும் வடமொழி ஆகிய இரு மொழிகளில் உள்ள சதக இலக்கியங்கள் ஒப்பிட்டு ஆராயப்பெறுகின்றது.*

> வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதற்கொண்டே தமிழ்மொழி வடமொழி ஆகிய இரு மொழிகளுக்கிடையில் பெருமளவிற்குக் கொள்வினை கொடுப்பினை இருந்து வந்துள்ளது என்பது தெள்ளத் தெளிவாக நிலைநாட்டப்பட்டுள்ளது[7]

*என்னும் ஜி.ஜான் சாமுவேல் கருத்துப்படி தமிழ் மொழியைப் போல வடமொழியும் மிகப் பழமையான மொழி என்பதை அறியமுடிகின்றது.*

*வடமொழிப் பற்றி தொல்காப்பியர் குறிப்பிடுவது கொண்டு அதன் பழமையை அறிந்து கொள்ள முடிகின்றது. எனவே தமிழும் வடமொழியும் ஒப்பிட்டுக் காணுவதற்கு ஏற்புடைத்து என்பது விளங்கும். பர்த்ருஹரியின் நீதி*

சதகத்தையும் வள்ளுவரின் திருக்குறளையும் ஒப்பிட்டு அறிஞர்கள் ஆராய்ந்துள்ளனர்.

> தமிழும் வடமொழியும் இணைந்தும் பிணைந்தும் வளர்ந்தவை. இவற்றிடையே 'இலக்கிய ஒப்பீடு' சிறப்புற அமையின் அஃது உலக ஒப்பீட்டிற்கு வழியாகும்[8]

என்னும் தமிழண்ணல் கருத்து ஒப்பீட்டாய்வின் அவசியத்தைப் புலப்படுத்துகின்றது.

வடமொழியில் பர்த்ருஹரி இயற்றிய நீதி சதகம், வைராக்ய சதகம் மற்றும் ஸ்ரீதயா சதகம் போன்ற வேறுபட்ட பொருண்மைகளை உடைய மூன்று சதகங்களை தமிழ்மொழியில் உள்ள சதக இலக்கியங்களோடு ஒப்பிட்டு ஆராயப்பெறுகின்றது.

### 5.2. தமிழ்ச் சதக இலக்கியங்கள்

தமிழ்ச் சதக இலக்கியங்கள் வரலாறு, நீதி, துதி என்னும் மூன்று பொருண்மைகளில் அமைந்துள்ளன. அவற்றிற்கிடையே சில ஒத்தத் தன்மைகளும் காணப்படுகின்றன. இவை அமைப்பு மற்றும் உள்ளடக்கம் சார்ந்த சில ஒப்புமைப் பண்புகளைக் கொண்டுள்ளன. சதக இலக்கியங்களின் அமைப்பு மற்றும் உள்ளடக்கம் ஆகியவை இயல் மூன்று மற்றும் நான்கில் விளக்கப்பட்டுள்ள காரணத்தால் இங்குக் குறிப்பிட்டு மட்டும் காட்டப்படுகின்றன.

#### 5.2.1. வரலாற்றுச் சதகங்கள்

கார்மண்டல சதகம், தொண்டை மண்டல சதகம், சோழ மண்டல சதகம், கொங்கு மண்டல சதகம், பாண்டி மண்டல சதகம் போன்ற மண்டல வரலாறு கூறும் சதகங்களில் அரசர்கள், புலவர்கள், நாயன்மார்கள் போன்றோரைப் பாடுதல் என்னும் நிலையில் ஒரு பொதுப் பண்பு காணப்படுகின்றது.

**அமைப்பு**

வரலாற்றுச் சதகங்களுக்கிடையே நூலமைப்பு அடிப்படையில் சில ஒப்புமைகள் காணப்படுகின்றன.

காப்புச் செய்யுள், கடவுள் வாழ்த்து, சிறப்புப் பாயிரம், அவையடக்கம், நூல் மற்றும் நூலாசிரியர் குறிப்புகள், வாழி அல்லது வாழ்த்துப் பாடல்கள் இடம்பெறல் ஆகியவற்றில் ஒன்றுபட்ட நிலையைக் காணமுடிகின்றது.

**பாடுபொருளில் ஒப்புமைகள்**

- மண்டலங்களின் எல்லைகளைக் கூறுதல்.
- அங்கு பாயும் நதிகளைக் குறிப்பிடல்.
- அவ்வம் மண்டலத்தின் எல்லைகளுக்குட்பட்ட பகுதிகளில் இறைவன் எழுந்தருளியிருக்கும் திருத்தலங்களைப் பாடுதல்.
- அம்மண்டலத்தில் வாழ்ந்த மற்றும் அம்மண்டலத்தோடு தொடர்புடைய நாயன்மார்களின் வரலாற்றை எடுத்துரைத்தல்.
- அவ்வம்மண்டலங்களுக்குட்பட்ட பகுதிகளை ஆட்சிபுரிந்த மன்னர்களின் வரலாறுகள் இடம்பெறல்.
- வள்ளல்கள், புலவர்கள் மற்றும் அவர்கள் இயற்றிய நூல்களைப் பற்றிய செய்திகளைக் குறிப்பிடுதல்.
- பெண்களின் இயல்புகளைக் குறிப்பிடல்.
- வேளாளர்களில் வள்ளல்களாக விளங்கியவர்களைப் பற்றிக் குறிப்பிடல்.
- வேளாளர் தம் உழவின் சிறப்பு, கொடைத்திறன் ஆகியவற்றைச் சிறப்பித்துப் பாடுதல்.

மேற்கண்ட செய்திகளைப் பாடுவதில் மண்டல சதகங்கள் ஒத்தப் பண்புடையனவாக விளங்குகின்றன.

**வேற்றுமைகள்**

பாடுபொருள் அடிப்படையில் மண்டல சதகங்கள் ஒத்தத் தன்மையுடையனவாய் விளங்கினும், முதல் சதகமான கார்மண்டல சதகம் மற்ற நான்கு சதகங்களை விட சற்று மாறுபட்டுக் காணப்படுகின்றது.

இந்நூலில் பாடப்படும் பொருண்மைக்கேற்ப தலைப்புகள் கொடுக்கப் பட்டுள்ளன. எனினும் இவ்வமைப்பு மற்ற மண்டல சதகங்களில் காணப்படவில்லை.

வேளாளர் வகை, அரசாட்சி, சமயநெறி, மொழியும் நூலும், வள்ளல்களும், புலவரும், இல்லறம், வேளாளர் தருமம் எனத் தலைப்புகளுடன் கார்மண்டல சதகம் அமைந்துள்ளது.

பாடல் பொருண்மையில் ஒருசில வேறுபாடுகளைக் காணமுடிகின்றது. கடையெழு வள்ளல்களில் சிலரைப் பற்றி கொங்கு மண்டல சதகம், பாண்டி மண்டல சதகம் ஆகிய இரு நூல்களும் குறிப்பிடுகின்றன.

சித்தர்களைப் பற்றிக் கொங்கு மண்டல சதகம் மட்டுமே பாடுகின்றது. மருத்துவக் குறிப்புகளை தொண்டை மண்டல சதகம், கொங்கு மண்டல சதகம் ஆகிய இரு நூல்களும் எடுத்துரைக்கின்றன.

### 5.2.2. நீதி சதகங்கள்

குமரேச சதகம், அறப்பளீசுர சதகம், கயிலாசநாதர் சதகம், வடிவேல் சதகம், அண்ணாமலைச் சதகம், தண்டலையார் சதகம், செயங்கொண்டார் சதகம் போன்ற நூல்கள் மக்களுக்குப் பயன்படும் வகையில் பல்வேறு நீதிகளைக் கூறுகின்றன. நீதி கூறும் முறையில் இச்சதகங்கள் ஒத்தப் பண்புடையனவாய் விளங்குகின்றன.

- அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் என்னும் நால்வகை வருணத்தாரின் இயல்புகள் மற்றும் அவர்களுடைய தொழில்களைப் பாடுவதில் பழமொழி சதகங்களான தண்டலையார் சதகம் மற்றும் செயங்கொண்டார் சதகம் தவிர மற்ற அனைத்து நீதி சதகங்களும் ஒத்தத் தன்மையுடன் காணப்படுகின்றன.
- நோய் வராமல் தடுக்கும் வழிமுறைகளைக் கூறும் மருத்துவக் குறிப்புகளை எடுத்துரைத்தல்.
- மனிதர்கள் அடைய வேண்டிய புகழ் பற்றிக் கூறல்.
- யாத்திரை செல்லும் போது மக்கள் பின்பற்றும் சகுனங்கள் பற்றிய செய்திகள்.
- பெண்களின் குணநலன்களைப் பாடுதல்.
- ஸ்ரீதேவி, மூதேவி வாழுமிடங்கள், பயனற்றவைகள் பற்றிய செய்திகளைக் குறிப்பிடல்.

*ஒரு சில சதகங்கள் தவிர மற்ற நீதி சதகங்கள் அனைத்தும் மேற்குறிப்பிட்ட செய்திகளை எடுத்துரைப்பதில் ஒத்தத் தன்மையுடன் காணப்படுகின்றன.*

- *கல்வி பற்றிய செய்திகளை வடிவேல் சதகம் மற்றும் கயிலாசநாதர் சதகம் ஆகியவை எடுத்துரைக்கின்றன.*
- *ஈகை, நிலையாமை பற்றிய செய்திகளை குமரேச சதகம் மட்டும் எடுத்துரைக்கின்றது.*
- *செல்வம், வறுமை, விருந்தோம்பல் பற்றிய செய்திகளை ஒரு சில சதகங்களில் மட்டுமே காணமுடிகின்றது.*

*தமிழ்மொழியில் உள்ள நீதி இலக்கியங்களில் பெரும்பான்மையான இலக்கியங்கள் கல்வி, செல்வம், வறுமை, ஈகை, விருந்தோம்பல் ஆகியவைகளைப் பாடிய நிலையில் சதக இலக்கியங்கள் இவற்றை விடுத்து பிற நீதிகளை எடுத்துரைக்கின்றன.*

*தண்டலையார் சதகம், செயங்கொண்டார் சதகம் போன்றவை பழமொழிகள் வாயிலாக நீதிகளை எடுத்துக் கூறுவதை நோக்குமிடத்து மற்ற நீதி சதகங்களிலிருந்து இந்நூல்கள் மாறுபட்டுள்ளதைக் காணமுடிகின்றது.*

### 5.2.3. துதி சதகங்கள்

*அருணாசல சதகம், எம்பிரான் சதகம், அவையாம்பிகை சதகம் போன்ற துதி சதகங்கள் பாட்டுடைத் தலைவரான இறைவன் அல்லது இறைவியின் தோற்ற வர்ணனையைப் பாடுதல், இறைவனின் அருளை வேண்டும் தன்மை ஆகியவற்றில் ஒத்தத் தன்மையுடன் காணப்படுகின்றன.*

### 5.2.4. வடமொழி சதகங்கள்

*வடமொழியில் சதக இலக்கியங்கள் செல்வாக்குப் பெற்ற இலக்கிய வகையாக விளங்கிற்று. இதனை,*

> கி.பி.7 ஆம் நூற்றாண்டிற்கு முன் வடமொழியில் நீதி நூல்கள் இல்லை எனலாம். ஆனால் அறநெறிக் கருத்துக்கள் வேதகாலம் முதலே கூறப்பட்டு வந்துள்ளன. வடமொழியில் நீதிநூல்களாக மூதுரைகளும் பழமொழிகளும்

> நிறைய உள்ளன. பதினேழு பழமொழி திரட்டு நூல்கள் உள. மூதுரைகள் எல்லாம் சுலோக யாப்பில் உள்ளன. நீதிநூல்கள் நூறு பாடல்களைக் கொண்ட சதகங்களாக உள்ளன[9]

*என்னும் எஸ்.செல்வகணபதியின் கருத்துப்படி அறிந்து கொள்ள முடிகின்றது.*

## 5.3. தமிழ் மற்றும் வடமொழி சதகங்கள் ஒப்பீடு

*வடமொழியில் பர்த்ருஹரி இயற்றிய நீதி சதகம் மற்றம் வைராக்ய சதகம், ஸ்ரீதர வேங்கடேச ஐயா இயற்றிய ஸ்ரீதயா சதகம் ஆகியவை வேறுபட்ட பொருண்மைகளுடன் காணப்படுகின்றன.*

*வடமொழியில் பர்த்ருஹரி இயற்றிய நீதிசதகத்தில் இடம்பெற்றுள்ள நீதிக் கருத்துக்கள் தமிழ்மொழியில் அம்பலவாணக் கவிராயர் இயற்றிய அறப்பளீசுர சதகத்திலும் காணப்படுகின்றன. தமிழ்மொழியில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உலக மக்களுக்குப் பொதுவான நீதிகளை எடுத்தியம்பும் நூலாக திருக்குறள் விளங்குகின்றது. எல்லாப் பொருளும் இதன்பால் உள என்று கூறப்பட்டிருப்பினும் கால மாறுபாட்டிற்கு ஏற்பவும் கருத்துத் தேவைக்கு ஏற்பவும் நீதி நூல்களின் தோற்றம் இருபதாம் நூற்றாண்டு வரை நிகழ்ந்து கொண்டே வந்துள்ளன.*

*கி.பி. ஏழாம் நூற்றாண்டில் தோன்றிய நீதி சதகத்தையும் (வடமொழி), கி.பி.18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றிய அறப்பளீசுர சதகம் மற்றும் பிற நீதி சதகங்களில் உள்ள கருத்துக்களையும் ஒப்புநோக்கி ஆராய முற்படுகின்றோம்.*

### 5.3.1. மூர்க்கர் குணத்தை மாற்ற இயலாது

*பர்த்ருஹரி இயற்றிய நீதிசதகம், திருக்குறளைப் போன்று கூற விழையும் கருத்துக்களுக்கு ஏற்ப தலைப்புகளுடன் நீதிக்கருத்துக்களை எடுத்துரைக்கின்றது.*

சுறாப்பல் வரிசையிற் கவரலாம் முத்தம்
இராப்பகல் கதறும் இமிழ்கடற் றிரைமேல்
உராய்நடந் தேகிக் கடக்கலாங் கடலை
அஞ்சுற் றெனத்தலை புனையலாம் சினவரா;

பிடித்ததே பிடியாய்ப் புகல்செயும் மூர்க்கரை

இடித்துக் காட்டிமெய் யுணர்த்துதல் எளிதல்[10]

*என்னும் நீதிசதகப் பாடல், முதலையின் பற்களில் முத்தெடுக்கலாம், கடல்நீர் மேல் நடந்து அதனைக் கடக்கவும் செய்யலாம்; பாம்பினைத் தலையில் மலராக சூடவும் இயலும், பிடித்தது பிடி என்னும் மூர்க்கருடைய செயலை (குணத்தை) மாற்றுதல் அரிய செயல் என்றுரைக்கின்றது.*

*இக்கருத்தினை அறப்பளீசுர சதகப் பாடலிலும் காணமுடிகின்றது.*

நீர்மேல் நடக்கலாம் எட்டியும் தின்னலாம்

நெருப்பைநீர் போற்செய் யலாம்

நெடியபெரு வேங்கையைக் கட்டியே தழுவலாம்

நீளர வினைப்பூ ணலாம்.[11]

*எனினும் மூர்க்கர் குணத்தை மாற்ற இயலாது என்னும் அறப்பளீசுரப் பாடற் கருத்துடன் நீதிசதகக் கருத்தும் ஒப்புமை உடையனவாய்க் காணப்படுகின்றது. மேலும்,*

மணலைப் பிசைந்துநெய் யெடுக்கவும் முயலலாம்

அனலென உடற்றும் அருநீர் வேட்கையைக்

கானல்நீர் காட்சியால் தணித்தலு மாகும்;

ஆனமட் டொருவன் அலைந்து திரிந்துபின்

கானுறு முயற்கொம் படையினு மடையலாம்;

தான்பிடித் ததுபிடி யென்பவர் துரிசற

நாமெடுத் தோதல் நவிலவும் படுமோ?[12]

*என்னும் நீதிசதகப் பாடல் கருத்தை அறப்பளீசுர சதகத்திலும் காணமுடிகின்றது.*

பார்மீது மணலைச் சமைக்கலாம் சோறெனப்

பட்சமுட னேயுண்ண லாம்

பாணமொடு குண்டுவில கச்செய்ய லாம்மரப்

பாவைபே சப்பண்ண லாம்

ஏர்மேவு காடியுங் கடையுற்று வெண்ணெயும்

எடுக்கலாம் புத்தி சற்றும்

இல்லாத மூடர்தம் மனத்தைத் திருப்பவே

எவருக்கும் முடியா துகாண்[13]

என்னும் இப்பாடல் மணலைச் சோறாக்கி உண்ணலாம். மரப்பாவை பேச வைக்கலாம், நீரில் வெண்ணெய் எடுக்கலாம். மூடர்தம் மனத்தை மாற்ற இயலாது என்கிறது. அறிவில்லாத மூடர்கள் சான்றோர் அவைதனில் மௌனமாக இருக்க வேண்டும் என்றும், எந்த மந்திர, தந்திரத்தாலும் மடமையை மாற்ற இயலாது என்பதையும் நீதிசதகம் வலியுறுத்துகின்றது. அறப்பளீசுர சதகமும் இக்கருத்தை வலியுறுத்துவதில் நீதி சதகத்துடன் ஒத்துப் போகின்றது.

## 5.3.2. கல்வியின் சிறப்பு

இவ்வுலகில் நிலையானது கல்வி ஒன்றேயாகும். வெள்ளத்தால் அழியாதது, வேந்தராலும் கொள்ளத்தான் முடியாது ஆகிய கல்வி போல் மம்மர் அறுக்கும் மருந்து வேறெதுவும் கிடையாது. இத்தகைய சிறப்பு வாய்ந்த கல்வியின் முக்கியத்துவம் குறித்து பாடாத நீதிநூல்களே இல்லை எனலாம்.

பர்த்ருஹரியும் தம்முடைய நீதி சதகத்தில் கல்வியின் இன்றியமையாமை குறித்து பத்துப் பாடல்களில் எடுத்துரைக்கிறார்.

நூல் பல கற்றுணர்ந்த அறிஞர் வறியவராயிருப்பினும் அவர் அரசரே. செல்வந்தனாயிருப்பவன் கல்வியறிவு இலனாயின் அவன் பெருமையுறல் இல்லை என்பதை,

> நூல்பல உணர்ந்து நுவல்வல அறிஞர்
> நேர்படும் இன்சொலால் நிகழ்த்துவர் தெளிவு
> அத்தகைய யறிஞர் மிடியினும் அரசரே;[14]

என்றும்,

> கல்வியென் றோதும் கரந்த உட்பொருள்
> கள்வன் றனக்குக் கையுற லிலையே;
> எப்போதும் அது அளித்திடும் தென்பை
> . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
> கற்ப முடிவிலும் குறைவுறல் இலையே
> இத்தகை யோரை யிறைவரே போற்றுமின்[15]

என்னும் நீதிசதகப் பாடல் குறிப்பிடுகின்றது. மேலும் இப்பாடல் கல்வியை கள்வர்கள் திருட இயலாது. கற்றறிவுடையவர்களை இறைவனே போற்றுவான்

என்கிறது. மேலும் கல்வியே ஆண்மகனுக்கு அழகைத் தருவன, கற்றோனுக்கு கல்வியே அழகு என்றும், கல்விச்செல்வம் நிறைந்தவர்க்கு பொருட்செல்வம் இல்லாவிட்டால் ஒரு குறையும் இல்லை.

பொருட்சுவைச் சித்தராம் புலவோர் தமக்கு
அருட்டிற வெற்றி யமைந்திட என்றும்
நல்லிசை யுருவாய் நிறைந்தவர் உடற்கு
இல்லையே மூப்புச் சாக்காட் டச்சம்[16]

என்னும் நீதிசதகப் பாடல், கல்வியால் புகழ்பெற்ற புலவர்களுக்கு மூப்பு, சாக்காடு (மரணம்), அச்சம் என்பது கிடையாது என்கிறது.

கல்வியிற் சிறந்தோரிடத்தில் அழுக்காறு இல்லாது அன்பே வளரும்; கல்வியே அழகு மற்றவை எல்லாம் பழுதுறும் என்றும்; கல்வியால் கூறுதற்கியலா இன்பம் கிட்டும் என்றும் நீதிசதகம் வலியுறுத்துகின்றது.

யாதானும் நாடாமால் ஊராமால்[17]

என்னும் வள்ளுவர் வாக்கும் கற்றோர்க்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு என்னும் ஔவையின் வாக்கும் கல்வியின் மகத்துவத்தை உணர்த்தும்.

அறப்பளீசுர சதகம் கல்வியறிவில்லாதவர்களை முழுமூடர் என்கிறது. இதனை,

பெண்புத்தி கேட்கின்ற மூடரும் தந்தைதாய்
பிழைபுறம் சொலும் மூடரும்
. . . . . . . . . . . . . . . . . . . . . . .
. . . . . . . . . . . . . . . . . . . .
கற்றறி விலாமுழு மூடருக் கிவரெலாம்
கால்மூடர் அரைமூடர்காண்
அண்கற்ற நாவலர்க் காகவே தூதுபோம்
ஐயனே அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுரதே வனே[18]

என்னும் அறப்பளீசுர பாடல் எடுத்துரைக்கின்றது.

கற்றறிந்த சுந்தரருக்காக இறைவன் தூது போன வரலாற்றினை இந்நூல் குறிப்பிடுகின்றது. இக்கருத்தை நீதிசதகத்திலும் காணலாம். மேலும், கயிலாசநாதர் சதகம், உலகிலுள்ள பொருள்களில் கல்வியே நிலையானது. அது கனல், புனல், கள்வர், அரசர், பரத்தையர், தாயத்தார் முதலியோரால் கவரப்படாதது; கொடுக்கக் குறையாதது, அளவிடப்படாதது, தண்டனை என்ற பெயரால் கைப்பற்ற முடியாதது ஆகிய கல்வியைப் பெறாதவர் பிறவிப் பயனை அடைய இயலாது என்கிறது. இப்பாடல்,

கடலுலகி லுற்றபொரு ளுக்குளே நன்மைதரு
கல்விநிலை பெற்ற பொருளாங்
கனவினா லுருகாது புனலினாற் கரையாது
கள்ளராற் றிருடொ ணாது
திடமான ராசாதி ராசரா லும்மதைத்
தெண்டம் பிடிக்கொ ணாது[19]

என்னும் பாடல் கல்வி நிலையானது என்பதைக் குறிப்பிடுகின்றது. இதே கருத்தினை நீதிசதகமும்,

இரத்தினச் சோதகன் இனமில னாயின்
சிறப்புள ஒளிக்கலும் சீர்பெற லிலையே
சிறப்பிலா திருப்பினும் சிறக்குநா ளுறுமே[20]

என்னும் பாடலில் கல்வியில் சிறந்தோரே முன்னிலைப் பெறுவர் என எடுத்துரைக்கின்றது.

எக்குடிப் பிறப்பினும் யாவரே யாயினும்
அக்குடியில் கற்றோரை மேல்வருக என்பர்[21]

என்னும் வெற்றிவேற்கை தரும் கருத்து இங்கு குறிப்பிடத்தக்கது.

ஒருவன் எக்குடியில் பிறந்தான் என்பதை விட எவனது பிறப்பால் அக்குடி மேன்மையடைகிறதோ அவனே பிறப்பவன் என்பதை நீதி சதகம் எடுத்துரைக்கின்றது.

பிறப்பிறப் பமைந்த பீழையாம் சுழலில்
இறந்தவன் யாரோ பிறவா திருப்பவன்?
எவனது பிறப்பால் குடிமே லுறுமோ
அவனே பிறப்பவன், மற்றவர் பிறப்பெவன்?[22]

*என்னும் நீதிசதகப்பாடல், மானிட வாழ்வில் பிறப்பும் இறப்பும் இயல்பாய் நிகழ்வன. ஒருவன் உயர்குடியில் பிறந்தான் என்பதை விட எவனது பிறப்பால் அவன் குடி மேன்மை அடைகின்றதோ அவனே இவ்வுலகில் பிறந்தவன் ஆவான் என்பதைக் குறிப்பிடுகின்றது.*

*ஒருவன் பிறந்த குடி எதுவாயினும், அவனது செயலால் அக்குடி மேன்மையடையும் என்பதை குமரேச சதகமும் எடுத்துரைக்கின்றது.*

சேற்றிற் பிறந்திடும் கமலமலர் கடவுளது
திருமுடியின் மேலிருக்கும்
திகழ்சிப்பி உடலில் சனித்தமுத் தரசரது
தேகத்தின் மேலிருக்கும்
போற்றியிடு பூச்சியின் வாயின்நூல் பட்டென்று
பூசைக்கு நேசமாகும்
. . . . . . . . . . . . . . . . .
சாதியீனத்திற் பிறக்கினும் கற்றோர்கள்
சபையின்மேல் வட்டம் அன்றோ[23]

*என்னும் குமரேச சதகப் பாடல் மேற்கண்ட நீதிசதகப் பாடலை ஒத்துள்ளதைக் காணமுடிகின்றது.*

### 5.3.3. நல்லோர் குணங்கள்

*பர்த்ருஹரியின் நீதிசதகம் சான்றோரின் இயல்புகளைப் பற்றிக் கூறுகையில்,*

சான்றோர்க் கியற்கையாம் சால்புகள் கேண்மோ,
தோன்றிய துயரால் திறல்தள ராமை
ஆன்றநல் வாழ்வினில் அரும்புரை பொறுத்தல்
ஆன்றோ ரவையில் அழகிய சொற்றிரம்
நேர்ந்திடும் போர்களில் நிலைதள ராமை
தேர்ந்துநல் லிசையினைத் திகழ்வுறச் சேர்த்தல்[24]

*என்பதைச் சான்றோரின் நற்பண்புகளாகக் குறிப்பிடுகின்றது. மேலும்.*

உயிர்க்கொலை நீத்தல் ஊர்ப்பொரு ளிகத்தல்
உள்ளதை யேசொலல் உற்றபோ தளித்தல்
. . . . . . . . . . . . . . . . . . .

பெரியோர்க் கிணங்கல் பல்லுயிர்க் கிரங்கல்

பல நூல் மதித்தல், கடமை கடைப்பிடி[25]

*எனும் இப்பண்புகளை கடைப்பிடித்தால் புகழ் பெறலாம் என்றுரைக்கிறது. இவ்வாறாக நல்லோர் இயல்புகளைப் பத்துப் பாடல்களில் நீதி சதகம் விரித்துரைக்கின்றது.*

*தமிழில் உள்ள பெரும்பான்மையான நீதி சதகங்கள் சான்றோரின் இயல்புகளை எடுத்துரைக்கின்றது.*

அன்னதா னஞ்செய்தல் பெரியோர்சொல் வழிநிற்றல்

ஆபத்தில் வந்தபேர்க்

கபயம் கொடுத்திடுதல் நல்லினம் சேர்ந்திடுதல்

ஆசிரியன் வழிநின்றவன்

சொன்னமொழி தவறாது செய்திடுதல் தாய்தந்தை

துணையடி அருச்சனைசெயல்

சோம்பலில் லாமல்உயிர் போகினும் வாய்மைமொழி

தொல்புவியில் நாட்டியிடுதல்[26]

*இவ்வாறாக சான்றோரின் இயல்புகளை குமரேச சதகம் குறிப்பிடுவதைக் காணலாம்.*

தாய்தந்தையர்க்குத் தன்னன் னடையால்

ஆய்ந்த உத்தமனாம் அவனே மகனாம்[27]

*ஒரு மகன் தாய் தந்தையருக்கு நன்மகனாய் விளங்க வேண்டும் என்று நீதிசதகம் குறிப்பிடுகின்றது. இதே கருத்தை அறப்பளீசுர சதகத்திலும் காணமுடிகின்றது. இதனை,*

மாதாபி தாவினுக்கு உள்ளன்பு டன்கனிவு

மாறாத நல்லொ ழுக்கம்[28]

*எனும் அறப்பளீசுர சதகத்தின் பாடல் வரிகள் உணர்த்துகின்றன.*

*மேலும் நல்லோர் நட்பு எத்தன்மைத்து என்பதைக் குறிப்பிடுகையில், நீதிசதகம் மற்றும் குமரேச சதகம் ஆகியவை ஒத்தக் கருத்துடன் விளங்குகின்றன.*

நண்பன் தன்மையை நல்லோர் நவிலல்கேள்

பண்பிலாப் பழியைப் பற்றா தகற்றுவன்

நன்னெறி யிற்செல நவில்வ னுபாயம்

. . . . . . . . . . . . . . . . . . . .

நமக்குறும் இடரில் நம்மைக் கைவிடான்[29]

*பழி எற்படுங்கால் அது பற்றாது அகற்றுபவன், நண்பன் நெறி தவறும்போது அவனை நன்னெறிப்படுத்துபவன், இடர் வரும்பொழுது கைவிடாது காப்பாற்றுபவனே உற்ற நண்பன் என்பதை நீதி சதகம் கூறுகின்றது. இதே கருத்தைக் குமரேச சதகமும் சுட்டிக் காட்டுகின்றது.*

மாமதியில் முயலான ததுதேய வந்தேய்ந்து

வளருமப் போதுவளரும்

வாவிதனில் ஆம்பல்கொட் டிகளதனில் நீர்வற்றில்

வற்றிடும் பெருகிலுயரும்

பூமருவு புதல்பூடு கோடையில் தீய்ந்திடும்

பொங்குகா லந்தழைக்கும்

சேர்ந்தோர்க் கிடுக்கணது வந்தாலும் நல்லோர்

சிநேகம்அப் படிஆகுமே[30]

*எனும் குமரேச சதகப் பாடல் நட்பின் உயர்வை எடுத்துரைக்கின்றது. நிலவில் காணப்படும் கறை நிலவு தேயும் போது தேய்ந்து வளரும்போது வளரும்; குளத்தில் வளரும் அல்லியும் கொட்டியும் நீர் பெருகினால் நீண்டு வளரும். நீர் இல்லையேல் காய்ந்து விடும். தாமரை சூரிய உதயத்தில் மலரும் சூரியன் மறைந்தால் கூம்பி விடும். நண்பன் இன்புற்ற காலத்தில் இன்புற்று துன்பம் வந்த காலும் உடன் துன்புறுபவனே உற்ற நண்பன் என்பதைக் குறிப்பிடுகின்றது.*

உடுக்கை இழந்தவன் கைபோல் ஆங்கே

இடுக்கண் களைவதாம் நட்பு[31]

*என்னும் வள்ளுவரின் வாக்கும் இக்கருத்தை மெய்ப்பிக்கும்.*

### 5.3.4. விதியின் செயல்பாடுகள்

*ஒருவன் செய்யும் செயலைக் கொண்டு அவனுடைய விதி நிர்ணயிக்கப் படுகின்றது. அத்தகைய விதியை நிர்ணயிப்பவர் இறைவன். எனவே இறைவனால் விதிக்கப்பட்டதை மாற்றும் வல்லமை எவருக்கும் இல்லை என்பது உணர்த்தப்பட்டுள்ளது.*

வகுத்தான் வகுத்த வழியல்லால் கோடி

தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது[32]

*என்னும் திருக்குறளும், விதியை மாற்ற இயலாது என்பதைச் சுட்டிக் காட்டுகின்றது.*

ஆர்கலி ஒடினும் மேருமுக டேறினும்
போர்க் களந்தனிற் பகைவரை வெல்லினும்
வாணிபம் பயிர்த்தொழில் வளமாய்க் கற்கினும்
பின்னும் பல்கலை பயின்று பறவைபோல்
அகல் வானத்தில் ஆரப்ப றக்கினும்
புகல் முற்செயலால் பூதலந் தன்னில்
நிகழ விதித்தது நீங்குத லிலையே
வகுத்தான் வகுத்த வகைமா றுறுமோ?[33]

*என்னும் நீதி சதகப் பாடல் கடல் கடந்து சென்றாலும் விதியிலிருந்து தப்ப இயலாது என்பதைக் குறிப்பிடுகின்றது.*

*இதே கருத்தை தண்டலையார் சதகம், குமரேச சதகம் போன்றவையும் வெளிப்படுத்துவதில் ஒன்றுபட்டு காணப்படுகின்றன.*

அட்டதிசை எங்கணும் போய் அலைந்தாலும்
பாதாளம் அதிற்சென் றாலும்
பட்டம்என வானூடு பறந்தாலும்
என்ன? அதிற்பயன்உண் டாமோ?[34]

*என்றும்,*

போய்காழி சூழுலகில் உள்ளங்கால்
வள்ளெலும் பாய்ப் போக ஓடி
ஐங்காதம் போனாலும் தன்பாவம்
தன்னுடனே ஆடும் தானே[35]

*என்னும் தண்டலையார் சதகப் பாடல்கள் ஒருவன் வானத்தில் பறந்தாலும், பாதாளம் சென்றாலும் கடல் கடந்து எவ்வளவு தொலைவு சென்றாலும் விதியிலிருந்து தப்ப இயலாது என்பதை எடுத்துரைக்கின்றது.*

வங்காளம் ஏறுகினும் வாருகோல் ஒருகாத
மட்டன்றி அதிகமாமோ
வான்ஏறி உயரப்பறந்தாலும் ஊர்க்குருவி
வண்ணப் பருந்தாகு மோ

கங்கா கலந்தன்னில் மூழ்கினும் பேய்ச்சுரைக்
காப்நல்ல சுரையாகுமோ
கடலுக்குள் நாழியை அமுக்கியே மொண்டிடின்
காணுமோ நால்நாழிதான்
ஐங்காதம் ஓடினும் தன்பாவம் தன்னோடே
அடையாமல் நீங்கிவிடுமோ[36]

*என்னும் குமரேச சதகப் பாடலும் விதியை வெல்ல இயலாது என்பதை உணர்த்துகின்றது.*

*விதியுங்கூட வினைக்கு அப்புறம்தான் என்கிறது நீதிசதகம். ஆயினும் அவ்விதியே வினைப்பயனைத் தரவல்லது என்பதும், வினையன்றி மற்றவையால் பயனென் என்பதும் உணர்த்தப்பட்டுள்ளது.*

*பிரம்மன் குயவனாய் உழைப்பதுவும், திருமால் பத்து அவதாரம் நிகழ்த்தியதும், சிவன் பிச்சை எடுத்து உண்பதுவும் சூரியன் வானத்தில் திரிவதுவும் அவரவர் வினைப் பயனால் என்கிறது நீதி சதகம்.*

அன்றுமுடி சூடுவ திருக்காகு தாமன்முன்
அருங்கா டடைந் தென்ன
அண்டரெல்லாம் அமிர்தம் உண்டிடப் பரமனுக்
காலம் லபித்தென்ன
வென்றிவரு தேவர்சிறை மீட்டநீ களவில்வே
டிச்சியை சேர்ந்ததென்ன
மேதினி படைக்கும் அயனுக்கொரு சிரம்போகி
வெஞ்சிறையில் உற்றதென்ன
என்னும்ஒரு பொய்சொலா மன்னவன் விலைபோன
தென்னகாண் வல்லமையினால்
எண்ணத்தினால் ஒன்றும் வாராது பரமசிவன்
எத்தனப் படி முடியுமாம்[37]

*என்னும் குமரேச சதகப்பாடல் வலிமையாலும் சூழ்ச்சியாலும் எதுவும் நடைபெறாது எல்லாம் இறைவன் விதித்தபடியே நடக்கும் என்கிறது. இப்பாடலில் இராமன் காடு அடைந்ததும், சிவபெருமான் விடம் உண்டதும் பிரம்மன் ஐந்து தலைகளில் ஒரு தலையை இழந்ததும், விதிவசத்தால் என்பது எடுத்துரைக்கப்பட்டுள்ளது.*

*சேதுபதிராசன் என்னும் மன்னன் தன் மகளை வாழ்க்கைப்படுத்த, சோதிடர் கணித்த கணிப்பு தவறி, அவளை ஒரு முடவனுக்கு மனைவியாக்கியது. எல்லாம் விதிப்படி நடக்கும் என்று செயங்கொண்டார் சதகம் (பா.28) குறிப்பிட்டுள்ளது.*

*மனிதன் அனுபவிக்கக் கூடிய வினைப்பயன் மூன்று வகைகளாக அறப்பளீசுர சதகம் குறிப்பிடுகின்றது.*

1. *சஞ்சிதம் - பலவகைப்பட்ட பிறவிகளில் செய்யப்பட்டு உயிரால் நுகரப்படாது எஞ்சி நின்று மேலும் அனுபவத்திற்கு உரிய வினை.*
2. *பிராரத்தம் - இப்பிறவியில் நுகர்வதற்காக வகுக்கப்பட்ட வினை.*
3. *ஆகாமியம் - இப்பிறவியில் செய்யப்படும் புண்ணிய பாவங்களை மறுபிறவியின்கண் நுகர்வதற்காக கொள்ளப்படும் வினை. இது சஞ்சித வினையோடு சேர்ந்து மேற்கொண்டு கொள்ளப்படும் பிறவிகளுக்கு வகுக்கப்பெறும்*[38]

*என்பதிலிருந்து வினைகள் மூன்று நிலைகளாக விளங்குவதை அறியமுடிகின்றது.*

### 5.3.5. நிலையாமை

*செல்வம், இளமை, உடல் ஆகியவை இவ்வுலகில் நிலையற்றத் தன்மை கொண்டவை. எனவே நிலையற்றப் பொருட்களை விடுத்து நல்லறங்களைச் செய்து இறைவன் திருவடி அடைய முயற்சிக்க வேண்டும் என சதக இலக்கியங்கள் வலியுறுத்துகின்றன.*

நேற்றுள்ளார் இன்றிருக்கை நிச்சயமோ?
ஆதலினால், நினைத்த போதே
ஊற்றுள்ள பொருளுதவி அறந்தேடி
வைப்பதறி வுடைமை அன்றோ?
கூற்றுள்ளம் மலையவரும் தண்டலையா
ரே! சொன்னேன்! குடபால் வீசும்
காற்றுள்ள போதெவரும் தூற்றிக்கொள்
வதுநல்ல கருமந் தானே![39]

*என்னும் தண்டலையார் சதகப்பாடல் நிலையாமைக் கூறி வாய்ப்புள்ளபோதே நல்லறங்களைச் செய்ய வேண்டும் எனக் குறிப்பிடுகின்றது.*

நீடுபகல் போயபின் இரவாகும் இரவுபோய்
நிறைபகற் போதாய்விடும்
நிதியோர் மிடித்திடுவர் மிடியோர் செழித்திடுவர்
நிசமல்ல வாழ்வுகண் டாய்
மாடுமனை பாரிசனம் மக்கள்நிதி பூடணமும்
மருவுகன வாகும் அன்றோ.[40]

*மேடு பள்ளமாகும்; பள்ளம் மேடாகும், நாடு காடாகும், காடு நாடாகும், செல்வர் வறுமையடைவர், வறுமையில் உள்ளவர் செல்வந்தர் ஆவர். இவ்வாழ்வில் அனைத்தும் கனவாகும். மாறும் இயல்புடையது என்னும் வாழ்வின் நிலையற்ற தன்மையைக் குமரேச சதகம் குறிப்பிடுகின்றது.*

*பர்த்ருஹரியின் நீதிசதகமும் நிலையாமை உணர்ந்து அறம்செய்ய வலியுறுத்துகிறது. அத்தகைய அறமே உயிருக்கு உற்ற துணை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை,*

காடு போர்க்களம் கதழெரி பகைக்குழு
ஆடுநீர் நடுக்கடல் ஓங்குதலை மலையே
தூக்கம் களிமயல் துன்புறும் இறுநிலை
ஊக்கிய முன்னறம் உயிர்காத் திடுமே[41]

*என்னும் நீதிசதகப் பாடல் வழி உணரலாம்.*

*நீதி சதகங்கள் வாழ்வின் நிலையற்றத் தன்மையை எடுத்துக் கூறி அறம் செய்ய வலியுறுத்துகின்றன. பக்தி சதகங்கள் நிலையாமை உணர்ந்து, இறைவன் திருவடி அடையும் வழியைப் போதிக்கின்றன. பர்த்ருஹரியின் வைராக்ய சதகமும் இதே கருத்தை உணர்த்துவதில் ஒத்தத் தன்மையுடன் காணப்படுகிறது.*

*ஆசையை ஒழித்து உலகப் பொருட்களின் மீது பற்றினை விடுத்தால் பரமனை அடையலாம் என்னும் பக்தி வைராக்கியத்தினை துதி சதகங்கள் எடுத்துரைக்கின்றன.*

பாராளுமன் னவர்செல்வமும்
பகரும்விசும் பிறைசெல்வமும்

சீரானவே தன்செல்வமும்

திருமால்மகிழ் தருசெல்வமும்

காராருமின் னெனவெண்ணியுன்

கழல்போற்றுவார் தம்செல்வமும் இங்கு !

ஆராலுமோர் வொண்ணாததாம்

அருணாசலா! அருணாசலா[42] (22)

*இவ்வுலகில் உள்ள அனைத்துச் செல்வங்களும் வானில் தோன்றி மறையும் மின்னலைப் போன்று நிலையற்றதாகும். ஈசனுடைய திருவடியாகிய செல்வத்தின் பயனை யாவராலும் அறிய இயலாத அரிய செயலாகும் என்று அருணாசல சதகம் குறிப்பிடுகின்றது.*

அடாதபுன் காமம்கொண்டே அழிபொருள் பற்று வைத்துக்

கெடாது அழியாப் பொருட்கண் கிளர்பொறி அமைத்தல் நன்றாம்

தடாமல் ஐம்பொறிகள் தம்மைத் தாழ்பொருள்களின் மேல்வைக்க

விடாமல் என் அன்னே! நல்ல விழுப்பமார் நெறிஉய்த்து ஆள்வாய்[43]

*என்னும் ஸ்ரீதயா சதகப்பாடல், அழியும் தன்மை கொண்ட தாழ்பொருட்களின் மீது ஐம்பொறிகளும் செல்லாதவாறு அன்னை எம்மை காக்க என்று வேண்டுவதாய் அமைந்துள்ளது.*

*நிலையாமையை எடுத்துக் கூறி அறம் செய்யத் தூண்டுதல் மற்றும் இறைவன் திருவடிப் பேறு அடைதல் என்னும் நிலைகளில் தமிழ் மற்றும் வடமொழி சதகங்கள் ஒத்தத் தன்மையுடன் காணப்படுகின்றன.*

## 5.4. தொகுப்புரை

- *சதக இலக்கியங்கள் பல்வேறு காலச்சூழலில் பல பொருண்மைகளில் பாடப்பட்டிருப்பினும் அவற்றுள் சில ஒத்தப் பண்புகள் காணப்படுகின்றன.*
- *வரலாற்றுச் சதகங்கள் அம்மண்டலங்களில் வாழ்ந்த அரசர்கள், புலவர்கள், வள்ளல்கள், நாயன்மார்கள் ஆகியோரைப் பாடுவதில் ஒத்தத் தன்மையைக் கொண்டுள்ளன.*
- *வரலாற்றுச் சதகங்களில் கார்மண்டல சதகம் அமைப்பு மற்றும் உள்ளடக்கத்தில் வேறுபட்ட தன்மையுடன் காணப்படுகிறது.*

- *பல உதாரணங்களை மேற்கோள் காட்டி நீதியுரைக்கும் தன்மையில் ஒத்தப் பண்புடன் காணப்படுகின்றன.*
- *நூறு பாடல்களில் பாடப்படுதல் என்ற எண்ணிக்கை அடிப்படையில் அனைத்து சதகங்களும் ஒன்றுபட்டுக் காணப்படுகின்றன.*
- *தமிழ் மற்றும் வடமொழி சதகங்கள் எவையேனும் ஒரு பொருள் பற்றி நூறு பாடல்களில் பாடப்படுதல் என்னும் ஒப்புமையைக் கொண்டுள்ளன.*
- *தமிழ்ச் சதகங்களில் இடம்பெற்றுள்ள பா அமைப்பு, மகுட அமைப்பு மற்றும் பாடுபொருள் அமைப்பில் ஏதேனும் ஒன்றுகூட வடமொழி சதகங்களில் காணப்படவில்லை.*

## சான்றெண் குறிப்புகள்


1. *சோ.ந.கந்தசாமி,* ***உலகச் செம்மொழிகள் இலக்கியம் (முதல் தொகுதி),*** *ப.219.*
2. *தி.சு.நடராசன்,* ***திறனாய்வுக் கலை,*** *ப.26.*
3. *கி.இராசா,* ***ஒப்பிலக்கியம்,*** *ப.1.*
4. *கு.வெ.பாலசுப்பிரமணியன்,* ***ஆய்வியல் நெறிகள்,*** *ப.86.*
5. *கி.இராசா, மு.கு.நூ., பக்.3-4.*
6. *தமிழண்ணல்,* ***ஒப்பிலக்கிய அறிமுகம்,*** *ப.103.*
7. *ஜி.ஜான் சாமுவேல்,* ***திராவிடவியலும் செம்மொழித் தகுதிப்பாடும்,*** *ப.61.*
8. *தமிழண்ணல், மு.கு.நூ., ப.36.*
9. *எஸ்.செல்வகணபதி,* ***ஒப்பிலக்கிய நோக்கில் தமிழிலக்கியம்,*** *ப.152.*
10. *பர்த்ருஹரி,* ***நீதி சதகம்,*** *பா.4, ப.2.*
11. *அம்பலவாணக் கவிராயர்,* ***அறப்பளீசுர சதகம்,*** *பா.15.*
12. *பர்த்ருஹரி, மு.கு.நூ., பா.5.*
13. *அம்பலவாணக் கவிராயர், மு.கு.நூ., பா.15.*
14. *பர்த்ருஹரி, மு.கு.நூ., பா.12.*
15. *மேலது., பா.13:1-3, 6-7.*
16. *மேலது., பா.21.*
17. *திருக்குறள்.397.*
18. *அம்பலவாணக் கவிராயர், மு.கு.நூ., பா.35.*
19. *சேலம் சிதம்பரம் பிள்ளை,* ***கயிலாசநாதர் சதகம்,*** *பா.17.*
20. *பர்த்ருஹரி,* ***நீதி சதகம்,*** *பா.12.*
21. *துரை.தண்டபாணி,* ***நீதிநூல்கள், வெற்றிவேற்கை,*** *பா.38.*
22. *பர்த்ருஹரி, மு.கு.நூ., பா.24.*
23. *குருபாததாசன்,* ***குமரேச சதகம்,*** *பா.59.*
24. *பர்த்ருஹரி, மு.கு.நூ., பா.53.*
25. *மேலது., பா.55.*
26. *குருபாததாசன், மு.கு.நூ., பா.99.*
27. *பர்த்ருஹரி, மு.கு.நூ., பா.60.*
28. *அம்பலவாணக் கவிராயர்,* ***அறப்பளீசுர சதகம்,*** *பா.29.*

29. பர்த்ருஹரி, மு.கு.நூ., பா.66.

30. குருபாததாசன், மு.கு.நூ., பா.48.

31. திருக்குறள், 788.

32. மேலது., 377.

33. பர்த்ருஹரி, **நீதி சதகம்,** பா.99.

34. படிக்காசுப்புலவர், **தண்டலையார் சதகம்,** பா.3.

35. மேலது., பா.22.

36. குருபாததாசன், மு.கு.நூ., பா.46.

37. மேலது., பா.44.

38. அம்பலவாணக் கவிராயர், மு.கு.நூ., ப.94.

39. படிக்காசுப் புலவர், மு.கு.நூ., பா.42.

40. குருபாததாசன், மு.கு.நூ., பா.73.

41. பர்த்ருஹரி, மு.கு.நூ., பா.100.

42. சபாபதி முதலியார், **அருணாசல சதகம்,** பா.22.

43. ஸ்ரீதர வேங்கடேச ஐயா, **ஸ்ரீதயா சதகம்,** பா.19.

# முடிவுரை

- ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பெற்ற இருபத்தியொரு சதக நூல்கள் மூலம் ஆராய்ந்து கண்டறியப்பட்ட உண்மைகள் முடிவுரையாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

- ஒரு நாட்டின் பண்பாடு, நாகரிகம், கலாச்சாரம் ஆகியவற்றை அறிய இலக்கியங்கள் பெருந்துணை புரிகின்றன. பரந்து விரிந்த இலக்கியப் பரப்பில் சிற்றிலக்கியங்கள் தனியிடம் பெற்றுத் திகழ்கின்றன.

- அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நால்வகை உறுதிப்பொருள்களுள் எவையேனும் ஒன்றோ பலவோ குறைந்து வருதல் சிற்றிலக்கியங்கள் எனப்பட்டன.

- சிற்றிலக்கியங்களுள் குறிப்பிடத்தக்க வகையாக அந்தாதி, தூது, உலா, கலம்பகம், பிள்ளைத்தமிழ், பரணி, குறவஞ்சி, பள்ளு போன்றவை விளங்குகின்றன.

- நாயக்கர் காலத்தில் சிற்றிலக்கியங்கள் தோற்றம் பெற்றிருப்பினும் பக்தி இலக்கியக் காலத்தில் பெரும்பான்மையான சிற்றிலக்கிய நூல்கள் தோன்றியுள்ளன.

- சிற்றிலக்கியங்கள் தொண்ணூற்றாறு என்று வரையறை செய்யப்பட்டிருப்பினும் இவ்வெண்ணிக்கையைக் கடந்த நிலையைக் காண முடிகின்றது.

- சிற்றிலக்கியங்கள் எண்ணிக்கை அடிப்படை, பொருள் அடிப்படை, நிகழ்வுகள் அடிப்படை, வடிவ அடிப்படை போன்ற வகைகளாகப் பாகுபடுத்தப் பட்டுள்ளன.

- வடமொழி மரபைப் பின்பற்றித் தமிழில் தோன்றிய இலக்கிய வகை சதகம். இச்சதக இலக்கியத்தின் முதல் நூலாக (பெயரளவில்) அறியப்படும் இலக்கியமாக மாணிக்கவாசகரின் திருச்சதகம் விளங்குகிறது.

- சதக இலக்கண வரையறைப்படி இயற்றப்பட்ட முதல் சதகமாக கார்மண்டல சதகம் விளங்குகிறது.

- *கி.பி.17, 18, 19 ஆம் நூற்றாண்டுகளில் சதக இலக்கியங்கள் பெருவளர்ச்சி அடைந்துள்ளன.*

- *சதக இலக்கியங்களில் வரலாற்றுச் சதகங்கள், நீதி சதகங்கள், துதி சதகங்கள், இஸ்லாமியச் சதகங்கள், கிறிஸ்தவச் சதகங்கள், வடமொழி சதகங்கள் என்னும் வகைப்பாடுகள் காணப்படுகின்றன.*

- *வரலாற்றுச் சதகங்களில் மண்டல வரலாறு கூறுதல், தொண்டர் வரலாறு கூறுதல் என்னும் இருவகைகள் காணப்படுகின்றன.*

- *கார்மண்டலத்தின் வரலாற்றைக் கூற கார்மண்டல சதகம் இயற்றப்பட்டது போன்று சோழ, பாண்டி, கொங்கு, தொண்டை மண்டலம் போன்றவற்றின் வரலாற்றை அவ்வம்மண்டல சதகங்கள் எடுத்துரைக்கின்றன.*

- *மக்களுக்கு நன்னெறிகளைப் போதிக்கும் நீதி சதகங்கள், இறைவனைப் போற்றும் துதி சதகங்கள் மற்றும் வடமொழி சதகங்கள் எனச் சதக இலக்கியங்கள் பெருவளர்ச்சி அடைந்தன.*

- *தமிழ்மொழியில் தோன்றிய சதக இலக்கியங்களுக்கிடையே ஒரு பொது அமைப்புக் காணப்படுகின்றது. அவை நூறு பாடல்களில் பாடப்படுதல், மகுடம் இடம்பெறுதல், நூல் முழுவதும் ஒரே வகை யாப்பில் பாடப்படுதல் என்னும் இவ்வமைப்பு முறையை பெரும்பான்மையான சதகங்கள் கொண்டுள்ளன.*

- *நூறு பாடல்களில் பாடப்படுதல் என்னும் எண்ணிக்கையைக் கடந்து நூற்றுக்கும் மேற்பட்ட பாடல்களையும் சதக இலக்கியங்களில் காணமுடிகின்றது.*

- *ஒரு பாடலின் இறுதியில் இடம்பெறும் சொற்றொடர் நூலின் நூறு பாடல்களிலும் மகுடமாக இடம்பெறுகின்றது. பெரும்பான்மையான சதக இலக்கியங்கள் இவ்வமைப்புடன் விளங்குகின்றன. மகுடம் இடம்பெறாத சதகங்களும் உள்ளன.*

- பாடுபொருளுக்கேற்ப சதக இலக்கியங்களில் யாப்பு மாறுபடுகின்றது. வரலாற்றுச் சதகங்கள் கட்டளைக் கலித்துறையிலும், நீதி சதகங்கள் ஆசிரிய விருத்தத்திலும், துதி சதகங்கள் கலி விருத்தத்திலும் பாடப்பட்டுள்ளன.
- கற்பவர்களுக்கு எளிதில் புரியும் வண்ணம் மொழிநடை கையாளப்பட்டுள்ளது.
- மகுடம் இடம்பெறுதல் நூல் முழுவதும் ஒரே வகை யாப்பில் பாடப்படுதல் ஆகிய அமைப்பு முறை வடமொழி சதகங்களில் காணப்படவில்லை.
- சதக இலக்கியங்கள் பல்வேறு விதமான பாடுபொருள்களைக் கொண்டுள்ளன.
- வரலாற்றுச் சதகங்கள் வாயிலாக அக்காலச் சமூகத்தை அறிந்து கொள்ளலாம். மண்டல வரலாறு கூறும் சதகங்கள் அம்மண்டலங்களில் வாழ்ந்த வள்ளல்கள், அரசர்கள், புலவர்கள், இயற்றப்பட்ட நூல்கள், நாயன்மார்கள், திருத்தலங்கள், அம்மண்டலத்தின் எல்லைகள், நதிகள் ஆகியவற்றை சிறப்பித்துப் பாடுகின்றன.
- வேளாளர்தம் உழவின் சிறப்பும், கொடைச் சிறப்பும் மிகுதியாகப் பாடப்பட்டுள்ளன.
- நீதி சதகங்கள் இயற்றப்பட்ட காலச்சூழலுக்கு ஏற்ப நீதிகள் கூறப்பட்டுள்ளன.
- மக்களை நன்னெறிப்படுத்துவதில் சதக இலக்கியங்கள் முனைப்புடன் விளங்கின. தீச்செயல்களை விலக்கி நற்செயல்களைப் புரிவதற்கான வழிமுறைகளை எடுத்துரைக்கின்றன.
- மக்களிடையே காணப்பட்ட இறைப்பற்று மற்றும் அவர்கள் வழிபாட்டு முறைகளைப் பின்பற்றிய தன்மைக் கொண்டு அக்காலத்தில் சைவ சமயம் செல்வாக்குப் பெற்று விளங்கியது என்பது புலனாகின்றது.
- வடமொழி சதகங்களில் பெரும்பான்மையானவை நீதி கூறும் சதகங்களாகவே உள்ளன. நீதி அல்லாத வைராக்யம் மற்றும் இறைவனைப் போற்றும் துதி சதகங்களும் காணப்படுகின்றன.

- ✸ *வடமொழி சதகங்களைப் பின்பற்றி தமிழில் சதக இலக்கியங்கள் தோன்றியிருப்பினும் நூலமைப்பிலோ பாடுபொருள் அமைப்பிலோ இவ்விரு மொழி இலக்கியங்களுக்கிடையே ஒத்தத் தன்மைக் காணப்படவில்லை.*

- ✸ *'சதகம்' என்ற பெயர் ஒப்புமை மற்றும் நூறு பாடல்களில் பாடப்படுதல் என்னும் எண்ணிக்கை வரையறை ஆகியவற்றில் இவ்விரு மொழிகளும் ஒத்துள்ளன.*

- ✸ *மக்களுக்கு நீதிகளை எடுத்துரைப்பதில் பல இடங்களில் ஒத்தத் தன்மையுடன் விளங்குகின்றன.*

- ✸ *மண்டல வரலாறு கூறும் சதகங்களைப் போன்று வடமொழியில் வரலாறு கூறும் சதகங்கள் காணப்படவில்லை.*

*இவ்வாய்வின் வழிநின்று, எதிர்கால ஆய்வாளர்களுக்குப் பரிந்துரையாகப் பின்வரும் பொருண்மைகள் சொல்லப்பட்டுள்ளன.*

1. *சதக இலக்கியங்களில் வேளாளர்கள்*
2. *நீதி சதகங்கள் மற்றும் பிற நீதி இலக்கியங்கள் ஒப்பீடு*
3. *சதக இலக்கியங்களில் சைவ ஆகம விதிமுறைகள் பற்றிய ஆய்வு*

# துணைநூற் பட்டியல்

**முதன்மை ஆதாரங்கள்**


*இராசு, செ. (ப.ஆ.)* **சோழ மண்டல சதகம்,** *தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், மறுஅச்சு, 2010.*

*இராசேசுவரி, த. (ப.ஆ.)* **காசி விசுவநாத சதகம்,** *உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, முதற்பதிப்பு, 1999.*

*இராசேசுவரி, த. (தொ.ஆ.)* **சதகத் திரட்டு, தொகுதி-1,** *உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, முதற்பதிப்பு, 2001.*

*இராமசுப்பிரமணியம், வ.த. (உ.ஆ.)* **அண்ணாமலைச் சதகம் மூலமும் தெளிவுரையும்,** *நல்லறப் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 1997.*

---. **அருணாசல சதகம் மூலமும் தெளிவுரையும்,** *நல்லறப் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 1997.*

---. **அறப்பளீசுர சதகம் மூலமும் தெளிவுரையும்,** *நல்லறப் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 1997.*

*கௌமாரீஸ்வரி, எஸ். (ப.ஆ.) இராமமூர்த்தி, முத்து. (உ.ஆ.)* **அவையாம்பிகை சதகம் மூலமும் உரையும்,** *சாரதா பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 2013.*

---. **தொண்டை மண்டல சதகம் மூலமும் உரையும்,** *சாரதா பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 2013.*

கௌமாரீஸ்வரி, எஸ். *(ப.ஆ.)* இராமமூர்த்தி, முத்து. *(உ.ஆ.)* — **பாண்டி மண்டல சதகம் மூலமும் உரையும்**, *சாரதா பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 2013.*

இராமமூர்த்தி, ரெ. *(தமிழாக்கம்)* — **ஸ்ரீதயா சதகம்**, *அரங்ககிருஷ்ணன், ரா. (விளக்கவுரை), வானதி பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 1996.*

கௌமாரீஸ்வரி, எஸ். *(ப.ஆ.)* கதிர்முருகு *(உ.ஆ.)* — **குமரேச சதகம் மூலமும் உரையும்**, *சாரதா பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 2009.*

---. — **தண்டலையார் சதகம் மூலமும் உரையும்**, *சாரதா பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 2009.*

கோபாலய்யங்கார், வி. *(ப.ஆ.)* — **நீதி சதகம்**, *சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர், 2005.*

சுந்தரமூர்த்தி, இ., சென்னியப்பன், ந.இரா., இராமசாமி, மு. *(ப.ஆ.)* — **கொங்கு மண்டல சதகங்கள்**, *தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரி, கோவை, முதற்பதிப்பு, 1986.*

சுப்புரெட்டியார், ந. *(ப.ஆ.)* — **எம்பிரான் சதகம் (உரையுடன்)**, *வெளியீடு: வே.இலட்சுமிநாராயணன், சென்னை, முதற்பதிப்பு, 1996.*

சொக்கலிங்கம், வீ. *(ப.ஆ.)* — **வடிவேல் சதகம்**, *சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர், இரண்டாம் பதிப்பு, 2006.*

மாணிக்கம், அ. *(உ.ஆ.)* — **திருச்சதகம், தெளிவுரை**, *மணிவாசகர் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 1999.*

*முத்துத் தாண்டவராய பிள்ளை, ப.அ. (உ.ஆ.)* — **கார்மண்டல சதகம்**, The Imperial Printing Works, Madras, 1930.

*ஜெய்ஷங்கர் (ப.ஆ.)* — **மஹாகவி பர்த்ருஹரியின் சிருங்கார சதகம் மற்றும் வைராக்ய சதகம்**, *கடலங்குடி பப்ளிகேஷன்ஸ், சென்னை, முதற்பதிப்பு, 2009.*

**துணைமை ஆதாரங்கள்**

*அப்பாதுரையார், கா.,* — **கொங்கு தமிழக வரலாறு (சங்ககாலம் - கி.பி.240 முடிய)**, *சுபா பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 2011.*

*இராசமாணிக்கனார், மா.,* — **பல்லவர் வரலாறு**, *பூம்புகார் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 2009.*

*இராசா, கி.,* — **இலக்கிய வகை விளக்க அகராதி**, *பார்த்திபன் பதிப்பகம், திருச்சி, முதற்பதிப்பு, 2007.*

---. — **தமிழர் இலக்கிய வரலாறு**, *அன்னை நிலையம், திருச்சிராப்பள்ளி, முதற்பதிப்பு, 2001.*

---. — **ஒப்பிலக்கியம்**, *நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை, முதற்பதிப்பு, 2016.*

*இரத்தினசபாபதி, பி.,* — **தூது இலக்கியம் ஒரு புதிய பார்வை**, *வானதி பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 2001.*

*இராகவையங்கார்,* **வேளிர் வரலாறு,**
*செந்தமிழ்ப் பிரசுரம்-33,*
*மதுரை,*
*தமிழ்ச் சங்க முத்திரா சாலையில்*
*பதிப்பிக்கப் பெற்றது,*
*இரண்டாம் பதிப்பு, 1916.*

*இராமமூர்த்தி, முத்து. (உ.ஆ.)* **செயங்கொண்டாரின் கலிங்கத்துப்பரணி,**
*சாரதா பதிப்பகம்,*
*சென்னை,*
*முதற்பதிப்பு, 2016.*

*இளங்குமரன், இரா.,* **இலக்கிய வகை அகராதி,**
*மணிவாசகர் பதிப்பகம்,*
*சிதம்பரம்,*
*முதற்பதிப்பு, 1985.*

*இளம்பூரணர் உரை,* **தொல்காப்பியம் - பொருளதிகாரம்,**
*திருநெல்வேலி தென்னிந்திய சைவ*
*சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்*
*லிமிடெட்,*
*சென்னை,*
*முதற்பதிப்பு, 2000.*

*ஈசுவரப்பிள்ளை, தா.,* **தமிழில் சிற்றிலக்கிய வரலாறு,**
*தமிழ்ப் பல்கலைக்கழகம்,*
*தஞ்சாவூர்,*
*முதற்பதிப்பு, 2005.*

*கதிர்முருகு (உ.ஆ.)* **நந்திக்கலம்பகம் மூலமும் உரையும்,**
*சீதை பதிப்பகம்,*
*சென்னை,*
*பத்தாம் பதிப்பு, 2015.*

*கதிரைவேற்பிள்ளை,* **தமிழ்மொழி அகராதி,**
*சாரதா பதிப்பகம்,*
*சென்னை,*
*பத்தாம் பதிப்பு, 2016.*

*கந்தசாமி, சோ.ந.,* **உலக செம்மொழிகள் இலக்கியம் (முதல் தொகுதி),**
*தமிழ்ப் பல்கலைக்கழகம்,*
*தஞ்சாவூர்,*
*முதற்பதிப்பு, 2010.*

கந்தையா, ந.சி., — **செந்தமிழ் அகராதி திரட்டு-22,**
*அமிழ்தம் பதிப்பகம்,*
*சென்னை,*
*இரண்டாம் பதிப்பு, 2009.*

கடிகாசலம், ந.,
சிவகாமி, ச.
(ப.ஆ.) — **சங்க இலக்கியம்,**
*உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,*
*சென்னை,*
*முதற்பதிப்பு, 1998.*

கைலாசபதி, க., — **ஒப்பியல் இலக்கியம்,**
*சென்னை புக் ஹவுஸ் (பி) லிட்.,*
*சென்னை,*
*மூன்றாம் பதிப்பு, 1982.*

கைலாசநாத குருக்கள், கா., — **வடமொழி இலக்கிய வரலாறு,**
*நர்மதா பதிப்பகம்,*
*சென்னை,*
*முதற்பதிப்பு, 1981.*

சக்திதேவி, T.K., — **கொங்கு வேளாளர் வரலாறு,**
*ஜீவன் அச்சகம்,*
*சென்னை,*
*முதற்பதிப்பு, 1974.*

சக்திவேல், சு., — **நாட்டுப்புற இயல் ஆய்வு,**
*மாணிக்கவாசகர் பதிப்பகம்,*
*சென்னை,*
*ஏழாம் பதிப்பு, 2017.*

சண்முகம்பிள்ளை, மு., — **சிற்றிலக்கிய வகைகள்,**
*மணிவாசகர் நூலகம்,*
*சென்னை,*
*முதற்பதிப்பு, 1982.*

சாந்திகுமார சுவாமிகள், — **இந்திய இலக்கியச் சிற்பிகள்,**
**சுந்தரமூர்த்தி சுவாமிகள்,**
*சாகித்ய அகாதெமி,*
*புதுதில்லி,*
*முதற்பதிப்பு, 2012.*

சிங்காரவேலு முதலியார், ஆ., — **அபிதான சிந்தாமணி,**
**தமிழ்க் கலைக்களஞ்சியம்**
**(செம்பதிப்பு),**
*சீதை பதிப்பகம்,*
*சென்னை,*
*15 ஆம் பதிப்பு, 2016.*

*சிவகாமி, ச.,* **தமிழ்ச் சதக இலக்கியம்,**
*உலகத் தமிழ்க் கல்வி இயக்கம்,*
*சென்னை,*
*முதற்பதிப்பு, 1985.*

*சிவராமகிருஷ்ண சர்மா, சி.வி.,* **ஆலய அர்ச்சனை,**
*நர்மதா பதிப்பகம்,*
*சென்னை,*
*இந்தப் பதிப்பு, 2009.*

*சிவராமன், என். (உரை.)* **ஆதிசங்கரர் - சிவானந்த லஹரி,**
*கரு.இராமநாதன் (ப.ஆ.),*
*ஸ்ரீ இந்து பப்ளிகேஷன்ஸ்,*
*சென்னை,*
*இரண்டாம் பதிப்பு, 2013.*

*சீனிவாசன், ரா.,* **தமிழ் இலக்கிய வரலாற்றுக் கட்டுரைகள்,**
*பாரி நிலையம்,*
*சென்னை,*
*1964.*

---. **மொழியியல்,**
*சாரதா பதிப்பகம்,*
*சென்னை,*
*ஆறாம் பதிப்பு, 2016.*

*சுப்பிரமணியன், ச.வே.,* **திராவிட மொழி இலக்கியங்கள்,**
*உலகத் தமிழராய்ச்சி நிறுவனம்,*
*சென்னை,*
*முதற்பதிப்பு, 1983.*

*சுப்புரெட்டியார், ந.,* **தொண்டை நாட்டுத் திருப்பதிகள்,**
*எஸ்.ஆர்.சுப்பிரமணியப் பிள்ளை,*
*திருநெல்வேலி,*
*முதற்பதிப்பு, 1973.*

---. **இலக்கியக் கொள்கைகள்,**
*பாரி நிலையம்,*
*சென்னை,*
*1981.*

*சுப்பையா, அரங்க.,* **இலக்கியத் திறனாய்வு இசங்கள், கொள்கைகள்,**
*பாவை பப்ளிகேஷன்ஸ்,*
*சென்னை,*
*ஐந்தாம் பதிப்பு, 2007.*

*செ(ஜ)கந்நாத ராஜா, மு.கு.,* **தமிழக ஆந்திர வைணவத் தொடர்புகள்,** *தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு, 2005.*

*செயராமன், ந.வீ.,* **சிற்றிலக்கிய அகராதி,** *பாரி நிலையம், சென்னை, முதற்பதிப்பு, 1983.*

---. **சதக இலக்கியம்,** *மணிவாசகர் நூலகம், சிதம்பரம், முதற்பதிப்பு, 1962.*

---. **சிற்றிலக்கியச் செல்வம்,** *மணிவாசகர் நூலகம், சிதம்பரம், 1979.*

---. **பாட்டியலும் இலக்கிய வகைகளும்,** *இலக்கியப் பதிப்பகம், சென்னை, 1981.*

---. **சிற்றிலக்கியத் திறனாய்வு,** *இலக்கியப் பதிப்பகம், சென்னை, 1980.*

*செல்வகணபதி, எஸ்.,* **ஒப்பிலக்கிய நோக்கில் தமிழிலக்கியம்,** *கற்பகம் பதிப்பகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு, 1986.*

*சேக்கிழார்,* பெரியபுராணம், *திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை, 1988.*

*சோமசுந்தரனார், பொ.வே. (உ.ஆ.)* பத்துப்பாட்டு, பகுதி-2, பட்டினப்பாலை, *திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை, 2008.*

ஞானசம்பந்தன், அ.சா., **இலக்கியக் கலை**, *சாரதா பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 2014.*

தண்டபாணி, துரை. (உ.ஆ.) **நீதி நூல்கள்**, *உமா பதிப்பகம், சென்னை, பதினைந்தாம் பதிப்பு, 2011.*

தண்டபாணி தேசிகர், ச., **திருநீறு**, *திருவாவடுதுறை ஆதினம், திருவாவடுதுறை, 1964.*

தமிழண்ணல், **ஒப்பிலக்கிய அறிமுகம்**, *மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, திருத்திய எட்டாம் பதிப்பு, 2000.*

---. **புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு**, *மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, பதினாறாம் பதிப்பு, 2000.*

திருஞானசம்பந்தம், பெ., **வடமொழி இலக்கிய சோலை**, *அன்னை நிலையம், சென்னை, முதற்பதிப்பு, 1965.*

நடராசன், தி.சு., **திறனாய்வுக்கலை (கொள்கைகளும் அணுகுமுறைகளும்)**, *நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை, திருத்திய இரண்டாம் பதிப்பு, 2003.*

நாராயணசாமி ஐயர் பின்னத்தூர் (உ.ஆ.) **நற்றிணை**, *கழக வெளியீடு, திருநெல்வேலி, சென்னை, மறுபதிப்பு, 2007.*

பழனியம்மாள், **தமிழில் சதக இலக்கியங்கள்**, *நளினா மங்கை பதிப்பகம், மதுரை, முதற்பதிப்பு, 1992.*

*பாக்யமேரி,* **ஆயகலைகள்,**
*மெய்யப்பன் பதிப்பகம்,*
*சென்னை,*
*முதற்பதிப்பு, 2010.*

*பாலசுப்ரமணியன், கு.வெ.,* **ஆய்வியல் நெறிகள்,**
*உமா நூல் வெளியீட்டகம்,*
*தஞ்சாவூர்,*
*முதற்பதிப்பு, 2001.*

*பாலுசாமி, நா.,* **வாழ்வியற் களஞ்சியம் (தொகுதி 8),**
*தமிழ்ப் பல்கலைக்கழகம்*
*மறுதோன்றி அச்சகம்,*
*தஞ்சாவூர்,*
*மறுபதிப்பு, 2004.*

*புலியூர்க்கேசிகன் (உ.ஆ.)* **சிலப்பதிகாரம்,**
*பாரி நிலையம்,*
*சென்னை,*
*பதினாறாம் பதிப்பு, 1996.*

*மணிவாசகன் புலவர் அடியன் (உ.ஆ.)* **திருமூலர் அருளிய திருமந்திரம்,**
*சாரதா பதிப்பகம்,*
*சென்னை,*
*மூன்றாம் பதிப்பு, 2011.*

*மருததுரை, அரு.,* **புராண இலக்கிய வரலாறு,**
*ஐந்திணைப் பதிப்பகம்,*
*சென்னை,*
*முதற்பதிப்பு, 1988.*

*மறைஞானசம்பந்த நாயனார்,* **சைவ சமய நெறி,**
*திருப்பந்தாடகா மடம்,*
*வர்த்தமான தரங்கினீகா அச்சுக்கூடம்,*
*விபவ ஷு புரட்டாசி திதி மீ*

*மறைமலையடிகள்,* **வேளாளர் நாகரிகம்,**
*திருநெல்வேலி தென்னிந்திய சைவ*
*சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்*
*லிமிடெட்,*
*சென்னை,*
*இப்பதிப்பு, 1975.*

*மார்க்ஸ், அ.,* **சிற்றிலக்கியங்கள் சில குறிப்புகள்,**
*புலம் வெளியீடு,*
*சென்னை,*
*முதற்பதிப்பு, 2009.*

மாதவன், இரா., **தமிழில் தூது இலக்கியம்**,
*அன்னம் வெளியீடு,*
*தஞ்சாவூர்,*
*முதற்பதிப்பு, 2004.*

மாணிக்கம், வ.சுப., **தமிழ்ப் புலவர் வரலாற்றுக் களஞ்சியம் (பகுதி 1)**,
*அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு,*
*சிதம்பரம்,*
*முதற்பதிப்பு, 1974.*

மாணிக்கவாசகன் (உ.ஆ.) **விவேக சிந்தாமணி**,
*உமா பதிப்பகம்,*
*சென்னை,*
*ஆறாம் பதிப்பு, 2010.*

மாணிக்கவாசகர், **திருவாசகம்**,
*திருவாவடுதுறை ஆதினம்,*
*திருவாவடுதுறை,*
*1982.*

வரதராசன், மு., **இலக்கியத் திறன்**,
*பாரி நிலையம்,*
*சென்னை,*
*மறுபதிப்பு, 2010.*

---. **இலக்கிய மரபு**,
*பாரி நிலையம்,*
*சென்னை,*
*மறுபதிப்பு, 2013.*

---. **தமிழ் இலக்கிய வரலாறு**,
*சாகித்ய அகாதெமி,*
*புதுதில்லி,*
*இருபத்தியேழாம் பதிப்பு, 2010.*

விமலானந்தம், மது.ச., **தமிழ் இலக்கிய வரலாறு**,
*பாரி நிலையம்,*
*சென்னை,*
*2004.*

விருத்தாசலம், பி., **சிந்தனைச் சுடர்**,
*தென்காவேரிப் பதிப்பகம்,*
*தஞ்சாவூர்,*
*மூன்றாம் பதிப்பு, 2016.*

வீரராகவன், தோ.ந., **ஆழ்வார்கள் வரலாறு**,
*குமரிப் பதிப்பகம்,*
*நாகப்பட்டினம்,*
*முதற்பதிப்பு, 2013.*

வேங்கடசாமி நாட்டார், ந.மு., **கள்ளர் சரித்திரம்**,
*ஸ்ரீசெண்பகா பதிப்பகம்,*
*சென்னை,*
*முதற்பதிப்பு, 2015.*

*ஜான் சாமுவேல், ஜி.,* **திராவிடவியலும் செம்மொழி தகுதிப்பாடும்**,
*ஹோம்லாண்ட் பதிப்பகம்,*
*சென்னை,*
*முதற்பதிப்பு, 2008.*

. . . **இலக்கியத்தின் நோக்கமும் பயனும், தொகுதி 1, 2**,
*உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,*
*சென்னை,*
*முதற்பதிப்பு, 1995.*

. . . **சதகத்திரட்டு, ஏழு சதகங்கள்**,
*மதராஸ் ரிப்பன் அச்சியந்திர சாலை,*
*மதராஸ்,*
*1938.*

. . . **சிற்றிலக்கியச் சொற்பொழிவுகள், முதலாவது மாநாடு**,
*திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,*
*சென்னை,*
*மறுபதிப்பு, 1971.*

. . . **தமிழ் லெக்சிகன், தொகுதி 3**,
*சென்னைப் பல்கலைக்கழகம்,*
*சென்னை,*
*1982.*

. . . **தமிழ் அடோன் அகராதி**,
*அடோன் பப்ளிஷிங் குரூப்,*
*திருவனந்தபுரம்,*
*இப்பதிப்பு, 2013.*